# தோரோ

வில்லியம் காண்டா

தமிழாக்கம்

அ. ச. ஞானசம்பந்தன்

ஓரியன்ட் லாங்மன்ஸ்

36-A, மௌன்ட் ரோட், மதராஸ்-2

பம்பாய் கல்கத்தா புதுடில்லி

1962

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

ஓரியன்ட் லாங்மன்ஸ் லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : 17, சித்தரஞ்சன் அவென்யு,
கல்கத்தா 13
நிகல் ரோட், பலார்ட் எஸ்டேட், பம்பாய் 1
36A, மௌன்ட் ரோட், மதராஸ் 2
1/24, அஸப் அலி ரோட், புதுடில்லி 1
ஷாபூர் ரோட், அஹமதாபாத் 1
17, உட்வீதி, ஷ்ரேலே, பங்களூர் 1
கன்பௌண்ட்ரி ரோட், ஹைதராபாத் 1
373/374, நாராயண பேத், லக்ஷ்மி ரோட், பூனா 2
17, நாஜிமுதீன் ரோட், டாக்கா

முதற் பதிப்பு, 1962

© 1954 Philosophical Library, New York 16.

Printed at the Rajan Electric Press, Madras–1.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| அத்தியாயம் 1 | ... | ... | 1 |
| அத்தியாயம் 2 | ... | ... | 13 |
| அத்தியாயம் 3 | ... | ... | 24 |
| அத்தியாயம் 4 | ... | ... | 42 |
| அத்தியாயம் 5 | ... | ... | 57 |
| அத்தியாயம் 6 | ... | ... | 69 |
| அத்தியாயம் 7 | ... | ... | 81 |
| அத்தியாயம் 8 | ... | ... | 96 |
| அத்தியாயம் 9 | ... | ... | 114 |

# அத்தியாயம் 1

"இன்று நான் பெறும் எந்த அனுபவத்தையும்,
என் இளமைக் காலத்தில் பெற்ற அனுபவத்துடன்
ஒப்பிட முடியாது……என் வாழ்வு
ஆனந்தமயமாய் இருந்தது………"

*தோரோவின் நாட்குறிப்பு, 1851.*

மெஸசூஸிட்ஸில் ஏப்ரில் மாதத்தில் ஒரு நாள்; நல்ல வெயில் காய்ந்து கொண்டிருந்தது. நியூ இங்கிலாந்தின் வசந்த காலம் அதனுடைய உச்ச நிலையை நோக்கி வேக மாகச் செல்கிறது. முடிவற்றது போன்றிருந்த குளிர் காலம் சில நாட்களிலேயே மறைந்துவிட்டது. பனி கரைந் தது; ஆறுகள் நிரம்பி வடிந்தன; மொக்குகள் மலர்ந்தன; பறவைகள் பாடுகின்றன; குதிரை செலுத்துபவர்கள் அவற்றை நோக்கிச் சீழ்க்கை அடிக்கின்றனர். எங்கும் வெயில் காய்கிறது. அட்லாண்டிக் கடல் மின்னுகிறது; கேப் காட் மணல் சூடேறுகிறது. கர்வம் நிறைந்த பாஸ் டனின் குறுகிய தெருக்களிலுங்கூடக் கதிரவன் ஒளி பாய்கிறது. காடுகளின் ஒதுக்குப் புறங்கள், பண்ணைகள், சதுப்பு நிலங்கள், மேற்கத்திய மலைகள் ஆகிய யாவற்றின் மேலும் பகலவனின் பொன்னொளி பரவுகிறது.

பாஸ்டனிலிருந்து வடமேற்கில், இருபது மைல்கட்கு அப்பால் உள்ள காங்க்கார்டு என்ற ஓரளவு பெரிய கிராமத்தில், கதிரவன் காய்வதனால் அவரவர்கள் தத்தம் அலுவல்களைப் பார்க்கச் செல்கின்றனர். பலர் உழவு செய்யவும் பலர் நடவு நடவும் விரைகின்றனர்; சிலருக்கு மரம் வெட்டும் காலம் குறுகி விட்டது; வேறு சிலர் வசந்த காலத்தில் செய்ய வேண்டிய வீடு துப்புரவாக்கும் பணியில் ஈடுபடுகின்றனர்; மற்றுஞ் சிலர் தோட்ட வேலையில் ஈடுபடு கின்றனர். ஆனால் இவ்வாறு வெளியே செல்பவர்களில், தோரோவின் குடும்பத்தினரைத் தவிர வேறு யாரும் காடுகளிலும் வயல்களிலும் சுற்றித் திரிந்து சூரிய ஒளியை அனுபவிக்கவில்லை. அக்குடும்பத்தினர் மட்டுமே காட்டில்

தனித்து இருக்கின்றனர்; ஏனெனில் இயற்கையின் அழகைக் கவிஞர்கள் மட்டுமே பாடத் துணிகின்ற காலமாகிய 1830 ஆம் ஆண்டாகும் அது. வெளியே சென்று, வார இறுதி நாட்களைக் கழிக்கும் வழக்கம், இன்னும் முக்கால் நூற்றாண்டுக்குப் பின்னர்த்தான் மக்களிடையே பரவப்போகிறது.

வசந்தத்தின் முதல் சனிக்கிழமையாகும் அன்று. தோரோகுடும்பத்தினர் இன்றுதான் முதன் முதலில் வீட்டை விட்டு வெளியேறியுள்ளனர். பதிமூன்று வயதுடைய ஸோபியா நடக்கும்பொழுதே மலர் பறித்துக்கொண்டு செல்கிறாள்; ஏறத்தாழப்பதின்மூன்று வயதுடைய ஹென்றிசிவப்பு இந்தியனைப் போல அங்குமிங்கும் விரைந்து ஓடுகிறான். இத்தகைய முரட்டுத்தனத்துடன் கூடிய வயதைக் கடந்து விட்ட ஜான், இரண்டு ஆண்டுகள் மூத்தவனாகலின் பறவைகளைக் கூர்ந்து கவனித்துக்கொண்டு செல்கிறான். அடுத்துப் பதினெட்டு ஆண்டை அடைந்துவிட்ட ஹெலன், மேலே கூறிய இந்த மூவரையும்விட அடக்கமுடையவளாய், அக்கரையோடு தாவர இயலைக் கற்றுக்கொண்டு நடக்கிறாள். இறுதியாகத் தாயும், தந்தையும் வசந்தத்தின் காற்றுப் பட்டமையின், தம் குழந்தைகளைப் போலவே இன்பத்தில் திளைத்துச் செல்கின்றனர்; கிராமவாழ்வில் இன்பத்தையும் இயற்கையில் ஈடுபாட்டையும் தம்முடைய சொத்தாகத் தம் குழந்தைகட்கும் விட்டுச் செல்ல முடியும் என அவர்கள் நம்புகின்றனர். குடும்ப அலுவல்களில் தலைமை ஏற்று நடத்தும் அந்தத் தாய்தான், இந்த வார இறுதிச் சுற்றுலாக்களில் அதிகம் ஈடுபாடு கொண்டவர் என்று தெரிகிறது. சனிக்கிழமைகளில், எவ்வாறாயினும் திறந்தவெளிகளில் சுற்றித் திரியவேண்டும் என்ற அவருடைய பிடிவாதத்தின் காரணமாக, அவருடைய ஒரு பிரசவம் வயல்களினிடையே நடைபெற்றது என்றுகூட ஒரு கதை வழங்குகிறது.

பல்லாண்டுகளாக, ஒவ்வொரு சனிக்கிழமை மாலையிலும், ஆடம்பரமற்ற அந்தத் தந்தையார் வீட்டைச் சார்ந்த தம்முடைய சிறிய தொழிற்சாலையைப்பூட்டி விட்டு, குடும்பத்தைத் தொடர்ந்து காட்டுக்குச் செல்வார். பென்சில்கள் செய்து, இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய இடங்களி

லிருந்து வரும் எழுது கோல்களுடன் போட்டி போட்டு அவற்றை விற்கும் தொல்லையை அந்த நேரத்திலாவது, மறந்திருந்தார். ஆனால், அமைதியான இந்த மனிதர், பென்சில் செய்வது பற்றியோ, அன்றிக் காட்டில் உலாப் போவதுபற்றியோ என்ன நினைத்தார் என்று நமக்கு ஒன்றுந் தெரியாது. நூல்களைப் படிப்பதையும், பிறர் பேசுவதைக் கேட்பதையும் அவர் விரும்பினாரே தவிர, தாம் பேசுவதை அவர் அதிகம் மேற்கொள்ளவில்லை. வேலையில் ஈடுபடாத நேரத்தில் ஜான் தோரோ செய்தித் தாள்களைப் படிப்பார், அல்லது காங்க்கார்டு மக்கள் கூடி அரட்டை அடிக்கும் மில் டேம் என்ற இடத்தில் பிறர் பேசுவதைக் கேட்டுக்கொண்டு பொழுது போக்குவார். அந்த ஊரில் உள்ள பிறரைக் காட்டிலும் அதிகமாக, அண்டை அயலாரைப்பற்றி அவர் அறிந்து கொண்டார். பிற்காலத்தில் ஹென்றி தோரோ தம் நாட்குறிப்பில் நன்றிப் பெருக்குடன் குறித்தபடி, இத்தகைய விஷயங்களில் ஜான் தோரோவின் நினைவாற்றல் மிகச் சிறந்ததாக இருந்தது.

ஜான் தோரோ, அவர் பெயருக்கு ஏற்ப, பிரெஞ்சு மக்கள் வழி வந்தவர். அவருடைய மிகப் பழைய மூதாதையர்கள் பிரெஞ்சு நாட்டினராக இருப்பினும், நெருங்கிய முன்னோர்கள் ஜர்ஸியிலுள்ள சேனர்த் தீவின் துறைமுகப்பட்டினமான ஸெண்ட் ஹெலியரைச் சேர்ந்தவர்கள். ஜானின் தந்தையார் ஸெண்ட் ஹெலியரில் வாழ்ந்த ஒரு மது வியாபாரியின் மகனாவார். அவர் 1773 இல் அமெரிக்காவில் குடியேறி, பாஸ்டனில் ஒரு வியாபாரியாகத் தங்கினார். நாளுக்கு நாள் வாணிகம் பெருகிக்கொண்டு வந்த அந்த ஊரில் ஏனைய வணிகரைப்போலவே அவரும் வளம்பெற்றார். ஜர்ஸியைச் சேர்ந்தவரான இவர் வாழ்நாள் முழுதும் கடல், தீவு என்ற இடங்களில் வாழ்ந்தவராயினும் இறுதியில் அமைதியான காங்க்கார்டு கிராமத்தில் ஓய்வு பெறுவதற்காக வந்து தங்கிவிட்டார். தோரோ குடும்பத்தைப் பற்றியிருந்த எலும்புருக்கி நோய்க்கு இவரும் இலக்காகி 1801 இல் காங்க்கார்டில் காலமானார். ஜான் இவரிடமிருந்து நிறைந்த செல்வத்தைப் பெற்றாலும், வாணிகப் பண்பைப் பெருமையின், பல்வேறு வாணிகத் துறைகளில் தம் செல்வத்தை இழந்தார். 1812 இல் ஸிந்த்யா டன்பார் என்பவரை மணந்தார்; இவர்கட்கு நான்கு மக்கள் பிறந்தனர். சில

ஆண்டுகள் வரை, ஒவ்வொரு தோல்விக்குப் பிறகும் அவர் கூடவே அவர் குடும்பமும் பாஸ்டனுக்கும் காங்க்கார்டுக்கும் இடையே அலைந்தது. அவருடைய உறவினர் ஒருவரின் பண்ணையில், சில காலத்துக்கு மேலாளர் (பெய்லீப்) வேலை பார்த்து வந்தார். காங்க்கார்டை அடுத்த பகுதியில் அவர் தங்கி இருக்கும் பொழுதுதான், 1817 ஜூலை 12 ஆம் நாள் அவருடைய மூன்றுவது குழந்தை வால்டன் காட்டையடுத்த ஒரு வீட்டில் பிறந்தது. இக் குழந்தையின் பெயர் டேவிட் ஹென்றி* என்பதாகும். இவர் பிறந்த வீடு, சிறிது அப்பால் நகர்த்தப்பட்டுவிட்டபோதிலும், இன்றும் இருந்து வருகிறது.

ஹென்றியின் தாயார், பலவிதங்களிலும் போற்றத் தகுந்தவராகவே இருந்திருத்தல் வேண்டும். அந்த அம்மையார் பழைய ஒரு மூதாதையிடமிருந்து போராடும் பண்பைத் தம் இரத்தத்திலேயே பெற்றிருந்தார். கர்னல் எலிஷா ஜோன்ஸ் என்ற இந்த மூதாதை, ஆங்கில அரசுக்கு அன்பு பாராட்டும் நிலப் பிரபுவாய், டோரிக் கட்சியாளராய் இருந்தார்; ஐக்கிய அமெரிக்க அதிகாரிகளுடன் ஓயாமல் சண்டையிட்டு வந்தார். இந்தப் பரம்பரைப் பண்பைப் பெற்றிருந்த இந்த அம்மையாரும் ஓரளவு அதிகாரம் செலுத்துபவராய், விரும்பாதவர்களை ஏசும் கூர்மையான நாவைப் படைத்தவராய் இருப்பினும், தாம் விரும்பி அழைத்த விருந்தினரைப் பெருந்தன்மையோடு போற்றும் பண்புடையவராய் இருந்தார். நேர்மையான பேச்சு, நேர்மையான நடவடிக்கை என்பவற்றுடன் குடும்பம் நடத்தும் தலைவியாய் அமைந்தார். எதிலும் தலைமை வகிக்கும் அவருடைய இயல்பும், யாரையும் எடுத்தெறிந்து பேசும் அவருடைய நாவும், அவருடைய கணவரை ஓரளவு மந்தமடையச் செய்தன. ஹென்றியை வீட்டை விட்டு வால்டன் ஆசிரமத்தில் குடிபுகுமாறும் செய்தது இந்த அம்மையாரின் வாய்தான். ஹென்றி, எதிலும் ஒதுங்கிவிடும் இயல்பையும், ஆழ்ந்து சிந்தனை செய்யும் இயல்பையும் தம் தந்தையிடமிருந்து பெற்றார்; அவரு

---

* அவருக்கு உண்மையில் டேவிட் ஹென்றி என்றுதான் பெயரிட்டனர். வீட்டில் ஹென்றி என்று அழைக்கப் பெற்றாலும், பிறர் அறியாமல், ஆனால், அவர் மட்டும் அறிந்த ஏதோ ஒரு காரணத்திற்காக, எழுத்தாளராக ஆனவுடன் ஹென்றி டி. தோரோ எனப் பெயர் வைத்துக்கொண்டார்.

டைய வாழ்நாள் முழுவதும் இருந்த மனத் திடத்தையும், உடல் சக்தியையும் தாயிடமிருந்து பெற்ருர். ஹென்றியின் நாற்பதாவது ஆண்டில், அவருடைய நாட் குறிப்பில் காணப்படும் ஒரு குறிப்பு, அவருடைய தாயாரின் உள்ளத்தை நன்கு வெளிப்படுத்துகிறது. "இன்றிரவு என் தாயார் தம் இளமைக் காலத்தில் வர்ஜீனியா ரோட்டில் வசித்த நாட்களில், கோடை இரவுகளில் தாம் கேட்ட ஒலிகளைப்பற்றிக் கூறிஞர்—பசுக்களின் அழைப்பு, வாத்துக்களின் கூவல், ஹில்ட்ரெத்ஸில் அடிக்கப்பெற்ற டமாரத்தின் ஒலி—இவை அனைத்தையுங் காட்டிலும் ஜோ மெரியம் தம் குதிரைப் பந்தியை அழைக்கும் சீழ்க்கை ஒலி என்பவையாம். ஜோ மெரியம் மிகச் சிறந்த முறையில் சீழ்க்கை அடிப்பார். வீட்டில் உள்ள அனைவரும் உறங்கும்பொழுதும், என் தாயார்மட்டும் நடு இரவில் எழுந்து, வெளி வாயிலில் சென்று அமர்ந்திருப்பாராம். அவருக்குப் பின்புறத்தில், விட்டிற்குள் மாட்டி இருக்கும் கடிகாரத்தின் ஒலியைத் தவிர வேறு எவ்வித ஒலியும் அப்பொழுது கேட்காதாம்."

தோரோவின் மனையில், அவருடைய குடும்பம் மட்டும் அல்லாமல், ஒரு சிறிய சமுதாயமே இருந்தது எனலாம். தாம் உபசரிக்க வேண்டிய விருந்தினரின் எண்ணிக்கைபற்றிக் கவலைப்படாமல், ஹென்றியின் தாயார் தம் அடையா நெடுங் கதவுவழி அத்தைமார், ஒன்றுவிட்ட சோதரர், நண்பர் ஆகிய அனைவரையும் வரவேற்ருர். இவர்களிற் பெரும்பான்மையானவர் பெண்களே. வீட்டைப் பொறுத்தவரை, மகளிரின் மத்தியில்தான், இளைய ஹென்றி வளர்ந்தார்.

* * * *

இளமையிற் பெற்ற கல்வி, ஹென்றி தோரோவின் நினைவிற் பதியவே இல்லை: அவருடைய நினைவில் இருப்பதெல்லாம், வேட்டையாடுவதிலும், விலங்குகளின் பின்னே செல்வதிலும், படகு ஓட்டுவதிலும், கூடாரத்தில் தங்கியிருப்பதிலும், நீந்துவதிலும், பனியில் சறுக்குவதிலும் கழித்த நாட்கள் பற்றித்தாம். காங்க்கார்டைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தும், மகிழ்ச்சியுடன் விளையாடுவதற்குரிய மணற்பாங்கான விளையாட்டு மைதானமும், புல் வெளியுமாகும்; சதுப்பு

நிலங்களின் இடையே வளைந்து வளைந்து செல்லும் மீன்கள் நிறைந்த ஸத்பரி, அஸ்ஸாபெட் என்ற இரண்டு ஓடைகளும் இந்தக் கிராமத்தின் அருகில் ஒன்றுசேர்ந்து, ஆழமானதும், மெல்ல நகர்வதுமான காங்க்கார்டு ஆருக மாறுகிறது. அமைதியான குட்டைகளும், சதுப்பு நிலங்களும், அகன்று விரிந்துள்ள பைன் மரக் காடுகளும், அகன்ற இலைகளையுடைய மரங்களும் உள்ளன. மேற்கில் பின்னணியாய் நின்ற ஏகாந்தமான சிகரம், தோரோவை வாழ்நாள் முழுவதும் வா என்று அழைப்பதுபோன்று இருந்தது. அமெரிக்கக் காடுகளிலும், புல்வெளிகளிலும் சிவப்பு இந்தியர்கள் மட்டுமே வாழ்ந்தனர் என்று கூறப்பெற்ற கதைகளைக் கேட்பதிலும், காங்க்கார்டு கிராமம் முழுவதும் அவர்களது தங்குமிடமாய் "ஸ்கெடாக்விட்" என்று பெயர் பெற்றிருந்தது என்பதைக் கேட்பதிலும் இளமையில் அவர் அதிக ஆர்வம் காட்டினூர். சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் கலையில், அவர் இப்பொழுதே தேர்ச்சி பெறத் துவங்கி விட்டார். இக்கலை பிற்காலத்தில், அண்டை அயலாரிலும் சிறப்புடையவராக அவரை வேறு பிரித்துக் காட்டியது. அறிவுத் துறையின் பிற பகுதிகளில் சிறப்படைவதைக் காட்டிலும், தம் கைகளின் திறமையைப்பற்றியே அவர் பெருமை கொண்டார்.

புதிய இடத்தை நாடி மேற்கு நோக்கிச் செல்பவர்களை அப்பொழுதும் காணமுடிந்தது எனினும், புதியன காண்பதில் ஏற்படும் ஆர்வம் நியூ இங்கிலாந்தில் பல காலத்துக்கு முன்பே மறைந்துவிட்டது. உள்ளக் கிளர்ச்சியும், உடல் வலிமையும் பெற்றிருத்தல், அதிகச் சாமான்கள் இல்லாமல் பயணஞ் செய்தல், திறந்த வெளிகளில் தங்கல், புது வழிகளிற் செல்லல், இன்று தங்கிய இடத்தில் நாளைத் தங்காமல் புறப்படல் ஆகிய பண்புகள்தாம் புதிய இடங்களை நாடுபவர்களின் தனிப் பண்புகளாகும். இப் பண்புகளை, பத்தொன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியில், நியூ இங்கிலாந்தில், நிறுவன அமைப்பில் நிலைபெற்றுள்ள சமுதாயங்களில் எதிர்பார்ப்பது பயனிலாச் செயலாகும். கடினமான உழைப்பு, சமயச் சார்பான தன்னடக்கம், சிக்கனம் ஆகிய பண்பாடுகளைக் கொண்டுதான் வாணிகத்தில் அல்லாமல், பண்பாட்டிலுங்கூட நியூ இங்கிலாந்து மிக உயர்ந்த நிலையை அடைந்தது. இரண்டு முக்கியமான பல்கலைக் கழகங்களை

நிறுவியுள்ளது நியூ இங்கிலாந்து. "ஹார்வார்டு", "யேல்" என்ற இரண்டு பல்கலைக் கழகங்களின் மூலமாகவும். நியூ இங்கிலாந்து மக்கள், பொதுவாக அன்றைய ஐரோப்பிய சிந்தனைகளையும், குறிப்பாக இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளின் எண்ண ஓட்டங்களையும் அறிந்து வந்தனர். எனவே, அந்த நாளில் மிகவும் வளர்ச்சியடைந்திருந்த முற்போக்குக் கருத்துக்களை எளிதிற் பெறக்கூடிய இடத்தில் தான், காங்க்கார்டின் இரண்டாயிரம் மக்களும் வாழ்ந்தனர். சமயத்தைப் பொறுத்தமட்டில், சமுதாயத்திலுள்ள அறிவாளிகள் அனைவரும், முப்பொருள் கொள்கையை விட்டு, தெய்விக ஒருமையை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு வளர்ச்சியடைந்திருந்தனர். ஆன்மிகத் துறையில், ஆழ்ந்த முறையில் ஒரு குழப்பம் தோன்றிய நாளில், ஹென்றி வளர்ந்தார். மனித முயற்சிகள் சுதந்திரமற்றவை, மேலும் அவை புறச் சக்திகளால் கட்டுப்படுத்தப் பெறுகின்றன என்ற துயரத்தை உண்டாக்கும் கொள்கையை அப்பொழுது தோன்றிய உவகை போக்கடித்துவிட்டது. அதனால் உரிமையின் ஒளிக்கதிர்கள் தோன்றலாயின. இதன் ஒருபக்க விளைவாகக் குறிக்கோள் வாதிகள், கனவு காண்பவர்கள், நீதிவாதிகள் ஆகியோர் நிரம்பத் தோன்றினர். தொடக்கத்திலிருந்தே, ஹென்றி, தம் வீட்டில் புரட்சி, சீர்திருத்தம் என்ற காற்றை உட்கொள்ளத் தொடங்கினர்.

இளமைப் பருவத்தில் ஹென்றி பிற கிராமப் பையன்களைப் போலவே குடும்ப உறவில் இன்பங் கண்டு வாழ்ந்தார். அவரது புரட்சி மனப்பான்மையையும், திறமையையும் அப்போது யாரும் அறியவில்லை. எனினும் பிற குழந்தைகளிலிருந்து இவரைப் பிரித்து அறிவதற்குரிய ஒரே ஒரு சூழ்நிலை இருந்து வந்தது; அவருடைய பெற்றோர், திருமணத்திற்கு முன்னர்த் தாங்கள் இருந்த வசதியான வாழ்க்கை—நிலையை மறக்கவே இல்லை. ஜான் தோரோவும், தம் தந்தையாரின் வாணிக வளத்தை மறக்கவில்லை; ஸிந்த்யா தோரோ தம் பெற்றோர்களின் செல்வந்தரான உறவினர்களையும், பட்டம் பதவி பெற்றவர்களையும் மறக்கவில்லை. எனவே, தாங்கள் வறுமையில் வாடினாலும், தங்களுடைய குழந்தைகள், வெறும் கிராமப் பள்ளிப் படிப்புடன் நின்றுவிடக் கூடாது எனக் கருதினர்

வும், குழல் வாசிக்கவும் அவர் இங்குத்தான் கற்றுக் கொண்டார்; அவர் மிகவும் பிரியத்துடன் போற்றிய இசையோடு இங்குத்தான் முதன் முதலில் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. இக் கலையில் அவர் ஓரளவுதான் பயிற்சியும் அறிவும் பெற்றார் எனினும், இசை அவரைப் பெரிதும் ஆட்கொண்டது. அதே இசை "வேறு எந்த மத போதகரும், மனிதனும் கூறாத அளவில் வாழ்க்கையைப் பற்றித் தமக்குப் போதித்தது" என்று கூறியுள்ளார். பிற சாதாரண அறிவுடைய பிள்ளைகளுக்குள்ள அளவு ஆர்வத்தோடுதான் ஹென்றியும் புத்தகங்களைப் படித்தார். பிற்காலத்தில் அவர் எழுதியுள்ளபடி, "ஏட்டுக் கல்வி என்ன செய்கிறது? தானே சுதந்திரமாக வளைந்து வளைந்து ஓடும் ஓடையை ஒரு குறுகிய நேர்கோட்டில் வெட்டி விடுகிறது" என்ற முறையில், அக்காலத்தில் அவர் கல்வியைப்பற்றி நினைக்கவில்லை. அது எவ்வாறு இருப்பினும் பள்ளியில் கற்பிக்கப்பெற்ற கணிதம், பிற்காலத்தில் வயல்கள், காடுகள் ஆகியவற்றின் அளவீட்டாளராக அவர் பணிபுரிவதற்கு உதவியது. அவர் வாழ்க்கையில் மேற்கொண்ட பிற பணிகளைவிட, இது, புறத்தே சென்று காலங் கழிக்க உதவியது.

லத்தீன், கிரேக்கம், பிரெஞ்சு ஆகிய மொழிகளிலும், கணிதத்திலும் நல்ல அறிவைப் பெற்ற பிறகு, ஹென்றி தோரோ, ஏழை மாணவர்கட்குரிய உதவிச் சம்பளத்துடன் ஹார்வார்டு பல்கலைக் கழகத்தில் புகுந்தார். கல்லூரியில் நல்ல முறையில் அறிவு பெற்று, மூன்றாண்டுகளில், சோதனையாளர்களைத் திருப்திப்படுத்தினாலும், அதிக மதிப்புப் பெறாத சாதாரண வெற்றியுடன்தான் மீண்டார். அவருடைய ரசனை அப்பழுக்கற்றதாயும், நடத்தை மிகவும் சுதந்திரமுடையதாயும் இருந்தன. அவரைப் பொறுத்தமட்டில், பல்கலைக் கழகம் என்பது, பிற அறிஞர்களுடைய அறிவுச் செல்வத்தைப் பெறுதற்குரிய வாயிலாக இருந்ததே தவிர, சமுதாய நட்பைப் பெறவும், தொழில் முறையில் திறமை பெறவும் ஏற்பட்ட நிறுவனமாக அமையவில்லை. பாடத் திட்டத்தைப்பற்றி ஒரு சிறிதும் கவலைகொள்ளாமல், கல்லூரி நூலகத்தில் பெரும் பொழுதை, அவராக விரும்பிய ஜெர்மானிய இலக்கியம், 17 ஆம் நூற்றாண்டு ஆங்கில இலக்கியம் என்பவற்றைக்

கள். இதனைச் செய்து முடிப்பதற்காக, ஜான் தோரோ, ஒரு பென்சில் தொழிற்சாலையைத் தம் வீட்டிலேயே ஏற்படுத்திக் கொண்டார். திருமதி தோரோ, சிற்சில வேளைகளில் பணம் கொடுக்கும் விருந்தினர்களைத் தம் இல்லத்தில் ஏற்றுக் கொண்டார். இந்தப் பென்சில் தொழிற்சாலையை ஜான் தொடங்கும்பொழுது, ஹென்றிக்கு வயது ஆறு.

ஹென்றி முதலாவதாகப் படித்த பள்ளிக்கூடம், பாஸ்டனில் இருந்தது. அந்த நகரத்தின் தெருக்கள் அவருடைய மனத்தைவிட்டு நீங்கவே இல்லை. கோடைக் காலத்தில் ஒரு நாள் அவருடைய அத்தை ஒருவர், நீண்ட தூரத்துக்கு அப்பால் இருந்த கனவு உலகமாகிய வால்டன் என்ற இடத்துக்கு ஹென்றியை அழைத்துச் சென்றார். அங்கே நிழல்தரும் பைன் மரக் காடுகளும், பளிங்கனைய ஏரியும் இருந்தன. ''அந்தக் காட்டின் காட்சி தான் என் கனவுகளுக்குப் பின்னணியாய் அமைந்தது. என்னுடைய ஆன்ம விருப்பமான அந்த இனிய தனிமையை அவை தந்தன......'' எனப் பிற்காலத்தில் அவர் வரைந்துள்ளார். இம்முறையில் இளமையிலேயே அவர் இயற்கையின் வலிமை, உயிர்த்தன்மை என்பவற்றில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். உண்மையான இன்பம் என்பது வாழ்க்கைக்குத் தேவையான ஒன்று. குளங்களில் துள்ளிக் குதிக்கும் சிறு மீன்களையும், கோடைக் காலத்தில் ஒரு மாலைக்குள் உற்பத்தியாகின்ற கோடிக் கணக்கான சின்னஞ்சிறு பூச்சிகளையும், வசந்த காலத்தில் வனம் முழுவதிலும் எதிரொலிக்கும் மரத்தவளைகளின் (ஹைலா) ஓயாத இசையையும், பட்டுப் பூச்சிகள் பல்லாயிரக்கணக்கான வகையில் நிறங்கள் மாறுபடும் சிறகுகளுடன் கவலை இல்லாமற் பறந்து திரிவதையும், ஓடைகளில் மின்னோ மீன்கள் எதிர்த்து நீச்சல் அடித்து விளையாடுவதையும் சிந்தித்துப் பாருங்கள்......'' என்று பிற்காலத்தில் அவர் எழுதியுள்ளார்.

அவர் காங்க்கார்டில் உள்ள ஒரு பள்ளியில் புகுவதற்குத் தயாரானார்; அங்குப் போதிக்கப் பெற்ற கல்வி மரபையொட்டி இருந்ததுடன், பழைய இலக்கியங்களும், பிரெஞ்சு மொழியுமே முக்கியத்துவம் பெற்றிருந்தன. நடனமாட

கற்பதிலேயே செலவழித்தார். ஹார்வார்டை அவர் விட்டுவருங் காலத்தில், அவரை எந்தப் பாடங்களில் சோதனை செய்தார்களோ அவற்றைவிட, மேலே கூறிய இரண்டு துறைகளிலும் மிகுதியாகக் கற்றிருந்தார். சலியாமல் நூல்கள் படிப்பதில் வாழ்நாள் முழுவதும் அவர் ஈடுபட்டிருந்தமையின், ஹார்வார்டு நூலகத்திலிருந்து இறுதிவரை நூல்களைக் கடன் வாங்கிக் கற்று வந்தார்.

கவலையில்லாத பள்ளிப் பிள்ளையாக ஹார்வார்டுக்குள் தோரோ நுழைந்தார் எனினும், குழப்பமும் கவலையும் நிறைந்த இளைஞராக வெளி வந்தார். ஹார்வார்டில் அவருடைய புற வாழ்க்கை நிகழ்ச்சிகள்பற்றி நமக்கு ஒரு சிலவே தெரிய வருகின்றன; ஆனால் அவருடைய அக வாழ்க்கை பற்றி ஒன்றுமே தெரியாது. மேலாகப் பார்க்கும் பொழுது, அவருடைய கல்லூரி வாழ்க்கையில் ஒன்றும் சுவை இருந்ததாகத் தெரியவில்லை. கல்லூரியின் சமுதாய வாழ்க்கையில் அவருக்கு எவ்விதப் பற்றுதலும் ஏற்படவில்லை. ஹார்வார்டில் அவரை அறிந்த மாணவர்கள் முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுகின்றனர்; அவரைப்பற்றி அவருடன் ஒரு சாலை மாணவராக இருந்த ஜான் வெய்ஸ் என்பவர் எழுதியுள்ளதுதான் கூடுமானவரை உண்மையானதாகவும், விரும்பத்தகுந்ததாகவும் இருக்கிறது. "எவ்வித உணர்ச்சியையும் காட்டாத தோரோவின் நடத்தையிலிருந்து, பின்னர் வெளிவரப் போகும் ஒரு மாமேதையின் இயல்புகளை நாங்கள் அறியவே இல்லை. அவருடைய சொந்த ரசஞானத்தைப்பற்றி எழுதுவதற்கு ஒன்றும் இல்லை. பழைய ஆங்கில இலக்கியங்களில் மிகவும் ஈடுபட்டிருந்தார் என்று மட்டும், வேண்டுமானால், குறிப்பிடலாம். கோவர், சாஸர் முதலானவர்களிலிருந்து எலிஸபெத் காலம் வரையுள்ள கவிதைகளில் பல தொகுதிகளை அவர் சேகரித்து வைத்திருந்தார். இந்தச் சுரங்கத்தில் அவர் அமைதியான உற்சாகத்தோடு உழைத்து வந்தார்......... பிறரைப்பற்றி அவர் கவலைப்படவே இல்லை; சக மாணவர்கள்கூட, அவரிடம் பழகாமல் மிகவும் தொலைவில் இருப்பவர்கள்போல் தோன்றினர். இத்தகைய ஒரு கனவுலகம் அவரைச் சுற்றிச் சூழ்ந்திருந்தது. ஆனால் அவருடைய வீட்டார்கள் அவருக்குத் தைத்து அனுப்பிய விநோதமான சட்டைகள், தொள தொள என்று தொங்கிக் கொண்டிருந்

ததுபோல் இக் கனவுலகம் தொங்கிக் கொண்டிருக்க வில்லை. சிந்தனைக் குறிகள் அவர் முகத்தில் தோன்ற வில்லை. முகம் ஆழ்ந்த மனநிலையைக் காட்டிற்று எனி னும், மதமதப்புடன் ஏதோ பெரு முயற்சியில் ஈடுபட்டிருப் பதுபோல் காணப் பெற்றது... ...ஆனால் சில சமயங்களில் ஏதோ ஒன்றைத் தொலைத்துவிட்டுத் தேடுபவர் போல வும், ஏதோ ஒன்றை எதிர்பார்த்திருப்பவர் போலவும், அவ ருடைய கண்களில் ஓர் ஒளி வீசியது; அவ்வொளி இயற்கையின் சொந்தக் குழந்தை, இயற்கையின் வழிவழி இரகசியங்களை அறிந்துகொள்ள முயல்வதுபோல் தோன்றி யது. பொறுமைக் குறைவான பிறர், கூர்ந்து நோக்கியும் காண முடியாதவற்றை, அவருடைய கூர்ந்து நோக்கும் கண்கள் கண்டன; படைப்பில் உள்ள சேதன, அசேதனப் பொருள்களின் நுண்மையான இயல்புகளை அக்கண்கள் கண்டமையின், அவை அவருடைய நூல்களில் இடம் பெற்றன. சாதாரணத் தரைமீதுகூடப் பிறர் காணாத வற்றை எல்லாம் அவர் காண முடிந்தது... ...ஆகவே என் போன்றவர்களுடன் சேராமல் கல்லூரியில் அவர் தனியே இருந்ததில் வியப்பு ஒன்றுமில்லை; அக்காலத்திலேயே அவர் கற்பனையில் கண்ட ஏதோ ஒரு வால்டன் குட்டை யின் கரையில் தற்காலிகமாக ஒரு குடிசை அமைத்துக் கொண்டு அதில் வாழ்ந்தார் போலும்... ...'' என்று ஜான் வெய்ஸ் எழுதியுள்ளார்.

ஹென்றியின் மனம் இப்பொழுது நன்கு விழித்துக் கொண்டது. பிற்காலத்தில் உரைநடை எழுத்தாளராக விளங்கப்போகும் இவர், ஆங்கில இலக்கியத்தின் மிகச் சிறந்த பகுதிகளை எல்லாம் சுவைத்துக் கொண்டு, கவிதை எழுதும் அலுவலில் ஈடுபட்டிருந்தார். பிற்காலத்தில் சமு தாயத்தின் திறனாய்வாளராகத் தோன்றப்போகும் ஹென்றி, இப்பொழுதே ஹார்வார்டில் உள்ள சக மாணவர்கள் சில ரைத் திறனாய்வு செய்து வந்தார். விடுமுறைக் காலங்களில், காங்க்கார்டில், ரால்ஃப் வால்டோ எமர்ஸனுடன் உரை யாடிக் கொண்டிருக்கையில் ஹார்வார்டு சமுதாயத்தைப் பற்றி, ஹென்றி, நகைச்சுவையோடும் சூட்டோடும் கூறிய வற்றைக் கேட்ட எமர்ஸன், இவருடைய கல்லூரி வாழ்க்கையைப்பற்றி ஒரு நூல் எழுதுமாறு வேண்டினார். ஆனால் இந்த வேண்டுதலின்படி ஹென்றி நடக்கவில்லை.

# அத்தியாயம் 2

"எதிர்பாராதது என்னும் கயிற்றினல் கட்டப்பெற்ற
பயனற்ற முயற்சிகள் என்னும் மூட்டையாவேன் நான்"
—தோரோ.

ஹார்வார்டு பல்கலைக் கழகம் தோரோவை, அக்காலப் பண்புக்கு ஏற்ப, ஒரு படிப்பாளியாக மட்டும் ஆக்காமல் அதற்கும் மேற்பட்ட ஓர் எழுத்தாளராகவும் செய்தது. ந்யூ இங்கிலாந்தில் தோன்றிய "புத்துணர்ச்சி"யின் தலைவர்களாக விளங்கப்போகும் எமர்ஸன், ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் போன்றவர்களின் ஆசிரியராகிய, சொல்லலங்காரப் பேராசிரியர் எட்வர்ட் டி. சேனிங் என்பவரிடந்தான் ஹென்றியும் பயின்றார். இவரிடம் பயின்றதனல், ஒழுங்கு முறைக்கும், தர்க்கத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கக் கூடிய ஒரு நடையை ஹென்றி கற்றார். மாணவர்களுடைய கருத்துக்கள், முழுவதும் திறனாய்வு செய்யப் பெற்றன. கல்லூரியில் தாம் எழுதிய கட்டுரைகளைத் தோரோ காப்பாற்றி வைத்திருந்தார். அக் கட்டுரைகளின் தலைப்புக்களைப் பார்த்தால், எவ்வளவு உயர்ந்த நெறி முறையில் சொல்லலங்கார வகுப்புக்கள் நடைபெற்றன என்று அறிய முடிகிறது. மனிதப் பண்பின் ஆழ்ந்த ஒரு பகுதிபற்றி, செம்மையான சொற்களால், அடிக்கடிக் கட்டுரை வரைதல் என்பது வெறுப்பையும் தொல்லையையும் தருகின்ற ஓர் அலுவலாகும். எனவே, பிற மாணவர்களைப் போலவே ஹென்றியும் செயற்கையான, உப்புச் சப்பற்ற கட்டுரைகளை வரைந்து தள்ளினர். நாம் முன்னே கூறியபடி, வாழ்க்கையின் மிக இளமைப் பருவத்திலேயே சமுதாயத்தின் திறனாய்வாளராக அவர் ஆனர். ஹார்வார்டில் தோரோ தங்கியிருந்த முதல் ஆண்டிலேயே அவரைப்பற்றி எமர்ஸன் தம் நாட்குறிப்பில் கீழ்வருமாறு எழுதினர்: "அந்தப் பிள்ளை கூறுவனவற்றைக் கேட்டுச் சமுதாயம் மகிழ்ச்சியுடன் சிரிக்கின்றது. ஆனல் அவர் கூற்றிலுள்ள கருத்துக்களைவிட ஆழ்ந்த உண்மைகள் இருக்க முடியாது." ஆனல் ஹார்வார்டின் எல்லைக்குள் இருக்கும்வரை "அந்தப்

இதற்குப் பதிலாக "ஆசிலஸ்" என்பவரின் நூல்களின் மொழிபெயர்ப்பு ஒன்றையோ, அன்றித் தம் கவிதைத் தொகுப்பு ஒன்றையோ வெளிக் கொண்டுவர அவர் முனைந் திருக்கக் கூடும். இந்நிலையில், விதியின் பேரிகை அவர் காதுகளில் மட்டும் ஒலிக்கத் தொடங்கிற்று; அதற்கேற்ப அவரும் தம் வாழ்க்கையைச் செலுத்தத் தொடங்கினார். பிற அலுவல்களில் நுழைபவர்கட்குப் பயன்படாத அந்தப் பேரிகை ஒலி ஹென்றியைப் பிறர் காணாத வழிகளில், அவரே வகுத்துக் கொண்ட புதுமையான நெறிகளில் செலுத்திற்று.

---

# அத்தியாயம் 2

"எதிர்பாராதது என்னும் கயிற்றினால் கட்டப்பெற்ற
பயனற்ற முயற்சிகள் என்னும் மூட்டையாவேன் நான்"
—தோரோ.

ஹார்வார்டு பல்கலைக் கழகம் தோரோவை, அக்காலப் பண்புக்கு ஏற்ப, ஒரு படிப்பாளியாக மட்டும் ஆக்காமல் அதற்கும் மேற்பட்ட ஓர் எழுத்தாளராகவும் செய்தது. நியூ இங்கிலாந்தில் தோன்றிய "புத்துணர்ச்சி"யின் தலைவர்களாக விளங்கப்போகும் எமர்ஸன், ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் போன்றவர்களின் ஆசிரியராகிய, சொல்லலங்காரப் பேராசிரியர் எட்வர்ட் டி. சேனிங் என்பவரிடந்தான் ஹென்றியும் பயின்றார். இவரிடம் பயின்றதனால், ஒழுங்கு முறைக்கும், தர்க்கத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கக் கூடிய ஒரு நடையை ஹென்றி கற்றார். மாணவர்களுடைய கருத்துக்கள், முழுவதும் திறனாய்வு செய்யப் பெற்றன. கல்லூரியில் தாம் எழுதிய கட்டுரைகளைத் தோரோ காப்பாற்றி வைத்திருந்தார். அக் கட்டுரைகளின் தலைப்புக்களைப் பார்த்தால், எவ்வளவு உயர்ந்த நெறி முறையில் சொல்லலங்கார வகுப்புக்கள் நடைபெற்றன என்று அறிய முடிகிறது. மனிதப் பண்பின் ஆழ்ந்த ஒரு பகுதிபற்றி, செம்மையான சொற்களால், அடிக்கடிக் கட்டுரை வரைதல் என்பது வெறுப்பையும் தொல்லையையும் தருகின்ற ஓர் அலுவலாகும். எனவே, பிற மாணவர்களைப் போலவே ஹென்றியும் செயற்கையான, உப்புச் சப்பற்ற கட்டுரைகளை வரைந்து தள்ளினார். நாம் முன்னே கூறியபடி, வாழ்க்கையின் மிக இளமைப் பருவத்திலேயே சமுதாயத்தின் திறனாய்வாளராக அவர் ஆனார். ஹார்வார்டில் தோரோ தங்கியிருந்த முதல் ஆண்டிலேயே அவரைப்பற்றி எமர்ஸன் தம் நாட்குறிப்பில் கீழ்வருமாறு எழுதினார்: "அந்தப் பிள்ளை கூறுவனவற்றைக் கேட்டுச் சமுதாயம் மகிழ்ச்சியுடன் சிரிக்கின்றது. ஆனால் அவர் கூற்றிலுள்ள கருத்துக்களைவிட ஆழ்ந்த உண்மைகள் இருக்க முடியாது." ஆனால் ஹார்வார்டின் எல்லைக்குள் இருக்கும்வரை "அந்தப்

இதற்குப் பதிலாக "ஆசிலஸ்" என்பவரின் நூல்களின் மொழிபெயர்ப்பு ஒன்றையோ, அன்றித் தம் கவிதைத் தொகுப்பு ஒன்றையோ வெளிக் கொண்டுவர அவர் முனைந் திருக்கக் கூடும். இந்நிலையில், விதியின் பேரிகை அவர் காதுகளில் மட்டும் ஒலிக்கத் தொடங்கிற்று; அதற்கேற்ப அவரும் தம் வாழ்க்கையைச் செலுத்தத் தொடங்கினார். பிற அலுவல்களில் நுழைபவர்கட்குப் பயன்படாத அந்தப் பேரிகை ஒலி ஹென்றியைப் பிறர் காணாத வழிகளில், அவரே வகுத்துக் கொண்ட புதுமையான நெறிகளில் செலுத்திற்று.

---

பிள்ளை" தனக்குள் தானே அடங்கி இருந்தார்; எனினும் ஒரு முறை மட்டும் அவருடைய மனம் விட்டுப் பேசியுள்ளார். "நகரத்தில் வாழும் மக்களைவிடச் சிலப்பிந்தியன் மனிதத் தன்மையுடையவன். மனிதனாக வாழ்ந்து, மனிதனாகச் சிந்தித்து, மனிதனாகவே இறக்கிறான் ......கல்வி கற்றல் என்பது கலைத்திறமையின் கைப்பாவை எனினும் மனிதன் முழுத்தன்மை அடைய அது தேவைஇல்லை; அதனால் அறிவைப் பயிற்றுவிக்க முடியாது......" இவ் வார்த்தைகளைக் கேட்ட ஆசிரியர்கள் வியப்பில் ஆழ்ந்திருப்பார்கள் என்று நாம் ஊகித்துக்கொள்ளலாம். ஆனால் இவ்வாறு கல்லூரி வாழ்க்கையில் அவர் பேசிய சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவே; உள்ளத்தில் தோன்றிய இந்தப் புரட்சிப் புயலுக்குத் தம் இளமைக் காலம் முழுவதும் ஹென்றி வலுவான மூடி போட்டிருந்தார்.

ஹார்வார்டில், வாழ்ந்த காலம் முழுவதையும், தோரோ ஆழ்ந்த சிந்தனையில் கழித்தார். அவருடைய தலைமுறையில் வாழ்ந்த இளைஞர்களைத் தட்டி எழுப்பக்கூடிய புதிய கருத்துக்கள் அக்காலத்திலேயே நடமாடத்தொடங்கின. இங்கிலாந்தில் "ராபர்ட் ஓவன்" தம் புகழின் உச்சியில் திகழ்ந்தார். அவரும், ந்யூ இங்கிலாந்தில் ஏராளமாக விருந்த அவரைப் பின்பற்றுபவர்களும், புதுமையான ஒரு சோஷலிஸ சமுதாயம் உடனடியாகப் பிறக்கப் போகிறதென்று நம்பினார்கள். என்றாலும், இந்தப் பெரு மாற்றம், எந்த வழியில் பிறக்கப் போகிறது என்பதைப் பற்றி அவர்களுக்குள் கருத்து ஒற்றுமை சிறிதும் இல்லை. கற்பனைக்கு இடங்கொடாமல், வாழ்க்கையோடு ஒட்டி வாழ்ந்த சிந்தனையாளர் பலரும், தொழிலாளர் சமுதாயம், நெறியான முறையில் அதிகாரத்தைக் கைப்பற்றும் பொழுதுதான் இம் மாறுதல் ஏற்படும் எனக் கருதினார்கள். புரட்சி வேண்டும் தொழிற் சங்கத்தினர், பட்டயக்காரர்கள், டோல்படில் தியாகிகள் முதலியோரின் காலம் அது......கோல்ரிட்ஜ், வொர்ட்ஸ் வொர்த், என்பவர்களுடைய "ரொமான்டிஸிஸ"க் கவிதைகள் இன்னும் ஆட்சி செலுத்திக்கொண்டிருந்த காலம் அது. கோல்ரிட்ஜ், ஸ்காட், பைரன், ஷெல்லி, கீட்ஸ் என்பவர்கள் இறந்துவிட்ட போதிலும், அவர்களுடைய செல்வாக்கு, இங்கிலாந்தைப் போலவே அமெரிக்காவிலும் மிகுதியாகப் பரவி இருந்தது. தொழில் நகரங்கள், தொழில்

வளர்ச்சி என்பவற்ருல் ஏற்பட்ட சமுதாயப் பிரச்னைகள் காரணமாக, இசைக் கவிதை, ரொமான்டிஸிஸம், என்பவை நடைமுறைக்கு ஒத்த எண்ணங்களால் சிறிது சிறிதாக விலக்கப் பெற்றது. அறிவாளிகள் அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் இடையே ஓயாமல் சென்று வந்தமையின், தேனீக்கள் தேனுணவைக் கூட்டுக்கு எடுத்துச் செல்வதுபோலப் புதிய கருத்துக்களை இங்குமங்கும் கொண்டு சென்றனர். பிரெஞ்சு நாட்டிலிருந்து ஷாடோப்ரீயான், ஹ்யூகோ என்பவர்களுடைய ரொமான்டிஸிஸக் கருத்துக்களை மட்டும் அல்லாமல், சார்ல்ஸ் ஃப்ஹுர்யெர் என்பவருடைய குறிக்கோள்த் தன்மை பெற்ற சோஷலிஸத்தையும் கொண்டுவந்தனர். இதன் பயனாக, ந்யூ இங்கிலாந்தில் ஃப்ஹுர்யெரைப் பின்பற்றுபவர்கள் தோன்றினர். இவர்கள் தொழிலாளர் இயக்கம் பற்றிக் கவலைப்படாமல் தன்னிறைவு கொண்ட சமுதாயம் எளிய வாழ்வு நடத்தும் மக்களைக் கொண்ட சமுதாயம் என்பவற்றை நிறுவுவதன்மூலம் சோஷலிஸத்தை உடனடியாகக் கொண்டுவர விழைந்தனர். ஜெர்மனியிலிருந்து தத்துவக் கருத்துக்கள் வந்தன. சில ந்யூ இங்கிலாந்துவாசிகள், ஐரோப்பியச் சிந்தனைகள் மூலமாக அந்த எல்லையையும் கடந்து, கீழ்நாட்டு மெய்யுணர்வு நூல்களையும் (Mystical writings) கற்கத் தொடங்கினர்.

இதன் பயனாக, ந்யூ இங்கிலாந்தின் மனம் விரிவடைந்தது; புதிய கற்பனைகள் மலர்ந்தன; மென்மையான இளமனங்கள் புதிய கருத்துக்களை வரவேற்றன. ஏனென்ருல், கார்லைலின் தூண்டுதலுக்கு இலக்கானவர்கள் பாஸ்டன் நகர வியாபாரிகள் அல்லர். ஹார்வார்டில் ஒரு கல்லூரியை நிலைநிறுத்திக் காப்பாற்றிவர அவர்கள் விருப்பத்துடன் பணம் உதவினுர்கள் என்பது உண்மைதான். எனினும் அமெரிக்காவின் அறிவுக் களஞ்சியமாக இருந்த அந்தக் கல்லூரி, வெளிநாட்டுப் புதுமைக் கருத்துக்களையே தானும் மேற்கொள்ளத் தொடங்கியபொழுது, அந்த வியாபாரிகள், தாங்கள் முதலீடுசெய்த பணம் தவருன வழிகளில் செலவாகின்றதோ என ஐயமுற்றனர். என்ருலும், நாளாவட்டத்தில், பிறநாட்டு வாணிகமும், கடல்வழி வந்து போகின்ற மக்களோடு தொடர்பும் பாஸ்டன் மக்களிடையே ஓரளவு சர்வதேசத் தன்மையைப் புகுத்தியது. புதிய பண்பாட்டிலும், அழகிலும் அவர்கள் கொண்டிருந்த வெறுப்பையும்,

எதிர்ப்பையும் இச் சூழ்நிலை மாற்றிவிட்டது. ஆகவே, அமெரிக்காவின் அறிவுலக வாழ்க்கையின் மையமாக பாஸ்டன் நகரம் அமைந்தது. ஐரோப்பியர்கள்கூட, எடின்பரோ, பாரீஸ், பாஸ்டன் என்று ஒரே மூச்சில் பேசத்தொடங்கிய நேரத்தில் ந்யூ இங்கிலாந்தில் சிறந்த எழுத்தாளர் சிலர் தோன்றினர். ஹென்றி வோட்ஸ்வொர்த் லாங்ஃபெலோ தம்முடைய முப்பதாவது வயதிலேயே பிறமொழிப் பேராசிரியராக இருந்தும் தம் கவிதைகளால் பெயர் பெற்றார். அந்த நேரத்தில் தோரோ ஹார்வார்டில் மாணுக்கராக இருந்தார். 1820-1830 ஆண்டுகளில் ஹர்வார்டில் பயின்ற ரால்ஃப் வால்டோ எமர்ஸன் இந்த நேரத்தில் தான் இங்கிலாந்து சென்று, கோல்ரிட்ஜ், வோர்ட்ஸ்வொர்த், லேண்டர், டிக்வின்ஸி, கார்லைல் ஆகியவர்களைச் சந்தித்து மீண்டார். சிறந்த கட்டுரையாளர், பேச்சாளர் என்ற நிலையான புகழையும் இப்பொழுது பெற்றுவிட்டார்.

1835 க்கு மேற்பட்ட காலம் புரட்சிக்கும், மகிழ்ச்சி மனநிலைக்கும் இடம் தந்த காலம். பரிணும வழியில் புதிய மாதிரியான மனிதன் தோன்றப் போகிருன், அவன் வீரம், தன்னிறைவு, அறிவுடைமை ஆகியவற்ருல் நிறைந்திருப்பான் என்னும் எண்ணம் இளைஞர்களிடையிலாவது உலாவலாயிற்று. மனித மனம் அதனுடைய வளர்ச்சியில் மேலும் ஒரு புதிய உச்சத்தைப் பெறப்போகும் ஒரு புத்துணர்ச்சியை எமர்ஸன் தம்முடைய சொற்பொழிவுகள் மூலம் வலியுறுத்திவந்தார். புதியவாகத் தோன்றுகின்ற பல்வேறு கருத்துக்களையும் குறிப்பிடக்கூடிய ஒரே சொல்லைக்காண முயன்றும் முடியவில்லை. ந்யூ இங்கிலாந்தில் ஒருவர் "புதுமை" என்று பேசுவாரேயாளுல், ரால்ஃப் வால்டோ எமர்ஸனுடன் தொடர்புடைய, சிக்கலான புதிய தத்துவ சாஸ்திரம் பற்றிப் பேசுகிருர் என மக்கள் அறிந்துகொண்டனர். ஆகவே 1837 இல் இருபது ஆண்டு நிரம்பப் பெற்ற தோரோ பல்கலைக் கழகப் பட்டத்துடன், கல்லூரியை விட்டுக் காங்க்கார்டில் நுழைந்த தருணம், மேனுட்டு வளர்ச்சி வரலாற்றில் சாதாரணமான ஒரு தருணமாக இருக்கவில்லை. மேலும் அந்த நேரத்தில், அதாவது 1837 இல் காங்க்கார்டும் சாதாரண ஒரு கிராமமாக இல்லை. ஏனென்ருல் எமர்ஸன் மூன்று ஆண்டுகளாக அங்கேதான் வசித்துவந்தார்.

பிறரை வியப்பில் ஆழ்த்தக்கூடிய ஆளுமையைப் (Personality) பெற்றிருந்தார் எமர்ஸன். அவருடைய செல்வாக்கு மிகுதியாக இருந்தது. அதிலும் சிறப்பாக, இளைஞர்கள் அவரது செய்தியின் அவசரத்தை உணர்ந்தனர். அவர்களை நோக்கி, பழைய பழக்க வழக்கச் சுமைகளை ஒதுக்கி எறிந்துவிட்டு அறிவு விடுதலையையும், தனித்துவத்தையும் நாடி வேகமாக முன்னேற வேண்டும் என்று அவர் கூறினர்; எந்தத் தலைமுறை இளைஞர்களையும் கவரக் கூடியது எமர்ஸன் விடுத்த செய்தி; அதிலும் 1830 வாக்கில் வாழ்ந்த உணர்ச்சிமிகுந்த இளைஞர்கட்கு அந்தச் செய்தி துப்பாக்கி மருந்திற்கு நெருப்பு வைத்ததுபோல் ஆயிற்று. பாஸ்டனில் ஒரு மாதா கோவிலில் மத போதகராக இருந்த எமர்ஸன், பின்னர் அந்தப் போதகர் குழுவிலிருந்தே நீங்கி விட்டார். இப்பொழுது சுதந்திரமாக இருப்பதற்குரிய வருமானத்தைப் பெற்றுவிட்டமையின் காங்க்கார்டு கிராமத்துக்கு அருகிலேயே ஓர் அழகிய வீட்டை வாங்கி அதில் குடி புகுந்தார். இந்த இடம் அவர் விருப்பம்போலக் கிராமிய வாழ்வோடும், அதே சமயம் பாஸ்டன், ஹார்வார்ட் ஆகிய இடங்களில் உள்ள அறிவு வட்டாரத்தோடும் தொடர்பு கொள்ளக் கூடிய முறையில் அண்மையிலேயே அமைந்திருந்தது. அவருடைய இளமை வாழ்க்கை துணிவற்றதாய், துரதிர்ஷ்டம் நிறைந்ததாய் அமைந்திருந்தது. ஹார்வார்டிலும், மாதா கோவிலிலும் பணியாற்றிய பிறகு, ஆசிரியப் பணியை மேற்கொண்டு அதனையும் விட்டுவிட்டார். வறுமையுடன் போராடினர்; எலும்புருக்கி நோயால் அவதிப்பட்டார்; மணஞ் செய்துகொண்டார் எனினும் விரைவிலேயே மனைவியை இழந்தார். வீணாகப்பெற்ற சந்தர்ப்பங்கள் ஒன்றிலிருந்து மற்ரென்றுக்குத் தாவுவதாகவே இருந்தது அவருடைய வாழ்க்கை. அவரைவிட ஆண்டில் மூத்தவர்கள், அவருடைய அறிவுத் திறனைப் பாராட்டினர். என்றாலும், அவருடைய சொற்பொழிவுகளும், கட்டுரைகளும் விளக்கமாகவும் அழகாகவும் இருப்பினும் அராஜகத்தையும் நாஸ்திகத்தையும் போதிப்பவை என்றே கருதினர். நல்ல உயரமும், மெலிந்த முகமும், அழகிய நீல நிறக் கண்களும் உடைய எமர்ஸன்தான், ஓர் அறிஞனின் அடக்கமும், ஒரு தீர்க்கதரிசியின் மனத்

திண்மையும் படைத்த எமர்ஸன்தான், தாம் கூற வந்த செய்தியைப் பிறரிடம் ஓயாது கூற விரும்புபவரும், உண்மையை நாடி அலைபவர்களைத் தம் செல்வாக்கினுள் சேர்த்துக்கொள்பவருமாகிய இந்த எமர்ஸன்தான் இளமையுடனிருந்த ஹென்றி தோரோவிடம் காணப்பெற்ற மேதையை வெளிக் கொணர்ந்தவராவர். ஆனால், தோரோவும் எமர்ஸனும் தம்முள் காட்டிக் கொண்ட மரியாதையும் மதிப்பும் பரஸ்பரமானவை. கிராமத்தில் பிறந்து வளர்ந்த தோரோவாகிய மாணுக்கனின் ஆழ்ந்த புலமை, அச்சமில்லா நேர்மை, கூர்மையான அறிவு, ஆன்மிகத் திண்மை என்பவற்றை எமர்ஸன் அறிய அதிக நாளாகவில்லை. தம்மிடம் தோரோ காட்டிய மரியாதையைக் கண்டு எமர்ஸன் மனம் மகிழ்ந்தார்; அவருடைய நகைச்சுவையுடன் கூடிய பேச்சைக் கேட்டு உள மகிழ்ந்தார்; அவருடைய இயற்கை ஈடுபாட்டில் உள்ளத்தைப் பறி கொடுத்தார்; உள்நாட்டுக் கலைகளில் தோரோவுக்கிருந்த வன்மையையும், இப்பொழுதேகூட வெளிப்படத் தொடங்கிய அவருடைய புலமையையும் கண்டு மிகவும் ஈடுபட்டார். இந்த ஆசிரியரிடமிருந்து ஹென்றி மிகவும் நிரம்பக் கற்றுக் கொண்டதுடன் ஆசிரியரான எமர்ஸனுக்கு வயல் வெளிகளில் வேலை செய்யும் முறைகளைக் கற்றும் கொடுத்தார்.

மிகவும் ஆண்மையுடன் விளங்கிய ஒரு சமுதாயத்தின் எண்ணங்களை அறிவதற்குரிய கருவியாக இருந்தது என்பதுபோகக் கிரேக்க மொழியில் வேறு எவ்விதச் சிறப்பையும், தோரோ உணரவில்லை. உயிரோட்டமில்லாததும், ஊர்ந்து செல்வதுமான கருத்துக்களையே ப்ளாடோ எழுதினுரென்றும், ஆனால் "இலியத்" காவியத்தைப் படிப்பதற்காகவேனும் கிரேக்க மொழியைச் சிரமப்பட்டுக் கற்றுக் கொள்ளலாம் என்றும் தோரோ கருதினுர். லத்தீன் மொழி எழுத்தாளர் பற்றியும் இவ்வாறே கருதினுர். தனித்தன்மை வாய்ந்த நவீனக் கருத்துக்களை எடுத்துக் கூறும் வன்மை பெற்றிருத்தலின் ஜெர்மன் மொழியும் கற்றுத் தீர வேண்டிய மொழியாகும். பிரெஞ்சு மொழிபெயர்ப்பிலுள்ள நூல்கள் மூலம் கீழ்நாட்டு மெய்யுணர்வுகள் சிலவற்றைப்பற்றி அறிந்தார் தோரோ. "ஓவலைட்" கொள்கையில் மிகவும் ஈடுபட்ட ஓரெஸ்டெஸ் ப்ரௌன்ஸன் என்பவ

ரிடம் கொண்ட நட்பின் மூலம் ஆங்கில சோஷலிஸவாதி களின் கருத்துக்களையும் விவாதித்து அவரால் அறிந்து கொள்ள முடிந்தது. இவை அனைத்தையும் விட முக்கிய மானது, தோரோ ஹார்வார்டில் இருந்த காலத்தில் வெளி யான எமர்ஸனுடைய "இயற்கை" என்ற நூலே; அது தோரோவின் உள்ளத்தில் இயற்கையோடு இணைந்து வளர்ச்சியடைய வேண்டும் என்று பனிப்படலம் போல் இருந்து வந்த எண்ணத்தை உருப்பெறுமாறு செய்தது. எமர்ஸன் பின்வருமாறு எழுதியுள்ளார்: "உலகம் ஏன் ஒற்றுமை இழந்து, சுக்கல் சுக்கலாகக் கிடக்கிறது என்ருல், மனிதன் தனக்குள்ளாகவே ஒற்றுமையின்றி இருக்கிருன் ......ஆகவே உங்களுக்குள்ளாகவே ஒரு சொந்த உலகைப் படைத்துக் கொள்ளுங்கள்."

இளம் பட்டதாரியான தோரோ வாழ்க்கையில் என்ன செய்யவேண்டும் என்பது பற்றித் தெளிவான கருத்தில் லாதவராக இருந்தார். பொருள் தேடுவதற்காக அவர் ஆசிரியப் பணியை மேற்கொள்ள வேண்டுமென அவரு டைய பெற்ருேர்கள் கருதினர்; ஆனுல் ஒரு கவிஞனுக இருக்கவே அவர் விரும்பினுர். ஒரு கவிஞன் என்ற முறையில்தான் எமர்ஸனுடைய குழுவினர் அவரை ஏற்றுக் கொண்டனர். 1837 ஆகஸ்ட் மாதத்தில் ஹார்வார்டி லிருந்து மீண்டவர், சில காலத்துக்கு மட்டும் இப்பணியை மேற்கொள்ளலாம் என்று கருதி, செப்டம்பர் மாதத்தில், காங்க்கார்ட் கிராமப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியரானுர். இரு வாரத்திற்குள்ளாக கிராமக் கல்விக் குழுவினருடன் அவர் சண்டையிட நேர்ந்தது. காரணம் என்னவெனில், தோரோ நம்பாத ஒன்றை, அதாவது பிள்ளைகளை அடித் துத் தண்டிக்க வேண்டும் என்பதை அந்தக் குழுவினர் வலியுறுத்தினர். மாதா கோவில் அதிகாரிகளுள் ஒருவர், அடித்தலாகிய தண்டனையைத் தந்துதான் தீரவேண்டும் என்று வற்புறுத்தியதால், ஹென்றி அறுவருக்குப் பிரம்படி தரநேரிட்டது. இதனுல் விளைந்த வெறுப்புக் காரணமாகப் பள்ளியைவிட்டு வெளியேறிய அவர், அடுத்து அதனுள் நுழையவே இல்லை. குழந்தைகளை அடிக்கும் ஆசிரியராக இருப்பதைக் காட்டிலும் தெருச் சுற்றும் சோம்பேறியாகக் கூட இருக்கலாம் என்று கருதினுர். அவர் செய்த இக் காரி யம்பற்றி அவருடைய பெற்ருேர்கள் என்ன நினைத்தார்கள்

என்பதை நாம் இன்று அறிய ஆதாரம் ஒன்றுமில்லை. ஆனால் மௌனம் சாதிக்கும் அவருடைய தந்தையார், தம்முடைய சிறிய தொழிற்சாலையை நம்பி வாழ்க்கையை நடத்தவேண்டிய கட்டுப்பாடுடைமையின், முரட்டுத்தனம் நிறைந்த தம்முடைய மகன் செய்த இந்தக் காரியத்தைப் பற்றி என்ன நினைத்திருப்பார் என்று ஊகித்துப் பார்க்கலாம். ஆனால், அதே நேரத்தில் தோரோவின் குடும்பம் முழுவதும் ஹென்றியின் இந்தச் செயலைப் பரிவுடன் ஆதரித்திருக்கும். ஏனென்றால், மனிதப் பண்பை வளர்க்க வேண்டும் என்ற புரட்சி மனப்பான்மை உடைய அந்தக் குடும்பம், அடிமை வழக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒரு மையமாக அந்த நேரத்தில், இருந்தமையின் வேறு விதமாக நடந்திருக்க முடியாது.

இதனிடையில் ஹென்றி என்ன தொழிலை மேற்கொள்வது? வாழ்க்கை வசதிகளை எவ்வகையில் பெறுவது என்ற பிரச்னை நீண்ட காலம் அவரை வாட்டியது. தாம் மேற்கொள்ளும் பணியில் முழு மனத்துடன் எவ்வளவு காலத்தைச் செலவிட வேண்டும்? எவ்வளவு சக்தியைச் செலவிட வேண்டும் என்பதுபற்றிக் கவலைப்படாமல் இருக்கக்கூடிய ஒரு பணியை அவர் நாடினார். ஒரு கவிஞன் அல்லது திறனாய்வாளனுடைய தொழில்முறை அலுவல், காங்க்கார்டு கிராமத்திற்குத் தேவைப்படவே இல்லை. இந்த நேரத்திற்கு, பயனற்ற ஊர்சுற்றியாக இருக்க விரும்பாத அவர், தம் தந்தையாரின் பென்சில் தொழிற்சாலையில் உதவி செய்ய விரும்பினார். ஆனால் பென்சில் வாணிகத்திற்கு அக்காலம் ஏற்றதாக இல்லை. தோரோ பென்சில்கள் உயர்ந்த ரகமுடையனவாயினும் வெளி நாட்டிலிருந்து வந்து குவிந்த மட்டரகமான பென்சில்களுடன் அவை போட்டியிட முடியவில்லை. ஆகவே, அந்த நிறுவனம் "தோரோ அண்டு சன்ஸ்" எனப் பெயர் பெற்றிருந்தாலும், ஹென்றி உட்பட மைந்தர்கள் அனைவரும் அங்கு இருந்தாலும், அவர்கள் அனைவரும் இராபகரமாக அதில் ஈடுபட வேண்டிய அளவுக்கு, அங்குப் போதிய வேலை இல்லை.

எனவே, தோரோ மைந்தர்கள் வாழ்க்கை நடத்தப் பிற துறைகளை நாட வேண்டியிருந்தது. கிராமப் பள்ளிக்கூடத்தில் ஹென்றிக்கு ஏற்பட்ட குழப்பத்திற்குப் பிறகு,

சகோதரர்கள் அனைவரும் கூடித் தாங்களாகவே ஒரு பள்ளிக்கூடம் தொடங்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். அவ்விதமே 1838 இல் ஒரு பள்ளியைத் தொடங்கினர். மூன்று மாதம் முடிவதற்குள் ஜான், ஹென்றி தோரோ ஆகிய இருவரும் காலியாக இருந்த காங்க்கார்ட் சொற்பொழிவுக் கூடத்தை இப்பள்ளிக்காக எடுத்துக் கொண்டனர். ஆஜர் பட்டியலில் காணப்பெற்ற இருபத்தைந்து பிள்ளைகளுடன் பள்ளிக்கூடம் தொடங்கப் பெற்றதாலும் பள்ளியில் சேர விரும்பிக் காத்திருந்தவர்கள் தொகை மிகுதியாக இருந்தமையாலும் பொருளாதார முறையில் இம்முயற்சி சில காலத்திற்கு வெற்றி தரும் என்றே நம்பினார்கள்.

எவ்வகையாக நோக்கினாலும், இப்பள்ளிக்கூடம் சிறந்ததாகவே காணப்பெற்றது. பாடத் திட்டம் நல்ல முறையில் அமைக்கப்பெற்றிருந்தது. மாணவர்களிடையே உடல் தண்டனையில்லாமலேயே ஒழுக்கமும், கட்டுப்பாடும் சிறந்த முறையில் திகழ்ந்தன. ஹென்றி எமர்ஸனுடைய கூட்டத்தில் அடிக்கடிப் பழகி வந்ததாலும் கூட்டத்தில் பலர் கல்விபற்றிய புதிய புதிய கருத்துக்களைப் பயிற்சிக்குக் கொண்டுவர முற்பட்டமையாலும் ஹென்றியின் பள்ளிக் கூடத்தில் ஒரு வகையான முற்போக்குக் காணப் பெற்றது.

எமர்ஸனுடைய வீட்டில் கூடிய நண்பர்கள் தம்முடைய சிறந்த சொல்வன்மையினால் தாங்கள் கூறவந்த விநோதமான கல்விபற்றிய கருத்துக்களை ஆணித்தரமாகப் பேசினர் என்றாலும் தோரோவை இவை முற்றிலும் கவரவில்லை. ஏனென்றால், அவருடைய கொள்கைகளும், தத்துவங்களும் முன்னரே ஒரு வடிவு பெற்றுவிட்டன. பிற்காலத்தில் அவை இன்னும் பண்பட வேண்டிய நிலைமை இருப்பினுங் கூட, அதிகப்படியான மாற்றம் ஒன்றும் அடையப் போவதில்லை. பிற்காலத்தில் இருக்கப் போவது போலவே இப்பொழுதுங்கூடத் தோரோவின் கருத்துக்கள் மிக உயர்ந்த தனித்தன்மை பெற்று விளங்கின. என்றாலும், அவை, வாழ்க்கையோடு தொடர்பற்றவையாக இருக்கவில்லை. அவரைப் பொறுத்தவரை தத்துவ சாஸ்திரத்தில் மெய்யுணர்வை நாடியே சென்றார். கிராமியத் தொழில்களைச் செய்வதிலும் கைதேர்ந்தவராக இருந்த காரணத்தால்,

புதிய சமுதாயக் கொள்கைகளைக்கூட அவை எவ்வளவு தூரம் நடைமுறைக்கு ஒத்துவரும் என்ற அளவு கோலைக் கொண்டே அளந்து பார்க்கத் தொடங்கினுர்.

ஹென்றி இளங் குழந்தைகளுக்குச் சிறந்த ஆசிரியராக இருந்தார். அவரையொத்த இளைஞர்களுடன் கூடியிருப்பதைக் காட்டிலும் தாம் தனிமையாகவே இருக்க விரும்பியதை ஒளிவு மறைவின்றி அவர் வெளியிட்டார். என்ருலும், பிள்ளைகளைக் கூட்டமாகச் சேர்த்துக் கொண்டு சென்று கிராமத்தைத் சுற்றியுள்ள பகுதிகளில் ஹக்கிள் பெரிப் பழங்களைச் சேகரிக்க விரும்பினுர். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிராமக் கலைகளைப்பற்றி அவர்களுக்குக் கற்பிக்கவும், இயற்கைபற்றியும், சிவப் பிந்தியர்கள் பற்றியும் தாம் அறிந்தவற்றை அவர்களுக்குக் கூறவும் செய்தார். குழந்தைப் பருவ நினைவுகளை மிக ஆழமாக மனத்தில் பதித்து விட்டமையின், பிற்காலத்தில் அக் காடுகளுக்கு எப்பொழுது மீண்டாலும் பழைய வாழ்க்கையை, அந்த இன்ப நாட்களை, மறுபடியும் அப்படியே நினைவுக்குக் கொண்டுவர முடிந்தது. ஹென்றியின் மேதை காரணமாகப் பாடத் திட்டத்திற்குப் புறம்பான நிகழ்ச்சிகளின் மூலமாகவும் கற்பிக்கும் முறையில் தோரோப் பள்ளி வளர்ச்சியடைந்தது. இரண்டு சகோதரர்களும் மிக நெருங்கிய தோழர்களாக இருந்தமையின் பல சமயங்களில் ஹென்றியை ஜான்தான் காடுகளுக்கு அழைத்துச் சென்ருர். பறவைகளைக் கூர்ந்து கவனிப்பதில் ஜான் மிகவும் நிபுணராக இருந்தார். இன்னும் சில காலம் அவர் உயிருடன் வாழ்ந்திருப்பின் ஹென்றியை விடச் சிறந்த இயற்கைவாதியாக இருந்திருப்பார். ஓராண்டு வெற்றிகரமாகப் பள்ளிக்கூடத்தை நடத்தி முடித்த பின், உள்ளூரிலுள்ள ஓடைகளின் வழியே படகு ஓட்டிக்கொண்டு உல்லாசப் பயணம் சென்ருர்கள். இரவு நேரங்களில் கரைகளிலேயே தங்கிச் சென்றனர். பறவைகளைக் கூர்ந்து கவனிப்பதில் ஜான் மகிழ்ச்சியடைந்தார். ஹென்றியோ வெனில், படகிலேயே அமர்ந்து கொண்டு அல்லிப் பூக்களின் அழகையும் ஆற்றின் கரைகளில் நின்று மீன்பிடிப்பவர்களின் பொறுமையையும், தண்ணீரின் பளபளப்பையும், பாய்ச்சலையும் அனுபவிப்பதிலும், இவையனைத்தையும் தம்முடைய நாட்குறிப்பில் பதிவதிலும் பொழுதைக் கழித்தார்.

ஜானுக்கு இருபத்து நான்கு வயதும், ஹென்றிக்கு இருபத்து இரண்டு வயதும் ஆயிற்று. வாழ்க்கை இன்ப மாக இருப்பினும், புதிதாகத் தோன்றுகின்ற உணர்ச்சிப் போராட்டங்களின் தொல்லைகளிலிருந்து அவர்கள் விடுபட வில்லை. சகோதரர்கள் இருவருமே காதல் கொள்ளக் கூடிய பருவம் அது. ஆதலால் அந்தக் கோடைக் காலத் தில், மிகவும் பழகியவரும், பதினேழு ஆண்டுகள் நிரம்பப் பெற்றவருமான எல்லன் ஸுவெல் என்ற பெண்ணை, இருவருமே காதலிக்கத் தொடங்கினர். இப்பெண், அவர் கள் குடும்ப நண்பராக இருந்ததுடன் அவர்கள் பள்ளிக் கூடத்தில் கல்வி பயில்கின்ற ஒரு மாணவனின் சகோதரியு மாவார். காங்க்கார்டு, மெர்ரிமாக் ஆகிய ஆறுகளின் இடையே அவர்கள் கூடாரமடித்துத் தங்கியிருந்த நேரத் தில்கூட சோதரர்களின் நடுவே, அந்தப் பெண் ஒரு நிழல்போலக் காட்சி தந்ததை ஹென்றி மட்டுமே உணர்ந் தார். ஏனென்றால், எல்லனைத் திருமணம் செய்துகொள் ளப் போவதுபற்றிய தம் கருத்தை, ஜான் ஒளிவு மறை வின்றி எடுத்துக் கூறினாரேனும், ஹென்றி வெளிப்படை யாக ஒன்றும் சொல்லவில்லை. ஏனென்றால், அவருடைய காதல் பிறரிடம் மறைக்கப்பெற்ற பொருளாக இருந்த துடன், இறுதி வரையும் அவ்வாறே அமைந்துவிடும் போல வும் தோன்றியது.

ஓராண்டு கழிந்தது. அடுத்த கோடையில், ஜான், தம்மை மணந்துகொள்ளுமாறு எல்லனைக் கேட்டார். மிக நீண்ட தயக்கத்திற்குப் பிறகு, இறுதியாக, எல்லன் அவரை மறுத்து விட்டார். எதிர்பாராத இந்நிகழ்ச்சி, தம் காதலில் புதிய நம்பிக்கை கொள்ளுமாறு ஹென்றியைத் தூண்டியது. சில மாதங்கள்வரை நடைபெற்ற கடிதப் போக்குவரத்திற்குப் பிறகு சிட்டுவேட் என்ற ஊரில் உள்ள அவருடைய வீட்டு முகவரிக்குத் தம் காதலை வெளிப்படுத்தி ஒரு கடிதம் வரைந்தார். அவர் கட்டிய கோட்டைகள் இடிந்து மண்ணாகும் சூழ்நிலை இப்பொழுது ஏற்பட்டது. தோரோ சகோதரர்களிடம் அவள் மிகவும் அன்பு வைத்திருந்தாலும் அவர்களில் ஒருவரையும் காத லிக்கவில்லை. அவர்களிடையே இருந்த நட்பு முன்போல் இருக்க முடியாது என்பதை நினைத்து அவள் மிகவும் வருத்தமடைந்தாள். இதுபற்றிய அவளுடைய கடிதம்

ஒன்று பாதுகாக்கப் பெற்றுள்ளது. "ஹென்றி தோரோவுக்கு, அன்று மாலை விடை யெழுதினேன். என் வாழ்நாள் முழுவதிலும் ஒரு கடிதம் எழுதுவதற்கு அவ்வளவு வருத்தமடைந்ததில்லை. எந்த இரண்டு நண்பர்களிடம் மிகவும் மகிழ்ச்சியாகவும், இன்பமாகவும் இருந்தேனோ அவர்களிடம் முன்போல் மனம் விட்டுப் பழக முடியாது என்பதை நினைக்கும்பொழுது மிகவும் வருந்துகிறேன். என்னுடைய கடிதம் உண்மையிலேயே மிகவும் சுருக்கமானது. என்றாலும் அதன் பயன் சரியானதென்றே நினைக்கிறேன்." இதன் பிறகு ஹென்றி வேறு எந்தப் பெண்ணையும் கண்ணெடுத்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை அவருடைய கற்பனையில் லட்சிய வடிவு கொண்ட எல்லனுக்குப் பிறகு வேறு பெண்கள் வெறுப்பை விளைவித்தார்கள் போலும்!

---

# அத்தியாயம் 3

"ஆற்றில் ஓடும் தண்ணீர் போன்றது மானுட வாழ்வு. மனிதன் கற்பனை செய்யாத அளவுக்கு இவ்வருடம் வெள்ளம் பெருகி, வறண்ட மேட்டுநிலங்களை யெல்லாம் வெள்ளக் காடாக்குகிறது."

தோரோ : வால்டன்

---

"தனிமை நிறைந்த இந்த மாலை நேரத்தை, எனது நல்ல நண்பராகிய ஹென்றி தோரோ, தம்முடைய எளிமைத் தன்மையாலும் தெளிந்த காட்சியாலும் இன்ப முடையதாகச் செய்தார்." இம் முறையில் 1838 பெப்ருவரி 17 ஆம் தேதி எமர்ஸன் தம்முடைய நாட்குறிப்பில் எழுதி யுள்ளார். அன்று மாலை முழுவதும் எமர்ஸனுடைய தோட்டத்தில் அவர்கள் இருவரும் ஒன்றாக இருந்தனர். எமர்ஸன், தம்முடைய வாழ்க்கையிலேயே முதன் முறையாக, மற்றொருவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார். பிறர் கவனிக்கும் சூழ்நிலையிருந்தால் ஹென்றி மிகுதியாகப் பேசக்கூடியவர். அன்றியும் அவர் எமர்ஸனுக்கே கற்பிக்கக் கூடிய சில விஷயங்களும் இருந்தன. உதாரணமாகச் சிவப்பு இந்தியர்களும் காங்க்கார்டில் உள்ள அவர் வாழ்க்கைச் சின்னங்களும் ஒன்று. கனடா நாட்டு கம்பிளி வாணிகர்களைப் பற்றியது மற்றொன்று. (பெரிய யாத்ரிகரும் இயற்கை வல்லுநருமான அலெக்ஸாண்டர் ஹென்றி எழுதிய "கனடா நாட்டில் சுற்றுப்பயணமும் வீரச் செயல் களும்" என்னும் நூலைப் படித்ததால் ஏற்பட்ட உடனடிப் பயனாகும்.) அடுத்து ந்யூ இங்கிலாந்தில் குடியேறிய ஆதிமக்களின் வரலாறு ஆகும். இவையெல்லாவற்றையும் விட அதிகமாக, கார்லைலும், எமர்ஸனும் எழுதிய இயற்கையின் நுண்மைகளைப்பற்றி யல்லாமல் பருப்பொருளான மண், மலை, காற்று, தாவரம், விலங்கு, மனிதன் என்பவை பற்றியே ஹென்றி பேசினார்.

இயற்கை வரலாற்றில் அவர் கொண்டிருந்த இந்த ஆர்வமே, நாளாவட்டத்தில் அவருடைய அறிவாளி

நண்பர்களிலிருந்து அவரை வேறு பிரித்துக் காட்டிற்று. காங்க்கார்டு கிராமப் பகுதிகளில் அவர் தனியே உலவச் செல்லும்பொழுதெல்லாம், தாம் கண்டவற்றை நாட்குறிப்பில் குறித்துக் கொள்ளும் பழக்கத்தை மேற்கொண்டார். இத்தகைய ஒரு பழக்கத்தை எமர்ஸனும் மேற்கொள்ள விரும்பினார் : "என்னுடைய ஆயுள் மிக நீண்டதாக இருப்பின், நான் எழுதும் பல்வேறு நூல்களினிடையே இயற்கையைப்பற்றிய நூலும் ஒன்றாக இருக்கும்.........ஓர் ஆண்டின் பல்வேறு மாதங்களிலும் நான் தங்கியிருக்கும் பல்வேறு முகாம்களைச் சுற்றி உள்ள காட்டுப் பகுதிகளின் இயற்கை வரலாறே இந்நூலில் காணப் பெறும். நான் எழுதக் கூடிய அந்த இயற்கை வரலாற்று நூலில் வான இயல், தாவர இயல், உடலியல், வானிலை இயல், காட்சிக் கவின், கவிதை ஆகிய அனைத்தும் தக்க முறையில் இடம் பெறும். இன்று அங்கு நிலைபெற்றுள்ள பறவை, பூச்சி, மொக்கு ஆகியவற்றுள் எவற்றையும் விட்டுவிடாமல் சேர்க்க விரும்புகிறேன்" என்று எமர்ஸன் எழுதினார். ஆனாலும், பல நூல்களை எழுத வேண்டியும் பல சொற்பொழிவுகளை இயற்ற வேண்டியும் உள்ள ஒரு பெரிய நிகழ்ச்சியில் ஏற்கெனவே ஈடுபட்டிருந்தலின் எமர்ஸன் இதனைச் செய்ய முடியாதவரானார். அவரைப் பொறுத்த வரை இயற்கை வரலாறு என்பது ஓய்ந்த நேரத்தில் மகிழ்ச்சிக்காக ஏற்றுக் கொள்ளும் ஒரு பொழுதுபோக்காகவே இருந்தது. அது எவ்வாறிருப்பினும் ஹென்றியிடம் காணப்பெற்ற இயல்பான ஓர் ஆர்வம் எமர்ஸனிடம் இல்லை. இலக்கியத் துறையில் தோரோ எத்தகைய பணிகளை மேற்கொண்டாலும் அவருடைய ஆர்வமே அதற்குக் காரணம் என்பதையும் எமர்ஸன் உணர்ந்தார். "காங்க்கார்டின் தலைசிறந்த மனிதர்" என்று கூறத் தகுந்த முறையில் ஹென்றியிடம் சில பண்புகள் அமைந்திருந்தன என்பதை எமர்ஸன் கண்டார். ஆனால் எமர்ஸனோ எனில் ஹென்றியைவிட அதிகம் கற்றவராய், அதிகம் யாத்திரை செய்தவராய், அதிகம் உலகியல் தெரிந்தவராய் விளங்கினார். இதன் எதிராக, ஹென்றி, "காங்க்கார்டைச் சுற்றி அதிகம் சுற்றித் திரிந்தவர்" என்பதில் பெருமையடைந்தார். ஹென்றியைப் பொறுத்தமட்டில் உள்ளூரிலுள்ள ஒரு சிறு பகுதியுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டி-

ருப்பது, உலகம் முழுவதையும் வெகு வேகமாகச் சுற்றிவந்து அங்குக் கிடைக்கும் பல்வேறு காட்சிகளையும் காண்பதைக் காட்டிலும் சிறப்புடையது என்று கருதினார். மேலும், "உலகத்தின் செம்பாதியைச் சுற்றிச் சென்று ஸான்ஸிபாரிலுள்ள பூனைகளை எண்ணுவது" பயனற்ற செயல் என்றே அவர் கருதினார். அன்றியும் உலகத்தின் ஒரு பாதியிலுள்ளவர்கள் மற்றவர்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதை அறிவதில்லையென்று கூறுவதில் உண்மையில்லை என்றே கருதினார். "உலகத்திலுள்ள மக்களுடைய வாழ்க்கை முறை ஒரே மாதிரியாக இருப்பதுடன் பலரும் பகிர்ந்து கொள்ளக்கூடிய எளிய அனுபவங்களையும் கொண்டுள்ளது" என்றும் கூறியுள்ளார்.

நீண்டு வளைந்த சந்து பொந்துகளிலெல்லாம் ஹென்றி சுற்றியலைந்தார். பல சமயங்களில் இச்சந்துகள் யாரும் நடமாடாத பாதைகளின் வழியாகச் சென்று காங்க்கார்டின் அதிக வளப்பமில்லாத புல்வெளிகளினூடும் தரிசு நிலங்களினூடும் சென்று இறுதியாக, காடுகளிலும், குட்டைகளிலும் முடிவடைந்தன. மஸ்கெட்டாக்குவிட்—மெள்ளச் செல்லுகின்ற காங்க்கார்டு ஆற்றுக்கு பழங்காலச் சிவப்பிந்தியர்கள் வைத்திருந்த பெயர் இதுவேயாகும்—என்ற இப்பெயரையே அவர் அதிகமாய் விரும்பினார். அதன் கரை வழியே நடந்து செல்வதை அவர் பெரிதும் விரும்பினார். இந்த ஆறு ஓக் மரங்கள் நிறைந்துள்ள வழிகளிலும் பாசிப்படலம் போல க்ரேன் பெர்ரிக் கனிகள் மண்டிக் கிடக்கின்ற பரப்புகளூடும் ஓடிச் செல்லுகிறது. மேலும், அலரிச் செடிகள், மேப்பிள்கள், ஆல்டர்கள் ஆகிய மரங்களும் திராட்சைக் கொடிகளோடு சுற்றிக்கொண்டு வளர்ந்திருந்தன. இவை யனைத்தும், நீண்டு வளர்ந்துள்ள செஸ்ட்நட், பைன் ஆகிய மரங்களுடன் போட்டியிட்டுக் கொண்டு சூரிய ஒளிக்குத் தலையை நீட்டின.

மீன்கள், விலங்குகள், பூச்சிகள் பறவைகள், மலர்கள், மரங்கள் ஆகிய இயற்கைப் பொருள்கள் அனைத்துமே இப்பொழுது அவருடைய மனத்தைக் கவர்ந்தன. இவையனைத்திலும் தம்முடைய முழுக் கவனத்தையும் செலுத்தி, தம் கூர்மையான பார்வையாலும் தனித்தன்மை பெற்ற மனத்தாலும் கண்டவற்றைத் தம்முடைய குறிப்புப் புத்தகத்தில்

திரப்பிக்கொண்டார். பொறி புலன்கள் மூலமாக இவர் இயற்கையை அணுகின காரணத்தால் அப்பொறி புலன்கள் இயற்கையின் மூலமாக எல்லையற்ற இன்பத்தைப் பெற்றன. புற நிலையில் தனிப்பட்ட விஞ்ஞான முறையில் இயற்கையை அணுகுவது அவரைப் பொறுத்தமட்டில் நேர்மையாகப் படவில்லை. கிராமத்தை விட்டு நீங்கியதுமே அவருடைய மன நிலையில் ஏற்பட்ட மாறுதலைக்கண்டு அவருடைய நண்பர்கள் வியப்படைந்தனர். காடுகளில் நுழைந்தவுடனேயே ஏதோ ஓர் அற்புதம் நிகழப் போவதை எதிர் பார்ப்பது போன்ற ஒரு மன நிலை அவரிடம் காணப்பெற்றது.

தாவர இயலைத் தொடர்ந்து கற்கும் மன நிலையிலும், பரவலாக உள்ள இடங்களில் வளர்ந்திருக்கின்ற பல் வேறு வகைப்பட்ட தாவரங்களின் வளர்ச்சியையும் ஒரே நேரத்தில் அறிய விரும்பும் மன நிலையிலும் இருந்ததால், நாள்தோறும் இருபது அல்லது முப்பது மைல்கள்கூட அவர் நடந்து சென்று வருவார். மர முளைகளைக் கூர்ந்து நோக்கி, ஒப்புமைப் படுத்திப் பார்ப்பதற்காக மிக நீண்ட பிரயாணங்களை மேற்கொண்டார். சில சமயங்களில், பல மணி நேரங்கள் காட்டுப் பகுதிகளின் எதிரே, ஒன்றுமே செய்யாமல் நின்றவாறோ அல்லது இருந்தவாறோ அவற்றைக் கூர்ந்துகவனிப்பதன் மூலம், அப்பொருள்கள் தங்கள் உண்மைத் தத்துவங்களைத் தாமே வெளியிடுமாறு செய்துவிடுவார். ஆற்றின் கரையில் பல மணி நேரம் படுத்தபடியே மூஞ்சுறுகளையும், மீன்களையும் கூர்ந்து கவனிப்பார்; பௌட் என்ற மீன்களையோ அல்லது கராஸ் அல்லது ப்ரீம் என்ற மீன்களையோ எவ்வாறு பிடிப்பது என்பதையும், சகதி நிறைந்த தண்ணீரில் இறங்கி எவ்வாறு ஓர் ஆமையைப் பிடிப்பது என்பதையும் நன்கு கற்றிருந்தார். பறக்கும் அணில்கள், முட்டையிடும் ஆமைகள், ஆந்தைகளின் குரல்கள் இவற்றை வர்ணித்துள்ளார். தவளைகள், சுண்டெலிகள், பருந்துகள், பாடும் பறவைகள், பூவாத அழகிய இலைகளையுடைய செடிகள், அட்டைகள், சிறு பூச்சிகள் மரங்களின் மேல் இட்டுள்ள எச்சங்கள், வளைந்து செல்லும் ஓடைகள், நிலப்பரப்பின் அமைப்பு ஆகியவற்றையும் கூர்ந்து கவனித்துள்ளார். இவையனைத்தையும் ஒரு கோவைப்படுத்தி ஒன்றையும் விட்டுவிட முடியாதபடி வரைந்துள்ளார்.

குளிர் காலத்தில் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதி முழு வதிலும் அவரைத் தவிரப் பிறரைக் காணமுடியாது. "நேற்று ஒரு நரியைத் துரத்திக் கொண்டு பனியில் சறுக்கிக் கொண்டே சென்றேன். சில சமயம் அது குந்தியவாறு ஒரு சிறிய ஓநாயைப் போல என்னை நோக்கிக் குரைத்தது...... அதனைத் தொடர்ந்து நான் சறுக்கிச் செல்கையில் தன்னு டைய முழு வேகத்துடன் ஓட ஆரம்பித்தது. ஆனால் நான் நின்றுவிட்டபொழுது, அதனுடைய பயம் சற்றும் தணிய வில்லையானாலும், அந்த விலங்குக்குரிய சிறப்பான இயல்பு காரணமாகப் போலும், ஓடாமல் நின்று பிறகு குந்திக்கொண்டது......" என்று எழுதியுள்ளார். பல சமயம் எதிர்பாராத மகிழ்ச்சியைப் பெறுவதற்காகப் பனியின்மேல் அவர் சறுக் கிக்கொண்டே செல்வதுண்டு. "பனி மூன்றடி ஆழமும் பனிக்கட்டி இரண்டடி கனமும் இருந்தன. நேற்றிரவு ஒரு வேளை 0 டிகிரி உஷ்ணத்திற்கும் 30 டிகிரி குறைவாக இருந்திருக்கும்போலும்! இயற்கையின் ஊற்றுக்கள் அனைத் தும் மூடப் பெற்றிருந்தன. யாத்திரிகன் வழியிலே உறைந்து போனான். ஆனால் அதோ அங்கே தெரிகின்ற பர்ச் மரங்களின் அடியில் சிவந்த மார்பையுடைய ரெட் போல்ஸ் பறவைகள் பர்ச் விதைகளைப் பொறுக்கித் தின்று கொண்டு உடம்பின்மேல் படியும் பனியைஉதறுகின்றன...... என்ன அழகான காட்சி! இயற்கையின் பல்வேறு பகட் டான நிறங்கள், சிவந்த மார்புகள் ஆகியவை வெண்மை யான பனியின்மேல் இருக்கும் அழகு எத்தகையது? ஒரு தெய்வீகத்தன்மை, அற்புதமான வடவமைப்பு, வண்ணங் களில் ஒரு முழுத்தன்மை ஆகியவை இந்தக் கொடுமையான வறண்ட பருவத்திலும் கூட இருக்கின்றன" என்று எழுதி யுள்ளார்.

கார்லைல் பேசுவதைப் போன்றே "அண்டத்தின் தெய் விக ரகசியம்" என்றும் "அழகின் ஆழத்திற்கும் அடியிற் கிடக்கும் ஆழமான அழகு" என்றும் தோரோவுங்கூடக் கூறக்கூடிய சந்தர்ப்பங்கள் நிரம்ப இருந்தன. இதன் பய னுக, உலகியல் கடந்த ஒரு சீடனுக, எமர்ஸன், இவரை மதிப்பதற்குக் காரணங்கள் இருந்தன. இந்தச் சந்தர்ப்பத் தில் ஓரளவு அதிகமான சுதந்திர உணர்ச்சி பெற்றவராக இருப்பினும், பழைய மரபுகள், பழகிப்போன கருத்துக்கள் ஆகியவற்ருல் கட்டுண்ணுமலும் உலகத்திற்குரிய பேராசை

இல்லாமலும் இருந்த இவர், தம் கட்டுக்குள் வந்துவிடுவார் என்றே எமர்ஸன் கருதினர். மாதா கோயில் பட்டியலி லிருந்து தம்மை விடுவித்துக்கொண்ட தோரோ, எமர்ஸ னின் கொடியின் கீழ் முன்னரே கூடியிருந்த பிற இளைஞர் களுடன் சேர்ந்து, வாழ்வில் புதிய கனவுகளைக் காணவும், புதிய நினைவுகளை ஏற்கவும் தயாராக இருப்பார் என்றே தோன்றிற்று. மிகவும் ஊக்குவிக்கப்பெறவேண்டிய இளை ஞராகத் தோரோ இருந்தார். எனவே, எமர்ஸனிடம் அடிக் கடி செல்லத் தொடங்கினர்.

எமர்ஸனுடைய வீட்டில், ரால்ஃப் வால்டோ எமர் ஸனை அன்றி, அவருடைய இரண்டாம் மனைவியாகிய லிடி யனும் தம்மை விரும்புவதைத் தோரோ அறிந்தார். மிக நீண்ட காலம்வரை அந்த அம்மையாரிடத்தில் ஆழ்ந்த நட்புக்கொண்டிருந்தார். லிடியன், மெல்லிய வடிவமும் வெளுத்த தோற்றமும் உடையவராய் இருப்பினும், தோரோவின் நலத்திலும் முன்னேற்றத்திலும் மிகவும் அக் கறை கொண்டார். தோரோவின் கருத்துக்களைப் பரிவு டன் கவனிப்பார். எனவே, ஹென்றிக்குப் பெண்மையின் உயர் நோக்கத்தின் உருவகமாகவிருந்தார் லிடியன். இளங் கவி ஒருவர் வஞ்சகமின்றித் தம் கவிதைகளை அவர்மேல் பாடக்கூடிய நிலையிலும் இருந்தார். இதற்கு முற்றிலும் மாருக இருந்த மற்ருெரு பெண்ணையும் எமர்ஸன் இல்லத் தில் தோரோ சந்திக்க நேர்ந்தது. அப்பெண் மார்கரெட் ஃபுல்லர் என்பவராவார். சக்தி வாய்ந்த எழுத்தாளராக வும், "புதுமையின்" சிறந்த சீடராகவும், வலிமை பொருந் திய பண்பாடு உடையவராகவும் இருந்த மார்கரெட், ஹென் றியிடத்தில் பின்னர்ப் பயன்படக்கூடிய, ஆனல் அப்போது அனுபவம் முதிராத ஓர் இளமையை மட்டும்தான் கண் டார்; எனவே, அவர் விரும்பத்தக்கவராயினும் வைக்க வேண்டிய இடத்தில் வைக்கப்படவேண்டியவர் என்பதை யும் கண்டார்.

எமர்ஸன் இல்லத்தில் அடிக்கடி கூடிய காங்க்கார்டின் அறிவாளிகள் கூட்டம், தம் கூட்டத்தின் தலைமைத் தெய் வமாகிய எமர்ஸனின் எதிரே "புதுமை"த் தத்துவங்களை விவரித்து மகிழ்ந்தது. இந்தச் சீடர்களை நன்கு பரீட்சித் துப் பார்த்து, அவர்கள் ஆற்றும் இந்தப் பெருஞ் சொற்

பொழிவுகளைக் கடந்து, உள்ளே உறையும் அவர்களுடைய அந்தராத்மாவை அறிய முற்பட்டார். இந்தச் சொற்பொழிவுகளின் அடியில் ஆழமற்ற மனிதரைக் கண்டால் உடனே அவர்களுடைய அகங்காரத்தைத் தட்டிவிட எப்பொழுதும் அவர் தயங்கியதே இல்லை. வாசாலகர்களான இந்தச் சொற்பொழிவாளர்களின் உரைகளை அதிக மதிப்புடனும், ஆனால் அதிக நம்பிக்கை வைக்காமலும் தோரோ கவனித்து வந்தார். அவர்கள் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் அவர் விரும்பினாலும், அவர்கள் கூட்டத்திலிருந்து விலகி இருக்கவே விரும்பினார். அதிலும் சிறப்பாகப் புதுச் சமுதாய விவகாரங்கள் வரும்போதெல்லாம் மேலும் ஒதுங்கியே இருந்தார்.

1840 ஆம் ஆண்டில் ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. அமெரிக்க இலக்கிய வரலாற்றில் அந் நிகழ்ச்சி பெரிய இடத்தைப் பெறுவிடினும், தோரோவின் வாழ்வில் அது முக்கியமான ஒன்றாகும். "தி டயல்" என்ற இதழை எமர்ஸன் தொடங்கினார். மிகக் குறுகிய காலமே அது உயிர் வாழ்ந்தது எனினும், நியூ இங்கிலாந்தின் பண்பாட்டு நிலையமாக பாஸ்டன் நகரம் அப்பொழுது இருந்தமையால் இந்த இதழ் அங்குதான் வெளியாயிற்று; முன்னூறுக்கும் குறைந்த சந்தாதார்களே இருப்பினும் அறிவாளிகளின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. தோரோவைப் போல உலகிற்கு அறிமுகம் ஆகாத எழுத்தாளர்களை, உலகிற்கு அறிமுகம் செய்து வைக்கும் பணியை இந்த இதழ் மேற்கொண்டது. ஊக்கம் மிக்க மிஸ் எலிஸபெத் பீபாடி என்பவர் "தி டயல்" இதழின் வெளியீட்டாளராக அமர்ந்தார். சமீப காலத்தில்தான் பாஸ்டனின் மேலத் தெருவில் அவர்தம் வெளியீட்டு நிலையத்தை நிறுவிப் பிற உலகியல் கடந்த வெளியீடுகளையும் அவருடைய மைத்துனரான நதானியல் ஹாதார்னின் நூல்களையும் வெளியிடலானார்.

1840 முதல் 1842 வரை டயல் இதழை மார்கரெட் ஃபுல்லரே ஆசிரியராக அமர்ந்து நடத்தினார். இளமை நிறைந்த பள்ளி ஆசிரியராகிய தோரோவின் கட்டுரைகளை, கற்றுக்குட்டி முயற்சியென்று அவர் திருப்பி அனுப்பிவிட்டார். இது தோரோவின் கர்வத்தைப் பாதித்தாலும், அவர் எழுத்து நடையில் முன்னேற்றத்தைப் பெறப் பெரிதும்

உதவிற்று. அதே நேரத்தில், அவரை ஊக்குவிக்கக்கூடிய எமர்ஸனை நண்பராகப் பெற்றிருந்தது அவருடைய அதிர்ஷ்டமேயாகும். நல்ல அறிவுரைகள் கூறியும், மேலும் எழுதுமாறு தூண்டியும், எமர்ஸன் தோரோவுக்கு ஊக்கமளித்தார். எழுத்து மூலமாகத் தம் சம்பாத்தியத்தில் ஒரு பகுதியை நிரப்ப நினைத்த தோரோவுக்கு அந்த ஊக்கம் தேவைப்பட்டது. சுவையற்ற ஏதாவது ஒரு தொழிலை மேற்கொள்ளாமல் சம்பாதிக்க வேண்டுமானால் எழுத்து ஒன்றுதான் அதற்குப் புகலிடந் தரும் என்பதைத் தோரோ உணர்ந்தார். அவர் தம்முடைய நாட்குறிப்பில், "எந்த ஓர் உத்தியோகத்திலும் நுழைகின்ற மனிதன் விதி முடிந்தவனேயாவான் ; அவனைப்பற்றி ஒரு சரம கவியையே உலகத்தார் பாடிவிடலாம்" என எழுதியுள்ளார்.

1841 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அவருடைய தமையனாரின் உடல்நிலை காரணமாகப் பள்ளிக்கூடத்தை மூடிவிடும் நிலைமை ஏற்பட்டவுடன் தோரோ ஓரளவு பெருமூச்சு விட்டிருப்பார் என்றே கருதலாம். வேறு வழியே இல்லாவிட்டால் ஒழிய மறுபடியும் பள்ளி ஆசிரியராக அமரப்போவதில்லை என முடிவு செய்து கொண்டார். சுதந்திரம் அவர் பிடிக்குள் அகப்பட்டுவிட்டதாகவே கருதினார். "ஒரு கோனைவிட நான் சுதந்திரமுடையவன் ......... பொதுமக்கள் கருத்திலிருந்தும் அரசாங்கம், சமயம், கல்வி, சமுதாயம் ஆகியவற்றிலிருந்தும் நான் விலகிச் செல்ல முடியும். இந்த மண்ணிலேயே வேரூன்றமல் இருக்கும் என் அதிர்ஷ்டத்திற்கு நன்றி பாராட்ட வேண்டும். உலகம் முழுவதும் இங்கேயே முடிந்து விடவில்லை. நகரத்தின் குமாஸ்தாவாக உத்தியோகம் பெற்றுவிட்டால், இந்தக் கோடைக்காலத்தைக் கழிக்க ட்ரு டெல் ப்யூகோ வுக்குச் செல்ல முடியாது" என்று எழுதியுள்ளார்.

ஆகவே, அவருடைய உடல் மட்டும் சுதந்திரமாக இருந்து பயனில்லை எனக் கருதினர் : நம்மில் பலருடைய ஆன்மாவையும், மனத்தையும் பற்றி இருக்கின்ற துருவும் தேக்கமும் அவருக்குப் பெரியதொரு அச்சத்தை விளைவித்துள்ளன. "உண்மையில் உறுப்புகளுக்கு உரைப்பதற்கு உரிய இடம் உண்டு. நம் ஆன்மாதான் ஒரு மூலையில் துருப் பிடிக்கும்படி ஒய்ந்து கிடக்கிறது" என்று

எழுதியுள்ளார். சுதந்திரம், சுயேச்சை என்ற இரண்டையும் பிடித்துக்கொண்டு விடாமல் இருக்க ஏற்ற முறையில் பெற்றோர்களின் பிணைப்பிலிருந்து விடுபட்டு அப்பாற் சென்று வாழ விரும்பி, இடம் தேடலானார். பட்டினியாகக் கிடப்பதற்குரிய ஒரு பொந்தை அவர் விரும்பவில்லை ; சொற்ப வருமானத்திற்குத் தக்கபடி தம் தேவைகளைக் குறைத்துக் கொண்டு வாழக்கூடிய முறையில் காலியாக இருக்கும் ஓர் இடத்தை நாடினார். அங்கு அவருக்கு விருப்பப்படி சிந்தனை செய்யவும், இயற்கையைக் கூர்ந்து கவனிக்கவும், எழுதவும் நிறைந்த ஓய்வு கிடைக்கும். இப்படிப்பட்ட ஒரு வீடு அவருக்குக் கிடைக்கவில்லை. இன்னுஞ் சில வீடுகளைத் தேட முற்படலாமா என்று அவர் சிந்தித்துக் கொண்டிருந்த நேரத்தில், எதிர்பாரா விதமாக எமர்ஸன் அவருக்கு ஒரு பணியைத் தரவும், 1841 ஏப்ரிலில், அப்பணியை மேற்கொண்டார்.

தம்முடைய வாழ்க்கையில் எத்தகைய ஒரு வேலை வேண்டும் எனத் தோரோ எதிர்பார்த்திருந்தாரோ, அதற்கேற்ற முறையில் ஒரு பணியை உண்டாக்கி எமர்ஸன் இவருக்கு உதவினார். வேண்டுமான அளவு ஓய்வும், தங்க ஓர் இடமும், தேவையான உணவும், சுருங்கக் கூறினால் சுதந்திரத்தையுமே அது அளித்தது. அவ்வாறு செய்வதால் எமர்ஸனுக்கும் ஓர் இலாபம் ஏற்பட்டது. நீண்ட சொற்பொழிவுப் பயணத்தை எமர்ஸன் மேற்கொண்டாராதலின், பல வாரங்கட்கு வீட்டை விட்டுச் செல்ல நேரிட்டது. அந்நேரங்களில் தோரோ, எமர்ஸன் வீட்டில் தங்க முடிந்தால், தலைவனில்லாத அவ்வீட்டைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பும் இருக்குமன்றோ? இதைவிட எமர்ஸனுக்குத் திருப்தியளிப்பது வேறு எது இருக்க முடியும்? எமர்ஸனின் குழந்தைகளிடம் ஹென்றி மிகவும் அன்பு பாராட்டினார்; லிடியனும், ஹென்றி தங்கியிருப்பதை வரவேற்றார்; குடும்பத்தை நன்கு நடத்திச் செல்லும் ஆற்றலும் அவருக்கிருந்தது. தோட்டத்தைப் பராமரிக்கவும், பழமரங்களைக் கத்தரிக்கவும், கோழிப் பண்ணையைப் பாதுகாக்கவும், மாலை நேரங்களில் லிடியனுக்கு உதவியாக இருக்கவும், வருவார் போவாருக்குப் பதில் சொல்லவும் அவரால் முடியும். அவர் தங்குவதற்கு ஒரு தனி அறையையும், அவருடைய உணவையும் மட்டுமே எமர்ஸன் தந்தார். எமர்ஸன்

பெரும் பணக்காரர் அல்லர் ஆகலின் சம்பளம் என்று ஒன்றும் கொடுக்கவில்லை. ஆனால், தம்முடைய நாட்குறிப்பில் "செல்வச் செருக்கைத் தவிர வேறு எவ்விதப் போராட்டத்தையும் நான் காணுமல் இருப்பேனுக" என்று எழுதிய தோரோவுக்கு இது ஒரு பெரிய கஷ்டமாக இல்லை. மேலும் அவருடைய கடமைகளும் மிக எளிமையானவையாகவே இருந்தன. அவர் விருப்பம்போல் எப்பொழுது வேண்டுமாயினும் வந்துபோகலாம்; குடும்பத்தினருடன் சம அந்தஸ்துடன் பழகலாம். முகிழ்த்து வரும் எழுத்தாளர் ஒருவர் இதைவிடச் சிறந்த ஒன்றை வேண்டுவதுண்டோ?

எமர்ஸனும் அவருடைய நண்பரான ஆல்காட்டும் தம்முடைய இரு குடும்பங்களையும், எமர்ஸனின் வீட்டினுள்ளேயே ஒன்ருக்கிவிட விரும்பினுர்கள் எனினும், உலகியல் அனுபவம் நிறைந்த அவர்களுடைய மனைவிமார்கள் இக்கருத்தை உதறிவிட்டனர். ஆல்காட்டுக்குப் பதிலாக இப்பொழுது ஹென்றி வந்து சேர்ந்தார். ஹென்றிக்கும் எமர்ஸன்கட்கும் இடையே சுமுகமான உறவு நிலவியதால் இந்தச் சோதனை வெற்றிபெற்றது. தம்முடைய வீட்டில் தங்கியிருந்த நாட்களில், தாமே முயன்று தோட்டவேலை செய்ய விருப்பமும், உடல்வன்மை இல்லையாயினும், ஹென்றியின் பின்சென்று ஓரளவு தோட்டவேலையில் ஈடுபடுவதில், எமர்ஸன், இன்பமும் கண்டார். காடுகளில் புகுந்து புதிய புதிய தாவரங்களையும் விலங்குகளையும், பார்க்கும் முறையில் ஹென்றி அழைத்துச் சென்ற பொழுதெல்லாம், எமர்ஸன் மகிழ்ச்சியடைந்தார். நிலவொளியில் இயற்கையழகை அனுபவிப்பதற்காக ஒருநாள் இரவில் எமர்ஸனைப் படகு மூலம் காங்க்கார்டு ஆற்றில் தோரோ அழைத்துச் சென்ருர். தன்னை மறந்த இன்பத்தை அனுபவித்த எமர்ஸன் தம்முடைய நாட்குறிப்பில் "ஒரே ஒரு வயலைக் கடந்து படகை அடைந்த நாங்கள் அந்தக் கணத்திலேயே காலம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய அனைத்தையும் ஒருசேர மறந்து, முதல்முறைத் துடுப்புப் போட்டவுடன் இயற்கையோடு இயற்கையாக ஒன்றிவிட்டோம்" என்று எழுதியுள்ளார்.

காங்க்கார்டு கிராமத்தின் பண்பாட்டு நிலையம் என்று கூறக்கூடிய இடத்தில், "தி டயல்" இதழ் காரணமாகவும்,

வளர்ச்சியடைகின்ற எமர்ஸனின் புகழ் காரணமாகவும், காங்க்கார்ட்டில் வந்து கூடிவாழத் தொடங்கிய பற்பல உலகியல் கடந்த நண்பர்களின் கூட்டுறவு காரணமாகவும், ஊக்க மிகுந்த தோரோ போன்ற ஓர் இளைஞனுக்கு மிகச் சிறந்த முறையில் இரண்டு ஆண்டுகள் கழிந்தன. உணர்ச்சியும், ஆர்வமும் மிக்கவரான ப்ரான்ஸன் ஆல்காட் அங்குவந்து சேர்ந்தார். மெய்ப்பொருள் உணர்வு வாதிகளும், உண்மை நாடுவோரும் நிறுவிய கனவு உலகமாகிய "ப்ரூட்லாண்ட்ஸ்" என்ற சமுதாயம் முற்றிலும் அழிவுற்றமையின் அவர்களுடைய குறிக்கோள் பெருஞ்சோதனைக்கு உள்ளாயிற்று. ஹார்வார்ட் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறிய எல்லரி சேனிங், இல்லினொய்ஸ் தனிக் குடிசையில் வாழ்ந்துவந்தார். அவர் மார்கரெட் ஃபுல்லரின் சகோதரியை 1842 இல் மணந்துகொண்டு காங்க்கார்டிலேயே வாழத் தொடங்கினார். பாஸ்டனில் இருந்துகொண்டு "டயல்" இதழை வெளியிட்டு வரும் எலிஸபெத் பீபாடியின் சோதரியை மணந்துகொண்டு நதானியல் ஹாதார்னும் காங்க்கார்டில் குடிபுகுந்தார். இலக்கியத் துறையில் ஈடுபட்டிருந்த இவர்கள் அனைவரும் ஹென்றியின் நண்பர்களாக ஆனதுடன் மேலும் மேலும் கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதுமாறு தூண்டினர். இதைவிட முக்கியமானது என்னவென்றால், 1842 இல் மார்கரெட் ஃபுல்லரிடமிருந்து "டயல்" இதழ் வெளியீட்டுப் பொறுப்பை எமர்ஸனே ஏற்றுக்கொண்டார். ஆகலின், ஹென்றியின் பல கட்டுரைகள் அதில் இடம் பெற்றன. இதனால் தோரோ மகிழ்ச்சியடைந்தார். ஒரு பைசா வரும்படியும் இல்லாத "டயல்" இதழை நடத்துவதில் யாருமே போட்டியிட முன்வரவில்லை என்பதை, 1843 ஆம் ஆண்டு தோரோவே, சில நாட்கள் அதன் ஆசிரியராகப் பணியாற்ற வேண்டி நேரிட்டபோது கண்டார்.

அப்போதெல்லாம் தத்துவ சாஸ்திரம், இயற்கை வருணனை, பழைய இலக்கியம், கீழை நாட்டு இலக்கியம் முதலியவற்றின் மொழிபெயர்ப்புக்கள் ஆகியவற்றைத் தோரோ எழுதினாரெனினும், வளர்ந்துவரும் ஒரு கவிஞராகவே நண்பர்கள் அவரைக் கருதினர். கவிதை எழுதுமாறு, குறிப்பாக எமர்ஸன் தோரோவைத் தூண்டினாராதலின், தம்முடைய நாட்குறிப்பில் தோரோ மிகுதியாகத் தம் நன்றியறிதலை எமர்

ஸனுக்குத் தெரிவித்துள்ளார். "பிறரிடம் காணப்படாத ஒப்புயர்வற்ற தன்மைகள் எமர்ஸனிடம் உண்டு. மனிதனது தெய்வீகச் சக்தி எளிதாகவும் வரன்முறையோடும் அவரிடம் வெளிப்படுவதைப்போல் வேறு எவரிடமும் வெளிப்படவில்லை. இளைஞர்களிடம் அவருக்குள்ள செல்வாக்குப் போல் எவருக்கும் கிடையாது. அவருடைய உலக வட்டத்தில் ஒவ்வொருவரும் கவிஞராகவே இருப்பர்........." எனவே, வளர்ச்சியடையும் ஒரு கவிஞராகவே தோரோ எமர்ஸனுடைய பாதுகாப்பில் வளர்ந்தார்; இப்போது "டயல்" இதழ் மூலமாக இலக்கிய உலகில் பயணம் தொடங்கினார். ஆனாலும், "டயலில்" கூட அவரது சிறந்த எழுத்துக்கள் கவிதை வடிவில் வெளிப்படவில்லை. "மெஸசூஸிட்ஸின் இயற்கை வரலாறு" என்ற நீண்ட கட்டுரை 1842 இல் வெளியாயிற்று. விஷயத்தைக் கூர்த்த மதியுடன் கையாள்வதிலும், வருணனைகளை அழகுற அமைப்பதிலும் இக் கட்டுரை சிறந்து விளங்கியது, ஹென்றி எதிர்காலத்தில் உயர்ந்த உரைநடை எழுத்தாளராகத்தான் மலரப்போகிறார் என்பதற்கு இது எடுத்துக் காட்டாய் விளங்கியது. "வாசூஸெட்டில் நடை யாத்திரை" என்ற அவருடைய கட்டுரை அடுத்த ஆண்டு வெளிவந்தவுடன் பிரயாண நூல்கள் எழுதுவதில் தோரோ மிகத் தேர்ந்தவராவார் என்பது நிச்சயமாயிற்று.

ஆசிரியர் பதவியிலிருந்து நீங்கின பிறகு, தம்முடைய வாழ்க்கையில் எதைச் செய்வதென்று சிந்தித்து முடிவு காண்பதற்கிடையில், ஹென்றிக்கு எமர்ஸன் வீட்டில் தங்கிய காலம் ஓர் ஓய்வைத் தந்தது. வருத்தத்தை விளைவிக்கும் இந்த முடிவை மேற்கொள்ளுமுன்னரே, கழிந்த இரண்டாண்டுகளில் ஆழமான கருத்துக்களையும், அகன்ற அனுபவத்தையும் காங்க்கார்டு கிராமத்தின் இயற்கை வரலாற்றோடு நெருங்கிய தொடர்பையும் அவர் பெற முடிந்தது. 1842 ஜனவரியில் எமர்ஸனின் மைந்தனாகிய வால்டோவும், ஹென்றியின் சகோதரராகிய ஜானும் மரணமடைந்ததால் ஏற்பட்ட துயரம் இல்லையானால், இந்தக் காலம் முழுவதையும் ஹென்றி ஒரு கவலையும் இல்லாமல் மிக்க மகிழ்ச்சியோடு கழித்திருப்பார். எலும்புருக்கி நோயிலிருந்து ஓரளவு உடல் நலமுற்ற ஜான் 1841 ஆம் ஆண்டு முடிவதற்குள் வெளியே உலாவும் சக்தியைப் பெற்றார்.

அவருடைய நோயின் காரணமாகத்தான் பள்ளிக் கூடத்தை மூட நேர்ந்தது. ஆனாலும், 1842 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஒருநாள் முக க்ஷவரம் செய்துகொள்ளும்பொழுது ஏற்பட்ட காயத்தினால் இரத்தத்தில் நஞ்சு கலந்து, மிகச் சில நாட்களுக்குள் மரணமடைந்தார்.

இதற்கு முன் அனுபவித்திராத முறையில் ஹென்றி தனிமையை உணர்ந்தார். ஜூலை மாதத்தில் வெப்பம் மிகுந்த வெளிகளில் நடந்து சென்று வாசூஸெட் மலையின் சிகரத்தில் நின்று பார்த்தபோது வட புறத்தில் அடிவானத்தையொட்டி மொனட்னாக்ஸ் மலையின் மிக உயர்ந்த சிகரம் காட்சியளித்தது. என்றாவது ஒருநாள் அதன் உச்சியில் ஏற வேண்டுமென்று உடனே முடிவு செய்துகொண்டார். மீண்டு வந்து, எமர்ஸனுடைய வீட்டில் தமக்குரிய அறையில் தங்கி, தம்முடைய பயணத்தைப் பற்றி ஒரு கட்டுரையை வரைந்து "பாஸ்டன் மிஸெலனி" என்ற பத்திரிகைக்கு அனுப்பினார்.

எமர்ஸனுடைய வீட்டில் தங்கியிருந்த இரண்டாண்டுகளில் இலக்கியத்துறையில் ஓரளவு வெற்றியைப் பெற்றாலும், எமர்ஸனைப்போல் பொதுமக்கள் விரும்பும் வகையில் எழுதி, சொற்பொழிவுகள் ஆற்றினாலொழிய, வாழ்க்கைக்குத் தேவையான அளவு சம்பாதிக்க முடியாது என்பதை உணர்ந்தார். இந் நிலையில் சொற்பொழிவு செய்யத் தொடங்கினாலும் காங்க்கார்டுக்கு அப்பால் அவர் செல்லவில்லை. ஒருவேளை பிற்காலத்தில் அவர் புகழ் அடையலாம் என்றாலும், அதுவரையில் எவ்வாறு வாழ்க்கை நடத்துவது? எந்த அலுவலை மேற்கொள்வது? கட்டுப்பாடற்ற காட்டு வாழ்க்கையை அவருடைய அகமனம் நாடியது. மனம் விரும்பாத ஓர் அலுவலில் அமர்வது தம்முடைய குறிக்கோளைத் தாமே ஏமாற்றிக் கொள்வதாகும் என அவர் உணர்ந்தார். உடலாலும், மனத்தாலும் சுதந்திரமாக வாழும்பொழுதுதான் ஒருவருடைய குணத்தில் அமைந்த வலிமை வெளிப்பட முடியும். அவருடைய நாட்குறிப்பில் "பிடிவாதத்தின் மூலமோ, கொடுமையின் மூலமோ உண்மையான ஞானத்தைப் பெற முடியாது. அதன் எதிராக, எதைப்பற்றியும் கவலைப்படாமல், குழந்தையைப்போல் மகிழ்ச்சி கொள்வதில்தான் அதனைப்

பெற முடியும்'' என்று எழுதியுள்ளார். நவீன யுகத்தின் இயல்பாகவுள்ள ஓயாத அவசரம், ஓயாத வேலை என்ற இரண்டையும், இயற்கை, முற்றிலும் மறுப்பதாகவே தெரிகிறது. எவ்வெப்பொழுது முடிந்ததோ, அவ்வப்பொழுதெல்லாம் மிக நீண்ட நடைப் பயணங்களை ஹென்றி மேற்கொண்டார்; தாம் "சிறுத்தைத் தவளைகளோடு நடத்திய மிகவும் சுவையான பன்னிரண்டு மணி நேர உரையாடல் பணம் சேகரிக்கச் செலவழிக்கும் ஒருநாளை விட மிகப் பயனுடைய காலமாகும்'' என்று கூறியுள்ளார். "அந்தி நேரத்தில் வெடிக்கும் துப்பாக்கியைப்போல் தம்முடைய மறைவான இடத்திலிருந்து பிட்டர்ன் பறவைகள் ஒலிப்பதைக் கேட்கக் கூடுமானால் வசதியுடைய வீட்டிற்குள் வாழ்வதைக் காட்டிலும் குளிர்ந்த சதுப்பு நிலங்களில் வாழ்வதே மேன்மையானது'' என்றும் கூறியுள்ளார்.

தம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள் அதிகப்படியான அளவுக்குக் கடுமையும், ஒழுக்கமும், தொழில் இயல்பும், பொதுமையும், விவாதிக்கும் இயல்பும், வீட்டுள் கட்டுப்படும் இயல்பும் பெற்றிருக்கக் கண்டார். காட்டில் அடிக்கடி சந்திக்கின்ற மூஸ் என்ற மானைப்போல மனிதனும் ஓர் பிராணியாக இருக்கலாகாதா எனக் கருதினார். தமக்கென ஒரு தனி வாழ்வு வகுத்துக் கொண்டு பிறரிடமிருந்து பிரிந்து வாழத் தொடங்கினார். "அமைதியும், விருப்பம் போல் வாழும் இயல்புமுடைய ஆசிய மக்களைப்போல'' வாழ்வதாகக் கூறினார். அவர் மிகுதியும் "விரும்பிய வாழ்க்கை முறையை, சமுதாயம், அவருக்குத் தர முடியவில்லை: இந்நிலையில், சமுதாயத்திற்குப் பயன்படும் முறையில் எத்தொண்டையும் செய்ய அவரும் தயாராக இல்லை. சமுதாயமும், அவரும் எதிர்ப் பாதைகளில் செல்வதாகவே தோன்றிற்று. தாம் அடிக்கடி விரும்பிச் செல்லும் ஓர் இடத்தைக் குறித்து 1840 இல் பின்வருமாறு எழுதினார்: "வால்டன் குட்டையின் கரையில் தங்கி, வெய்யில் காய்ந்து, அங்கே உள்ள கதகதப்பையும் ஒளியையும் அனுபவிக்கும்பொழுது என் வாழ்வின் பழமை முழுவதையும் மறந்து விடுகிறேன்.'' எப்போதும்போல் சமுதாயம் இதே வழியில்தான் போய்க்கொண்டிருக்கும். ஆனால் மனித குலம் முழுவதற்கும் இயற்கை ஏதாவது ஞானம் தருமா என ஆய்ந்து பார்த்தார். அந்தப் பொதுவான

அறிவு என்பது எது என்பதைப்பற்றி இந்நிலையில் அவர் ஒன்றுங்கூற இயலவில்லை. 1842 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில்கூட, "என்னுடைய வாழ்வில் கிடைக்கும் செல்வத்தை மக்கட்குப் பங்கிடுவதில் பயன் இல்லை. என்னிடத்தில் இருக்கும் மிக உயர்ந்த பொருளையே அவர் கட்கு வழங்குவேன்.........சூரிய ஒளியைப் பொது நன்மைக் காகவே திருப்பி விடுவேன்" என்று கூறியுள்ளார்.

குறிப்பிட்ட ஒரு நோக்கத்துடன், வாழ்வில் ஓர் உடன் பாட்டு வகையில் அவர் உழைக்கத் தொடங்கு முன்பே, எமர்ஸனுடன் தங்கி வாழ்ந்த வாழ்க்கை முடிவுற்றது. இந்த நிலையில் அவருடைய வாழ்க்கையில் இருந்த ஒரே ஒரு குறிக்கோளை அடைய முயன்ருர்; அதாவது எழுத்து, சொற்பொழிவு ஆகியவற்றின் மூலமாகவே வாழ்க்கைக் குரிய வசதிகளைத் தேட விரும்பினுர். மறுபடியும், இத் துறையில், எமர்ஸன் உதவிபுரியத் தயாராக இருந்தார். தம்முடைய தமையனுகிய வில்லியம் எமர்ஸனின் மைந்த னுக்கு ஆசிரியராக இருப்பதற்கு, தோரோவை, ந்யூ யார்க்கை அடுத்துள்ள ஸ்டேடன் தீவுக்கு அனுப்பினுர். ந்யூயார்க்கிலுள்ள நூல் வெளியீட்டகங்கள், எழுத்துலகம் ஆகியவை அண்மையில் இருப்பதால் தோரோ இதில் அதிகப் பயன் பெற முடியும்.

அங்குத் தோரோ நண்பர்களைப் பெற்ருர். செய்தித்தாள், தொழில், புத்தக வெளியீட்டு வேலை, தனித்துவம், ஃபோ ரியர் கொள்கை ஆகியவைபற்றி மிகுதியாக அறிந்து கொண்டார். எனினும் தோல்வியே அடைந்தார். பொது மக்களுக்கு இரைபோடும் மலிவு இதழ்கட்டுத் தேவையான வற்றை எழுதினுலொழிய ந்யூயார்க்கில் எழுத்தாளனுக வயிறு வளர்க்க முடியாதென்பதை அறிந்து கொண்டார். அந்த நாட்களில் கூட, மகளிர் பத்திரிகைகளே நிறைந்த அளவு பணம் தந்தன. "'மகளிர் துணைவன்' என்ற.....இதழ் நிறையப் பணம் தருவதாகக் கூறினுர்கள்; ஆனுல் அவர் கட்குத் துணையாக நான் ஒன்றும் எழுத முடியவில்லை" என்கிருர். இவைகளால் ந்யூயார்க்கை வெறுக்கவும், காங்க்கார்டை விரும்பவும் கற்றுக் கொண்டார். மிகுதியான மக்கள் கூட்டத்தை வெறுத்தார். மக்கள் கூட்டம் அவருக்கு ஓர் அச்சத்தையே விளைவித்தது. எழுத்துலகிலும் அவர் முன்னேற முடியவில்லை. செல்வம் நிறைந்த வில்லியம்

எமர்ஸன்கள் மனச்சோர்வைத் தருங் கூட்டமாக அமைந் தனர். மேலும் அவருக்கு ப்ராங்கைட்டிஸ் நோயும் வந்து விட்டது; வீட்டிற்கு மீள்வதற்கே பெரிதும் விரும்பினர். எட்டு மாதங்கட்குப் பிறகு வீடு திரும்பிய அவர் இன்பத் திற்காக உலாவப் போவது தவிர வேறு எக்காரணத்தைக் கொண்டும் காங்க்கார்டை விட்டு வெளிச் செல்லவில்லை. நாடு கடந்திருந்த நிலைபற்றிச் சில நினைவுகள் அவரை விட்டு நீங்கவே இல்லை. அட்லாண்டிக் சமுத்திரத்தின் கரையை நன்கு அனுபவித்தார்; புதிய மலர்களைக் கண்டு, புதிய பறவைகளையும் மனிதர்களையும் அறிந்து, வாழ்க்கை, அழகு ஆகியவற்றிலும் புதிய கோணங்களைக் கண்டார். ந்யூயார்க் கைப் பொறுத்தமட்டில் ஹராஸ் க்ரீலி என்ற உயிர் நண் பரைப் பெற்றிருந்தார்; விரைவில் அவர் புகழ்பெற்ற "ந்யூயார்க் ட்ரிப்யூனின்" ஆசிரியராக ஆனர். ஹென்றி ஜேம்ஸ் என்ற புதிய ஆசிரியரின் தந்தையாகிய ஹென்றி ஜேம்ஸ் என்பவருடன் தோரோ சிறந்த நட்புக் கொண் டார். நீண்ட நேரம் அந்தப் புனிதமான மனிதருடன் தத்துவ சாத்திரம் பற்றிப் பேசுவது தோரோவுக்கு மனக் கிளர்ச்சியைத் தந்தது.

1844 இன் தொடக்கத்தில் அவர் காங்க்கார்டுக்கு மீண்டுவிட்டார். 27 வது வயதிலேயே, தம்முடைய உயர்ந்த குறிக்கோளை விட்டுக் கொடாமலும், அதே நேரத் தில் வாழ்க்கைக்குத் தேவையான பொருளைச் சம்பாதிக் கவும் வேண்டிய தர்மசங்கடமான நிலைமையை அடைந்தார். காங்க்கார்டைச்சுற்றி அலைந்து ஆராய்வதிலும், அதனு டைய இயற்கை வரலாற்றை எழுதுவதிலும் ஈடுபட்டார். இயற்கை வல்லுநராக இருப்பதே தம் வாழ்வின் இலட்சியம் என்ற முடிவுக்கு வந்தார். வாழ்க்கையில் சுவை காண வேண்டுமாயின் இத்துறையில் தைரியமாக முன்னேறிச் சமுதாயத்தைப்பற்றிக் கவலைப்படாதிருக்க வேண்டும்: ஏனைய மக்களைப்போல வயது ஏற ஏற அவருடைய தேவைகள் மிகுதிப்படாமல் ஒரே நிலையில் இருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்தார். தம் வாழ்க்கைக்குத் தேவையான மிக எளிய பொருள்களை அல்லாமல் பிறவற் றைப் பெற அவர் விரும்பவில்லை. எந்தப் பொருளையும் பெறுவதற்குச் செலவழிக்கப்படும் நேரத்தைக் கொண்டே அந்தப் பொருளின் மதிப்பைக் கணக்கிட்டார். எமர்ஸ

னுடன் வாழச் செல்வதற்கு முன்னர், தனித்து வாழ்வதில் ஏற்பட்டிருந்த பற்று மறுபடியும் தம்மிடம் ஏற்படுவதை உணர்ந்தார். ஜெர்மன் தத்துவ ஞானியாகிய ஜிம்மர்மான் எழுதிய "தனிமை, நெஞ்சினிடத்துச் செலுத்தும் ஆதிக்கம்" என்ற நூலைக் கற்ருர். எமர்ஸனுடைய "இயற்கை" என்ற நூல் அவருடைய மனத்தை விட்டு நீங்கவே இல்லை; அதில் காணப்பெறும் "காடுகளில்தான் அழியா இளமை இருக்கிறது.........காட்டு வாழ்க்கையில் அறிவும் நம்பிக்கையும் ஏற்படுகின்றன" என்ற சொற்களையும் மறக்கவேயில்லை. மின்வீச்சுச் சிட்டுக்குருவியின் இசையில் "எல்லையற்ற ஓய்வையும் அமைதியையும்" கண்டார் தோரோ.

இதே மனநிலையுடன்தான் வால்டன் குட்டையின் அருகில் ஒரு மரவீட்டை அமைத்துக்கொள்ளும் நோக்கத்துடன் ஒருநாள் ஆல்காட்டின் கோடரியைக் கடன் வாங்கிக்கொண்டு, காட்டுக்குச் சென்ருர். தம் மனநிலையைச் சரி செய்துகொள்ளும் நோக்குடன் எங்காவது சென்று சில காலம் தனித்து வாழ விரும்பினுர். பிறர் வாழும் இடத்திற்கு நீண்ட தூரம் அப்பாற் சென்றுவிட வேண்டும் என்று விரும்பிய அவர், அவர்களை மறந்துவிடுவதற்காக அவ்வாறு செய்யக் கருதவில்லை. அதன் எதிராக, அவர்களைப் புறத்தே இருந்து காண வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் அவ்வாறு செய்ய விரும்பினுர். வீட்டிலோ வெனில் அவருடைய தாய், சகோதரியர் இருவர், அத்தைமார்கள், ஓயாமல் வீட்டிற்கு வரும் விருந்தினர்கள்-யாவரும் தாம் பேசும் சமுதாய சீர்திருத்த விவாதங்கள் மூலமாக அவருடைய காதுகளைப் புளிக்க வைத்தனர். எமர்ஸன் போன்றவர்களின் வீடுகட்குச் சென்ருல், உலகியல் கடந்த பேச்சுக்களால் அவ்விடங்கள் நிறைந்திருந்தன. ஆரம்பத்தில் சுவையாயிருப்பினும், திரும்பத் திரும்ப வற்புறுத்தப்பட்டமையால் அப்பேச்சுக்களின் சுவை மங்கிவிட்டது. எனவே, அவர், மௌனமாகத் தனியே இருந்து சிந்தித்து எழுதுவதில், பொழுதைக் கழிக்க விரும்பினுர். "வாழ்க்கையை ஒரு மூலைக்கு வெருட்டி, எளிமையாக்கி, அதன் உட்கோளை அறிய விரும்பினுர்." "நான் ஒரு ஸ்பார்ட்டனைப் போல்வலிமைபெற்று வாழ்ந்து, வாழ்வு அல்லாத அனைத்தையும் ஒழித்து விரட்டவிரும்பினேன்....." என எழுதியுள்ளார்.

## அத்தியாயம் 4

"பணம் இல்லாவிடினும், நல்ல இளவேனிற் காலமும், சூரிய வெளிச்சமும் என்னிடம் நிறைந்து இருந்தன."

தோரோ : வால்டன்.

எமர்ஸன், தாமே இயற்கையின் அருகாமையில் வாழ விரும்பியமையின், குட்டையை அடுத்துள்ள காட்டுப் பகுதியில் ஓர் இடத்தை வாங்கி இருந்தார். அந்த இடத்தை, இப்பொழுது தோரோவுக்கு, வாடகை இல்லாமற் கொடுத்தார்; எனவே, தோரோ, மறுபடியும் எமர்ஸனுக்குக் கடமைப்பட்டவரானார். மகிழ்ச்சி தரும் இந்த நிகழ்ச்சி இல்லையானால், தோரோவுக்கு வால்டனில் ஒரு பர்ணசாலை அமைத்து வாழும் வாய்ப்பு ஏற்பட்டிராது. ஓராண்டுக்கு முன்னர்த் தோரோவும் அவருடைய நண்பர் ஒருவரும் காட்டின் ஒரு பகுதியில் விருந்துண்கையில், அடுப்பு நெருப்பை அணைக்காமல் கவனக் குறைவாக இருந்து விட்டமையின், ஆற்றை அடுத்துள்ள நூறு ஏக்கர் பரப்புள்ள காட்டுப் பகுதி தீக்கிரையாயிற்று. உடன் இருந்த நண்பர், காங்க்கார்டின் முக்கியஸ்தரான நீதிபதி ஹோரின் பிள்ளையாக இருந்ததனால்தான், தோரோ காடு தீப்பற்றியதனால் ஏற்பட்ட தொல்லைகளில் சிக்கிக் கொள்ளாமல் தப்பினார். இந்த நிலையில் அந்தப் பிராந்தியத்திலுள்ள எந்த நிலச் சொந்தக்காரரும் தம்முடைய நிலத்தில் தோரோவை வாழவிட விரும்பவில்லை. 1847, மார்ச் மாதத்தில்தான் தோரோ தம் குடிசையைக் கட்டத் தொடங்கினார். இந்த மாதமே புதிய வாழ்க்கை தொடங்குவதற்கு ஏற்ற காலமாகும். குளிர் காலமும் அதனால் ஏற்படும் மன உளைச்சலும் முடிந்து விட்டன.

ஏப்ரில் முதல் பகுதியில் பனிப் படலம் நிறைந்திருந்தது; குட்டையில் பனிக்கட்டி உருகிக் கொண்டிருந்தது. இரண்டு வார காலம் அவர் தினந்தோறும் வால்டனுக்குக் கால்நடையாகவே சென்று, தம் குடிசை வேலையைக் கொஞ்சங் கொஞ்சமாகவே செய்து வந்தார். இந் நாட்களில், பைன்

மரங்களின் மணம் நிரம்பிய காட்டிலேயே எளிய உண வாகிய ரொட்டியை உண்பதிலும், கோடரியால் தாம் மரம் வெட்டும் ஓசையைக் கேட்டு அங்கு வந்த பொதுமக்களுடன் பேசுவதிலும் பொழுதைக் கழித்தார். குட்டைக்கு மேல், பெரிதும் சிறிதுமாக வளர்ந்து குன்றை மூடியிருந்த கோனி பர்ஸ் மரங்களிலிருந்து வளைசல் இன்றி நெடிது வளர்ந்திருந்த வெண் பைன்களை ஒரு குடிசைக்குத் தேவையான அளவு வெட்டிக் கொண்டார். கோடரியைக்கூடக் கடன் வாங்கும் தம் நிலைமை சுதந்தரமாக வாழ்க்கையைத் தொடங்குவ தாகுமா என்று அவர் கருதினுலும், முதல் இல்லாமல் ஒரு தொழிலைத் தொடங்க வேண்டுமானுல் இதனை விடச் சிறந்த வழி வேறு இல்லை. எனவே, தாம் கடன் வாங்கிய கோடரியைத் திருப்பிக் கொடுக்கையில், வாங் கும்பொழுது இருந்ததைக் காட்டிலும் இன்னும் தீட்டிக் கூர்மையாக்கித் தந்தார். அந்தக் கோடரி அகலமற்றதாக இருந்தது என்று அவரே கூறியுள்ளார். அது ஆங்கில நாட்டைச் சேர்ந்த நீண்ட வடிவுடைய கோடரியாகும். அதனைப் பயன்படுத்தியே, அவர், மூலைகளில் நடப்பட்ட கம்பங்களைச் சதுரிக்கும் பணியை முடித்தார். மேலும் சில கருவிகளைக் கடன் வாங்கி விட்டங்களின் பொருத்துவாய் களைச் செதுக்கி அவை ஒன்றுடன் ஒன்று இணையுமாறு சேர்த்தார். பக்கங்களிலும், கூரையிலும் போடுவதற்குரிய மரப் பலகைகள் பக்கத்திலிருந்த குடிசையிலிருந்து கொண்டு வரப்பெற்றன. குட்டையை அடுத்துச் செல்லும் இருப்புப் பாதை போடப்பட்ட காலத்தில் அதில் பணியாற்றிய ஐரிஷ்காரர் ஒருவர் தங்க இந்தக் குடிசையை அமைத்திருந் தார். தோரோ அமைத்த குடிசை ஒரு வீடு போல் காட்சி யளிக்காமல், கலப்பு எருவைச் சேகரிக்கும் ஒரு திட்டைப் போலக் காட்சியளித்தது. ஏனென்றுல், குடிசைக்குள் வெப்பமாக இருப்பதற்காகக் குடிசையைச் சுற்றி 5 அடி உயரத்துக்கு மண் போட்டு நிரப்பி இருந்தார். இவ்வாறு மண்ணை இட்டு நிரப்பத் தோரோவுக்கு ஆன மொத்தச் செலவு 4 டாலர், 25 சதமாகும். இந்த மண்ணை ஒவ்வொரு வண்டியாக ஏற்றித் தம் மனை இடத்துக்குக் கொண்டு சென்றுர். வேலையற்றிருந்த ஓர் ஐரிஷ்காரர்—பார்வையாளர் பிரதிநிதியாக அங்கே இருந்தவர் போலும் — தோரோ வெளியே மண் கொண்டுவரச் சென்ற பொழுதெல்லாம்

அவர் வைத்திருந்த நல்ல ஆணிகளை எல்லாம் திருடினர். குடிசையைக் கட்டி முடிப்பதற்கு முன், அதன் பின்புறமிருந்த மண்மேட்டைத் தோண்டி ஒரு நில அறை செய்து கொண்டார். பனிக்கட்டியும், குளிர் காலமும் காய்கறிகளை அழித்து விடாமல் அவற்றைக் காப்பாற்றவே இந்த நில அறை பயன்படுத்தப் பெற்றது. இவ்வாறு நிலத்தைத் தோண்டி, இடையே உள்ள வேர்களை எல்லாம் வெட்டிச் சென்று ஏழடி தோண்டியதும் நல்ல மணலைக் காண்பதில் அவர் மகிழ்ச்சி யடைந்தார். ஆதிகால மனிதன் மேலே கூரை வேய்வதற்கு முன்னர், மண்ணைத் தோண்டித் தன் உக்கிராண நிலவறையைத் தயாரித்துக் கொள்ளும் இயல்பையே இச்செயல் காட்டுகிறது. இச்செயல் மூலம், பாஸ்டனிலுள்ள வீடுகளில் காணப்படும் நிலவறைகளும் இதே கருத்தில்தான் ஏற்பட்டன என்று அவர் சிந்திக்கத் தொடங்கினர். மேலும், அந்த வீடுகள் எத்துணை அழகாக இருப்பினும், " நிலவறைக்குள் அழைத்துச் செல்லும் வாயிற்படிகளே அந்த அழகிய வீடுகள் " என்றும் கருதினர். நிலவறைகள்தாம் வீட்டின் பல பகுதிகளிலும் நிலைத்து நிற்கக்கூடிய பகுதி என்பதும் அவருடைய கவனத்தைக் கவர்ந்தன. அந்த வீடே அழிந்து விட்டாலுங்கூட 'பூமியிலுள்ள வளையாகிய அந்த நிலவறை' அழியாமல் இருக்கும் அல்லவா? காங்க்கார்ட் நகரத்தில் வாழ்ந்து மறைந்த மக்களைப்பற்றி அறிய ஆவல் கொண்டிருந்தார் தோரோ. ஆகவே, ஒரு நூற்ருண்டின் பின்னர் அவர் கட்டிய நிலவறையைத் தேடிக் கொண்டு வால்டனுக்கு மக்கள் செல்வார்கள் என்பதை அவர் அறிய முடிந்திருந்தால், மகிழ்ச்சி யடைந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

குடிசையைக் கட்டத் தேவைப்பட்ட ஒவ்வொரு மரத் துண்டையும், ஒவ்வொரு மண்வெட்டி மண்ணையும் காணும் பொழுது ஏற்பட்ட மகிழ்ச்சியை நீடிப்பதற்காகவும், அவற்றைக் காணும்பொழுது மனத்தில் தோன்றும் புதிய எண்ணங்கட்காகவும் குடிசை கட்டும் பணியை அவர் சாவதானமாவே செய்து வந்தார். குடிசையை அமைப்பதற்குச் சில உலகியல் கடந்த நண்பர்களை, அவர்கள் தமக்குப் பழக்கமில்லாதவர்களாக இருப்பினும், பயன்படுத்திக் கொண்ட காரணம், அண்டை வீட்டாருடன்

நட்புக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே தவிர, அவர்கள் உதவி அவசியம் தேவை என்பதனுலன்று என அவரே குறிப்பிட்டுள்ளார். அடுத்துக் குட்டையிலிருந்து பல கற்களைச் சேகரித்து, புகைப்போக்கியைக் கட்டத் தொடங்கினுர். வீட்டின் கூரையைப் போடுமுன்பே புகைப் போக்கிக்கு அஸ்திவாரம் போட்டுக் கொண்டார்.

1845, ஜுலை 4 ஆம் தேதி, கூரையின் கடைசிப் பலகையைச் செருகியவுடனேயே தோரோ அக் குடிசையில் வாழத் தொடங்கி விட்டார். என்றுலும் நீர் கசிவதை அடைக்கும் வேலையும், புகைப்போக்கியைக் கட்டும் வேலை யும் முடிவடையவில்லை. அமெரிக்காவின் சுதந்திர தினமாக வும் அவருடைய வாழ்க்கையின் சுதந்திர தினமாகவும் அந்த நாள் அமைந்தது எதிர்பாரா நிகழ்ச்சிதான். குடிசையை அடுத்து $2\frac{1}{2}$ ஏக்கர் பரப்பில் அவர் வேளாண்மை செய்யத் தொடங்கிவிட்டமையால், உடனடியாகக் கட்டட வேலையைத் தொடர முடியாமற் போய்விட்டது. அந்த மண், வளமற்ற மணற்பாங்கான பூமியாக இருந்தமையின் மண்வெட்டியின் உதவி கொண்டே பீன்ஸ் முதலிய காய் கறிகளைப் பயிர் செய்ய நேரிட்டது. வசந்த காலத்தில் இப்பூமியில் உள்ள வேர்களை எல்லாம் வெட்டி எடுத்து விட்டு, வாடகைக்குக் குதிரைகளைப் பெற்று உழவு வேலையைச் செய்தார். மறைந்துபோன சிவப்பு இந்திய இனத்தார் பயன்படுத்திய அம்புகள் பலவற்றை அவர் உழவு செய்யும் காலத்தில் கண்டு பிடித்தார். முதற் கோடையில் பீன்ஸ் செடிகளைப் பல வரிசைகளாக நட்டார். இவற்றின் மொத்த நீளம் ஏழு மைல் இருக்கும் என அவர் கணக்கிட்டார். முதலில் நட்டவற்றிற்குக் களை பறிக்க வேண்டிய காலத்திற்கூட அவர் மேலும் மேலும் புதிய நடவு செய்து கொண்டிருந்தமையின் பயிர் முழுவதிலும் களைகள் மண்டி விட்டன. கோடைக் காலம் முழுவதும், அப்பாத்திகளை நன்கு வெட்டிக் களை பறிப்பதில் ஒவ்வொரு நாளும் பல மணிகளைச் செலவிட்டார். ஆயினும் இந்த வேலை வெறுப்பை விளைக்கவில்லை. பீன்ஸ் செடிகளைப் பராமரிப்பதன் மூலம் மனத்திலும் ஓர் அமைதியைப்பெறப் பழகிக் கொண்டார். அவரைச் சுற்றி வாழும் குடியானவ நண்பர்களைப்போல் தாம் தம்முடைய நிலத்துடன் கட்டுப் பட்டிருக்கவில்லை என்றும், தேவைப்பட்டால் தம்முடைய

பீன்ஸ் வயலை உதறிவிட முடியும் என்றும், அதனல் பெருந் தீங்கு ஒன்றும் நிகழ்ந்துவிடா தென்றும் நினைத்து அவர் மகிழ்ச்சியடைந்தார். கவலையே அடையாத விவசாயி ஒருவர் உண்டு என்ருல் அது அவர்தாம். காங்க்கார்டுக்குச் செல்லும் சாலை அவருடைய வயலை அடுத்து இருந்தது. இரண்டு பாத்திகளின் நடுவே அவர் மறைந்து களை பறித்துக்கொண்டிருக்கும்பொழுது சாலை வழியே செல்லும் குடியானவர்கள் அவருடைய விவசாயத்தைப் பற்றிப் பேசும் கேலிப் பேச்சுகளைக் கேட்டு அவர் மகிழ்ச்சியடைவ துண்டு. இதில் வேடிக்கை என்னவென்ருல், இந்த வயலுக்குள் தனி மனிதராக, காலுக்குச் செருப்புக் கூட இல்லாமல் விவசாயம் செய்யும் மனிதர் பீன்ஸ் பயிரில் கொண்ட ஆர்வத்தால் "கோடை காலத்தில் புல்லைத்தான் விளைவிப்பேன்" என்று கூறும் பூமியை "பீன்ஸையும் விளைவிப்பேன்" என்று கூறுமாறு செய்வதற்காகத் தத்துவ சாத்திர முறையில் ஒரு துண்டு நிலத்தில் வேளாண்மை செய்து வந்தார் என்பதை அவர்கள் அறியவில்லை.

நிலத்தைமட்டும் நம்பி வாழும் வாழ்க்கை தோரோவை மிகவும் கவர்ந்தது. மிகவும் வடக்கேயுள்ள மெஸாசூஸிட்ஸ் போன்ற பகுதிகளிற்கூட ஒரு மனிதன், அண்டை அயலார் தயவு இல்லாமல், தன் வளமான வாழ்வுக்குத் தேவையான உணவைத் தேடிக்கொள்ள முடியும் என அவர் கருதினர். என்ருலும் பல்வேறு பயிர்ச் செடிகளை உண வாகக் கொள்ள முடியுமா எனப் பரிசோதனை நடத்திய துடன் நிறுத்திக்கொண்டு, தமக்குத் தேவையான அரிசி, மாவு, வெல்லம், போன்றவற்றை அவர் விலைக்கு வாங்கிக் கொண்டார். அவருக்குத் தேவையான ரொட்டியை அவரே தயாரித்துக் கொண்டார். முதலில் ஈஸ்டைக் கலந்து ரொட்டி தயாரித்தாலும், இறுதியில் பஞ்சுபோல் உப்பாத ரொட்டியே போதுமானது எனக் கண்டார். இதனல் அயலிலுள்ள கிராமத்து ரொட்டிக்காரன் தயவும் அவருக்குத் தேவை இல்லாமல் போயிற்று. அவருக்கே உரிய முறையில் ரொட்டி சுடும் முறையை, முறையாக ஆராய்ந்தார். இது பற்றிப் பழமையான நூல்களைக் கற்ற பிறகு தமக்கே உரிய ஒரு முறையைக் கண்டுபிடித்தார். சுவைக்கு மிகச் சிறந்த முறையாக அமையாவிட்டாலும், அடிப்படை ணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதாக அமைந்திருந்தது

அவர் முறை. எளிய, சிக்கனமான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டி, டீ, காப்பி ஆகியவற்றை விட்டுவிட்டார். என்றுவது ஒரு நாள் வால்டனில் கிடைக்கும் மீனை உண்பது தவிரப் பிற நாட்களில் புலால் உண்பதை விட்டு விட்டார்.

அவருடைய வீடு பதினைந்துக்கு பன்னிரண்டு அடி பரப்பளவுடையதாய், மேலே ஒரு பரணியும், கீழே ஒரு நிலவறையும் பெற்று விளங்கியது. இந்த அறையில் அவர் "ஒரு படுக்கை, ஒரு மேசை, ஒரு சாய்மேசை, மூன்று நாற்காலிகள், மூன்றங்குலம் குறுக் களவுள்ள ஒரு முகம் பார்க்கும் கண்ணுடி, ஒரு குறடு, ஒரு விறகு தாங்கி, ஒரு கெட்டில், ஒரு சிறு கொப்பறை, ஒரு வாணலி, முகக்கும் கரண்டி, ஒரு கை கழுவும் சட்டி, இரண்டு கத்திகள், ஒரு முள், மூன்று தட்டுகள், ஒரு கப், ஒரு சிறு தேக்கரண்டி ஆகியவற்றுடன் எண்ணெய் ஜாடி ஒன்று, வெல்ல ஜாடி ஒன்று, ஜப்பானிய விளக்கு ஒன்று" ஆகியவற்றைக் கொணர்ந்து சேர்த்தார். நாற்காலிகள் அதிகமாக இருப்பதைக் கண்டு, ஒன்று தனித்திருக்கவும், இரண்டு நட்பை வளர்க்கவும், மூன்று சமுதாயத்தை வரவேற்கவும் தேவை என்று அவர் கூறுவதுண்டு: அதிகப்படியாக இருந்த ஒரு தட்டுக் காரணமாக, விருந்தினர் ஒருவராக இருந்தால் அவரையும் தம் உணவைப் பகிர்ந்து கொள்ள அவர் அழைப்பதுண்டு; ஆனுல் ஒரே நேரத்தில் ஒருவருக்கு மேற்பட்டவர் வந்திருந்தால் அவர்களை உணவுக்கு அழைப்பதே இல்லை. வீட்டு வேலை என்பது எளிமையானதாகவும், உற்சாகத்துடன் செய்யக் கூடியதாகவும் இருந்தது. அவருடைய வீட்டில் அழுக்கு ஏறினவுடன், மறுநாள் விடியற்காலம் எழுந்து எல்லாச் சாமான்களையும் வீட்டிற்கு வெளியே அப்புறப்படுத்திவிட்டு, வீட்டைத் துப்புரவு செய்து காலை வெய்யிலில் உலர விட்டு விடுவார். சாமான்கள் வெளியிற் கிடப்பதைக் கண்டு அவர் "கழைக்கூத்தாடிகளின் சாமான்களைப் போல என்னுடைய சாமான்கள் புல்லில் குவிந்து கிடப்பதைப் பார்ப்பதே அழகாக இருக்கிறது. மூன்று கால்களையுடைய மேசை, அதன் மேலுள்ள புத்தகங்கள், எழுது கருவிகள் ஆகியவை, பைன் மரங்களின் நடுவே கிடப்பதும் ஓர் அழகைச் செய்கிறது. வெளியே கொணரப்பட்ட இந்தச்

சாமான்கள் உள்ளே செல்ல விரும்பாமல் இங்கேயே கிடக்க விரும்புவது போல் தெரிகிறது. இவற்றைப் பார்க்கும்பொழுது, ஒரு கித்தானை இவற்றின் மேல் விரித்து விட்டு, இங்கேயே அமர்ந்து விட வேண்டும் என்றும் தோன்றுகிறது. இந்தச் சாமான்களின் மேல் வெய்யில் அடிப்பதையும், காற்று வீசுவதையும் பார்ப்பதே அழகாக இருக்கிறது" என்ற முறையில் தம் சிந்தனையைப் படர விட்டுத் தாமும் அமர்ந்து இருந்தார்.

வேனிற் காலத்தில் ஒவ்வொர் அழகிய நாளும், வால்டனில், கீழ்க்காணும் முறையிற் கழிந்தது. காலை 5½ மணிக்கு எழுந்து குட்டையில் நீந்துதல், பின்னர் மண் வெட்டும் வேலை, அடுத்து எளிய காலை உணவை உட்கொள்ளுதல், அவ் வுணவுடன் குளிர்ந்த கிணற்று நீரை அருந்துதல், அடுத்து உடம்பில் ஒட்டியுள்ள மண்போக மறுபடியும் நீந்திக் குளித்தல், அதன்பின் மதிய உணவு கொள்ளுதல் என்பவையேயாம். சிற்சில சமயங்களில் மண் கொத்துவதற்குப் பதிலாகக் காலை நேரத்தைப் படிப்பதிலும், எழுதுவதிலும் கழித்தார். அப்பொழுதும்கூட இரண்டாம் முறை குளித்தார். ஏனென்றால் "கற்கும்பொழுது ஏற்பட்ட களைப்புத் தீரவே" இக் குளியல் என்றுங் கூறினார். மதிய உணவுக்குப் பிறகு காங்க்கார்டு கிராமத்திற்குச் சென்று அன்றாடம் வீட்டிற் காணப்படும் எலிகளைப்பற்றி அறிவதற்குப் பதிலாக அங்குள்ள மக்களைப் பற்றி அறிய முற்பட்டார். அன்றியும் "கிராமத்தில் பேசப்படும் வெட்டிப் பேச்சுக்கள் கூட, ஹோமியோபதி மருந்தைப்போல மிகச் சிறிய அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டால், இலைகளின் சலசலப்பையும், தவளைகளின் குரலையும் கேட்பதுபோல மகிழ்ச்சி தருவதாகும்" என்பதை அவர் கண்டார். ஆனால் அடிக்கடி கிராமத்தை நோக்கிச் செல்லும் இப் பாதைக்கு நேர் எதிராகச் சென்று, அடர்ந்த காட்டின் நடுவே சதுப்பு நிலத்தின் இடையே அமைதியை நாடி, அங்குள்ள செடிகள், பறவைகள் என்பவற்றைக் காண்பதுடன், எழுதவும், படிக்கவும், சிந்திக்கவும் தொடங்கினார். "ஏனைய அறிஞர்களைச் சந்திப்பதற்குப் பதிலாக குறிப்பிட்ட மரங்களைப் பலமுறை சென்று கண்டிருக்கிறேன். இத்தகைய மரங்கள் சமீபமான இடங்களில் எங்கும் இல்லை. நீண்ட தூரத்தில் உள்ள புல்வெளிகளிலும், குன்றின் உச்சி

யிலும், காட்டின் நடுவேயுமே இவை உள்ளன. இரண்டடி விட்டமுள்ள அழகிய கரிய பர்ச் மரங்கள் சில உள. அவற்றின் உறவு முறையான மஞ்சள் பர்ச் மரங்கள் பொன்னிறமுடையனவாய் முன்னவற்றைப் போலவே மணம் பரப்புகின்றன. இருவகைப் பர்ச் மரங்களும் நீண்டு வளர்ந்து எல்லா உறுப்புகளிலும் செழுமை மிக்கிருந்தன. இத்தகைய அழகிய மரங்கள் மிகவும் அபூர்வமானவை. நகரப்புறத்தில் ஒரே ஓர் இடத்தில் மட்டுமே கூட்டமாய் வளர்ந்துள்ளன. ஏதோ ஒரு காலத்தில் பீச் பருப்புக்களைத் தின்ற புருக்கள் எச்ச மிட்டதால்தான் இங்கு இம் மரங்கள் தோன்றின என்றும் கூறப்பட்டது. இந்த மரத்தைப் பிளக்கும்பொழுது காணப்படும் வெள்ளி நிறத் துணுக்குகள் அழகுடையன. அன்றியும் பாஸ்மரங்கள், ஹார்ன் பீம், செல்டிஸ், ஆக்ஸிடென்டலிஸ், போலியான எல்ம் ஆகியவைகளும் இங்குண்டு. இந்த எல்ம் மரங்களில் ஒன்றும் பைன் மரங்களுள் சிலவும் மிக நீண்டு வளர்பவை. இவை மிகநீண்ட கிளைகளுடன் காட்டின் இடையேயுள்ள கோபுரம் போல் காட்சியளித்து நிற்கிறது,'' என்றும் எழுதியுள்ளார்.

தோரோ என்றோ ஒரு நாள் ஒரு மணி நேரந்தான் காட்டில் தம் தனிமையை உணர்ந்தார். ஆனால், உடனே "இந்தச் சிறிய சித்தப் பிரமை" மறுமுறை வாராமல் ஒழிந்தது. அதன் பின்னர்த் தம் பொறி புலன்கள் அனைத்தாலும் இயற்கையை அனுபவித்தார்; அன்றியும் காட்டின் உறவே தமக்குப் போதுமானது என்பதையும் உணர்ந்தார். தனிமையாய் இருப்பதையே விரும்பிய அவர், "தனிமையைப் போன்ற ஓர் உற்ற துணைவன் வேறு யாரும் இல்லை" என்பதையும் அறிந்தார். அதே நேரத்தில் வால்டன் வாழ்க்கையில் அவர் அடைந்த பெரு மகிழ்ச்சி என்னவென்றால் அவருடைய குடிசையால் கவரப்பட்டுப் பலர் அங்கு வந்ததேயாகும். ஓரிரு தடவைகளில் இருபத்தைந்து பேருக்கும் மேற்பட்டவர்கள் அவருடைய வீட்டிற்கு வந்தனர்; உலகியல் கடந்த நண்பர் குழு மாலைப்பொழுதில் சிற்றுலாப் புறப்பட்டால் அதில் அதிக இன்பம் கிடைத்தது. குடிசை வாழ்க்கையில் உள்ள பெரு நன்மை என்னவென்றால், அங்கு வரும் விருந்தினர்கள் அங்கேயே தங்கிவிட முடியாது. குறுகிய நேரமே அவர்கள் அங்குத் தங்க முடியும்; எனவே, அதிக மகிழ்ச்சியைப் பெறவும் முடியும்.

மீண்டும் அவர்கள் புறப்பட்டுப் போனவுடன் தனிமையின் இன்பத்தை அவர் பெற முடிந்தது. மக்களின் தொடர்பு வேண்டும் என்று அவர் விரும்பும் நேரங்களில், அரை மணி நேரத்தில் காங்க்கார்ட் கிராமத்தை அடைய முடியும். நண்பர்களும் அப்பக்கம் செல்ல நேர்ந்த மனிதர்களும், சனிக்கிழமைகளில் அவர் சுற்றத்தார் சிலரும், ஞாயிற்றுக் கிழமைகளில் ஹோராஸ்மர் என்ற தத்துவம் நிறைந்த குடியானவரும் அவரை நாடி வந்தனர். குளிர்காலத்தின் மாலை நேரங்களில், அவருடைய கணப்புச் சட்டியைத் தவிர வேறு யாரும் இல்லாத நேரங்களில், குழல் வாசித்தும், தமக்கு முன்னர் அப் பிராந்தியங்களில் வாழ்ந் தவர்களைப் பற்றிச் சிந்தித்தும் தம் பொழுதைக் கழித்தார்.

வால்டன் பல ஏழை மக்களுக்குப் புகலளித்ததைத் தோரோவின் சம காலத்தவர்கள் நினைவு கூர்கின்றனர். இங்கு வாழ்ந்தவர்கள் சமுதாயத்திலிருந்து வெளியேற்றப் பட்டவர்களேயாவர். பலரும் தங்கியுள்ள இடங்களை ஒதுக்கிவிட்டுத் தனியான இடங்களில் வாழ்பவர்களிடமே அவருடைய பரிவு சென்றது. அதிலும் அவ்வாறு வாழ் பவர்கள் சுய மரியாதையும், தனிப்பட்ட இயல்பும் உடை யவர்களாயின், அவர்களிடம் இன்னும் அதிகப்படியான பரிவைக் காட்டினர். பாஸ்டன் மக்கள், தங்களிடையே வாழ்ந்த நாகரிகம் மிகுந்த பாங்கர்கள், கப்பல் முதலாளிகள், பேராசிரியர்கள், மத போதகர்கள் ஆகியவர்களைக் கொண்டாடுவதுபோலவே இவ்வாறு வாழ்ந்து மறைந்த ஏழை நீக்ரோக்களையும் ஐரிஷ்காரர்களையும் கொண் டாடினர். கேட்டோ இங்ரம் என்ற நீக்ரோவிற்கு அவருடைய முதலாளியாகிய காங்க்கார்டு கிராமப் பிரமுகர் ஒருவர் வால்டன் காட்டில் ஒரு வீடு கட்டிக் கொடுத்தி ருந்தார். "வால்நட் மரங்களின் இடையே சிறிய திட்டைப் போல்" காணப்பட்ட கேட்டோவின் வீட்டைத் தோரோ கண்டார். கண்டதும், "ஒரு சிலருக்கு மட்டுமே தெரியக் கூடிய முறையில் பைன் மரங்களின் இடையே உள்ள அந்த வீட்டைப்பற்றிப் பாதி அழிந்துள்ள நிலவறையாகிய அந்த வீடு இன்னும் இருக்கிறது" என்பதையும் அவர் வெளிப் படுத்தினர். "அந்த இடம் இப்பொழுது மென்மையான சுமாக் கொடிகளால் நிறைந்திருப்பதுடன் பொன் கம்பி என்று கூறப்படும் செடியும் அங்கு நன்கு செழித்து வளர்

கிறது'' என்பதையும் அவரே கூறியுள்ளார். அடுத்து அவருடைய வயலின் ஓர் ஓரத்தில் ஜில்ஃபா என்ற நீக்ரோப் பெண்ணின் எளிய வீடு இருந்த அடையாளம் காணப்படுகிறது என்றும், அவள் நூல் நூற்கும் தொழில்புரிந்தாளென்றும், வால்டன் காடு முழுவதும் கேட்கக்கூடிய முறையில் தன்னுடைய பெரிய குரலால் அவள் பாடுவதுண்டு'' என்பதையும் அவர் கூறியுள்ளார். இந்த இடத்தை அடுத்து ப்ரிஸ்டர் ஃப்ரீமன் என்ற மாஜி அடிமை வாழ்ந்து வந்தான். அவன் வளர்த்த மரங்கள், சிடார் போன்ற ஆப்பிளை இன்னும் விளைவித்ததாகவும், அவன் ஞாபகார்த்தமாக அந்த ஆப்பிளை உண்டதாகவும் அவர் கூறியுள்ளார். ஃப்ரீமனுடைய கல்லறைக்கும் தோரோ சென்று வந்தார். விடுதலைப் போரின் முதல் சண்டையில் "காங்க்கார்டு கிராமத்திலிருந்து பிரிட்டிஷ் வீரர்கள் பின்வாங்கும்பொழுது வீழ்ந்துபட்ட சில பிரிட்டிஷ் வீரர்களின் பெயர் குறிக்கப்படாத கல்லறைகளின் ஊடே ஃப்ரீமனின் கல்லறையும் இருந்தது''. "வால்டன் காட்டின் உட்பகுதிகளில் வைமான் என்ற குயவன் வாழ்ந்து வந்தான்;.........எனக்கு முன்னர் இக்காட்டில் வாழ்ந்தவன் ஹூ க்யோயில் என்ற ஐரிஷ்காரனுவான். அவன் வைமானின் குடிசையில் வாழ்ந்து வந்தான். கர்னல் ஹூ க்யோயில் வாடர்லூச் சண்டையில் பங்கெடுத்துக் கொண்டவன் என்று ஊரார் பேசிக் கொண்டார்கள். ஒரு வேளை அவன் இப்பொழுது வாழ்ந்திருந்தால் அன்று அவன் நிகழ்த்திய போர்களை மறுபடியும் இன்று நிகழ்த்துமாறு கேட்டிருப்பேன். பள்ளந் தோண்டும் பணியை இங்குச் செய்து வந்தான் அவன். நெப்போலியன் ஸெண்ட் ஹெலினுவுக்குச் சென்றுர்; ஹூ க்யோயில் வால்டன் காட்டுக்கு வந்தான். அவனைப்பற்றி யான் அறிந்தவை எல்லாம் வருத்தத்தை உண்டாக்கும் செய்திகளேயாகும்.'' ஒரு முறை மழையில் அகப்பட்டுக் கொண்ட தோரோ, ஒதுங்குவதற்காக ஓடிக் காலியாகத் தோன்றிய ஒரு குடிசைக்குள் நுழைந்தார். அந்தக் குடிசையில் ஜான் ஃபீல்ட் என்ற ஐரிஷ்காரரும், அவருடைய மனைவியும் மக்களும் இருந்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். கூரையின் எந்தப் பகுதியில் குறைந்த அளவு ஒழுக்கல் இருந்ததோ அந்தப் பகுதியில் அவர்கள் அனைவரும் ஒண்டிக்கொண்டிருந்தனர்.

தோரோவைக் கண்டவுடன் ஜான் ஃபீல்ட் தம்முடைய வறுமையின் வரலாற்றை ஒப்பித்தார். இதனைக் கேட்ட தோரோ சிக்கனம், எளிய வாழ்க்கை என்பவைபற்றிச் சில சொற்களால் அவருக்கு எடுத்துரைத்தார். ஃபீல்டின் மனைவியார் அந்தப் பெரிய உயரமான அடுப்பின் சிதையாத பகுதிகளில் பல முறை சமையல் செய்த சிறப்பைக் கண்டு வியந்தார் தோரோ. மேலும் "அழகிய வட்டமான முகத்தையும், ஒட்டியுலர்ந்த மார்பையும் பெற்றிருந்துங்கூட என்றுவது ஒருநாள் தம் நிலையைச் சீர்படுத்திக் கொள்ள முடியும் என்றே நம்பினர் அந்த அம்மையார்," எனக் குறித்துள்ளார்.

வால்டனில் வாழும்பொழுது தோரோவிடம் துப்பாக்கி இல்லை; சுடுவதால் இன்பம் அடையும் வயதை அவர் எப்பொழுதோ கடந்துவிட்டார். வயதும் அனுபவமும் முதிர முதிர, மனிதர்கள் தங்கட்கும் விலங்குகட்கும் இடையே ஏற்படுத்திக் கொண்டுள்ள செயற்கை வேறுபாட்டை அறிந்தார். வால்டனில் அவர் மேற்கொண்ட இயற்கை வாழ்வின் பயனுக, உயிரியலாரும், வேட்டையாடுபவர்களும் உயிருடன் வாழும் விலங்குகட்கு இழைக்கின்ற கொடுமையால் அவை அடையும் துன்பத்தைக் கண்டு பெரிதும் வருந்தினர். ஒவ்வொரு உயிரியலாரும் ஒரு துப்பாக்கியுடன் உலவி வந்த காலம் அது. அதுபற்றி அவர் கீழ்வருமாறு எழுதினர். "சென்ற சில ஆண்டுகளில் பறவை வேட்டையில் ஈடுபட்டிருந்தேன். பறவை இயல் படிப்பதாகக் கூறிக்கொண்டு ஒரு துப்பாக்கியுடன் சுற்றித் திரிந்தேன். புதிய இனப் பறவைகளையே தேடிச் சென்றேன். ஆனுல் பறவை இயல் படிப்பதற்கு இவ்வழியல்லாமல் பிற பல்வேறு வழிகள் உள்ளன என்பதை இப்பொழுது உணர்கிறேன். பறவைகளின் பழக்க வழக்கங்களை மிகக் கூர்ந்து கவனிக்க வேண்டி யிருத்தலின், அந்த ஒரு காரணத்திற்காகவேனும் துப்பாக்கியை ஒதுக்கிவிட நான் தயாராயிருக்கிறேன்."

வால்டனில் மீன் பிடிப்பதில் உள்ள உற்சாகத்தைக் கூட அவர் விரைவில் இழந்துவிட்டார். சுய மரியாதையை இழக்க வேண்டியுள்ளது என்பதற்காகவே அதில் உள்ள ஆர்வம் குறைந்து விட்டது. "ஒவ்வொர் ஆண்டும் மீன்

பிடிக்கும் தொழிலைச் சிறிது சிறிதாக விட்டுவிட்டேன். இதனால் மானிட உயிர்களிடத்தில் அதிக அன்போ அல்லது அதிக ஞானமோ பெற்றுவிட்டதாகப் பொருளில்லை. என்றாலும் தற்போது மீன் பிடிப்பதே இல்லை. ஆனால் இத்தகைய ஒரு வனாந்தரத்தில் வாழ வேண்டுமானால் மீன் பிடிக்கவும், வேட்டையாடவும் மறுபடியும் தொடங்க வேண்டும்போல் தெரிகிறது. மேலும் முற்றிலும் இறைச்சி உணவை மேற்கொள்ளும் பழக்கத்தில் உள்ள அசுத்தமும் விளங்கிற்று. ஒவ்வொரு நாளும் வீட்டு வேலையைச் செய்து முடித்துவிட்டுத் தூய்மையாக இருக்க முயல்வதும், வீட்டைத் துப்புரவாகவும், நாற்றம் இல்லாமலும் வைத்துக் கொள்வதும் கடினமாக இருந்தன."

ஆனால் வேட்டையாடுதல் என்பது காட்டினிடத்தும் இயற்கையிடத்தும் ஓர் இளைஞனுடைய மனத்தை ஈடுபடுமாறு செய்கிறது என்பதையும் அவர் அறிந்திருந்தார்: "துப்பாக்கியை ஒருமுறைகூடச் சுட்டு அறியாத பையனைக் கண்டு பரிதாபப்படுகிறேன். அவன் கல்வியில் ஒரு குறை ஏற்பட்டிருக்கிறது...... சிந்திக்கும் சக்தி பெறாத பையனாக இருக்கும் பருவத்தைக் கடந்த எவரும் வேண்டுமென்றே எந்த உயிரையும் கொல்ல மாட்டார். ஏனெனில் கொல்லப்படும் அந்த விலங்கும், கொல்லும் மனிதனைப் போலவே தன் உயிரில் பெரும் பற்று வைத்திருக்கிறது......" இந்த முறையில்தான் புதிய இளைஞன் ஒருவனுக்குக் காட்டைப்பற்றிய அறிமுகம் நடைபெறுகிறது. தோரோவின் தனிப்பட்ட சொந்தக் கருத்துக்களில் இதுவும் ஒன்று. "மனிதன் முதலில் காட்டிற்குள் நுழையும்போது மீன் பிடிப்பவனாகவும், வேட்டைக்காரனாகவுந்தான் செல்கிறான். ஆனால் வாழ்க்கையில் உயரக்கூடிய வாய்ப்பு ஏதேனும் இருந்தால் ஒரு கவிஞனைப் போலவோ அன்றி உயிரியல் வல்லுநனைப் போலவோ உயிர்களின் தாரதம்மியத்தை அறிகிறான். அறிந்தவுடன் துப்பாக்கியையும், தூண்டிலையும் தூர விட்டு விடுகிறான். மக்களில் பெரும்பாலோர் இத் துறையில் இன்னும் இளைஞர்களாகவே இருக்கின்றனர். சில நாடுகளில், வேட்டையாடும் தொழிலை மேற்கொண்டுள்ள சமய போதகர்களைக்கூட அதிகம் காணலாம்; அத்தகைய போதகர்கள் மேய்ப்போனிடம் உள்ள

நாயாக இருக்க முடியுமே தவிர நல்ல மேய்ப்போர இருத்தல் முடியாது.''

இது எவ்வாறு இருப்பினும், தோரோ இயற்கைெ ஆழ்ந்த முறையில் அனுபவித்து அதன் பயனாக எழு சிறந்த எழுத்துக்கள் - வால்டன் குட்டையில் இரவில் ப பிடிப்பது பற்றிய வருணனை ஆகியவை - அவருடை வேட்டையாடும் செயலால், குறிப்பாக மீன் பிடிக் தொழிலால் கிடைத்தவையே யாகும். '' சில சமயங்கள கிராமத்தில் யாருடைய வீட்டிலேனும் தங்கி இருக்கைய வீட்டுக்காரர் அனைவரும் உறங்கிய பிறகு மறுந உணவுக்கு வேண்டியதைத் தயாரிப்பதற்காக நா காட்டுக்குத் திரும்பியதுண்டு. ஒரு படகிலிருந்து நிலவெ ளியில் நடு இரவில் மீன் பிடிப்பது உண்டு. ஆந்தைய குழறலும், நரியின் ஊளையும், புதிய சில பறவைகள் கூக்குரலும் மிகச் சமீபத்தில் கேட்பதுண்டு. இந்த அனு வங்கள் என்னைப் பொறுத்தவரை என்றுமே நினைவ இருக்கக் கூடியவை - நாற்பதடி ஆழமுள்ள நீரில் க யிலிருந்து இருபது அல்லது முப்பது தூண்டிற்கே தூரத்தில் சுற்றிலும் சிறு பர்ச் மீன்களும் ஷைனர் மீன்கரு நிலவொளியில் நீர்மட்டத்தில் தம் வால்களை ஆட் கொண்டு சுற்றி வரும் காட்சி...... ''

வாழ்க்கையை வியக்கத்தக்க முறையில் எளிதாக் கொண்டு தோரோ கோடைக் காட்டில் வாழ்ந்தா '' இன்று மாலை நேரம் மிகச் சிறப்பாக உள்ளது ; உட முழுவதும் ஒரே புலனாக இருந்து இன்பத்தை கணுக்க தோறும் ஏற்று அனுபவிக்கிறது. இயற்கையோ இரண்டறக் கலந்து, அதன் ஒரு பகுதியாக மாறி ஒருவி தனிப்பட்ட உரிமையோடு உலவி வருகிறேன் '' என்று நாட்குறிப்பில் எழுதியுள்ளார். நியூ இங்கிலாந்தில் இ யுதிர் காலத்தில் பகல் நேரம் குறுகத் தொடங்கியவுட எளிய ஏகாந்தமான வாழ்க்கையில் அவருடைய மகிழ் அதிகமாயிற்று. அமைதியான அந்தப் பருவத்தில், அமை யாக இருந்த அந்தக் குட்டையில் இன்பங் கண்ட சலனமற்ற நீரில் நீர்ப்பூச்சிகளும் தத்துப் பூச்சிகளு ஸ்வாலோப் பறவைகளும், துள்ளும் மீன்களும் உ டாக்கிய அலைகளை இன்பத்துடன் காண்பதில் பல ம

களைச் செலவிட்டார். பக்கத்திலுள்ள குட்டைகளின் கரைகளில் செஸ்னட் கொட்டைகளைத் தேடிக்கொண்டு அவர் செல்கையில் தம்முடைய குடிசை வாழ்க்கைச் சோதனையை நியூ இங்கிலாந்தின் குளிர்காலத்தில்கூடக் கொண்டு செலுத்த விரும்பினார். இரவு இருட்டிய பிறகுகூடக் காட்டின் அந்தகாரத்தில் தாம் வழி கண்டு பிடித்து மீள்வதற்காக இரவு நேரங்களில் சுற்றித் திரியத் தொடங்கினார். இரவை எவ்வாறு விரும்பினாரோ அவ்வாறே குளிர்காலத்தையும் விரும்பினார். நல்ல சீதோஷ்ணமுள்ள நாட்களில் சுற்றித் திரிவதுபோலவே, குளிர், மழை, இருட்டு உள்ள நாட்களிலும் சென்று வந்தார். குளிர்காலம் வந்தவுடன் அன்றாடம் குட்டையின் உஷ்ணநிலையை ஆராய்ந்தார். ஆழமான நீர்ப்பகுதியைக் குளிரச்செய்ய வட காற்றுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கிறதென்பதைக் கண்டு குறித்து வைத்தார். பல்வேறு வடிவங்களும், அழகும் எவ்வாறுள்ளன எனக் கண்டார். அன்றைய சமுதாயம் ரயில் பாதைகள், பள்ளிக் கூடங்கள், பின்னும் பற்பல துறை மேற்பார்வையாளர் களால் நிறைந்திருந்தது. அந்த நிலையில் தம்மை "பனிப் புயல் மேற்பார்வையாளர்" என்று அவர் கூறிக் கொண்டார். அவர் தனிமையாகவும், எமர்ஸன் முதலிய நண்பர்களோடும் பலமுறை பனிச் சறுக்கல் விளையாட்டில் ஈடுபட்டார். ஓர் அங்குல கனமுடைய பனிக்கட்டியின் மேல் படுத்துக்கொண்டு, கண்ணாடியின் பின்புறம் பார்ப்பது போலக் குட்டையின் உள்ளே என்ன நிகழ்கிறதென்பதைக் கண்டு வந்தார். அன்றாடம் அவர் எழுதிவந்த நாட்குறிப்பில் "பல்வேறு புள்ளி விவரங்களையும், விவரக் குறிப்புகளையும், தம் முடிவுகளையும், கருத்துக்களையும்" குறிப்பிட்டு வந்தார்.

குளிர்காலம் வளர வளர அவருடைய தனிமையும் அதிகரித்தது. "பனிக்கட்டி மிகுதியாக விழுந்த காலத்தில் ஒரு வாரம் இரண்டு வாரங்கட்கு எந்த மனிதரும் என் குடிசைப் பக்கம் வரத் துணியவில்லை. ஆனால் காட்டு எலியைப்போல் நான் வசதியாக வாழ்ந்து வந்தேன்.........அந்தப் பெரிய பனிமழை! அதனைப்பற்றிக் கேட்பதுகூட எவ்வளவு இன்பமாக இருக்கிறது! எந்த வகைத் தட்ப வெப்பமும் நான் உலாவப் போவதைத் தடை செய்யவில்லை .........ஏனென்றால் ஆழமான பனிக்கட்டியின் மேல் நடந்து

கூட எட்டு அல்லது பத்து மைல்கட்கு அப்பால் உள்ள ஒரு கருப்புப் பர்ச் மரத்தையோ அல்லது மஞ்சள் பர்ச் மரத்தையோ அல்லது பழைய நண்பனாகிய பைன் மரத்தையோ சென்று கண்டு வருவேன்.'' பனிப் பொடியை வாரி இறைக்கும் குளிர்காற்றை அவர் பெரிதும் விரும்பினார். பனிக்கட்டி அவருடைய ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் அதற்குத் திருப்பிக் காட்டினார். இரவு நேரங்களில் ஆந்தை குழறுதலையும், அவருடைய வீட்டின் அருகே ஜன்னலின் கீழே பனிக்கட்டியின் மேல் அமர்ந்து நரிகள் ஊளை இடுவதையும் அவர் கேட்டார். அன்றியும் குட்டையில் தேங்கியிருந்த பனிக்கட்டி மெள்ள மெள்ள உடைந்து சத்தம் செய்வதையும் கேட்டுக் கொண்டிருப்பார். "அந்தப் பனிக்கட்டி உறக்கம் வராமல் படுக்கையில் தீக் கனவுகள் கண்டு புரண்டு கொடுப்பதைப்போல் இருந்த" தாம். அவர் பகல் நேரத்தில் அணில்கள், ஜேப் பறவை, டிட் பறவைகள் முதலியவற்றிற்கும், இரவு நேரத்தில் இனிப்புச் சோளம், ரொட்டித் துண்டு ஆகியவற்றால் முயல்கட்கும் உணவு கொடுத்தார். குழி முயல்கள் அவருடைய குடிசையின் கீழேயே வாழ்ந்து வந்தன. எனவே, அவர் போடும் உருளைக் கிழங்குத் துண்டுகட்காக அவை அவரிடம் வந்தன. குளிர்காலத்தில் உலவும் இந்தப் பிராணிகளின் விடாப்பிடியும், முரட்டுத்தனமும் அவரை மிகவும் கவர்ந்தன. அந்தக் குளிர்காலத்திலும் அவை இறவாமையால் அந்தப் பிராந்தியத்தில் உயிர் வாழத் தகுதியுடையவை தாமே என்பதை நிரூபித்தன. இந்தப் பறவைகள், ஆந்தைகள், தவளைகள் என்பவற்றுடனேயே அவர் வாணாளைக் கழித்திருப்பார். ஆனால், ஒருநாள் "மாலை இரண்டு மணியளவில் உலகத்தின் இருசு தேய்ந்து சப்தமிட்டதால் அதற்கு எண்ணெய் இட வேண்டும்" என்று கருதிய அவர், வாழ்க்கையில் புதிய ஒரு காட்சியைக் கண்டு "ஓரளவு தேக்கம்" ஏற்பட்டு விட்டதை உணர்ந்தார். ஆகவே தம்முடைய சாமான்களை எடுத்துக் கொண்டு குடிசையை விட்டுச் சென்ற அவர் மீண்டும் அங்கு வசிக்கவே இல்லை.

---

# அத்தியாயம் 5

"சாதாரணமான விலங்குகள் என்று ஏனைய உயிரினங்களைக் கருதுவதை நான் ஏற்றுக் கொள்வதில்லை. அவை தவறான பேச்சுக்கள் எவற்றையும் பேசாமையால் நான் அவற்றிடம் மிகவும் ஈடுபட்டுள்ளேன்."

—தோரோவின் நாட்குறிப்பு.

**1847** செப்டம்பர் 6 ஆம் நாள் வால்டனிலுள்ள தம் குடிசையை தோரோ இறுதியாக விட்டுச் சென்றார். வால்டன் அவருடைய வாழ்வின் ஒரு பகுதியாக மட்டுமே விளங்கியது; அங்கு வாழ்ந்த நாட்களில் அதனுடைய சத்தான பகுதியை அவர் உறிஞ்சிக் கொண்டார். எனவே, அதை நீங்குவதுபற்றிச் சிறிதும் கவலைப்படாமல் புதிய அனுபவங்களிற் புகுந்தார். ஏனென்றால், வாழ்க்கை என்பது பொருளைச் சேகரித்துக் கொண்டு சமுதாய ஏணியில் படிப்படியாக ஏறுவது அன்று என்றும், ஒரு சோதனையிலிருந்து மற்றொரு சோதனைக்குச் செல்வதே அது என்றும் கண்டார். அகத்தே தோன்றும் விருப்பங்களை நோக்கித் துணிவுடன் முன்னேறுவதே வாழ்க்கையின் குறிக்கோள் என அவர் கருதினார். அந்த முன்னேற்றப் பாதையில் ஒவ்வொரு மனிதனும், "கண்ணுக்குத் தெரியாத ஒரு வரம்பைக் கடக்க வேண்டிச் சிலவற்றை விட்டு முன்னேற வேண்டும்; அவ்வாறு செய்தால்தான் புதிய அனைத்துலகப் (universal) பரந்துபட்ட கொள்கைகள்" தோன்றி வளர முடியும் என்றுங் கூறினார். வால்டனில் ஆழ்ந்து அனுபவித்த அனுபவத்தின் மூலம் தம் ஆளுமையைப் பலப்படுத்தி வளர்ப்பதிலேயே தம் முன்னேற்றம் இருப்பதாக அவர் கருதினார். அங்கேதான் அவர் இதுவரைத் தேடிச் சென்ற பொருளை—அதாவது தம்மையே—கண்டார். இப்பொருளைக் காண்பதுதான் வாழ்வின் முடிவான குறிக்கோள் என்று எமர்ஸனும் கூறினார். எழுத்தாளர் என்ற முறையில் தோரோ தமக்குரிய பாதை, தம் பலம், தம் தனித்தன்மை ஆகியவற்றை வால்டன் வாழ்க்கையில்

கண்டதுடன், தம் எழுத்து நடையில் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவும், மரபு பற்றியதாகவும் இருந்த பகுதிகளை ஒழித்தார். இயல்பிலேயே துறவியாக இல்லாத ஒருவர்க்கு இரண்டு ஆண்டுக் காட்டு வாழ்க்கை போதுமானதாகும். ஒரு மாற்றம் பெறுவதற்கு அவர் தயாராக இருந்தார்.

எமர்ஸன் சொற்பொழிவு யாத்திரையாக ஐரோப்பா சென்றுள்ளார் என்ற செய்தியும் இளைத்த உடம்பையுடைய லிடியன் தம் வீட்டையும் தோட்டத்தையும் கவனித்துக் கொள்வதற்கு ஹென்றியுடைய உதவி தேவைப்படுகிறது என்ற செய்தியும் தெய்வானுகூலமாக அப்பொழுது கிடைத்தன. எமர்ஸனுடைய வீட்டில் வாழ்வதை அவர் விரும்பினுர். அவருடைய திறமை அங்குப் போற்றப் பட்டது; அவருடைய கைத்தொழில் திறமைக்கு இடம் அளிக்கக்கூடிய வாய்ப்புக்கள் அங்கு நிறைந்திருந்தன; மனத்துக்குகந்த நண்பர்களும் எழுதுவதற்குரிய தனி அறையும் அங்குண்டு. அவருடைய பெற்ருேரின் வீட்டில் இருப்பதைக் காட்டிலும் அதிகப்படியான அமைதியை எமர்ஸன் வீட்டில் கண்டார். ஹென்றி வால்டனிலிருந்து மீண்டபொழுது கையுடன் கொண்டு வந்த "காங்க்கார்டில் ஒரு வாரம்" என்ற நூலை அச்சிடுவதற் காக ஒரு வெளியீட்டாளரைத் தேடி எமர்ஸன் மிகவும் பாடுபட்டார். ஆதலின் நன்றியைத் திருப்பித் தருவதில் தோரோ மகிழ்ச்சி யடைந்தார்.

1847 இன் பிற்பகுதியில் எமர்ஸனுடைய வீட்டிற் சென்று வாழத் தொடங்கினுர். எமர்ஸனுடைய தோட்டக் காரனை, குடிகார ஹூ ஹ்வேலன் என்ற ஐரிஷ்காரன் தோரோவின் வால்டன் குடிசையை எடுத்துக்கொண்டான். குட்டையின் அருகிலிருந்த அக் குடிசையை பீன்ஸ் வயல் கட்டுப் பக்கத்தில் நகர்த்திக் கொண்டான். அதனைச் சந்தனத் தோட்டமாக மாற்றியமைக்க அவன் விரும்பினு லும் இறுதி வரை அவ்வாறு செய்யவில்லை. அந்தப் பழைய குடிசை மனையில் புல் மண்டிவிட்டது. அந்த ஐரிஷ்காரன் விட்டுச் சென்ற பிறகு தோரோவே அந்த பீன்ஸ் வயல்கட்டுச் சென்று, எமர்ஸனுக்காகப் பைன் மரங்களை நட்டு வந்தார். பின்னர், அந்தக் குடிசையை விலைக்கு வாங்கிய குடியானவர் ஒருவர் கருவிகள் வைக்கும்

இடமாக அதனைப் பயன்படுத்தினார். தாம் முன்னர்க் குடி இருந்த குடிசையிடம் ஹென்றிக்கு எவ்வித ஆசாபாசமும் ஏற்படவில்லை. அந்த இடத்தில் ஒரு சமுதாயத்தை அல்லது குடிசை வாழ்வோரை நிறுவ வேண்டும் என அவர் விரும்பவில்லை.

லிடியனின் வீட்டில் மிகவும் அமைதியுடன் பழைய இடத்தில் அமர்ந்தார். அவர்களுடைய நட்பு நெருக்கமாயிற்று. லிடியன், வலிமை பொருந்திய அவர் தம்முடன் இருப்பதை விரும்பினார்; ஹென்றி அந்த அம்மையாரின் பக்கத்தில் இருப்பதில் மகிழ்ச்சி யடைந்தார். காட்டில் வாழ்ந்த வாழ்க்கை காரணமாக ஒரு கிளர்ச்சியையும், புத்துணர்ச்சியையும் பெற்றிருந்தார். அந்த ஆண்டுதான், அவருடைய எழுத்து வேலைக்குச் சிறந்த காலமாய் அமைந்தது. எமர்ஸனின் வீட்டில் தங்கி இருந்த காலத்தில் வால்டனைப் பற்றியே பெரிதும் எழுதினார். "சிவில் ஒத்துழையாமை" என்ற நூலையும் அங்குத்தான் எழுதினார். ஒரு மனிதன் எழுதிய நூல் மற்றவர்களை எவ்வளவு ஆட்படுத்துகிறது என்பதைக் கொண்டே அந்த நூலின் சிறப்பை அளக்க வேண்டுமானால், இந்த இரண்டு நூல்களும் அவர் எழுதியவற்றில் மிகச் சிறந்தவை என்று கூறலாம்.

எமர்ஸனுக்காக ஒரு துரதிர்ஷ்டம் பிடித்த கோடைக் கால வீடு ஒன்றைக் கட்டத் தொடங்கி அதில் நிரம்ப மகிழ்ச்சியையும் தொல்லையையும் அடைந்தார் தோரோ. வால்டன் குட்டையில் தோரோவின் குடிசைக்கு எதிரே கோடைக் கால வீடு கட்டுவதற்காக நிரம்ப இடத்தை எமர்ஸன் வாங்கி இருந்தாலும், இறுதியில் அந்த எண்ணத்தை விட்டு விட்டு காங்க்கார்டில் உள்ள மனைக்கட்டிலேயே அவ்வீட்டைக் கட்டத் தொடங்கினார். இந்தக் கட்டடத்திற்கு மாதிரிப் படம்—வரையும் வேலை, கட்டும் வேலை ஆகிய பொறுப்புக்களை மேற்கொண்டவர் உலகியல் கடந்த பழைய நண்பராகிய ஃப்ரான்ஸன் ஆல்காட் ஆவார். தச்சு வேலையில் மட்டுமே தோரோ உதவலாம்; ஆனால் கட்டடக் கலையில் தலையிடக் கூடாது என்று ஏற்பாடாகி இருந்தது. எமர்ஸனின் புதல்வர் பின்வருமாறு பிற்காலத்தில் இதுபற்றி எழுதினார்: "பைன் மரங்களின்

வளைந்த உறுப்புக்களையும், முண்டும் முடிச்சுமான ஓக் மரத்தையும், செடார் மரங்களின் நேரான பகுதிகளையும் எடுத்துக்கொண்டு 1847 இல் ஆல்காட் வீடு கட்டத் தொடங்கினர். வீட்டிலிருந்து 100 காலடி தூரத்தில் தம் நண்பராகிய எமர்ஸன் தங்கிப் படிக்க அழகிய, ஆனால் விநோதமான வீட்டைக் கட்டத் தொடங்கினர். இந்த விஷயத்தில் எவ்வித மாதிரி வரைபடமோ திட்டமோ இல்லாமல், ஒவ்வொரு பகுதியும் முடிந்த முறையை வைத்துக் கொண்டு அடுத்து எவ்வாறு செய்யலாம் என நினைப்பதும், வளைந்து நிற்கும் கிளையின் காரணமாகக் கட்டட அமைப்பையே மாற்றுவதும், இவ்வேலைக்கு உதவ வந்த தோரோவுக்குப் பிடிக்கவில்லை. அவர் ஒரு சமயம் "நான் ஒன்றுமே செய்யாமல் இருப்பதாகத் தோன்றுகிறது"... ... என்று கூறினர். தோரோ ஆணி அடிக்கும் அலுவலை மேற்கொண்டாலும், அதனைச் செம்மையாகச் செய்தார். ஆனால் இரவாணத்தை அழகுபடுத்துவதற்காகத் ஆல்காட் அவற்றை மேல்நோக்கி வளைத்து விட்டார். கூரைமேல் வெல்வெட் பாசியையும், ஸ்பாக்னம் புல்லுருவியையும் படரவிட்டார். விரைவில் இயற்கை அதனை உண்டு விட்டது. உண்மையில் அவ்வீடு கட்டடக்கலைஞர் கையிலிருந்து தம் கைக்கு வந்தவுடன், திருமதி எமர்ஸன் அவ்வீட்டுக்கு "அழிவுச் சின்னம்" எனப் பெயர் சூட்டினர்.

வீடு கட்டியவருக்கும் (ஆல்காட்) அவருக்கு உதவி செய்தவருக்கும் (தோரோ) இடையே கடுமையான வேற்றுமை இருந்து வந்தது. உலகியல்பு நீங்கிய உயர்வாளரான ஆல்காட் எப்பொழுதுமே உலகியலுக்கு அப்பாற்பட்ட கனவு காண்பவராகவே இருந்தார். "பழக்காடு" என்ற இந்த வீட்டைக் கட்டுவதற்கு முன்னரேகூட அவர் பயனற்ற பல சோதனைகளில் ஈடுபட்டிருந்தார். தோரோ மிகவும் உலகியல் நிறைந்தவர்; உறுதியும், கட்டுப்பாடும் உடையவர். ஒரு வீட்டைத் தயாரிப்பதிலோ, ஒரு பண்ணையை அளவை செய்வதிலோ, ஒரு புதிய இயந்திரத்தைக் கண்டு பிடிப்பதிலோ, எதிலும் வல்லமையுடையவர் சுருங்கக் கூறினல் எமர்ஸன் தம் அன்ருட அலுவலைப் பன்னிரண்டு மாதமும் அவரிடத்தில் துணிந்து ஒப்புவிப்பார்; காங்கார்டு கிராமத்திலுள்ள ஏனையோருக்கு ஹென்றியிடம் நம்பிக்கை இல்லை; "காட்டை நெருப்புக்கு இரையாக்கினவர்"

என்றே அவரைப் பலரும் கருதினர். அவருடைய பெற்றோர்களுக்கும் அவர் ஒரு புதிராகவும், ஏமாற்றமாகவும் இருந்தார். பழைய மரபை ஒட்டிய அவருடைய அத்தைமார்களை நல்லெண்ணத்துடன் கேலி செய்து வந்தார்: ஒரு முறை கோடை வீட்டின் கூரையிலிருந்து ஹென்றி கீழே விழுந்துவிட்டார்; நல்ல வேளையாக வைக்கோலின் மேல் வீழ்ந்ததால் காயம் படாமல் தப்பினார். "உலகியல் கடந்த தோரோவின் நண்பர்கள் கனவுலகத்திலிருந்து கீழே விழும்பொழுது இதுபோன்ற மென்மையான வைக்கோல் படுக்கை கிடைக்குமென்று நான் நம்புகிறேன்" என்று தோரோவின் அத்தை மேரியா தம் மன உளைச்சலைத் தெரிவித்தார்.

சுதந்தரமானதும், கடினமானதுமான வால்டன் வாழ்க்கையிலிருந்து, தோரோவே கூறும்படியான "துடைத்தலும், துலக்குதலும், வரி கட்டுதலும், வீடு காத்தலும்" ஆகிய கடமைகள் நிறைந்த எமர்ஸன் வீட்டு வாழ்க்கையில் ஈடுபட்டாலுங்கூடக் காட்டுடனும், வயல்களுடனும் அடிக்கடி அவர் தொடர்பு கொள்ளாதிருந்திருப்பின் தோரோவின் வாழ்க்கை மிகச் சங்கடமானதாக இருந்திருக்கும். அடிக்கடி காட்டிற்குச் செல்லும் பழக்கத்தை வாணாள் முழுவதும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தார் அவர். வாரத்தில் பல நாட்கள் என்ற முறையில், ஆண்டு முழுவதும், மாலையில் பல மணி நேரம் வெளியிற் செல்வதே அவருக்குச் சிந்திக்கவும்,உற்று நோக்கவும் வாய்ப்பளித்தது. வீட்டு வாழ்க்கையில் காணப்படும் அற்பத்தனங்களை மனத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்காகத் தினசரி மூன்று மைல் நடந்து சென்று தமக்குப் பழக்கமான குன்றின் சரிவுக்குச் செல்வார். ரிச்சர்ட் ஜெஃப்ரீஸைப் போலத் தோரோவும் தனிப்பட்ட இடத்திற்குச் செல்லும்பொழுது தான் நல்லறிவு பெற்றார். சில சமயங்களில் சாலை வழியாகவும், பல சமயங்களில் வயல்களையும் காட்டையும் குறுக்கே கடந்தும், மிக வேகமாக அவர் செல்வதுண்டு. அவ்வாறு அவர் செல்வது அநேகமாக ஒருவருக்கும் தெரிவதில்லை. "ஒவ்வொரு ஜன்னலையும் ஓர் ஆப்பிள் மரத்தால் மறைத்துவிட்டு" அவர் தாம் விரும்பிய தனி இடத்துக்குச் சென்று விடுவார்.

வீட்டின் வெளியே இவ்வாறு சுற்றி அலைவதுதான் அவருடைய வாழ்க்கைக்கும், எழுத்திற்கும் கிளர்ச்சி யூட்டிற்று. அன்றுடம் சென்ற வழியே சென்ருலுங்கூடப் புதிய காட்சிகளைக் காணவும், புதிய சிந்தனைகளைப் பெற வும் வாய்ப்புப் பெற்றிருந்தார். அவருடைய வீட்டு வாயி லில் இருந்த புல்வெளியைக்கூட, ஒருநாள் கூர்ந்து கவனிக் கின்றவரை அவர் காண முடியவில்லை. அடுத்த வாரத்தி லேயே அப்புல்வெளி உரு மாறி விடும்; மறுபடியும் அது பற்றி ஆராய வேண்டியதுதான். மென்மையாக விரியும் அந்தப் பிரதேசத்தில், எந்த ஆற்றை, திட்டை, சதுப்பு நிலத்தை, குன்றை, எவ்வளவு குளிர்காலத்தில் அவர் காணச் சென்ருலும் பல பக்கங்கள் குறிப்பெழுதிக் கொண்டே மீள்வார்; அன்றிரவே அதனைப் பிரதி செய்து மறுநாள் அதுபற்றிப் பல வாக்கியங்கள் எழுதி விடுவார்.

இத்தகைய முயற்சியில் தடை ஏற்படாமல், எப் பொழுதும் ஓர் உற்சாகத்துடன் சிறு குறிப்புகளைப் பெரு வாக்கியங்களாகப் பெயர்த்து எழுதியதுதான் அவருடைய வாழ்க்கையில் செய்த பெரிய சாதனை. இயற்கை ஆராய்ச்சி யைக் காட்டிலும் முக்கியமானது இது. இயற்கைவாதிகளின் பயிற்சியைவிட மிக நீண்டதும், ஆழமானதுமான முயற்சி யாகும் இது. இதனுல் மிகப் பரந்துபட்ட ஒரு காட்சியைக் அவர் காண முடிந்தது. காங்கார்டின் அபூத தத்துவஞானி களில் தோரோவும் ஒருவராக இருப்பினும், அவர் மட்டும் தன்னிச்சையுடன் கூடிய சுதந்தரமுடையவராகவே இருந் தார். அடிக்கடி ஜெர்மானிய, ஹிந்து சமய நூல்களைக் கற்ருலும், "அகண்ட ஆன்மாவோடு தொடர்பு கொள்ள" வேண்டும் என்று அடிக்கடி அவருள் ஒரு விருப்பம் ஏற்பட் டாலும், இத்தகைய மெய்யுணர்வில் அதிக தூரம் செல்ல முடியாத அளவுக்கு அவர் ஓர் அமெரிக்கராகவும் (யாங்கி), இயற்கைவாதியாகவும் இருந்தார். இயற்கையிடம் அவர் அணுகிய முறையே சொந்த முறையிலாகும். கூர்ந்து கவனிக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தாராயினும், அவர் கவனித்தவை யாவை என்பது முக்கியமன்று; அவ ரால் கவனிக்கப்பட்ட பொருள்கள் எவ்வாறு அவருடைய மனத்திற் பதிந்தன என்பதே முக்கியமாகும். இயற்கையும், மனிதனுடைய உணர்ச்சிகளும் ஓயாமல் மாறும் இயல் புடையனவாதலின், அத்துறையில் ஒவ்வொரு மணி

நேரமும் புதிய காட்சியையும், புதிய அறிவையும் அவருக்குக் கொண்டு வந்தன.

அவருடைய முறை இசைப்பாடல் முறையாகும். ஆனாலும், அவருடைய பொறிகள் கண்ட காட்சியை தோரோவின் இசைத் தன்மை மறைத்ததில்லை. அவருடைய எழுத்துகளில் இளவேனிற் காலம், ராபின் பறவை, புழுப் பறவை, பாடும் சிட்டு, போபோலின்க், விரைசிட்டு, அரசப் பறவை, பைன் வார்ப்ளர் ஆகிய பறவைகளின் இசை வெளிப்படும். புதராக உள்ள ஓக் மரங்களிடம் அவர் கொண்ட அன்பு அவற்றைக் கூர்ந்து அவர் கவனிப்பதைத் தடை செய்யவில்லை. அம்மரங்களின் இலைகள் வலுவாகவும், குளிர்காலத்தில் திண்மையாகவும், தோல் கேடயங்கள் போல் முழுத் தன்மையுடன் தொடுவதற்கு வழவழப்பாகவும் தூய்மையாகவும்" இருந்தனவாம். இயல்பாகவே அவர் கவிஞராக இருப்பினும், பைக் என்ற மீனின் மேல் உள்ள செதில்களை எண்ணுவதையும், தவளைகள், ஆமைகள் ஆகியவற்றின் பழக்க வழக்கங்களையும், செடி கொடிகளையும் ஆராய்வதையும் விட்டுவிடவில்லை. எதனையும் நன்கு கண்டு அதற்கு ஒரு பெயரிடும் விஞ்ஞானியின் மனப்பாங்கு அவரிடம் நிறைந்திருந்தது. "சென்ற இருபது ஆண்டுகளாக ஒரு குறிப்பிட்ட நாணலை நான் பார்த்த மாத்திரத்தில் நன்கு அறிவேன். ஆனால் அதனுடைய பெயர் தெரியாத காரணத்தால் அதன் சிறப்பியல்புகளை எடுத்துக் கூற முடியாமற் போய்விட்டது. ஒரு பொருளைப்பற்றிய அறிவு வேண்டுமானால் அதன் பெயரை முதலில் அறிய வேண்டும்," என்று கூறியுள்ளார்.

இயற்கை வல்லுநராக ஆக விரும்புபவர்கட்குத் தோரோவின் புத்திமதி என்னவென்றால் இயற்கையோடு நெருங்கி வாழவேண்டும் என்பதுதான் : "கவிஞனாகவோ, இயற்கை வல்லுநனாகவோ இருக்கும் நீங்கள் ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தைப் பற்றி ஆராய வேண்டுமாயின் அங்கேயே குடியேறுக : அவ்விடத்திலேயே வாழ்க ; அந்த ஓடைகளிலேயே மீன் பிடித்து, அந்தக் காடுகளிலேயே வேட்டையாடி, அங்கேயே விறகு சேகரித்து, அந்த நிலத்திலேயே உழுது, அங்குள்ள காட்டுப் பழங்களையே பறிக்கப் பழகுங்கள்." அவருடைய வறுமையினால் ஏற்பட்ட நற்

பயன் என்னவெனில் அது அவரை "என் சொந்த நிலத்திலேயே நீண்ட காலம் வாழுமாறு செய்து பூமியிலேயே இந்தக் குறிப்பிட்ட இடத்தை அதிகம் அறியுமாறு செய்தது" என்கிறார். வாழ்க்கையில் ஆழ்ந்த அறிவைப் பெற வேண்டும் என அவர் விரும்பியது, குறிப்பிட்ட அந்தச் சிறிய இடத்திலேயே மிக ஆழ்ந்து பொருள்களைக் கவனிக்குமாறு அவரைச் செய்தது. "ஒருவன் தன்னுடைய நாட்டிலேயே அல்லது தன் சொந்த ஊரிலேயே சுற்றித் திரிந்து, தன்னுடைய வீட்டுக் கதவுக்கும் வெளிவாசலுக்கும் இடையே உள்ள பொருள்களை மட்டும் ஆராய வேண்டுமானாற்கூட அவன் பெரிய அறிவாளியாக இருத்தல் வேண்டும். ஒருவன் வலிமையுடைய பணக்காரனாகவும் இருக்க வேண்டுமானால், அது அவன் சொந்த ஊரில்தான் சிறப்புடையது" என்று அவர் கூறியுள்ளார். பெரும் புல்வெளிகளுக்கோ அன்றி ராக்கீஸ் எனப்படும் மலைப் பிரதேசங்கட்கோ அவர் செல்லத் தேவையில்லை; ஏனெனில் அவற்றைத் தெரிந்துகொள்ளத் தொடங்கவே பல ஆண்டுகளாகும். "கலிபோர்னியாவுக்கு நான் செல்வதாக இருந்தால் அங்குள்ள பெரிய மரங்களைக் காட்டிலும் என்னைப் பொறுத்தவரை காங்க்கார்டு கிராமத்திலிருக்கும் கிளைப் பயிர்கள் மிகவும் முக்கியமானவை" என்று கூறியுள்ளார் அவர். ஒரு மனிதன் தன் முயற்சிகளின் காரணமாக இயற்கையிலிருந்து நேரடியாகக் கற்பதுதான் மிகச் சிறந்த கல்வி; பிறர் கற்றுக் கொடுத்தோ அன்றித் தானே படித்தோ வரும் அறிவு இரண்டாந்தரமானதுதான். நேரடியாகக் கூர்ந்து கவனிப்பதைக் காட்டிலும் ஏட்டுக் கல்வி உயர்ந்ததாகாது. "இந்த வயல்களும், ஓடைகளும், காடுகளும், இங்கு வாழும் மக்கள் மேற்கொண்டுள்ள எளிய தொழில்களும் எனக்கு உற்சாகத்தை ஊட்டவில்லையானால், அதனால் ஏற்படும் நஷ்டத்தை, எந்தப் பண்பாடும், செல்வமும் ஈடு செய்ய முடியாது" என்றும் கூறியுள்ளார்.

ஒரு புதுமாதிரியான இயற்கை வரலாற்றைத் தோரோ எழுதி வந்தார். இதுபற்றிக் கூற வந்த ஆல்காட் "அது காங்க்கார்டின் பூகோளப் படமாகும் (அட்லாஸ்); இதனை எழுதுவதற்குரிய பேராற்றலும், விஷயங்களும் தோரோவிடம் நிரம்ப உண்டு" என்று கூறியுள்ளார். தோரோ பிறப்பிலேயே ஒரு நில நூல் வல்லுநராவார். இதுபற்றிக்

கூற வந்த சேனிங் என்பவர் "ஆண்டு முழுவதையும் குளிர்ச்சி, வெப்பம் என்ற முறையில் வர்ணம் பூசி ஓர் ஆண்டு நாள் அட்டையே (காலண்டர்)தயார் செய்யக் கனவு கண்டார் தோரோ. ஒவ்வோர் ஆற்றுக்கும் ஓர் அளவுமானியை வைத்திருந்தார். அன்றியும் குளம், குட்டைகளின் சீதோஷ்ண நிலையைக் குறித்து வைத்தார். ஆகாயத்தில் காணப்படும் மாற்றங்கள், தாவரங்கள் பூத்தல், பழம் பழுத்தல், இலை உதிர்த்தல், வந்து தங்கிச் செல்லும் பறவைகளின் போக்குவரத்து, விலங்குகளின் பழக்கவழக்கங்கள் ஆகியவை பற்றியும் அவர் குறித்து வைத்தார்" எனக் கூறியுள்ளார். அந்தக் கிராமச் சுற்றுவட்டாரத்தில் வாழ்ந்த மக்கள் உட்பட தாவரம், விலங்கு ஆகியவைகளின் எல்லாச் செயல்கள் பற்றியும் வண்டி வண்டியாகக் குறிப்புகள் தயாரித்து அவற்றுடன் அட்டவணை, மேற்கோள் ஆகியவற்றையும் திரட்டி வைத்தார். இவற்றில், பண்ணை, தத்துவம், அழகியல் ஆகிய அனைத்தும் அடங்கி இருந்தன. காங்க்கார்டில் வாழ்ந்த மக்களை மட்டுமல்லாமல், உலகின் பிறவிடங்களில் வாழ்ந்த மக்களினுடைய உயிர்த் தத்துவத்தின் சாரத்தை தையும் அறிய இதனைப் பயன்படுத்த விரும்பினார். அதனுடைய அளவு பெரிதாகுமே என்பதுபற்றித் தோரோ கவலைப்படவில்லை. நியூ இங்கிலாந்தின் ஒரு சில சதுர மைல்களுக்குள் உலகத்தின் பிம்பத்தைக் காணலாம். இதன் எதிராக அகில உலகத்தையும் சுற்றிப் பார்த்த ஒரு மனிதன்கூடக் குறுகலான சில கொள்கைகளால் மட்டும் நிரம்பி இருக்கக் கூடும் அல்லவா?

கூர்ந்து நோக்கலும் எழுதுதலுமே அவருடைய வாழ்க்கை. அவர் வேலைத் தலத்திற்குச் செல்ல, நடை, படகு ஆகிய இரு சாதனங்களையும் கையாண்டார். ஸத்பரி ஆற்றில் அவர் படகு செலுத்திச் செல்வதைக் கண்ட மக்கள், ஏனையவர்களைப் போல ஹக்கிள்பெரிப் பழங்களைப் பொறுக்குதற்கு அவர் செல்லவில்லை என்பதை அறியவில்லை. தோரோ ஒருமுறை "காட்டுப் பாதையும் படகுமே என்னுடைய வேலைத் தலங்கள்; அங்கே நான் அனுபவிக்கும் ஏகாந்தத்தில் கண்டவர்களை அனுமதிக்க முடியாது என்பதையும் இந்த மக்கள் அறிவதில்லை" எனக் குறை கூறினார். மேலுந் தொடர்ந்து "இவர்கள், பள்ளிக்

கூடம் செல்லும் பிள்ளைகளை அங்குப் போகாமல் தடுத்துத் தங்களுடன் ஹக்கிள்பெரிப் பழங்கள் பொறுக்க அழைத்துச் செல்வார்களா?... ...அவ்வாறு இருக்கையில் என்னுடைய பள்ளிக்கூடத்தையும், பள்ளிக்கூட நேரத்தையும், இவர்கள் ஏன் மதித்துப் பாராட்டக் கூடாது? வேண்டுமானால் என்னிடம் சில டாலர்களையாவது கேட்கலாம்; ஆனால் என்னுடைய மத்தியான நேரத்தை மட்டும் கேட்காதீர்கள்" என்றும் குறை கூறியுள்ளார். பிறருடன் இருக்கும் பொழுதுங் கூட இயற்கையைக் கூர்ந்து கவனிக்கலாமென்றாலும், அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமானால் தனிமையாகத்தான் இருக்க வேண்டும் என்றதை அவர் கண்டார். விப்-பூர்-வில்லை என்ற பறவைகளையும், கீரிப்பிள்ளை இனத்தைச் சேர்ந்த இக்னேமினேட என்ற பிராணியையும், ஆமையையும், மரத்தில் வாழும் தேரையையும் கண்டு வியக்க வேண்டுமானால் அதற்குத் தனிமை தேவைப் பட்டது. ஆனால் இயற்கையொடு நெருங்கி உறவாட, மக்களை விட்டு ஒதுங்கிச் செல்ல நேர்வதற்காக அவர் ஓரளவு வருந்தியதுமுண்டுதான்.

1848, ஜூலை மாதத்தில் எமர்ஸன், இங்கிலாந்தில் தம் சொற்பொழிவு யாத்திரையை முடித்துக்கொண்டு திரும்பியதும், தோரோ தம் குடும்பத்தாருடன் வாழத் துவங்கினார். அவர்கள் இப்பொழுது முக்கியமான தெருவில் விசாலமானதும், மஞ்சள் நிறமுடையதுமான வீட்டில் குடியேறினர். இந்த வீட்டில்தான் அவருடைய வாழ்நாளின் எஞ்சிய பகுதி முழுவதையும் கழித்தார். அவர் குடும்பத்தார் மேற்கொண்டு நடத்திய பென்சில் தொழில் மேலும் நடந்து வந்தது. அதன் வளர்ச்சிக்கு ஹென்றியும் அவர் தந்தையாரும் தம்முடைய புதியன புனையும் ஆற்றலால் மிகுதியும் உதவினர். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் பென்சில் உற்பத்தித் தொழிலை விட்டு விட்டு அதிக இலாபந் தருவதாகிய உயர் ரக கிராபைட் தூள் வியாபாரத்தை மேற்கொண்டனர். இது நாளாவட்டத்தில் மிகுதியான வளத்தைத் தந்தது. அவருடைய வாழ்க்கையிலும் ஒரு நிலையான வாலாயம் ஏற்பட்டது. காலை நேரங்களை, கிராபைட் தூள் கடை, எழுதும் அறை, நில அளவுத் தொழில் என்பவற்றிற்குப் பகிர்ந்து கொண்டார். ஏறத்தாழப் பத்து ஆண்டுகளாக நில அளவைக்குரிய சில கருவிகளை

அவர் வைந்திருந்தார். உள்ளூர்க் குடியானவர்களும் நிலக்கிழார்களும் நாளாவட்டத்தில் அவருடைய தயவை நாடத் தொடங்கியமையின், சமீப காலத்தில் அதிகப்படியான கருவிகள் பலவற்றை வாங்கிச் சேகரித்துக் கொண்டார். பல நாட்கள் தனித்தும், சில நேரங்கள் சேனிங் அல்லது எமர்ஸன் போன்ற நண்பர்களோடும், சில சமயங்களில் குடும்பத்தோடும் மாலை வேளைகளில் வெளியே சென்று வந்தார். சில மாலை நேரங்களை இத்தகைய கூட்டத்திலும் பல மாலைகளை எழுதுவதிலும் படிப்பதிலும் செலவழித்தார். ஹார்வார்டு பல்கலைக் கழக நூலகத்திலிருந்து விடாமல் நூல்கள் வாங்கி வந்தார். தத்துவம், கவிதை என்பவை போக, பண்ணை வைத்தல், நிலநூல், மானிட இயல் ஆகியவைபற்றியும் படிக்கத் தொடங்கித் தம் அறிவுத் துறையை வளர்த்துக் கொண்டார். சிவப்பு இந்தியர் பற்றிய ஒரு நூல் எழுத விரும்பினமையின் மானிட இயல் படிக்கத் தொடங்கினார்.

ஆனால், என்றாவது தாம் ஓர் எழுத்தாளராக ஆக முடியுமா என்று அவர் ஐயங் கொள்ளக் காரணம் இருந்தது. எமர்ஸனுடைய, முயற்சி இருந்துங்கூட "காங்க்கார்டில் ஒரு வாரம்" என்ற நூலுக்கு ஒரு வெளியீட்டாளரைக் காண முடியவில்லை. செலவு செய்வதில் சிக்கனமுடையவரான தோரோ இப்பொழுது ஓரளவு பணம் சேர்த்து வைத்திருந்தார். "சென்ற ஐந்தாண்டுகளாகவே என் உடல் உழைப்பு ஒன்றினாலேயே என் வாழ்க்கைச் செலவைச் சம்பாதித்து வருகிறேன்" என்று அவர் எழுதியுள்ளார். இப்பொழுதுங்கூட ஹொரேஸ் க்ரீலி மூலமாக அவர் சில சாமான்களை விற்றார். எனவே, எமர்ஸனுடைய அறிவுரையின் பேரில் "காங்க்கார்டில் ஒரு வாரம்" என்ற நூலைத் தம் சொந்தச் செலவில் வெளியிட முடிவு செய்தார். 1849 இளவேனிற் பருவத்தில் அந்நூல் வெளி வந்தது. "ந்யூயார்க் ட்ரிப்யூன்" பத்திரிகையின் ஆசிரியரான ஹொரேஸ் க்ரீலியின் வேண்டுகோட்கிணங்கி காங்க்கார்டு கிராமத்தைச் சேர்ந்த ஜ்யார்ஜ் ரிப்லே அந் நூலை விமர்சனம் செய்தார். உலகியல் கடந்தவர்களிடமும், சிறப்பாகத் தோரோவிடமும் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார் க்ரீலி. நூலில் காணப்பட்ட இயற்கை வருணனைகளை மிகவும் பாராட்டிய ரிப்லே

இயற்கை முழுவதுமே கடவுள் என்ற கொள்கையை ஒப்ப முடியவில்லை. "லண்டன் அதீனியம்" என்ற பத்திரிகையில் இந் நூலை மிகவும் பழித்துத் திறனாய்வு வெளியாயிற்று. மெஸசூஸிட்ஸ் முத் திங்கள் இதழில் அக்காலத்தில் அமெரிக்காவின் சிறந்த திறனாய்வாளர் என்று போற்றப் பட்ட ஜேம்ஸ் ரஸ்ஸல் லோவெல் என்பார் நகைச்சுவை யுடன் இந் நூலைத் திறனாய்வு செய்து ஆசிரியரின் தனித் தன்மையையும், நகைச்சுவையும் பாராட்டினார். ஆனாலும் இந்த நூல் பொதுமக்களைக் கவரவில்லை. நான்கு ஆண்டுகள் கழித்து, அச்சான ஆயிரம் பிரதிகளில் எழு நூற்று ஆறு பிரதிகள் ஆசிரியரிடமே திருப்பி அனுப்பப் பெற்றன. அவருடைய சொந்த நூலகத்திற்குக் கூட்டுச் சேர்த்ததுபோல் இவையும் அங்கே அடுக்கப் பெற்றன. அதுபற்றி அவர் "என்னுடைய நூலகத்தில் தொள்ளாயிரம் நூல்கள் உண்டு. அவற்றுள் எழுநூறுக்கு மேல் நானே எழுதியவை" என்று வேடிக்கையாகக் கூறுவதுண்டு.

———

# அத்தியாயம் 6

"சமுதாயமா? ......... பைன் மரங்களிற் காணப்படுவது போல் நிறைந்த மணம் அச்சமுதாயத்தில் காணப்படுவதில்லையே! பரந்த புல்வெளிகளில் உள்ளதுபோல் வாழ்க்கையில் ஊடுருவிப் புத்துணர்ச்சி ஊட்டக் கூடிய நன்மணம் எதுவும் சமுதாயத்தில் இல்லையே!"

தோரோ: மெஸசூஸிட்ஸின் இயற்கை வரலாறு.

தோரோவின் முதல் வெளியீடு தோல்வியுற்றதில் வியப்பு ஒன்றும் இல்லை. நூலின் தலைப்போ "காங்க்கார்ட், மெர்ரிமாக் ஆறுகளில் ஒருவாரம்" என்பதாகும். பிரயாணம், வீரச் செயல்கள் என்பவற்றை இத்தகைய தலைப்பில் எதிர்பார்த்தவர்கட்கு ஏமாற்றமே கிட்டியது. ஏனென்றால் ஒரு வாரம் என்பது பல ஆண்டுகளாக இடை இடையே ஆசிரியர் எழுதியவையும் சிந்தித்தவையுமாகும். காங்க்கார்ட்டு, மெர்ரிமாக் ஆறுகளைப் பின்னணியாகக் கொண்டு மிக நீண்ட தத்துவ விசாரணையையும் உள்ளூர் வரலாற்றையும் எழுதியுள்ளார். சில ஆண்டுகட்கு முன்னர் மார்கரெட் ஃபுல்லர் என்பவர் இலியனாய், விஸ்கான்ஸின் ஆகிய இடங்கட்குச் சென்றுவிட்டு "ஏரிகளில் கோடைக்காலம்" என்ற நூலை எழுதினார். பிரயாண நூல் என்ற பெயருக்குத் தொடர்பில்லாத பாடல்கள், பல்வேறு சிந்தனைகள் என்பவற்றை அதில் காணலாம். தோரோ நூலுக்கு இப்புத்தகம் (ஏரிகளில் கோடைக்காலம்) முன் மாதிரியாக அமைந்திருக்கலாம். தோரோவின் கட்டுரைகள் படிப்பவர்கட்கு அதிகக் கஷ்டமாகவோ, அன்றி அவர்கள் சக்திக்கு மேற்பட்டதாகவோ இருந்ததை அவர் அறிவார். "புத்தகங்கள் மகிழ்ச்சி ஊட்டுபவையாய் இருக்க வேண்டியதில்லை. ஒவ்வொரு கருத்தும் தைரியமாக வெளியிடப்பட்டிருக்க வேண்டும். சோம்பேறி படிக்க முடியாததாய், மனத் திடம் இல்லாதவனுக்குப் பொழுதுபோக்காக அமையாததாய், அப்பொழுது நிலைத்துள்ள நிறுவனங்கள் கண்டு அஞ்சுவதாய் அமைவதே நல்ல புத்தகங்கள் என்று நான் நினைக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

ஒவ்வோர் ஆற்றின் திருப்பத்தை வருணிக்கும் பொழுதும், நம்முடைய கவனத்தைத் தோரோ எதிர்பாராத வகையில் தடைப்படுத்தி விடுகிருர்; முள்ளம்பன்றி, ஓநாய் போன்ற விலங்குகளைத் துரத்திச் செல்வதைப்பற்றிக் கூடக் கூறுயல், கவிவை, யோகம், வரலாற்றுத் தத்துவம் என்பவைபற்றிப் பேசத் தொடங்கி விடுகிருர். "இந்த இடையீடுகள் ஓடையில் படகில் செல்லும் நம்மைத் தலையி லடித்து நம் எண்ண ஓட்டத்தைத் தடை செய்கின்றன. "இந்த விவாதங்களில் தோரோ புகுந்து விடுவது எவ்வாறு உளதெனில், படகிலிருந்து நண்டு ஒன்றைப் பிடிக்கக் கையை நீட்டித் தண்ணீருக்குள் மூழ்கி விடுவது போன் றுள்ளது" என்று லோவெல் எழுதியுள்ளார். அதிருஷ்ட வசமாக தோரோ உடனே நிலைமையைச் சமாளித்துக் கொள்கிருர். அவருடைய அறிவு வாதமாகிய உப்பங் கழி களை மறந்து இயற்கை வரலாறு என்ற நல்ல நீரில் புகு கிரும். அழகிய இயற்கையின் சூழலில், படகில் அமர்ந்து இனிய காட்சிகளையும், நல்ல மணத்தையும், ஓசைகளையும் அனுபவிக்கிரும்.

இரவில் தங்குவதற்காக நம்முடைய சாமான்களைப் படகிலிருந்து கூடாரத்திற்கு மாற்றிவிட்டு, நெருப்பை மூட்டி, இரவு உணவை முடித்துக் கொண்ட பிறகு அவர், நாட்டு நடப்பு இதழை(Gazette)படிக்கத் தொடங்குகிருர். நம்முடைய கூடாரம் எந்த அக்ஷ, தீர்க்க ரேகைகளில் இருக்கிறது என்பதை மட்டுமல்லாமல், அண்டத்தில் நம் நிலைமை என்ன என்பதையும் அவர் விளக்குகிருர். "இரவு நேரங்களில் ஆற்றின் ஓட்டத்தோடு சென்றுவிட்ட ஒரு முலாம் பழத்தைத் தேடிக் கொண்டு செல்கிரும்: ஒரு பெரிய முலாம் பழத்தை ஓடையின் தொடக்கத்தில் ஓடாத தண்ணீர் நிறைந்திருந்த பள்ளத்தில் குளிர்ச்சி அடைவற் காக வைத்திருந்தோம். எங்கள் கூடாரம் தயாரானவுடன் அதை எடுக்கப் போனேம். ஆனல் அப்பழம் நழுவி ஆற்றுடன் போய்விட்டது. அதைத் தேடிக் கொண்டு பட கேறிச் சென்ரும். மந்தமாகிய அந்தி வெளிச்சத்தில் நீண்ட நேரம் கூர்ந்து கவனித்த பிறகு நீண்ட தூரத்தில் நீரிடை யே அதனுடைய பசிய வடிவம் தெரிந்தது. மாலையில் மலை யிலிருந்து அடித்துக் கொண்டு வரப்பட்ட தழை, கொடி என்பவற்றின்மேல் இப்பழம் மிதந்து கடலை நோக்கிச்

சென்று கொண்டிருந்தது. அது விரைவில் குளிர்வதற்காக நாங்கள் அப்பழத்தில் இட்டிருந்த துவாரத்தின் வழியே தண்ணீர்கூட உட்புகவில்லை.''

''காங்க்கார்டில் ஒரு வாரம்'' என்ற நூல் பல ஆண்டு களாக வளர்ந்து வந்தது. ஆற்றுப் பயணம் 1839 இல் நடந்தது. வால்டனில் தங்கி இருந்த காலத்தில் பழைய நாட்குறிப்பை வைத்துக் கொஞ்சங் கொஞ்சமாக 1846 இல் எழுதப் பெற்றது. 1849 இல் அது வெளியிடப்படுகின்ற வரை ஓயாத பெயர்த்து எழுதலுக்கும் திருத்தத்துக்கும் உள்ளாயிற்று. வால்டனில் கிடைத்த சாவகாசமான ஏகாந்த வாழ்க்கையால் கிடைத்த தன்னம்பிக்கையும், மகிழ்ச்சியான மனமும் இன்ப உணர்வும் இதில் பிரதி பலிக்கின்றன. அங்கேதான் அவர் தம்மைத் தாமே அறிந்து, தம்மிடம் நம்பிக்கை கொள்ளவும் தொடங்கினார். தம் வாழ்க்கை, மக்கள் நிறுவனங்களுடன் மாறுபட்டாலும் ஆழத்தில் உண்மையுடன் ஒத்துப் போகின்றது என்பதை யும் அங்கேதான் கண்டார். ''மேகம் மூடிய நேரங்களில் ஒவ்வொரு சமயம் சூரிய ஒளி வயல்களின் மேல் வேகமாக ஓடிச் செல்வதுபோல மிக உயர்ந்த எண்ணங்கள் தம்மேல் படிந்து செல்வதை உணர்ந்தார். வால்டனில் வாழும் பொழுது இந்த நூலை எழுதுவதற்கு வேண்டிய ஓய்வைப் பெறுவதற்காக இரண்டாம் வசந்த காலத்தில் பீன்ஸ் பயிரிடுதலைக் கூடக் குறைத்துக் கொண்டார். ஆனால் அதற்குப் பதிலாக ''உண்மை, பரிவு, எளிமை, நம்பிக்கை, வஞ்சகமின்மை'' என்பவற்றை நிரம்ப விளைத்தார். அவருடைய இலக்கிய சக்தியில் உச்ச நிலையை அடைந்து தமக்கே உரிய சுதந்திர வழியையும் அப்பொழுது வகுத்துக் கொண்டார். அவர் எழுத முனைந்தால் சொற்கள் தாமாக வந்து விழுவதைக் கண்டவுடன், தாம் உண்மையில் ஓர் எழுத்தாளராகப் போவதை, பிற்காலத்தில் காணாத முறை யில் தெளிவாகக் கண்டார். வாழ்க்கையில் திருப்தி அடைந்த ஒரு மனிதனின் மனநிலைமையையும் காண்கிறோம் ''காங்க்கார்டில் ஒரு வாரம்'' என்ற நூலில். சாதாரண மனி தன் இந்த உலகின் அழகில் ஈடுபடுவதைக் காட்டிலும் அதிகமாக ஈடுபட்ட ஒரு மேதையைத்தான் அந்த நூலில் காண்கிறோம். அவரை மிகுதியும் கவர்ந்த உள்ளூர் ஓடை யை வருணிக்கும்போது வருணனைத் திறன் உச்ச நிலையை

அடைகிறது : "கொஞ்சங் கொஞ்சமாகக் கிராமத்தின் சல சலப்பு அடங்குகிறது. கனவுலகில் சஞ்சரிப்பது போன்ற தோற்றம்-சென்ற காலத்திலிருந்து எதிர்காலத்துக்குச் சாலை யில் விழித்தெழுவதைப் போல் செல்கிறோம். ஏதும் ஓசைப் படாமல் படகில் அமர்ந்து ஓடை செல்லும் வழியே செல் கிறோம். ஏதோ ஒரு நேரத்தில் பீக்கரில் என்ற மீனே அல்லது ப்ரீம் என்ற மீனோ குறுக்கே வருகிறது. கொக்கின் இனத்தைச் சேர்ந்த பிட்டர்ன் என்ற சிறு பறவை மிகச் சோம்பலுடன் பறந்து கரையை அடைகிறது. அல்லது பெரிய பிட்டர்ன் பறவை புல்லில் அமர்திருந்தது போக, நம் வரவால் மிரண்டு தன் கால்களைத் தூக்கிப் பறந்து சென்று பாதுகாவலான பிறிதோர் இடத்தில் அமரச் செல் கிறது. நம்முடைய படகு செல்வதால் ஏற்படும் சிறு அலை கள் காரணமாக, மரங்களின் பிம்பம் முறிந்து விடுவதுடன் ஆமைகளும் நீருக்குள் புகுந்து விடுகின்றன. கரைகள் அழகு மிகுந்திருந்த நிலை மாறிவிட்டது ; ஒளி பொருந்திய மலர்கள் மெள்ள வாடிவிட்ட நிலை, அந்த ஆண்டிற்குக் கிழப்பருவம் வந்துவிட்டதை நினைவூட்டுகிறது. பருவம் கடந்து விட்டமையின் ஆற்று மலர்களின் அரசி போன்ற நீர் அல்லியை நாங்கள் காண முடியவில்லை. ஒருவேளை அவருடைய நீர்ப்பயணம் மிகவும் காலதாமதப்பட்டு நடை பெற்றது போலும். நம்முடைய காங்கார்டு நீரில் இந்த இனம் மிகுதியாக உள்ளன. ஒரு கோடை நாளில் விடிவ தற்கு முன்னர் நான் இந்த ஓடையில் சென்றுள்ளேன். அப் பொழுது இரு மருங்கிலும் காடுபோல் மண்டிக் கிடந்த அல்லி மலர்கள் உறங்கிக் கிடந்தன. கரை முகட்டில் கதிர வன் வந்து அவனுடைய கதிர்கள் பட்ட மாத்திரத்தில் இம் மலர்க்காடு கண் விழித்ததைப்போல் மலர்கள் விரிகின்றன. கொடி பறக்க விட்டதுபோல் விரிகின்ற இம் மலர்கள், கதிர வன் ஒளியிடம் மிகவும் உறவு கொண்டுள்ளன."

என்றாலும் நூலில் பல இடங்களில் காணப்படும் இந்த நடை அடிக்கடி முறிந்து, வால்டனில் காணப்படும் பொறுமை இழந்த கடிய நடை வந்து விடுகிறது. தம் தனித்தன்மையும், எல்லை உரிமையும் வாலாயமாக இருந்து வரும் சமய, நீதிச் சட்டங்களால் பாதிக்கப்பட்டன என்று தோரோ கருதும்பொழுது வால்டனில் காணப்பட்ட "எல்லா முரட்டுத்தனத்தையும் விரும்பும் இயல்பு" அவ

ரிடம் வந்து விடுகிறது. அதைத் தடுக்க முடியாது. ஹப்ருக்கனின் கடவுளை வணங்கியதுபோகத் தோரோ "பேன்" என்ற புல்வெளியின் கடவுளை வழிபடத் தொடங்கினுர். அந்தக் கடவுள் வால்டன் காட்டில் "தம் தூய்மையுடன், உருண்ட முகத்துடனும், நீண்ட தாடியுடனும், கட்டான உடம்புடனும் தம் குழலுடனும், கவட்டைக் கோலுடனும்" ஆட்சி புரிவதாகக் கருதினுர். "பேன்" தெய்வத்தை வழிபடுவதுடன் இந்தியாவின் தத்துவ சாத்திரங்கட்கும் அதிக மதிப்புக் கொடுத்தார். மேனுட்டினர் காண முடியாத ஆழமும் அகலமும் இந்தியத் தத்துவ சாத்திரங்களில் இருப்பதாகக் கருதினுர். "அண்டங்களின் ஆக்கம் பற்றிய தத்துவத்தைக் கூறும் பகவத் கீதையின் எதிரே நம்முடைய ஷேக்ஸ்பியர்கூடச் சில சமயங்களில் மிகவும் இளமையுடையவராய், அனுபவ மில்லாதவராய் வெறும் உலகியல் மட்டும் உடையவராய்க் காணப்படுகிருர்" என்ருர் அவர். மரபு, நிறுவப்பட்ட அதிகாரம், முறைமை என்பவற்றை இவ்வாறு உதறிவிட்டதன் மூலம் அவர் எமர்ஸனைத் தொடர்பவராயினுர். எமர்ஸனும் "நம்முடைய மூதாதையர்களின் இறந்துபட்ட பழக்க வழக்கங்களை மட்டும்" வணங்குகிற மாதா கோயில் தமக்கு வேண்டாம் என ஒதுக்கி விட்டார். மேலும் "உயிரற்ற, ஓய்ந்து போன கிறிஸ்தவ சமயத்தைக் காட்டிலும் ஸாக்ரடிஸ் முறையில் ஏற்படும் பல தெய்வ வழிபாடு கூடச் சிறந்தது" என நம்பினுர். "மிடில்செக்ஸில் உள்ள சமய போதகரைப் பார்த்து ஒரு ஞாயிற்றுக் கிழமை அவர் பேசும் மேடையிலிருந்து நான் பேச வேண்டும் என்று நான் கேட்டால், அவர் வழிபடுவதைப் போல நான் வழிபடுவ தில்லையாதலாலும், நான் தீக்ஷை பெறவில்லை ஆதலாலும், அவர் எனக்கு இடம் தர மாட்டார். இப்பரந்த உலகில் இச் சடங்குகளின் பொருள்தான் என்ன?" என்று தோரோ ஒருமுறை எழுதினுர்.

புரட்சி மனப்பான்மையில் சுடர் விடும் இதே மன நிலையுடன்தான், 1848 இன் முற்பகுதியில், எமர்ஸனின் வீட்டில், தம் அறையில் சிவில் ஒத்துழையாமை பற்றிய தம் கட்டுரையைத் தோரோ எழுதினுர். அந்தக் கட்டுரை மகாத்மா காந்தியை ஊக்குவித்ததாகவின் இந்தியாவிலும் பிற இடங்களிலும் தோன்றிய சத்தியாக்கிரக இயக்கத்

தின் மூல காரணங்களுள் இக்கட்டுரையும் ஒன்று என்று கூறலாம். இக்கட்டுரை "அரசாங்கத்தில் தனி மனிதனின் உரிமையும் கடமையும்" என்ற பெயருடன் காங்க்கார்டு சொற்பொழிவு மண்டபத்தில் தோரோவால் படிக்கப் பெற்றது. "புதுமை விரும்பும்" எலிஸபெத் பீபாடி என்பவர் பாஸ்டனில் 1849இல் உலகியல் கடந்தோர் கட்டுரைத் தொகுப்பில் "முருகியல் கட்டுரைகள்" என்ற பெயரில் இதனை வெளியிட்டார். இப்பொழுது அதே கட்டுரை உலகம் முழுவதிலும் சிவில் ஒத்துழையாமை என்ற பெயரில் வழங்குவதோடு, முரட்டுத்தனத்தை சாத்விகத்தால் எதிர்த்துப் போராட வேண்டும் என்று நம்பும் அனைவரும் கற்றும், மேற்கோளாக எடுத்துக் காட்டியும் பயன்படுத்தும் நிலையில் உள்ளது.

வால்டனில், கோடைக் காலத்தில், ஒரு நாள் மாலை தம் காலணியைப் பழுது பார்க்கக் குட்டையிலிருந்து காங்க்கார்டு கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தார் தோரோ. அப்பொழுது அவர் செலுத்த வேண்டிய தலைவரியைக் கட்டவில்லை என்பதற்காக அவரைப் பிடித்துக் கிராமச் சிறையில் அடைத்தனர். இரவு நேரத்தை சிறையின் ஓர் அறையில் அவர் கழிக்க நேரிட்டது. மறுநாட் காலை உணவிற்குப் பிறகு அவர் விடுதலை செய்யப்பெற்றார். அவரைச் சேர்ந்தவர்களோ அன்றி அவர் குடும்பத்தாரோ அவர் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தி விட்டனர்; இது அவருக்குப் பிடிக்கவே இல்லை; மிகச் சாதாரணமான இந்த நிகழ்ச்சி தோரோவைச் சிந்திக்குமாறு தூண்டிற்று. மிக அற்பமான நிகழ்ச்சிகள்பற்றிக் கூட ஆழ்ந்து சிந்தித்து, அதனடியிற் காணப்பெறும் கொள்கைகளை ஆராயும் மனத்தைப் படைத்திருந்தார் அவர். தனித்தே வாழ்ந்தமையின் தமக்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பை நீண்ட நாட்களாக ஆய்ந்தார். ஆனால், அந்தச் சமுதாயம் அவரை நேரடியாகவே தாக்க, அதன் விளைவாகச் சிறையின் அறை ஒன்றில் ஓர் இரவைக் கழிக்க நேர்ந்த பிறகு தான், தனிப்பட்ட மனிதன் மேல் அரசாங்கம் எத்தகைய அதிகாரம் செலுத்த முடியும் என்பதை நேரிடையாக உணர்ந்தார். இறுதியாக இதுபற்றிய தம் கருத்துக்களை வரிசைப்படுத்தித் தெளிவாக அவர் உணர நேரிட்டது.

சமுதாய நலங்களாகிய சாலை போடுதல், கல்வி ஆகிய வற்றிற்கு வரி போடப்படுவதை அவர் ஏற்றுக் கொண்டார். அடக்கு முறை, சாம்ராஜ்யப் பெருக்கம் ஆகிய வற்றை விரும்பி அதற்காகத் தலைவரி போடுவதை அவரும் அவருடைய பரந்த மனப்பான்மையுள்ள நண்பர்களும் வெறுத்தனர். அடிமைகள் வைத்திருக்கும் பழக்கம் தெற்குப் பகுதிகளில் மட்டுமே இருந்தது எனினும், மெஸசூஸிட்ஸ் உள்ளிட்ட வட பகுதிகளிலும் தப்பி ஓடி விடுபவர் சட்டம் அமலிலிருந்து வந்தது. இச்சட்டத்தின்படி தப்பி ஓடி வருகிற அடிமைகட்குப் புகலிடம் தருவதும், அவர்கள் வடக்கேயும் கானடாவிற்கும் செல்வதற்கு உதவி செய்வதும் கொடிய குற்றமாகக் கருதப் பெற்று அதற்குக் கடுந் தண்டனை விதிக்கப் பெற்றது. இச் சட்டப்படி ஓடி வரும் அடிமைகளைப் பிடித்து தெற்கில் உள்ள அவர்களின் யசமானர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும். ஆனால் வட பகுதிகளில் அடிமை ஒழிப்பு இயக்கம் வலுப் பெற்று வளர்ந்து வந்தது. தோரோ வீட்டாரும் இன்னும் அவர்கள் போன்ற பலரும் பல்வேறு சீர்திருத்தங்களைப் பேசியதுடன் தாங்களும் கையாண்டு வந்தனர். தலைவரி செலுத்த மறுத்து ஆல்காட் 1843 இல் சிறை சென்று வந்தார். அவருடைய செய்கையால் உந்தப்பெற்றுத் தோரோ உள்ளிட்ட பலர் அவ்வாறு செய்தனர். அடிமைத் தனத்தை வெறுத்தது போலவே, நாடு பிடிக்கும் பேராசையையும் இந்தப் புரட்சியாளர்கள் வெறுத்தனர். அமெரிக்கா, மெக்ஸிக்கோவுடன் போர் தொடுத்தது நாடு பிடிக்கும் ஆசைபற்றியே யாகும். சிவில் ஒத்துழையாமை என்ற நூலில் அடிமை வியாபாரம், படை, போர், அரசாங்கம், அரசியல்வாதிகள், சட்ட மன்ற உறுப்பினர், ஆகிய பல வற்றைப்பற்றித் தம் மறுப்பைத் தோரோ அறிவித்துள்ளார். நியாயமற்ற அரசாங்கத்துடன் தனிப்பட்ட மனிதனின் மனச்சான்று செய்யும் போராட்டம் இது ; எல்லா அரசாங்கங்களும் நேர்மையற்றே இருந்தன என்றும் அவர் நம்பினார்.

‘‘சட்டத்திற்கு எல்லைமீறி மரியாதை கொடுப்பதால் தான் போர் வீரர்கள் கர்னல், காப்டன், கார்ப்போரல், தனி வீரர்கள், துப்பாக்கி மருந்து எடுத்துச் செல்பவர் ஆகியோர் தம்முடைய விருப்பத்துக்கு எதிராகவும், அணி

வகுத்தும் காடும் மலையும் கடந்து செல்வதைப் பார்க்கிறோம் அவர்களுடைய பகுத்தறிவும், மனச்சான்றுங்கூட அவ்வாறு அவர்கள் செல்வதை விரும்பவில்லை. அ வ ர் க ள் யார்? மனிதர்களா? அ ல் ல து நகரக்கூடிய கோட்டைகளா? பண்பாடில்லாதவனும், அதிகாரம் வகிப்பவனும் ஆகிய ஒருவன் ஆணைக்குட்பட்டு இத்துணைப் பேரும் உள்ள னர்.........'' என்று அவர் எழுதுகிறார். அடுத்தபடியாக, "அரசாங்கமும் உன் மனச்சான்றும் எந்த நேரத்தில் மோத நேரிடும் என் ப தை அறிய முடியாதாகையால் உனக்குள்ளாகவே நீ வாழ்ந்தது உன்னையே நம்பி இருந்து, உடனே புறப்படுவதற்கு எப்பொழுதும் தயாராக இரு'' என்று அறவுரை கூறினார். தொட்டாற் சுருங்கிச் செடி எவ்வாறு மனிதருடைய விரல்கள் பட்டவுடன் உடனே சுருங்கி விடுகின்றதோ, அதேபோல நேர்மையற்ற சட்டங்களைக் கண்ட உடனே தோரோ மனம் மாறுப்பட் டார். "பிறரால் கட்டுப்படுத்தப்பட நான் பிறக்கவில்லை ......என் விருப்பம் போலவே நான் மூச்சுவிடுவேன். ஒரு செடி தன் விருப்பம் போல் வளர முடியவில்லையானல் இறந்துபடும்; மனிதனும் அவ்வாறே'' – என்றார் அவர். சிவில் ஒத்துழையாமை என்ற நூலின் வலிமையான சாரம் முழுவதும் சிலவாய இச் சொற்களில் அடங்கியுள்ளன. விவாதம் நேரிடுகையில் தோரோவின் உயர்ந்த வாதத் திறமையைக் காணலாம். அறிவற்ற மனிதர்களால் ஆளப் படும்பொழுது மக்கள் எவ்வாறு ஆடுகள் போல் அடங்கிச் செல்கிறார்கள் என்பதை உபதேசம் செய்தல், இடியும் மின்னலும் போல முழக்குதல், ஆகிய எதுவுமின்றி இடித் துரைக்கின்றார்.

1849 மே மாதத்தில் "காங்க்கார்டில் ஒரு வாரம்'' என்ற நூலும், சிவில் ஒத்துழையாமை என்ற நூலும் வெளியாயின. அவர் ஹார்வார்டில் இருப்பதற்குரிய செலவைச் செய்த வரும், அவர்மாட்டு மிகுந்த அன்பு பூண்டவரும் ஆகிய அவருடைய மூத்த சோதரியார், இதே மாதத்தில், தம் 36 வது வயதில், என்புருக்கி நோயால் காலமானார். இதே ஆண்டில்தான் மெஸசூஸிட்ஸில் உள்ள வொர்செஸ்டரைச் சேர்ந்த ஹாரிஸன் ப்ளேக் என்பவருடன் தோரோவுக்கு நட்புத் தொடங்கியது. அவருடன் தம் இறுதிக் காலம் வரை மிக அதிகமான அளவில் தோரோ கடிதப் போக்கு

வரத்துச் செய்தார். கேப் காட் என்ற காட்டுப் பிரதேசத்திற்கு எல்லரி சேனிங்குடன் முதன் முறையாகச் சென்று வந்தார். அப் பிரதேசத்தில் மிகவும் ஈடுபட்ட தோரோ ஓர் எழுத்தாளர் என்ற முறையில் அப் பகுதியைக் கூர்ந்து கவனித்து வந்தார். அவர் வெளியிட விரும்பிய இரண்டாவது நூலாகிய "வால்டன்" என்ற நூலைச் செப்பஞ் செய்வதில் அதிக நேரஞ் செலவிட்டார். "காங்க்கார்டில் ஒரு வாரம்" என்ற நூலை அடுத்து இந்நூல் வெளிவரும் என வெளியீட்டாளர் முன்னரே அறிவித்திருந்தனர்.

ஆனால், இந்த நூலை வெளியிடும் அவருடைய எண்ணம், சிதறிப் போக நேரிட்டது. அடுத்த ஐந்தாண்டுகள் வரை அந்த வெளியீட்டாளர்கள் (அவ்வாறு அவர்களைக் குறிப்பிடுவதே தவறு என அவர் கூறியுள்ளார்) "வால்டன்" என்ற நூலை வெளியிடாமல் நொண்டிச் சமாதானம் கூறி இறுதியில் வெளியிடாமலேயே விட்டு விட்டனர். வால்டனிலிருந்து மீண்டவுடன் அவர் பெற்றிருந்த மனக் கிளர்ச்சியை இந்த ஏமாற்றம் கொஞ்சங்கொஞ்சமாக உண்டு விட்டது; இறுதியில் ஒரு நிராசை அவரிடம் நிறைந்து விட்டது. 1851 வாக்கில் அவருடைய நாட்குறிப்பில் "இப்பொழுது எனக்கு 34 ஆண்டு ஆகிவிட்டது; என்ருலும் என் வாழ்க்கையைச் சிறிதும் பயன்படுத்தவில்லை" என்று எழுதியுள்ளார். தம் வல்லமையையே ஐயங்கொள்ளும் இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர் தம்மையே அற்பமாக மதித்தார். தம் இளமைக் காலத்தில் எல்லையற்ற மகிழ்ச்சியுடன் வாழ்ந்த நிலைமையை இப்பொழுது நினைந்து பார்க்கத் தொடங்கினுர். அவருடைய உடல்நிலையும் சரியாக இல்லை; அடிக்கடி மார்ச்சளி பற்றிக் கொண்டது. மகிழ்ச்சிக்கும், மன உளைச்சலுக்கும் இடையே ஊசலாடினுர். கற்பனை மிகுந்துள்ள இவர் போன்ருர் பலரும் இதே தொல்லைக்கு ஆளாயினர்.

1852 வாக்கில் மன உளைச்சல், அகமுக ஆராய்ச்சி ஆசியவற்றிலிருந்து ஒருவாறு விடுபட்டார். நண்பர்களிடம் நெருங்கி இருப்பதாக உணர்ந்து அவர்கட்கு நிரம்ப எழுதி வந்தார்; காங்க்கார்டில் பழைய மகிழ்ச்சியைப் பெற்ருர். "நான் மாலை நேரங்களில் உலாவச் செல்வதற்குப் பல மைல் நீளம் நிழலாக உள்ள சாலை இருக்கிறது. எத்தகைய

சீமானும் இத்தகைய ஓர் இடம் தம்மிடம் இருப்பதாகப் பெருமையடித்துக் கொள்ள முடியாது. இந்தப் பகுதியில் விலங்குகள் தம் விருப்பம்போல் ஓடியாடித் திரிகின்றன. காடும், தோன்றிய காலத்தில் இருப்பதுபோலவே உளது. இங்கு நிலமும் நீரும் கலந்துள்ளன. எல்லாவற்றையும்விட இந்தப் பகுதிகளில் எவ்வளவு தூரம் சென்றாலும் மற்றொரு மனிதனைச் சந்திக்கவே முடியாது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பொழுது அவருக்கு முப்பத்தைந்து வயது நடைபெற்றது. பத்துப் பதினைந்து ஆண்டுகட்கு முன்னர் இயற்கையைக் கண்ட முறையிலிருந்து மாறுபட்டு விஞ்ஞான ரீதியில் அதைக்காண முற்பட்டார். இப்பொழுது அவர் காங்க்கார்டில் உள்ள தாவர இயலார் என்று தம்மைக் கூறிக் கொண்டார். என்றாலும் இப்பொழுது தோரோ மனத்தளவில் ஒரு கவிஞராகவும், மெய்ப்பொருள் வாதியாகவுமே இருந்தார். இயற்கையின் அனைத்துலகச் சட்டத்தை அவர் தம் மன ஒளியால் கண்டதுதான் அவரது வாழ்க்கையின் மிக முக்கியமான பகுதியாகும். இன்னுங்கூட ஒரு பொருளை விஞ்ஞான ரீதியில் அல்லாமல் அதனுடைய அழகுக்காகவே வருணிக்கும் இயல்பு அவரிடம் இருந்தது. நியூ இங்கிலாந்தில் காணப்பெற்ற காட்சிகள், ஒளிகள், மணம், ஆகியவை அவரிடமிருந்த ஆக்க சக்தியைத் தூண்டி விட்டன. அவருடைய பொறிகட்கு எந்தவிதமான அழகு தென்பட்டாலும், அதனால் மனம் நிரம்பி விடுகிறது என்பதை 1852 ஜூலை மாதத்தில் அவர் "இந்த பெர்ரிக்களின் மணமோ, பசுக்களின் கூவலோ, என்னை அணுகும் பொழுது இரவு நேரங்களில் மலைச் சாரலில் பனி படர்ந்த காற்றில் மணத்தை நிரப்பும்பொழுது ஏற்படும் அழியாத இன்பத்தை அடைகிறேன்'' என்று கூறியுள்ளார். ஓடையில் வெறுங் காலோடு நடந்து சென்ற அனுபவத்தைப் பேசவந்த அவர் "இப்பொழுது உங்களுடைய பாதங்கள் மென்மையான மணலில் பதிந்து விரிகின்றன; சில நேரங்களில் பரற்கற்களிற் பட்டுக் கூசுகின்றன; சில நேரங்களில் நல்ல சகதியில் சிக்குகின்றன...... இவ்வாறு செல்லும்பொழுது' நூற்றுக்கணக்கான ப்ரீம் மீன்களும் பர்ச் மீன்களும் ஓட்டமெடுக்கின்றன; வெயிலுக்கு அஞ்சி நிழலில் அமர்ந்திருந்த பிக்கரம் பறக்கிறது. சில நேரங்களில்

அமைதியாகப் படுத்திருந்த ஆமை மெள்ள ஊர்ந்து செல்கிறது. நீர் குறைந்துள்ள கரைப் பகுதிகளில் நீர் ஊற்றுக்கள் நீரைக் கொப்பளிப்பதை உங்களுடைய கால்கள் உணர்கின்றன. திடீரென்று நீரில் தோன்றும் குளிர்ச்சியே ஊற்று நீர் அவ்விடத்தில் ஆற்றில் பாய்கிறது என்பதை அறிவிக்கிறது. உங்கட்கு நீர் வேட்கை ஏற்பட்டால் அந்த இடத்தில் மணலில் கையால் சிறிது தோண்டிச் சிறிது நேரங் கழித்து வந்தால் தெளிந்த நீரை உண்டு களையாற முடியும்'' என்று எழுதியுள்ளார்.

தமக்குள்ளேயே பல போராட்டங்களும், மன உளைச்சல்களும் ஏற்படுவதை அவர் நன்கு அறிந்திருப்பினும் பல நாட்களை இன்பத்துடனேயே கழித்தார். மாலை நேரங்களைச் சமுதாயத்திற்கு அவர் விற்றுவிடவில்லை; விற்கப் போவதுமில்லை. வாழ்க்கையில் ஒரு பெரும் பகுதியை, இயற்கையை அமைதியாகக் கூர்ந்து நோக்குவதற்கு என்றே அவர் ஒதுக்கினுர். அன்ருடம் எடுத்த குறிப்புக்களை விரிவாக்கிச் சொற்பொழிவாக உருக் கொடுத்து காங்க்கார்டிலும், க்ளின்டன், வொர்செஸ்டர், பெட்ஃபோர்டு, லிங்கன், ப்ளிமத் ஆகிய ஊர்களிலுள்ள சொற்பொழிவு மண்டபங்களிலும் சொற்பொழிவாற்றினுர். இச் சொற்பொழிவுகளிற் பெரும்பாலானவை ஓய்வுநாட் சுற்றுலாக்களைப் பற்றியவையாகும். அவருடைய இருபத்தைந்தாவது ஆண்டு முதல் முப்பதாவது ஆண்டுக்குள்ளாகப் பல்வேறு முறைகள் ஆராய்ச்சிப் பயணம் சென்று வந்துள்ளார். இப் பயணங்களில் காங்க்கார்டின் மேற்கேயுள்ள குன்றுகள், வாசூஸெட், ஹூஸேக்ஸ், கேட்ஸ்கில்ஸ், கடாதின் மலைப் பகுதிக் காடுகள், கேப் காட், கனடா ஆகிய பகுதிகட்குச் சென்றுள்ளார். அந்தச் சொற்பொழிவுகளிலிருந்து திரட்டப் பட்ட பலகட்டுரைகள், ''க்ராஹம்'', ''பட்னும்'' மாத இதழ், ''தி யூனியன்'' ஆகிய இதழ்களில் அச்சிடப் பெற்றன. பிரயாண நூல்கள் எழுதுபவர் என்றும், இலக்கியம், வாழ்க்கை என்பனவைபற்றிப் பல கருத்துக்களை உடையவரென்றும் அவரைப்பற்றிக் கூறத் தலைப்பட்டனர். விஞ்ஞானத் துறையிலுள்ள ஒரு சிறு கூட்டத்தார் அவரை ஓர் இயற்கை வாதி என மதிக்கத் தொடங்கினர். ஐரோப்பாவிலிருந்து, அமெரிக்காவில் உள்ள ஹார்வார்டுக்கு வந்து, அமெரிக்க வன விலங்குகளைப் பாகுபாடு செய்ய முற்பட்ட லூயி

அகாஸி என்பவருடைய நட்பு, வால்டனில், தோரோவுக்குக் கிடைத்தது. அகாஸி ஒரு முறை "வீட்டிற்குள் இருக்கும்பொழுது இயற்கைபற்றிப் படிப்பவர்கள், வீட்டை விட்டு வெளியே வந்ததும் அந்த இயற்கையைக் காண முடிவதில்லை" என்று கூறியுள்ளார் எனினும், தோரோவின் தனி வன்மையைக் கண்டு அவரிடம் பெரு மதிப்புக் கொண்டிருந்ததோடு மீன்கள், ஆமைகள் ஆகியவற்றின் மாதிரிகளைத் தோரோவிடமிருந்து பெற்றுக் கொண்டார். 1850 இல் பாஸ்டன் நகர இயற்கை வரலாற்றுக் குழுவிற்குத் தோரோ தேர்ந்தெடுக்கப்பட்டார். மூன்றுண்டுகள் கழித்து விஞ்ஞான வளர்ச்சிக்கான அமெரிக்கக் கழகத்தின் உறுப்பினராகவும் ஆனுர்.

———

# அத்தியாயம் 7

"மலர்கள் மொக்கு விரியும் நேரத்தில் அவற்றைக் காண்பதைக் காட்டிலும் உயர்ந்த வேலை வேறு இன்மையின், இரண்டு ஆண்டுகளை, மலர்களின் இடையிலேயே கழித்தேன்."

—தோரோவின் நாட்குறிப்பு.

டெகூரோடைப் என்று கூறப்படும் பழங்கால நிழற்பட முறையில் 1856 இல் எடுக்கப்பட்ட தோரோவின் படந்தான், அவர் நன்றாக வாழ்ந்த காலத்தில் இருந்த வடிவைக் காட்டுகிறது. 1855 இல் நீண்டகால நோய் காரணமாக அவருடைய உருவமே மாறிவிட்டது. ஒரு கோணத்திலிருந்து பார்ப்பதைக் காட்டிலும், நேர்முகமாக அவரைப் பார்க்கும்பொழுதுதான் அவருடைய வடிவழகை அறிய முடிகிறதென நண்பர்கள் கண்டனர்; நேராக அவர் பார்க்கும்பொழுது, அடர்ந்த அவர் புருவங்களின் கீழுள்ள சாம்பல் நீல நிறமுடைய கண்கள், கூர்மையான பார்வையைச் செலுத்தின. முகத்தை ஒரு பக்கமாகச் சாய்த்துப் பார்க்கும்பொழுது, அவருடைய நீண்ட மூக்கு அதிக நீளமாகவும், தாடை வலுவற்றதாகவும் தோன்றின. அவரைப் பற்றி எழுதப் பெற்றுள்ள செய்திகள் பெரிதும் தம்முள் மாறுபடுகின்றன; சிலருக்கு அவர் அழகே இல்லாதவராகவும், பலருக்கு, முகத்தில் காணப்பெற்ற அமைதி, சிந்தனை, உறுதி என்பவற்றால் ஓரளவு அழகுடையவராகவும் காணப்பெற்றார். அவர் நடுத்தர உயரத்திற்குக் குறைந்தவர். 34 வது வயதில் அவருடைய எடை 127 ராத்தல்தான். வீட்டின் வெளியே சென்று பணியில் ஈடுபடுவதற்குரிய உடல் வசதி இன்றேனும், அவர் பணிபுரியும் நேரத்தில் அவரைக் கண்டவர்கள் கவரப்பட்டனர். இயற்கை ஆராய்ச்சியின்போது, வீசி நடந்தும், மார்பை முன் தள்ளியும், கைகளை மடக்கிக்கொண்டும் வேலையில் ஈடுபட்டமையின் அந்த நேரத்தில் அவரைக் கண்டவர்கள், அவருடைய வன்மையை அதிகமாகவே மதித்தனர். எனினும் அவருடைய உடல்நிலை, என்றுமே வலிமையுடையதாக இருக்கவில்லை.

தோரோவைப்பற்றி எல்லரி சேனிங் எழுதியதும், அவருடைய நண்பர் ஃப். பி.ஸேன்பர்ன் ஒப்புக் கொண்டது மான ஒரு விவரக் குறிப்பைக் காட்டிலும் சிறந்தது வேறொன்றும் இருக்க முடியாது: "தோரோவின் உறுப்புக்கள் குறிப்பிடிக்கூடியவை; அவருடைய மூக்கு எடுப்பாக, ரோமர்களுடையது போலவும் சீசரின் படத்திற் காணப்படுவதுபோலவும் இருந்தது....நெற்றி மிகவும் ஆழ்ந்த சக்தியை வெளிக் காட்டுவதாய் இருந்தது. தடித்த உதடுகள், கருத்துச் செறிவுடன், கொண்டதை முடிக்கும் வகையில் மேனோக்கி வளைந்திருந்தன......ஒரு வினாடி கூட வீணாக்க முடியாதவர் போன்று அவருடைய வடிவம் முழுவதும் சுரு சுருப்புடையதாய்க் காணப் பெற்றது......" அநேகமாக அவருடைய வரலாற்றை எழுதிய ஆங்கிலேயரான ஹென்றி ஸால்ட் அவர்பற்றிச் சுருக்கிக் கூறியதே முற்றிலும் பொருந்தும்போலும். அதிகத் தூரம் நடத்தல், பனியில் சறுக்கல், மரம் ஏறுதல், மரம் வெட்டுதல், மலை ஏறுதல், ஆழ்ந்த பனிக்கட்டியின் மேல் நடத்தல் ஆகிய காரியங்களைச் செய்ய "மூல காரணமாயிருந்தது, அவருடைய வணங்காத மனத் திடமே தவிர, உடம்பின் தெம்பு அன்று. அவர், ஒரு குறிக்கோள்வாதியாக இருந்தமையின், தம் மனம் செல்லும் வேகத்துடன் உடலும் ஒத்துழைக்க வேண்டுமென,பிடிவாதப்படுத்துபவராக இருந்தார்." என்று எழுதியுள்ளார். இக் கூற்றுக்குத் துணையாக டாக்டர் இ. டபிள்யூ. எமர்ஸனுடைய "பிறப்பிலேயே மெலிந்த உடம்பு உடைய இவரைக் காட்டிலும் தொய்ந்த தோள்களையும் சுருங்கிய மார்பையும் உடைய ஒருவரைக் கண்டதில்லை. என்றாலும் உடலால் செய்யப்படும் அனைத்தையும் அவர் செய்தார்" என்ற தோரோவைப் பற்றிய சொற்களை மேற்கோளாக எடுத்துக் கூறுகிறார் சால்டர்.

தோரோவின் நூல்களைப் படித்த பலரும், அவரை நேரிற் கண்டபொழுது, வலிமை பொருந்திய காட்டில் வாழும் மனிதனைப் போல் அவர் இல்லாதது கண்டு பெரிதும் ஏமாற்ற முற்றனர். தோரோவின் பிற்கால வாழ்க்கையில் கிடைத்த நண்பராகவும், ஆன்மிக உறவுடையவராகவும் இருந்த டேனியல் ரிக்கெட்ஸன், தோரோ தம் இல்லத்துக்கு முதன் முறை வந்ததைப் பற்றிக் குறித்துள்ளார்: "தோரோ என்னை நெருங்கி வந்து, 'நீங்கள் என்னை அறியமாட்டீர்கள்'

என்ருர். உடனே என்னுடன் கடிதப் போக்குவரத்துச் செய்யும் மனிதர் இவரே என்பதும், வலுவான உடலமைப் புடைய ஒருவராக இவர் இருக்க வேண்டும் என்று நான் நினைத்திருந்ததுபோக, மெலியவராகவும், தாழ்ந்த நிலையி லுள்ளவர் போலவும் இவர் இருக்கிருர் என்பதும், பளீரென என் மனத்தில் உதயமாயிற்று. அன்று உணவு கொள்ளும் பொழுதும், மாலையிலும், அவர் பேசிய பேச்சுக்களைக் கேட்டு கொண்டிருந்தபொழுது, அவரது வடிவத்தால் ஏற்பட்ட ஏமாற்றம் மறைந்து போயிற்று. அவருடன் பழகிய அத் தனை ஆண்டுகளிலும், அவருடைய வடிவத்திற்கும் மனத் திடத்திற்கும், சிறந்த உரையாடலுக்கும், நிறைந்த கல்விக் கும் இடையே எவ்விதப் போராட்டமும் என் மனத்தில் நேர்ந்ததாக எனக்கு நினைவில்லை.''

இந்த விவரப் படத்தை முடிப்பதற்குமுன் தோரோ "தம் முடைய இனம், வகை,'' பற்றிக் கூறியுள்ளதைக் கூறி முடிக் கலாம். "கிழக்கே திரும்புவதைக் காட்டிலும் மேற்கே அதி கம் திரும்பிச் செல்கிறவர் ; வீட்டினுள் நுழையும்பொழுது இருந்ததைக் காட்டிலும் அதிக கௌரவத்துடன் வீட்டை விட்டு வெளிப்படுபவர், குளிர் காலத்தையும் கோடைகாலத் தையும் விரும்புபவர், காட்டு வயலையும், இருளையும் ஒளியை யும் ஒரு சேர விரும்புபவர். கூட்டத்தைவிடத் தனிமையை விரும்புபவர். ஊர்தோறும் செல்வதை விரும்பாவிடினும், ஒரே இடத்தில் இருப்பதையும் விரும்பாதவர், எந்தப் பருவத்திலும், பகலிலும் இரவிலும், மணியடித்து எழுப்பப் படாமல், காங்க்கார்டில் உள்ள காடுகளில் நிலை பெற்றுள்ள பைன் மரங்களின் ஓசையாலேயே விழித்து எழுபவர்.''

ஓர் இரவு சொற்பொழிவு மண்டபத்தில் பேசிவிட்டு வழக்கமான மன உளைச்சலுடன் வீடு திரும்பினுர் தோரோ. ஒவ்வொரு சொற்பொழிவுக்குப் பின்னரும் இந்த நிலையில் தான் அவர் மீள்வது வழக்கம். எதிர்கால மக்களின் அதிர்ஷ்டவசமாக, அவர், தம்முடைய மன நிலை அனைத்தை யும் வெளியிடும் ஒரு நண்பனைப் பெற்றிருந்தார். அதுவே அவருடைய நாட்குறிப்பு. அந்த நாட்குறிப்பில், அவர், தம்முடைய காமாலைக் கண்ணுல் கண்ட கருத்துக்களை யெல்லாம் வெளியிட்டு, அதனுல் திருப்தியடைவதுண்டு.

இம்முறை அவர் கீழ்வருமாறு எழுதினார் : "இந்தக் குளிர் காலத்தில் கேட்போர் கவனத்தை ஈர்க்கும் முறையில் இருமுறை பேசிவிட்ட பின், பேச்சுத் துறையில் வெற்றி பெறும் முயற்சியில் என்னை நானே மலிவாக்கிக் கொள் வேனோ என்ற அச்சம் உண்டாகிறது. நான் எவற்றை உயர்ந்தவை என்று மதிக்கின்றேனோ, நான் எதுவாக இருக்கின்றேனோ, அவை அனைத்தையும், என் சொற் பொழிவைக் கேட்பவர் கவனிப்பதாகவே தெரியவில்லை ; அலட்சியம் செய்வதாகக்கூடத் தெரிகிறது." விட்டுக் கொடுத்தல் என்பதையே அறியாத ஹென்றி தோரோ தங்களுடைய நலனைக் கருதியாவது கூறுவதைச் சுவை படக் கூறவேண்டும் என்று எதிர்பார்க்க, அந்த ரசிகர் கூட்டத்திற்கு எவ்வளவு அகம்பாவம் இருத்தல் வேண்டும் ! இருந்தாலும், தம்முடைய சொற்பொழிவுகள் சிறக்கவில்லை என்பதை அறிந்தும், மேலும் மேலும் பேசிக் கொண்டே தான் இருந்தார். அவரும், அவருடைய ரசிகர்களும், மிகச் சிறந்த பேச்சாளராகிய எமர்ஸனுடன் அவரை ஒப்பு நோக்கிக்கொண்டே இருந்தனர் என்பதையும் அறிதல் வேண்டும். புரியாததும், உலகியலுக்கு அப்பாற்பட்டதும் ஆன சொற்பொழிவை எமர்ஸன் நிகழ்த்தியபோதிலும், தம்முடைய சொந்தச் சிறப்பாலும், சிறந்த பேச்சுத் திறத் தாலும் சாதாரண உலகியலிலுள்ள மக்களைக்கூட மெய் மறக்கச் செய்து விடுவார். எமர்ஸனைப் போல் மேடைக் கலைத் திறமை இன்றேனும், தோரோ, இயற்கை, வாழ்க்கை ஆகியவைபற்றிய தம் உணர்ச்சிகள் போன்ற மிகக் கடினமான விஷயங்களைக்கூட, ரசிகர்கள் மனத்தில் செலுத்த முயன்றார். "கலப்படமானதும், புரியாமல் விழிப்பதுமான ரசிகர் கூட்டத்திற்கு, என் மனத்தில் தோன்றும் கருத்துக்களை எவ்வாறு ஏற்றுவது ?" என்று அவர் வருந்தினார்.

பிறர் பேசாத புதிய கருத்துக்களையே அவர் பேசின தால், ரசிகர்கள் அவற்றைக் கேட்பதில் இன்பமடைந்தனர். கான்கார்டு, வொர்செஸ்டர் ஆகிய ஊர்களிலுள்ள சொற் பொழிவு மண்டபங்களில், பல்லாண்டுகள், ஆண்டுதோறும் பேசினார்: எனவே, பிற நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் அடிக்கடி அழைக்கப் பெற்றார். மனத்துக்கு ஒரு மாறுதல் அளிக்கும் முறையில் அவருடைய சொற்பொழிவுகள் அமை

வதும் உண்டு. கேப் காட் பிரயாணத்தைப் பற்றிய அவரது நகைச்சுவை நிறைந்த பேச்சைக் கேட்டவர்கள் கண்ணீர் வருகிறவரைச் சிரித்தனர். "காட்டு ஆப்பிள்" போன்ற இயற்கை வரலாறு பற்றிய பேச்சுக்கள் நன்கு ரசிக்கப் பெற்றன. அவருக்கு நல்ல இனிமையான குரல் இருந்துங்கூட, ரசிகர்களைப் பார்த்துப் பேசாமல், தம் காகிதங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு பேசினமையின், தம் இனிய குரலை அவர் நன்கு பயன்படுத்தவில்லை.

வாழ்நாள் முழுவதும், தொடர்ந்து சொற்பொழிவாளராக இருந்தும்கூட, அதற்கேற்ற வருவாய் அவருக்குக் கிடைக்கவில்லை. ஒருவர் எமர்ஸனாக இருப்பின் பணம் சம்பாதிக்க முடியும். ஆனால் கிராமங்களிலுள்ள சொற்பொழிவு மண்டபங்களில் பேசினால் ஒருவேளை சில டாலர்கள் கிடைக்கலாம்; பல சமயங்களில் அதுவும் இல்லாமற்கூடப் போகலாம். ஏன் இந்தச் சொற்பொழிவு மண்டபங்களில் ஒருவர் பேச வேண்டும் எனில், அவரிடமுள்ள அறிவை வெளியிட, இந்த ஒரு வாய்ப்புத்தான் இருந்தது. கல்வி வேண்டும் என்று மக்கள் ஆவலுடன் விரும்பிய காலமாகலின், ரசிகர்கள் கூட்டத்திற்குப் பஞ்சமில்லை. சொற்பொழிவு மண்டபம் என்பது மிகச் சமீப காலத்தில் தோன்றியது எனினும், ந்யூ இங்கிலாந்து மக்களிடையே, மிகச் சிறந்த அறிவைப் பரப்பும் கருவியாக அது அமைந்து விட்டது. அறிவு வளர்ச்சியை ஓரளவே நம்பியவர்களும்கூட இவற்றை ஆதரித்தனர். அப்பொழுது தான், எழுத்தை ஆதரிக்கும் அளவுக்கு ந்யூ இங்கிலாந்தின் இலக்கியப் புத்துணர்ச்சி வெளிப்படலாயிற்று. கருத்தை வெளியிடும் சாதனங்களாக, பழமையும் புதுமையும் ஒற்றுமைப்படும் முறையில், பன்னூற்றுக் கணக்கான சொற்பொழிவுகள், பல்வேறு மாகாணங்களிலும் உள்ள பல்வேறு நகர, கிராம, சொற்பொழிவு மண்டபங்களில் நிகழ்ந்தன. இது ஒப்புமை கூற முடியாத முறையில் இருந்த அற்புதமான இயக்கமாகும். பிறர்க்குச் சொல்லக் கூடிய கருத்து ஏதேனும் இருந்து, அதனைச் சொற்பொழிவு வடிவத்தில் தரக்கூடிய சக்தி யாருக்கேனும் இருப்பின், அவர் குறைந்த அளவு தம்முடைய கிராமத்திலாவது அதைப் பரப்பும் வாய்ப்பை பெற்றிருந்தார். அவர் சொற்

பொழிவு பிறருக்குத் திருப்தியை அளித்தால் பிற இடங்களிலிருந்தும் அழைப்பு வரும். சிறந்த எழுத்தாளர்களும், தத்துவ வாதிகளும் காங்க்கார்டில் நிரம்ப இருந்தமையின், சிறந்த ஒரு சொற்பொழிவு மண்டபம் அவ்வூரில் அமைந்திருந்தது. என்றாலும், குழப்பவாதம், சமய விரோதமான வாதம் ஆகியவற்றைப் பேசுபவர்களை, இம் மண்டபங்களில் அனுமதிக்க நீண்ட காலம் எதிர்ப்புக்கள் இருந்து வந்தன. சொற்பொழிவு மண்டபத்தில் முழுப் பேச்சுரிமை உண்டு என்பதை 1845 வாக்கில்தான் எமர்ஸனும் அவருடைய நண்பர்களும் சாதிக்க முடிந்தது. சொற்பொழிவுத் திட்டங்களை அமைக்கும் வேலை தொண்டர்களால் மேற்கொள்ளப் பெற்றது. 1842-43 ஆண்டுக்குரிய சொற்பொழிவுத் திட்டத்தை அமைக்கும் பொறுப்பைத் தோரோவே ஏற்றுக் கொண்டார்.

சொற்பொழிவு ஆற்றுவதற்குச் சிறந்த பொருளாக அவருக்குக் கிடைத்தவற்றுள், காட்டுப் பொருள்களில் ஈடுபட்ட அவர் மனத்தைப் பெரிதுங் கவர்ந்து மும்முறை அவர் தன்னிடம் வருமாறு செய்த, கேப் காட்டின் வளமேயாம். மெஸசூஸிட்ஸ் முழுவதுமே உயர்ந்த குன்றுகளைப் பெற்றிருப்பினும் "வளைந்த கை போன்று உள்ள" கேப் காட், அட்லாண்டிக் புயல் முழுவதையும் எதிர்த்து நிற்பதனால் அதனிடமே அவர் தம் ஆசையைச் செலுத்தினார். காங்க்கார்டிலிருந்து அறுபது மைல் தூரத்திலுள்ள மணல் திட்டின் பக்கத்தில், மனித வாடையற்ற நீண்ட கடற்கரை ஒன்றைக் கண்டார். அந்தக் கரையின் நீளம் முப்பது மைலாக இருப்பினும், அலைகளின் பேரிரைச்சலைக் கேட்டுக் கொண்டும், புயல் நிறைந்த மழையிலும், குளிர்ந்த கடற் பனியிலும் அவர் கால்நடையாகவே சென்று வந்தார். அந்தப் பிரயாணத்தில் இப்பகுதியில் கண்டவை அனைத்தையும் தம்முடைய நாட்குறிப்பில் குறித்து வைத்தார். ஒரு கப்பல் உடைந்து, அமெரிக்காவில் குடியேற வந்து கொண்டிருந்த ஐரிஷ்காரர்களின் பிணங்கள், கடற்கரையில் ஒதுக்கப் பட்டிருப்பதைக் கண்டார். கடற்பாசிகளை வயல் எருவாகப் பயன்படுத்துவதற்கு வண்டியில் [illegible] வதையும், உள்நாட்டினர் அறியாத சோஸ்டேரா, ரோஸ் மேரி என்ற கடல் துறைச் செடி கொடிகளையும்: கல்கள், வாடர்கள், வில்ஸன் பெட்டரல் போன்ற கடற் பறவைகளை

யும் கண்டார். கடற் காற்ருல் வளர்ச்சி குன்றிய ஆப்பிள் மரங்கள், பீச் பைன்கள், மர்ராம் புல்கள், பைன்கள் ஆகிய வற்றை மணல் திட்டை வலுப்படுத்தப் பயிர் செய்திருப் பதையும் கண்டார். (லே லேண்ட்ஸ் என்ற ஊரில் இவ் வாறு செய்வதுண்டாம்.) உள்ளூரில் விளைந்த சோளத்தை அரைப்பதற்குரிய காற்ருல் இயங்கும் மா இயந்திரத்தையும், சிவப்பு இந்தியர்கள் பயன்படுத்திய அம்புகளையும், ஜெல்லி மீன்களையும், கடலிலிருந்து ஒதுக்கப்பட்ட திமிங்கலம், ஷெல் மீன் ஆகியவற்றையும் கண்டார். கப்பல்களின் பாரத்தைக் குறைப்பதற்காக எறியப்பட்ட சமான்களும், உடைந்த கப்பல்களிலிருந்து மிதந்து வந்த சாமான்களும், அவர் கண்ணில் பட்டன. நீரில் நனைந்த விறகுகளையும், அடிமரம் மட்டும் எஞ்சி உள்ள பழங்கால மரங்களையும், பிற இடங்களிலிருந்து குடிபுக வரும் பூச்சிகளும் பறவைகளும் அடிபட்டு இறக்கும்படியான கலங்கரை விளக்கையும் கண்டு சென்ருர்.

அலைகளின் ஓரத்திலேயே பல மைல்கள் நடந்தார். பெரிய அலைகள் வந்தால் ஒதுங்கிக் கொண்டார். கடலின் நெருக்கத்தில், காலணிக்குள் புகுந்த மணலுடன், ஈரத் தரையின் ஒளி கண்ணைக் கூசினுலும் அதிலும் இன்பமே கண்டார். சில சமயங்களில் அடிமட்டத் தண்ணீர் குளிர்ச் சியாகவும், இழுப்புப் பயங்கரமாகவும் இருந்த இடங்களில் அவர் நீந்தினர். காங்க்கார்டு ஆற்றின் மென்மையான ஓட்டத்திற்கும் இதற்கும் வேறுபாடு நிரம்ப இருந்தது. வெறும் மணலாக இருந்த பகுதிகளில் நல்ல விளைச்சல் ஏற்பட்டிருப்பதைக் கண்டு வியந்தார். அன்றியும் உட் பைன், காட்டு ரோஜா, பீச்-ப்ளம் ஆகியவற்றின் அடர்ந்த மலர்த்தொகுதியைக் கண்டவுடன் காட்டில் வளர்ந்த அவர் அவற்றில் மிகவும் ஈடுபட்டார். ரோஜா மலர்கள் மலர வேண்டிய காலத்தில், மணற் பரப்பின் இடையே உள்ள இத்திட்டுகளில் எல்லை மீறிப் பூத்துக் குலுங்கின; இவற்றின் மணம் பே-பெர்ரியின் மணத்துடன் கலந்து வீசியது; இத் தாலியிலோ அல்லது வேறு எங்கோ உள்ள எந்தச் செயற்கை [illegible] தோட்டமும் போட்டியிட முடியாதபடிச் சிறப்புப் பெற்றிருந்தது'' என்று கூறியுள்ளார். [illegible] ஒதுக்கிவிட்டே அவர் சென்ருர்; ஹெறல் மீன்கள், கரையில் ஒதுங்கிய கட்டைகள், கப்பலின் உடைந்த துண்டுகள், பாஸ்

என்ற மீன் பிடிப்பவர்கள் ஆகியவர்களை மட்டுமே அவர் பார்க்க விரும்பினார். மேலே கூறப்பெற்ற கடற்கரை மக்கள், காங்க்கார்டு கிராமத்திலுள்ள சுதந்திரமான ஆனால், ஜாதப் பிரஷ்டம் செய்யப் பெற்ற மக்களை ஒத்தவர்கள் ஆகலின் அவர்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி கொண்டார். எல்லாவற்றையும் விடக் கடலும், அதன் ஒப்பற்ற வண்ணமும், சக்தியுமே அவருடைய கற்பனையைக் கவர்ந்தன. அலைகளைக் கவனிக்கையில் பழங்காலத்திய கப்பல் பயணங்களையும் பூகோள வரைவாளர்களையும் நினைந்து பார்த்தார். கொலம்பஸ், ஹம்ப்ரி கில்பர்ட், ஷேம்ப்ளான் ஆகியவர்களையும் பழைய இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு, இரண்டு மாதம் பயணம் செய்து, ந்யூ இங்கிலாந்தை அடைந்து, கேப் காட் என்ற இடத்தில் முதன் முதலில் அமெரிக்க மண்ணை மிதித்த "யாத்ரீகர்களையும்" நினைவுக்குக் கொண்டு வந்தார்.

முதன் முதலில், 1849 இல், எல்லரி சேனிங்குடன் தோரோ கேப் காட் என்ற இடத்திற்குச் சென்று, இலையுதிர்காலப் புயலையும், கப்பல்கள் உடைவதையும் கண்டார். அடுத்த ஆண்டுக் கோடைக் காலத்தில் அமைதியான சூழ்நிலையில் அவ்வூரைக் கண்டார். அதற்கு அடுத்த மாதத்திலேயே அவர் எமர்ஸனின் வேண்டுகோட்கிணங்கி அங்குச் செல்ல நேர்ந்தது. மார்கரெட் ஃபுல்லர் என்ற அம்மையாரும், அவருடைய கணவரும் இத்தாலி நாட்டவருமாகிய கௌன்ட் ஆஸ்ஸலி என்பவரும், அவர்களுடைய பையனும் ஐரோப்பாவிலிருந்து வருகையில் ந்யூயார்க் நகரை அடையுந் தருணத்தில் புயலில் சிக்கியதால் அவர்கள் கப்பல் உடைந்து விட்டது. இறந்த இம்மூவரையும் பற்றிய துப்பு ஏதாவது கிடைக்குமாவென அறிந்து வருமாறு, எமர்ஸன் தோரோவை அனுப்பினார். "மாஸினியின் கீழ் ரோமாபுரிப் புரட்சி" என்ற நூலை எழுதி அதனை அமெரிக்காவில் வெளியிடுவதற்காக மார்கரெட் கொண்டு வந்ததாகத் தெரிந்தது. மார்கரெட்டின் சடலத்தையும், அவருடைய நூலின் கையெழுத்துப் பிரதியையும் தேடிக் கண்டு பிடிப்பதே தோரோவின் கடமையாக இருந்தது. தன்பால் இறந்தவர்களை, கடல், காட்டிக் கொடுப்பதாக இல்லை; கையெழுத்துப் பிரதியும் கிடைக்கவில்லை.

* * * *

காங்க்கார்டு கிராமப் பகுதிகளில் தோரோ அடிக்கடி சுற்றி வந்தார். இயற்கை வரலாற்றில் ஈடுபடாமலும், ஹக்கிள்பெர்ரிப் பழங்களைத் தேடிச் செல்லாமலும் உள்ள நேரங்களில், பண்ணைகளையும், காடுகளையும் அளவிடுவதிலும், நண்பர்களோடும் குடும்பத்தோடும் படகு ஓட்டுவதிலும் சிற்றுலாச் செல்வதிலும் காலங் கழித்தார். எந்தக் கட்டுப்பாட்டுக்கும் அடங்காத முறையில் அவர் சுற்றி வந்ததைக் கண்டவர்கள், அவரை அறியாத காரணத்தால், சில்லறைச் சாமான்கள் விற்பவரென்றும், இயந்திரம் பழுது பார்ப்பவரென்றும், வீணுக ஊர் சுற்றுபவரென்றும் கருதினர். கேப் காட் என்ற இடத்தில் அவர் சுற்றி வருகையில், அண்மையில் நடந்த பாங்க் கொள்ளையில் சம்பந்தப் பட்டவரோ என நினைத்து, போலீசார் அவரைக் கண்காணித்து வந்தனர். ஒருமுறை, மரத்தில் சாய்ந்து கொண்டு அவர் நிற்பதைக் கண்டவர்கள், ஒரு குடிகாரக் குடியானவர் என்றுகூடத் தவருகக் கருதி விட்டனர். அவருடைய உடை, வலுவானதாகவும், தண்ணீர் படியாததாகவும், சாம்பல் நிறத்துடன் கசங்கியும், பிறரிடமிருந்து தம்மை மறைத்துக் கொள்ள வேண்டும் என அவர் நினைப்பதற்கு ஏற்றபடியாகவும் இருந்தது; காலணிகள், மெருகு ஏற்றப்படாமல் கசங்கிக் கிடந்தன. நடந்து செல்வதைத் தான் அவர் விரும்பினுர். கால்களைத் தொங்கவிட்டுக் கொண்டு, புகைவண்டி ஆசனத்தில் அமர்ந்திருப்பதை அவர் விரும்புவதில்லை. நீண்ட தூரப் பிரயாணத்திற்கு வேண்டிய சாமான்களின் அளவை, மிகுதியும் குறைத்துக் கொண்டு எளிதாகப் பிரயாணம் செய்தார். இரயில் மூலம் கனடாவுக்குச் செல்கையிற்கூட, அவருடைய சாமான்கள், ஒரு பேப்பரில் சுற்றப்பட்ட சிறு பொட்டலமும், பனை ஓலைத் தொப்பியுந்தாம். "சிக்கனமாகப் பிரயாணம் செய்வதற்கும், மிக நீண்ட தூரத்தில் உள்ள இடத்தை மிகக் குறுகிய தூரத்தில் அடைவதற்கும் சிறந்த வழி காலால் நடப்பதுதான்; அவ்வாறு நடக்கும்பொழுது, ஒரு கரண்டி, ஓர் அகப்பை, ஒரு தூண்டில், சிவப்பிந்தியர் உணவில் சிறு பகுதி, கொஞ்சம் சர்க்கரை. உப்பு ஆகிய இவையே தேவை. ஓர் ஓடையையோ, குட்டையையோ காணும்பொழுது, அதில் மீன்பிடித்துச் சமைக்கலாம்; அன்றேல், அவசரமாக ஒரு பொங்கல் தயாரிக்கலாம்;

அன்றேல், குடியானவன் வீட்டில் நான்கு பென்னிக்கு ஒரு துண்டு ரொட்டி வாங்கலாம். அந்த ரொட்டியை அடுத்து ஓடும் ஓடையில் நனைத்துப் பதப்படுத்திச் சர்க்கரையில் முக்கி உண்ணலாம். இது ஒன்றே ஒரு நாள் முழுவதற்கும் போதுமானது" என அவர் எழுதியுள்ளார். அவருடைய சாமான்களில் மிகவும் முக்கியமானவை ஒரு பெரிய தொப்பியும் குடையுமாகும்; ஆனால் அவற்றிற்கும் ஒரு காரணம் இருந்தது. அவருடைய தொப்பியின் ஓரங்களில் தாவர மாதிரிகளை வைத்துக் கொள்வார்; அவ்வாறு செய்வதால் அவருடைய கைகள் பிற வேலைகளுக்குத் தயாராக விருந்தன. மழைக்குரிய மற்றோர் அங்கியைச் சுமப்பதை விடக் குடை கனமற்றிருந்தது.

தோரோவின் காலத்தில்தான் தென்பகுதிகளில் அடிமைகள் வைத்திருக்கும் பழக்கத்தை ஒழிப்பதுபற்றிய இயக்கம் மிக மும்முரமாக நடந்தது. உள்நாட்டுப் போரின் முக்கிய காரணங்களுள் இதுவும் ஒன்று. தென் பகுதித் தோட்டங்களிலிருந்து, மேலும் மேலும் அதிகப்படியான அடிமைகள், தப்பிக் கொண்டு வட பகுதிக்கு ஓடி வந்தனர். அவர்களை வடபகுதிகளிற் குடியேறவும், கனடா நாட்டுக்குத் தப்பிச் செல்லவும் பலர் பரிவுடன் உதவினர். அடிமைகள் தப்பிச் செல்லும் ராஜபாட்டையில் காங்கார்டு கிராமம் இல்லாமையின், எப்பொழுதாவது ஒரு சில சமயம், சில அடிமைகளே அப்பக்கம் வந்தனர். அவ்வாறு வந்த துரதிர்ஷ்டம் பிடித்த அடிமைகளுக்கு, தோரோக் குடும்பமும் அவர்களுடைய நண்பர்களும் அனைத்துதவிகளையும் செய்தனர்: வால்டனில் வாழும்பொழுது, எவ்வாறு ஓர் அடிமையைக் கனடாவுக்கு இரயிலில் ஏற்றிவிட்டு வடக்கே உள்ள துருவ நக்ஷத்திரத்திற்குச் செல்லுமாறு உதவினார் தோரோ என்பதை, அவரே கூறியுள்ளார். சீர்திருத்தக் கருத்துடைய அவருடைய குடும்பத்தின் மூலம் அடிமை ஒழிப்பு இயக்கத்துடன் பெரிதும் தொடர்பு கொண்டிருந்தார். என்றாலும் இவரும், எமர்ஸனும் இந்த இயக்கத்தில் நேரடியாகப் பங்கு கொள்ளாமல், மானிட ஆன்மாவின் அடிமைத்தனம் பற்றிய ஒருவிதத் தத்துவ விசாரணையில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், 1850 இல், தப்பிச் செல்லும் அடிமைகள் பற்றிய சட்டம் இயற்றப் பெற்ற பிறகு, இவர்கள் ஒதுங்கி இருப்பதென்பது இயலாமற் போயிற்று.

மெஸசூஸிட்ஸிலும் பிற வடபகுதி மாகாணங்களிலும் வாழ்ந்தவர்கள், நீண்ட தூரத்திற்கு அப்பால் உள்ளவையும், அடிமைகளை வைத்திருப்பவையுமான தென் பகுதி மாகாணங்களுடன் மட்டுமல்லாமல், தங்கள் மாகாண அதிகாரிகளுடனும் பகை கொள்ள நேரிட்டது. அடிமை ஒழிப்பு இயக்கம் அவ்வர் கவனத்தையும் கவர்ந்தது.

"தப்பிச் செல்லும் அடிமைகள் சட்டம்" நிறைவேற்றப்படு முன்பேகூட, அடிமைகட்குச் சரண் தருவதாகவும், அதே நேரத்தில் அடிமைகள் வைத்திருப்பதை ஆதரித்தும் உள்ள மெஸசூஸிட்ஸ் அரசாங்கத்தின் பிளவு மனப்பான்மையைத் தோரோ தம்முடைய "சிவில் ஒத்துழையாமை" என்ற நூலில் கண்டித்துள்ளார். அவரவர்களுடைய மனச்சான்றின்படியே வாழ வேண்டும் என்று விரும்புகிறவர்கள், என்ன நிலையை அடைய நேரிடும் என்பதை, அவர் சிறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சியே அறிவுறுத்தியது. 1851 ஏப்ரலில், சிம்ஸ் என்ற நீக்ரோவைப் பிடித்து மெஸசூஸிட்ஸ் அரசாங்கம் மறுபடியும் அவருடைய முதலாளியிடம் அனுப்பியதைக் கண்ட அடிமை ஒழிப்பு இயக்கத்தார், தம் அரசாங்கத்திடம் பெரிதும் பகைமை பாராட்டினர். அதிகாரவர்க்கத்தை எதிர்த்துப் புதிய போராட்டம் ஒன்றைத் தொடங்கத் தோரோ விஷயங்கள் சேகரித்துக்கொண்டிருந்தார்.

1850 முதல் 1854 வரை, அரசாங்கத்திடம் அவர் கொண்டிருந்த பகைமை, நாளும் வளரலாயிற்று. தாம் கொண்ட கொள்கைக்காகத் தலைவரி கட்ட மறுத்த அவர், மறுபடியும், அதே கொள்கைக்காகத் தப்பிச் செல்லும் அடிமைகள் சட்டத்தை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிர்க்க முனைந்தார். ஒருநாள் காலை, தம்முடைய வீட்டை வந்தடைந்த களைத்துப்போன நீக்ரோ ஒருவரைத் தோரோ எவ்வாறு காப்பாற்றினார் என்பதைத் தோரோவின் நண்பராகிய மான்கியூர் கான்வே, விவரமாகக் கூறியுள்ளார். "ஒரு பெரிய அறிஞர் ஓர் அடிமையிடம் எவ்வளவு பரிவும் அன்பும் காட்டினார் என்பதை எதிரே அமர்ந்தவாறு நான் கண்டேன். அந்த அடிமைக்கு உணவிடுதல், படுக்கை அவன் கால்களைக் கழுவுதல், ஓய்வு தருதல் ஆகியவை நடைபெற வேண்டும். அமைதியே வடிவான தோரோ

அடிக்கடி அவனிடம் சென்று அமைதியடையச் செய்து, அவனது நடுக்கத்தைத் தணிவித்தார். எந்த அதிகாரமும் அவனுக்கு ஊறு செய்ய முடியாது என்பதைப் பன்முறை எடுத்துக் கூறினர். வழக்கம்போல் அவர் இன்று மாலை உலாவச் செல்ல முடியாது. அடிமைகளை வேட்டையாடு பவர்கள் நிறைந்திருந்தார்களாதலின், அவனைக் காவல் செய்யும் பொறுப்பு அவருடையதாயிற்று... ...''

1854 ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில், பாஸ்டன் நகரில் ஏற்பட்ட பெரிய கிளர்ச்சியையும் குழப்பத்தையும் பொருட்படுத்தாமல், மெஸசூஸிட்ஸ் அரசாங்கம், தப்பி ஓடி வந்த ஆந்தனி பர்ன்ஸ் என்ற நீக்ரோவை மறுபடியும் அடிமை வாழ்விற்கே அனுப்பி வைத்தது. இதனை எதிர்த்துப் போடப்பட்ட கூட்டங்களும், அவனை விடுவிக்கச் செய்த முயற்சிகளும் பயனற்றுப் போயின. மாகாணம் முழுவதும் இந் நிகழ்ச்சியால் கலகலத்துப் போயிற்று. தோரோவிடம் அடிக்கடி தோன்றும் ஒரு வெடிப்புணர்ச்சியை இந் நிகழ்ச்சி தூண்டி விட்டது. ஜூலை 4ஆம் நாள் காங்க்கார்டிலிருந்து பதினெட்டுக் கல் தொலைவிலுள்ள ஃப்ரேமிங்ஹாம் என்ற இடத்தில் அவர் ''மெஸசூஸிட்ஸில் அடிமை வாழ்வு'' என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவு ஆற்றினர். சிவில் ஒத்துழையாமையைப்போல், இதுவும், அநீதியை எதிர்த்துச் செய்த குற்றச் சாட்டாகும். ஒரு சிறிதும் குற்றம் இழைக்காத அப்பாவி மனிதர்கள் மேல் கடுமையாகப் போர் தொடுக்கும் மாகாண சர்க்காரிடம் அவர் கொண்ட வெறுப்பை அது நன்கு எடுத்துக் காட்டியது. இத்தகைய அநீதிகட்கு இடங் கொடுக்கும் ஓர் அரசாங்கம், அரசாங்கம் என்ற பெயருக்கே தகுதியற்ற தென்றும், தம்மைப் பொறுத்தவரையில் அது இருப்பதாகவே கருதவில்லை என்றும் கூறியுள்ளார். ''சென்ற மாதம் முழுவதும் ஒரு பெரிய நஷ்டத்தை அடைந்து விட்டதாகவே உணர்ந்தேன். என்ன நஷ்டம் என்பதை முதலில் உணர முடியவில்லை. இப்பொழுது நான் இழந்தது ஒரு பெரிய நாட்டையேயாகும் என்பதை அறிந்தேன்'' என்று கூறியுள்ளார்.

அடிமை வியாபாரத்தை அடுத்து அவர் எதிர்த்துப் போராடியது பணம் சேர்ப்பதையாகும். எவ்வாறுயினும் வாழ்வது (''குறிக்கோள் இல்லா வாழ்க்கை'' என்ற தலைப்

புடன் வெளியிடப்பெற்றது) என்ற தலைப்பில் ந்யூ பெட்போர்டு, நான்டுக்கெட், பிலிடெல்ஃபியா ஆகிய இடங்களில் அவர் சொற்பொழிவாற்றினார். ஓயாது உழைத்தல், பணஞ் சேகரித்தல் என்ற இரண்டை மட்டுமே கடமையாகக் கொண்ட சமுதாயத்தில் வாழநேரிட்ட மனிதன், எவ்வளவு கீழ்த்தரமாகச் செல்ல வேண்டி இருக்கிறது என்பதுபற்றியே இச் சொற்பொழிவுகளில் அவர் பேசினார். அத்தகைய ஒரு சமுதாயம் கடவுளைக்கூட "பெருஞ் செல்வமுடைய ஒருவராகவும், கொஞ்சம் காசுகளைத் தூவி அவற்றைப் பொறுக்க மனித குலம் அடித்துக் கொள்வதைப் பார்ப்பவராகவுமே கருதும்" என்று கூறியுள்ளார். மனிதர்கள் வாழ்க்கையை எளிதாகக் கருதி, ஓயாமல் உழைப்பதை விட்டு விட்டு, செய்தித் தாள்களைப் படிக்காமல் அக வாழ்க்கையைச் செம்மையாக்குவதில் முனைந்து, கலிபோர்னியாவிலும் ஆஸ்திரேலியாவிலும் பொன் தேடும் பேராசையை ஒழித்து, தங்களுடைய மனத்தின் ஆழத்தில் தோண்டி அங்குள்ள பொன்னை எடுக்க முயன்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்? ஒரு நாள் மாலை நேரம் முழுவதையும் காட்டில் செலவழித்து, அதன்மாட்டுக் கொண்ட அன்பால் சுற்றி வருவதானால், அவனை வீணாக ஊர் சுற்றுபவன் என்று பழிக்கின்றனர். ஆனால், எதிர்கால வியாபாரம் செய்யும் நோக்கத்துடன், அந்த மரங்களனைத்தையும் வெட்டிச் சாய்த்து, காட்டை மொட்டையடிப்பவனைப் பார்த்துப் புது முயற்சியில் ஈடுபடும் சுறுசுறுப்புள்ள மனிதன் என்று உலகம் மதிக்கிறது" என்றார்.

சில வாரங்கட்கு முன்புதான், "காங்க்கார்டில் ஒரு வாரம்" என்ற நூலின் விற்காத ஏழுநூறு பிரதிகளையும், வெளியீட்டாளர், அவரிடமே திருப்பி அனுப்பி இருந்தனர். ஒருவேளை அதில் மனம் நொந்துதான்போலும் அவர் கீழ் வருமாறு எழுதினார்: "பணம் சம்பாதிக்கும் வழி எதுவாக இருப்பினும், ஒரு வழி தவறாமல் அனைத்துமே நம்மைக் கீழ் நோக்கி அழைத்துச் செல்பவையாகவே உள்ளன...... ஓர் எழுத்தாளனாகவோ, சொற்பொழிவாளனாகவோ இருந்து, பொருள் சம்பாதிக்க வேண்டுமானாற்கூட, மக்களைத் திருப்திப்படுத்த வேண்டியுள்ளது. அவ்வாறு செய்வது தலை கீழாக விழுவதேயாகும்......மனிதத் தன்மையில் கீழ் நிலைக்குச் செல்வதற்காகவே போலும் ஊதியம் தருகிறார்

கள். அரசர்கள், அரசர்களாகப் பிறந்துவிட்ட செயலைப் பாராட்டிப் பாடாமல் இருப்பதே, அரச-கவிஞருக்குக் (Poet laureate) கூட நலம் பயப்பதாகும்.''

அந்தச் சுற்றுவட்டாரத்திலேயே அவருக்கு இணை இல்லை என்று சொல்லப் பெற்ற நில அளவீட்டுத் துறையிலுங்கூட, துரதிர்ஷ்டவசமாக, அவருடைய சிறந்த முயற்சிகளை யாரும் விரும்பவில்லை என்பதை அறிந்தார். இல்லாத சில ஏகர் நிலத்தைத் தம் சொத்துடன் சேர்த்துக் கூறும் தவறான கற்பனை அளவு முறையையே நிலச் சொந்தக்காரர் விரும்பினர். நில அளவாளராகிய தோரோ வாழ்க்கை தம் விருப்பத்திற்கு விரோதமாகச் செல்வதை அறிந்தார். "வயல் வெளிகளில் அவசர அவசரமாகச் செய்யப்படும் இந்தப் பணி, முரட்டுத்தனமாக வாழவும், சாப்பாட்டைக் கூடக் கவனிக்காமல் இருக்கவும் செய்து விடுகிறது. இதுவே இதிலுள்ள மோசமான நிலை. பணி எப்படியோ அப்படியே உணவும் இருக்க வேண்டுமென விரும்புகிறேன். நான் விரும்பும் தொழிலையே செய்ய நேரிடுமானால் டீ, காப்பி, புலால் உணவு ஆகிய எதனையும் ஏற்றுக் கொள்ள மாட்டேன்'' என்று கூறியுள்ளார்.

1854 ஆம் ஆண்டு, மன உளைச்சலையும், சத்தில்லாத ஆகாரத்தையும், அவருக்குத் தந்த போதிலும், அந்த ஆண்டு ஆகஸ்ட் 9 ஆம் தேதி "வால்டன் அல்லது காட்டு வாழ்க்கை'' என்ற நூல் வெளிவர உதவிற்று. அவருடைய தலைசிறந்த நூலாகும் இது. அவருடைய முதற் புத்தகத்தை வெளியிட்டவர்களின் நிலையில்லா மனநிலை காரணமாக, இத்துணை நாட்கள் தாமதப்பட்டு வெளி வந்தாலும், காங்க்கார்டில் ஒரு வாரம் என்ற நூல் வெற்றி பெறாமற் போனதால் உண்டான வருத்தத்தை இந்த வெளியீடு ஓரளவு தணித்தது. "வால்டன்'' என்ற நூலை வெளியிட, முயற்சி மிகுந்த "டிக்னர் அண்டு ஃபீல்ட்ஸ்'' என்ற கம்பெனியார் ஏற்பாடு செய்தார்கள்.

வால்டன் குட்டையின் அருகில் 1845 முதல் 1846 வரையில் மட்டுமே தோரோ வாழ்ந்தாலும், "வால்டன்'' என்ற நூலில் 1838 முதல் 1854 வரைத் தம் நாட்குறிப்பில் கண்ட செய்திகளை எல்லாம் பயன்படுத்தினார். பதினாறு ஆண்டுகள் ஒரு மனிதன் பெற்ற வளர்ச்சியையும், இந்த

உலகைப்பற்றியும், அதில் தன்னுடைய இடம் யாது என்பதுபற்றியும், நேர்மையுடைய அம்மனிதன் தன் மனக் கருத்தை வெளியிட்ட சிறப்பையும் இந்த நூலிற் காண லாம். கூறப்பெற்ற விஷயம் கடினமானதாக இருப்பி னும், மகிழ்ச்சி தரும் முறையிலும், எளிய முறையிலும் காட்டு வாழ்க்கை பற்றிய கட்டுரைகள் எழுதப் பெற் றுள்ளன. இந் நூல் எழுதுங் காலத்தில், வாழ்க்கைபற்றிய தம் கருத்தை, மக்களுக்குப் பிடிக்கின்ற முறையில் எவ்வாறு கூறுவது என்பதைக் கற்றுக் கொண்டார். கடினமான அனுபவத்தாற் பெற்ற அறிவைக் கொண்டு, சிறந்த முறை யில் ஒன்றைச் செய்யக் கற்றுக்கொண்டார்.

———

# அத்தியாயம் 8

"வாழ்க்கையில் துயரம் ஏற்பட்டால்......சதுப்பு நிலத்திற்குச் செல். ஸ்கங்க் காபேஜின் வலிய ஈட்டி போன்ற இலைகளைக் காண். புதிய ஆண்டு பிறந்து விட்டமையின் தாம் இறந்துபட வேண்டுமே என்பதற்காக அவை மனம் மாழ்கி நிற்கின்றனவா ?"

—தோரோவின் நாட்குறிப்பு.

தோரோ தம் காலத்தில் வாழ்ந்தவர்களைக் கேலி செய்யும் முறையில் "ந்யூ இங்கிலாந்தில் வாழ்வதாகக் கூறிக் கொள்பவர்கள்" என்று கூறுவதுண்டு. அத்தகையவர்கட்கு ஒரு செய்தியாக அமைந்தது "வால்டன்" என்ற நூல். அவ்வாறு விடுக்கப் பெற்ற செய்தியும் நல்ல விளக்கமாகவே இருந்தது. தொழில் வளர்ச்சி யடைந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில், வாழ்க்கை, மிகவும் சிக்கல் நிறைந்ததாய், அற்பத்தனமுடையதாய், தவம் செய்வது போன்றதாய் அமைந்திருந்தது. "என்னுடைய அண்டையில் வாழ்பவர்கள், மேற்கொண்டிருக்கிற வேலைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, ஹொர்க்குலஸின் வேலைகள் கூடக் குறைந்தவையாகக் காணப்பட்டன. ஏனென்றால், ஹொர்க்குலஸ் மேற்கொண்ட பணி பன்னிரண்டுதான் ; மேலும் அவற்றிற்கு ஒரு முடிவும் இருந்தது. என் அண்டையிலுள்ளவர்கள் எந்தப் பிசாசையும் பிடிக்கவோ கொல்லவோ இல்லை ; ஆனால் அவர்களுடைய வேலைகட்குமட்டும் ஒரு முடிவை நான் காணவில்லை" என்று தோரோ கூறியுள்ளார். அவர் அண்டையிலுள்ளவர்கள் மேற்கொண்ட பணியில், எவ்வித இன்பமும் இல்லாமல், முடிவில்லாத உழைப்பும், மனக் கவலையும், அற்பத்தனமும், தேக்கமும் மட்டுமே நிறைந்திருந்தமையின், அவர்களுடைய நற்பண்புகள் என்பவைகூட மாசுபடிந்தே இருந்தன. இவற்றிலிருந்து விடுதலை அடைய ஒரே வழி, பிடிவாதமாக இவற்றை எளிதாக்குவதுதான் என அவர் கூறினார்.

நல்ல உழைப்பாளியும், வறுமை நிறைந்தவருமான ஐரிஷ்காரராகிய, ஜான் ஃபீல்ட் என்ற அண்டை வீட்டா

ருக்கு உபதேசம் செய்துவிட்டுத் தோரோ பின்வருமாறு எழுதியுள்ளார் : "என்னுடைய அனுபவத்தைக் கொண்டு அவருக்குப் புத்திமதி கூறினேன் ; எனக்கு மிக அண்மையில் குடி இருப்பவர் அவரே ; அவரைப் போலவே இப் பகுதிக்கு மீன்படிப்பதற்காக வந்தேன் ; பிறகு என் தேவைகளை, என் உழைப்பாலேயே பெற்றேன் என்றெல்லாம் கூறினேன். எளிமையான, ஆனால் சுத்தமான வீட்டில் குடி இருந்தேன் என்றும், அவருடைய வீட்டின் ஒரு வருட வாடகை எதுவோ, அந்தத் தொகையில் என் வீட்டையே கட்டி விட்டேன் என்றும், அவர் விரும்பினால் ஒன்று அல்லது இரண்டு மாதங்களில் அத்தகைய ஒரு வீட்டையே கட்டிவிடலா மென்றும் அறிவுறுத்தினேன். காப்பி, டீ, வெண்ணெய், பால், பச்சைப் புலால் ஆகிய எதனையும் நான் உண்பதில்லையாதலின், இவற்றிற்காக உழைத்ததில்லை என்றுங் கூறினேன். மேலும், கடினமாக உழைக்காமையின் அதிகமாக உண்ண வேண்டி இருக்க வில்லை என்றும், அதனால் உணவிற்காக நான் செல விட்டது மிகச் சிறிய தொகையே என்றும் விளக்கினேன் ...... 'என்றாலும், அமெரிக்காவிற்கு வந்ததே ஓர் இலாப மென்றும், இங்கே டீ, காப்பி என்பவற்றோடு, அன்றாடம் புலால் உணவும் கிடைக்கிற' தென்றார் அவர். 'ஆனால் இவை வேண்டாம் என்று விட்டுவிட்டுச் சுதந்தரமாக வாழ் வதற்கு இடம் அளிப்பதனாலேயே, அமெரிக்காவைப் போற்றுகிறேன்' என்றேன் நான். இந்நாட்டில்தான் அடிமை வியாபாரத்தையும் போரையும் வேண்டாம் என்று கூறமுடியும். இவ்வாறு கூறுவதற்கு அரசாங்கம் தடை ஒன்றும் செய்யவில்லை. இத்தகைய தேவை இல்லாத அலுவல்களில் இறங்குவதனால் ஏற்படும் அனாவசியமான செலவுகளும், நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏற்படுவதில்லை."

வையத்தில் வாழ்வாங்கு வாழும் முழுத்தன்மை பெற்ற மனிதர்கட்காகத் தோரோவின் செய்தி வழங்கப்படவில்லை; அதன் எதிராக, தம்முடைய திறமையைப் பயனற்ற வழிகளில் செலவிட்டு, வளம் பெற முடியாதவர்கட்கே இச் செய்தி வழங்கப் பெற்றது. ஓயாத உழைப்பு என்னும் அபினை உண்டு, அவர்கள் தம் ஆன்மாவையே இழந்துவிட்டுச் சுற்றிலுமுள்ளவற்றில் எவ்வித நாட்டமுங் கொள்ளாமல்

“வாழ்வை ஒரு நம்பிக்கை இழந்த வெறுமையாகக் கருதினர்.” அத்தகைய அற்பத்தனம் நிறைந்த வாழ்வை விட்டு, அவர் அப்பால் திரும்பி விட்டார். “காங்க்கார்டு, மெஸசூஸிட்ஸ், அமெரிக்கா என்பவற்றை என் நினைவிலிருந்து அகற்றி விட்டு, ஒவ்வொரு நாளிலும் அந்நாளோடு ஒன்றிய அறிவுடைய ஒருவனாக இருக்க விரும்புகிறேன். எனவே, வாழ்க்கையின் பிரச்னைகள் எளிதாக்கப் பெற்ற இந்த ஏகாந்தமான இடத்திற்கு வந்து விடுகிறேன்” என்று கூறியுள்ளார். எளிமையால்தான் வாழ்வில் நிறைவையும், கூர்மையையும் தர முடியும். மக்களினுடைய பணப் பசி, அவருக்கு வியப்பை ஊட்டிற்று. வயல்களின் நடுவே அமர்ந்து கொண்டு, ஒருநாள் அவர் ஏதோ எழுதிக்கொண்டிருந்ததைப் பார்த்த ஐரிஷ்காரர் ஒருவர், அவர் தம்முடைய கூலியைத்தான் கணக்கிடுகிருர் என்று கருதிவிட்டார். முன்னேற்றவாதிகள் “இந்த நூற்ருண்டின் விதியை நிர்ணயிக்கும் நூற்ருண்டாகும் இது” என்று கூறிக்கொள்ளும் பத்தொன்பதாம் நூற்ருண்டு, முன்னேற்றத்தை நோக்கி விரைவாக முன்னேறிக் கொண்டிருப்பதைப் பற்றிக் கவலைப் படாமல், தாம் வாழ்க்கையில் எதனை எதிர்பார்த்தாரோ அதனைப் பெற வேண்டித் தனிமையாக நின்றிருந்தார் தோரோ. “இந்த தேசத்தின் முயற்சி முழுவதும் மேனேக்கிச் செல்லவில்லை; மேற்கு நோக்கி ஓரிகான், காலிஃபோர்னியா, ஜப்பான் முதலிய பகுதிகளுக்குச் செல்வதைக் கண்டு நான் சிறிதும் அக்கறை கொள்ளவில்லை... ...இந்த முயற்சியில் ஆக்கச் சிந்தனையோ, அன்றி ஒரு சிறந்த நல்லுணர்ச்சியோ இல்லாமையோடு யாரும் தம்முடைய நல்லுயிரைப் பலியிடுவதற்குரிய மதிப்பும் இதில் ஒன்றும் இல்லை... ...தம்முடைய குறிக்கோளை நோக்கி அவர்கள் செல்லட்டும்; ஆனல் அது என்னுடைய குறிக்கோள் அன்று” என்று அவர் கூறியுள்ளார்.

தோரோவின் இந்த விவாதத்தின் வலிமை ஓர் உண்மை நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டது. தம் கருத்துக்களை வெளியிடு முன்னர், அவற்றைச் சோதனை செய்து பார்த்தார். அவருடைய வார்த்தைகள் அர்த்தமற்ற வெறுஞ் சொற்கள் அல்ல. தம்முடைய வாழ்க்கையிலேயே இலாபத்தோடும், மகிழ்ச்சியோடும் வாழ்ந்து, தாம் கண்ட புதிய முறையான எளிய வாழ்வை மக்களுக்கு எடுத்துரைத்தார்.

செயல், செயலின்மை என்ற இரண்டையும் பற்றி ஹிந்து சாத்திரங்கள் கூறியவற்றை வைத்துக் கொண்டு வாழ்க்கைக்கு ஏற்ற ஒரு வழியை அவர் கண்டு பிடித்தார். அண்டை அயலார் பயனற்றது என்று கூறினாற்கூட, அது பற்றிக் கவலைப்படாமல், ஒவ்வொரு தனி மனிதனும் தனக்கென ஒரு வழியைக் கண்டு பிடித்து, அதனைப் பின்பற்ற வேண்டும். இத்தகைய ஒரு வழியைப் பின்பற்ற வேண்டுமாயின், அதற்கு சுதந்திரமான திட மனம் வேண்டும்; ஆனால் அத்தகைய மனமோ மிகமிக அபூர்வமானது. "சிந்தனையளவிலாவது தன்னிச்சையானவரைக் காண்பது எவ்வளவு கடினமானது? சட்டப்படி நாம் வாழ்கிறோம். சிலர் படுக்கையே கதி எனக் கிடைக்கின்றனர்; ஆனால் அனைவரும் உலகமே கதி எனக் கிடக்கின்றனர். என் பக்கத்து வீட்டுக்காரரை, அவர் எவ்வளவு அறிவுடையவராயினும் காட்டிற்கு அழைத்துச் சென்று, மக்களுடைய நிறுவனங்கள் பற்றி அவர் ஏற்கெனவே கொண்டிருக்கும் எண்ணங்களை உதறிவிட்டு, இயற்கையைத் திறந்த மன நிலையுடனும் புதிய பார்வையுடனும் காணுமாறு கூறுகிறேன். ஆனால் அவரால் அது முடிவதில்லை. ஏனெனில்,அவர், தம் பழைய மரபுகளையும், கற்பனைகளையும் விட்டுவிடத் தயாராயில்லை. அரசாங்கங்கள், கல்லூரிகள், செய்தித் தாள்கள் என்பவை கற்பாந்த காலத்திலிருந்து கற்பாந்த காலம் வரை நீடித்திருக்கும் என அவர் கருதுகிறார்" என்று எழுதியுள்ளார்.

செய்தித் தாள்களின் அச்ச மனப்பான்மை தோரோவுக்கு வெறுப்பை அளித்தது. "டைம்ஸ்" பத்திரிகையைப் (காலம் என்ற பொருளைத் தரும் இச் சொல்) படிப்பதை விட்டு விட்டுக் காலங் கடந்தவற்றை (Eternities)ப் படியுங்கள்" என்று அவர் கூறியுள்ளார். "முக்கியமான விஷயங்களாகிய வாழ்வு, மரணம் நல்ல நூல்கள் என்பவை பற்றி, ஒரு குழந்தையின் நினைவு என்ன என்பதை வெளியிடுவதுகூட மிகவும் துணிச்சலான காரியம் என்று கருதி மிகச் சமீப காலத்தில் வெளியான ஒரு பத்திரிகை அதனை வெளியிட அஞ்சுகிறது. மிகவும் கோழைத்தனமுடைய பத்திரிகையைப்போலவே, துணிபுடைய பத்திரிகையுங்கூட இவற்றை வெளியிட மதப் பூசாரிகளின் அனுமதியைக் கோருகிறது. ஏசுநாதருக்கும், சமயத் தலைவர்கட்கும் போராட்டம் நடைபெற்ற காலத்தில் இப் பத்திரிகை இருந்திருப்பின், அப்

பொழுதுகூடப் பூசாரிகளின் கருத்தை மட்டும் வெளியிட்டு விட்டு ஏசுநாதரின் கருத்துக்களை மறைத்தே இருக்கும்" எனவும் அவர் எழுதியுள்ளார்.

தோரோ தம்முடைய அனுபவம் முதிர்ந்த நாட்களில், மனிதர்கள் எவ்வாறு வாழ வேண்டும், தாம் எவ்வண்ணம் வாழ வேண்டும், நேர்மையற்ற அரசாங்கத்திடம் நேர்மையுள்ள மனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பன போன்ற பிரச்னைகளை ஆராயும் நிலையில், சமுதாய சீர்திருத்தவாதியாக இருந்ததை நாம் கற்பனை செய்து பார்க்கக் கூடும். ஆனால், இயற்கை வல்லுநராகிய தோரோ எப்பொழுதும் வளர்ச்சியடைந்து கொண்டே இருந்தார். நீதி, ஒழுக்கம் பற்றிய அவருடைய எழுத்துக்களும், சொற்பொழிவுகளும், அவருடைய நேரத்தில் ஒரு சிறு பகுதியையே எடுத்துக் கொண்டன. அவருடைய பிற்கால நாட்குறிப்பைக் கண்டால், கூர்ந்து நோக்குவதிலும், அவற்றைக் குறிப்பதிலும் எவ்வளவு நேரத்தைச் செலவிட்டார் என்பதை அறிய முடியும். காங்கார்ட்டைச் சுற்றிச் சுற்றுலாச் செல்வது தொடர்ந்து நடைபெற்றது. அன்றியும் ஒரொரு சமயம் நீண்ட தூரம் சென்று மீண்டார்; 1853, 1857 ஆகிய ஆண்டுகளில் "மான்" காடுகட்கு சென்று மீண்டார்; 1856 இல் வெர்மாண்ட்டில் ப்ரேட்டில் போர்ரோ வின் அருகிலுள்ள ஃபால் மலைகளில் தாவர ஆராய்ச்சி நடத்தினார்; 1857 இல் கேப் காட் என்ற இடத்திற்கு மறுமுறை சென்று மீண்டார். 1858 இல் இரண்டு முறை மலை ஏறி மீண்டார்; இவற்றுள் ஒரு முறை ப்ளேக் என்பவருடன் மொனுட்னக் என்ற இடத்தில் இரு இரவுகளைக் கழித்தார். மற்றொரு முறை எட்வின் ஹோர் என்பவருடன் ஒயிட் மலைகளை ஆராய்ந்து வந்தார். 1860 இல் எல்லரி சேனிங்குடன் மொனுட்னக் என்ற இடத்தில் ஐந்து இரவுகளைக் கழித்தார்.

தோரோவின் காலத்தில், விலங்கு இயல் நன்கு வளர்ச்சியடையாமையின், அடையாளம் காண்பதிலும் தொகுப்பதிலுமே கழிந்தது. வெளி இடங்களிற் சென்று மாதிரிப் பொருள்களைச் சேகரிப்பவர்கள் நிறைந்திருந்தனரே தவிர, விலங்குகளின் நடத்தையைக் கவனிக்கிற தற்கால முறை பழக்கத்திற்கு வரவில்லை. விஞ்ஞான

அடிப்படையில் இயற்கை வல்லுநராக இருந்த சிலரின் விருப்பத்திற்கேற்ப, தோரோவும் சில மாதிரி விலங்குகளைச் சேகரித்த போதிலும் அதில் அவர் மகிழ்ச்சி காணவில்லை. 1854 ஆகஸ்டில் ஓர் ஆமையைக் கொன்று மாதிரிப் பொருளாகச் சேர்க்க நேர்ந்ததை ஒட்டி, அவ்வாறு செய்ததின் நியாயத்தை ஆய்ந்து கீழ்வருமாறு எழுதினார்: "விஞ்ஞானத்திற்காக இப்பொழுதுதான் ஓர் ஆமையைக் கொன்றேன். ஆனால் இந்தக் கொலைபற்றி நானே என்னை மன்னித்துக் கொள்ள முடியவில்லை. எவ்வளவுதான் இத்தகைய கொலைகள் விஞ்ஞானத்திற்குத் தேவைப்பட்டாலும், கவிஞனுடைய இக் கொலையை நேர்படுத்திக் காண முடியவில்லை. மேலும் கூர்ந்து நோக்கும் என்னுடைய இயல்புக்கு இது இடையூறு செய்யும். எவ்வளவு தான் ஆய்ந்து பார்த்தாலும், இச் செயலுக்கு என் மனம் ஒப்பவில்லை. என்னுடைய நாட்களை இச் செயல் அழித்து விடுகின்றது. ஓரளவு சுய மரியாதையையும் இழந்து விட்டேன். ஒரு கொலைகாரனின் அனுபவத்தை ஓரளவு பெற்று விட்டேன்."

சில மீன்களையும், பாம்புகளையும் கொல்லத் தம் மனத்தில் திடத்தை வரவழைத்துக் கொண்டாலும், வெப்ப ரத்தப் பிராணிகள் எதனையும் கொல்ல அவர் துணியவில்லை; எந்தப் பறவையையும் அவர் கொன்றதே இல்லை. இறந்த ஒரு பறவையைக் கையில் வைத்திருப்பதைக் காட்டிலும், உயிருள்ள பறவையைத் தம் மனத்தில் உள்ள அன்பில் வைத்திருப்பதே சிறந்ததாகும் என, பாஸ்டனிலுள்ள ஒரு பறவை வல்லுநரிடம் கூறினார். ஆனால் நாளாக நாளாகப் பறவைகளை அடையாளம் கண்டு கொள்வது மிகவும் கடினமாகி விட்டமையின் (அவரிடம் இருந்ததெல்லாம் சக்தி குறைந்த ஒரு தொலைநோக்காடிதான்) தாவர இயலிலேயே அவருடைய கருத்தைச் செலுத்தி, உள்ளூர்த் தாவரங்களையே தம்முடைய சேகரத்தில் சேர்த்து வந்தார். இயற்கை வல்லுநர் என்ற பட்டத்தை ஓரளவு பெற்றாராயினும், விஞ்ஞானிகள் கூட்டத்தில் இருப்பதற்கு எப்பொழுதுமே ஓரளவு கூச்சப்பட்டார். எவ்வளவுக்கெவ்வளவு ஒருவர் புற நிலையில் தம்மைப் பிரித்துக் கொண்டு, குறிப்பிட்ட சில துறையில் தம் முழுக் கவனத்தையும் செலுத்துகின்றாரோ, அவ்வளவுக்கவ்வளவு

ஆன்மிகத் துறையில் அவர் வறுமையடைந்து விடுகின்ருர் என அவர் நம்பினுர். ஒரு மனிதன் எவ்வளவு விழிப்புடன் உள்ளான் என்பதுதான் முக்கியமே தவிர இயற்கையைப் பட்டியல் செய்வதில் எவ்வளவு சாமர்த்தியமுடையவன் என்பது முக்கியமன்று. வல்லுநர்களுடைய விஞ்ஞானக் கூக்குரல்களைக் கேட்டு, தோரோ ஏமாற்றமடைந்தார். "வாழ்கின்ற எந்தப் பொருளையும், இயல்பாகவும் எளிமையாகவும் அனைவருக்கும் புரியும் மொழியில் விளக்கி விடலாம்" என அவர் எழுதியுள்ளார்.

இயற்கையை முழுமையாக அறிந்துகொள்ள விரும்பினுர் தோரோ. மனிதனைச் சுற்றியுள்ள பொருள்களின் இயல்பை அறிந்தால், மானிட வாழ்க்கையின் அடிப்படையையும் அறிய முடியும் என்று அவர் நம்பினுர். இதனைச் செய்ய வேண்டுமாயின், இயற்கையிடம் நேரடியாகச் செல்ல வேண்டும்; இயற்கை கற்பிக்கத் தொடங்கு முன்னர், அதனிடம் ஓர் உறவு மனப்பான்மை இருத்தல் வேண்டும். விஞ்ஞானிகள் அறிவை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டே சென்ருலும், வாழ்க்கையைப் பற்றி நாம் என்ன தெரிந்து கொள்ள வேண்டுமோ, அதைத் தெரிந்துகொள்ள முடிவதில்லை; அதாவது மகிழ்ச்சியுடன் கூடிய முழு வாழ்வை எவ்வாறு வாழ்வது என்பது பற்றியும் "இரண்டு துருவங்களிலும் விழிப்புடன் இருப்பது" எவ்வாறு என்பது பற்றியும் அவர்கள் ஒன்றுங் கூற முடியவில்லை. "இருண்ட காடுகளில் வளர்ந்து, இலையை அல்லாமல் ஒரு பூவையும் பூக்காத செடிகளைப் போன்றவர்கள் விஞ்ஞானிகள்" என்று கூறுகிருர் அவர். அவருடன் வாழ்ந்தவர்கள் கனவுகூடக் காணுத அளவில், ஆழமானதும் நிறைவுடையதுமான வாழ்வுக்கு, இயற்கை வழி காட்ட வேண்டும் எனத் தோரோ விரும்பினுர். வாழும் உயிர்களையும், அவற்றின் சுற்றுச் சூழலையும் கண்டு, நேரடியாக அவற்றிலிருந்து உணர்வு முறையில் அறிய விரும்பினுரே தவிர, அவற்றை முதலில் அறிந்துகொண்டு மறைமுகமாக இதனை அறியவிருப்பமில்லை. தாம் இறப்பதற்கு இரண்டு ஆண்டுகள் முன்னர்ப் பின்வருமாறு எழுதினுர்: "ஓர் அழகிய கழுகு, தம் தலைக்கு மேல் பறந்து செல்வதைக் கண்டு வியக்கும் சிலர், அதனைத் தம் கைகளில் ஏந்த வேண்டும் என விரும்புகின்றனர். ஆனுல் இவ்வளவு தூரத்தில் இருக்கும்

பொழுதுதான் அதனைச் சிறந்த முறையில் காண முடியும் என்பதையும், வேறு வழிகளிற் காண முடியாது என்பதை யும் அவர்கள் அறிவதில்லை. முற்றத்தில் கூச்சலிடுவது தவிர, சிறைப்பிடிக்கப்பட்டுள்ள பருந்து, வேறு என்ன செய்யும்? முற்றத்தில் ஒரு பருந்தைப் பார்ப்பதனால் நான் அறிஞனாகிவிட முடியாது. அதனுடைய சிறகின் நீளத்தைத் அறிய நான் விரும்பவில்லை.''

பறவைகளைக் கவனிப்பதற்கோ, அன்றிச் செடி கொடி கள் சேகரிப்பதற்கோ, எதற்காகப் புறப்பட்டாலும் இறுக்கி மூடிய கைகளுடன் நடந்தோ அன்றி வேகமாகப் படகை வலித்தோ தோரோ செல்வதுண்டு. அவருடைய, செயல் படும் ஒருமுகப்பட்ட மனப்பாங்கையே, இது உணர்த்தியது. ஒவ்வொரு முறை வெளிச் செல்லும்போதும், அவர் புத்தம் புதிய மனக் கிளர்ச்சியுடன் புறப்படுவதைக் கண்டால், இயற்கையும் அவரும் பல காலமாக ஒன்றாகவே சேர்ந்து பணி புரிகின்றனர் போலும் என்று தோன்றும். காங்க்கார் டில் உள்ள எல்ம் மர நிழலில் அமைந்த சாலை வழியே சென்று வயல்களுக்குள் அவர் மறைந்து போவதைக் கண்ட அக் கிராம மக்கள், மிகச் சாதாரண ஒரு மனிதராகவே அவரை நினைத்தனர். உண்மையைக் கூறுமிடத்துக் காடு கள், ஆறுகள், சதுப்பு நிலங்கள், புதர்கள், மலைப்பகுதிகள் ஆகியவை, பிறர் விளங்கிக் கொள்ள முடியாத முறையில் அவரிடம் தொடர்பு கொண்டிருந்தன. ஊரின் எல்லைக்கு அப்பாற்பட்டுச் சிவப்பு இந்தியரைப் போல வாழும் மக்க ளின் ஒரு சிலரை மட்டுமே அவர் அப் பகுதிகளில் சந்திப் பதுண்டு.

சிவப்பு இந்தியர் ஒருவரையோ, அன்றி அவர்கள் போன்ற ஒருவரையோ அவர் சந்திப்பதில் மிகவும் விருப்பங் காட்டினார். காங்க்கார்டு கிராமக் குடியானவர் சிலரிடம் காணப்பட்ட சிவப்பிந்தியக் குறிகளையும், இயல்புகளையும் அவர் குறித்து வைத்தார். ஆனால் இவை அனைத்தையும் விட அவர் மிகுதியும் விரும்பிப் போற்றியது, என்றோ ஒரு நாள் அவர் சந்திக்கின்ற தூய சிவப்பிந்தியனை யாகும். "தூய்மையான அந்தச் சிவப்பிந்தியன் பைன் மரங்களின் இடையேகூடத் தன் காட்டுப் பார்வையுடன் காணப்பட் டான். மெஸகூஸிட்ஸில் காணப்பட்ட கடைசி இனத்தவர்

களில் அவன் ஒருவன்....'' பற்பல குழந்தைகள் கைகொட்டி நகைத்தாலும் அவற்ருல் கலவரப்படாமல், ''அழிந்து போன தன் இனத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து கொண்டு, தனியே வாழும் சிவப்பு இந்திய மனை யாட்டி ஒருத்தியைப்'' பற்றித் தம் வருத்தத்தை அவர் வெளியிட்டுள்ளார். அவள் '' அம் மண்ணின் மிகச் சிறந்த வர்களுள் ஒருத்தியாய் வாழ்ந்து வருகிருள்.'' 'மான்' காடு களில் அவருடன் வந்தவர்களும், அவருக்கு வழி காட்டி யாய் அமைந்தவர்களுமாகிய சிவப்பு இந்தியர்களைப் பற்றி விவரமாய் எழுதுவதில் மகிழ்ச்சி கொண்டார். அவருடைய பிரயாணக் கட்டுரைகள் அனைத்தினுள்ளும், 'மான்' காடு களிற் பிரயாணம் செய்தது பற்றியும், கடாதின் மலைப் பிர யாணம் பற்றியும் எழுதப் பெற்றவையுமே மிகச் சிறந்தவை எனலாம். இனி, ''அம்புகள் மக்கிப்போன மணற் காட்டில்'' அவர் சுற்றி அலைகையில்தான் சிவப்பு இந்தியர்களை நினைவு கூர்ந்தார் என்று கருத வேண்டியது இல்லை. 'மான்' காடு களில் சிவப்பு இந்தியர்கள், அவர்கட்குச் சொந்தமான விக்வாம் கிராமத்தில் வாழ்கிருர்கள். அங்கு, அவர்கள் தம் படகுகளைச் செலுத்திக் கொண்டும், பழமையான இசைப் பாடல்களை இசைத்துக் கொண்டும், புராதன முறையி லேயே வேட்டையாடியும், மீன் பிடித்தும், பழைய மரபைச் சேர்ந்த இந்திய நாய்களால் தம் குடிசைகளைப் பாதுகாத்துக் கொண்டும் வாழுகின்றனர். இதுவரை யாரும் நுழையாத கன்னிக் காடுகளில் நுழைந்து வெகுதூரம் சென்று, கரிப்பூ மான்களும், கரடிகளும், ஓநாய்களும் ''உயிருடையனவும், வீழ்ந்தனவும், அழுகியனவுமான மரங்களில், மானிடன் வாசனை இல்லா இடங்களில்'' வாழ்வதைக் கண்டார். ஒரு பாசறையிலிருந்து மற்ருெரு பாசறைக்குப் பழைய ஆற்றுப் பாதை வழியே மாளாத காட்டு வழிகளிற் சென்று, ஸ்ப்ரூஸ், செடார், ஹெம்லக், பர்ச் ஆகிய மரங்கள் நிறைந்த பகுதி களிற் சுற்றிஞர்.

மரம் வெட்டுபவர் தங்குமிடங்களில் தங்கியும், வேக மாகச் செல்லும் நீரில் படகு ஓட்டக் கற்றுக்கொண்டு நீர் வீழ்ச்சிகளைச் சுற்றி நீண்ட தூரம் சென்றும், நிலவொளியில் ஏரிகளில் பல மைல் தூரம் படகு செலுத்தியும், திறந்த வெளியில் விறகுகளைக் கொளுத்தி அவற்றினிடையே தங்கி ஓஸ்ப்ரேகளும், மொட்டைப் பருந்துகளும் பறப்பதைப்

பகலிற் கண்டும், ஓநாய்களும் ஆந்தைகளும் அலறுவதை இரவிற் கேட்டும் காலங் கழித்தார். அவரிடமிருந்த வேட்டை இயல்பு மீதூர்ந்தமையின் ட்ரௌட், ரோச் ஆகிய மீன்களைப் பிடித்தார். முன்னர் அவர் கண்டிராத அளவில், பெரியனவாக இருந்த இந்த மீன்கள் எவ்வளவு விரைவாக அவர் தூண்டிலில் இரை போட்டாரோ அவ்வளவு விரைவாக அதனை உண்டன. இதிற் கிடைத்த அனுபவத்தின் புதுமை, மீன்களின் அழகு, கற்பனைக் கெட்டாத இயற்கை அழகு ஆகியவை காரணமாக, அன்றிரவு செடார் மரக் கிளையில் அவர் படுத்திருக்கும்பொழுது, இவை அனைத்தும் கனவா அன்றி நனவா என்று பன்முறையும் ஐயங் கொண்டார். "இந்த ஐயத்தைப் போக்கிக் கொள்ள, என் நண்பர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் நேரத்திலேயே எழுந்தேன். பொழுது இன்னும் விடியவில்லை. நிலவொளியில் மேகக் கூட்டம் இல்லாமல் 'க்டான்' (Ktaadn) விளங்கியது. இரவின் அமைதியை ஓடைகளின் சலசலப்பு ஓசை ஒன்றே கலைத்தது. கரையில் நின்றபடியே என் தூண்டிலை மறுபடியும் நீரில் வீசினேன். கனவோ, கற்பனையோ என்று ஐயப்பட்டது உண்மையாகிவிட்டிருந்தது. வளைவுக் கோடுகளையுடைய ட்ரௌட் மீன்களும், வெள்ளி போன்ற நிறமுடைய ரோச் மீன்களும் பறவை மீன்களைப் போல நிலவொளியில் தாண்டிக் குதித்து விளையாடின" என்று கூறியுள்ளார்.

அவருடன் வந்திருந்தவர்கள் ஒருவரும் இதுவரை சென்று கண்டிராத பகுதியினுள் இப்பொழுது நுழைந்தனர். ஆற்றை விட்டு நீங்கி, மலைப் பகுதியை நோக்கி மேடு பள்ளமான பாதை வழிச் சென்றனர். மலை ஏறுவதில் அதிகப் பழக்கமுடையவராகலின் தோரோவே இக் குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்றார். திசை காட்டும் கருவி மூலம் தம் இருப்பிடத்தை அறிந்துகொண்டு, காட்டினுள் நுழைந்து, பல மைல் தூரம் அக் கூட்டத்தை அழைத்துச் சென்றார். அடர்ந்த ஓக் மரங்களும், பர்ச், ஸ்ப்ரூஸ் மரங்களும் நிறைந்த பகுதிகளில் நிற்காமல் சென்று, மாலை நேரத்தில் மலையடிவாரத்தைச் சேர்ந்தார். மறுநாள் பிறர் யாரும் உடன் வராமல், தாம் மட்டும் பனி படர்ந்த சிகரத்தை அடைந்தார். "நன்கு பதியாமல் ஆடிக் கொண்டிருந்த அந்தப் பெரும் பாறைகளின்மேல் நான் மட்டும் தனிமை

யாக மேகங்களை நோக்கி ஒரு மைல் தூரம் ஏறிச் சென்றேன். சுற்றிலும் துல்லியமாக இருந்தாலும், சிகரத்தில் பனி படர்ந்தே இருந்தது. அந்த மலை முழுவதுமே சிறு சிறு பாறைகளால் ஆனது போலிருக்கிறது. ஒரு காலத்தில் பாறைகள் மழைபோல் வீழ்ந்து, அவை மலையாகக் குவிந்தது போலிருந்தது. எந்தப் பகுதியிலும் ஒரு பாறையும் ஸ்திரமாக இல்லை. அவை ஒன்றின் மேல் ஒன்ருகச் சாய்ந்து கொண்டும் ஆடிக்கொண்டும் இருந்தமையின், அவற்றின் இடைவெளியில் மண்ணே, இருக்கம் செய்யும் பொருளோ எதுவும் இல்லை. புதிய ஓர் உலகத்திலிருந்து எறியப்பட்ட பொருள் ஒன்றை இயற்கை தன் ரஸவாதத்தால் மாற்றியமைத்து, இப் பூமியின் பள்ளத்தாக்குகளாகவும் சமவெளிகளாகவும் ஆக்கினது போலக் காணப்பட்டது."

முதன் முறை 'மானு' க்குச் சென்று மீண்ட பிறகு, தம் வால்டன் குடிசைக்கு வந்து தங்கிய தோரோ 'க்டான்' என்ற தலைப்பில் இந்தப் பயணத்தை ஒரு கட்டுரையாக வரைந்தார். ஹோராஸ் க்ரீலி இதனை அவருக்காக வெளியிட்டார். பிற்காலத்தில், காட்டில் ஏகாந்த வாழ்வு வாழும் அமெரிக்க மான்கள், சிவப்பிந்தியர்கள் ஆகியவை பற்றி மேலும் அறிந்துகொள்வதற்காக மறுபடியும் இரு முறை சென்று வந்தார். அவரை மிகவுங் கவர்ந்த ஜோ போலிஸ் என்ற சிவப்பிந்திய வழிகாட்டியைச் சந்தித்தார். அடக்கம், சுறுசுறுப்பு, சூழ்ச்சி, வேட்டை அறிவு, வழி காண்டல், படகோட்டல் என்பவற்றுடன், விலங்குகள் பற்றிய நுண்மையான அறிவு என்ற இந்தியர்கட்குத் தேவையான அனைத்தையும் ஜோ பெற்றிருந்தார். என்ருலும் நாகரிக வாடையில் வளர்ந்து ஓரளவு பழக்கப்பட்டுப் போனவராகலின் ஜோவை, தோரோ இரண்டாந்தரச் சிவப்பிந்தியராகவே ஏற்றுக்கொண்டார். முதல் தரமான சிவப்பிந்தியர் மிகவும் காட்டியல்பு பெற்றிருக்க வேண்டும் எனக் கற்பனை செய்திருந்தார். "மரத்தைக் குடைந்து ஸ்ப்ரூஸ் மரத்தின் வேரினுல் சேர்த்துத் தைக்கப் பெற்ற படகில், ஹார்ன் பீம்களையே துடுப்பாகப் பயன்படுத்திக் கொண்டு அவன் செல்கிருன். அவனுடைய படகிலிருந்து என்னுடைய படகு வரையிலுள்ள தூரத்தைப் பனிப்படலம் மறைப்பதால் அவனைத் தெளிவாகக் காண முடியவில்லை. மரங்களைப் பயன்படுத்தி வீடு கட்டாமல் தோலைப் பயன்

படுத்தியே கொட்டகை போடுகிருன். சூடான ரொட்டி யையோ அன்றி இனிப்புப் பண்டங்களேயோ உண்ணுமல், அமெரிக்க மான் இறைச்சி, கரடியின் கொழுப்பு ஆகிய வற்றையே உண்கிருன். மில்லியாஞெகெட் வழியே வழுக்கிச் சென்று என் கண்ணிலிருந்து மறைந்து விடுகிருன்..... சிவப்பு முகமுடைய அவனும் தன் விதியை எவ்வாருே கழிக் கிருன்'' என்று கூறியுள்ளார்.

எழுத்துக் கலேபற்றித் தோரோ நிரம்பக் கூறுகிருர். "என்னுடைய வாக்கியங்கள், துப்பாக்கி சுடுபவன் குறி பார்ப்பதுபோலக் கூர்மையாகவும். சாவதானமாகவும் அமைக்கப்படுகின்றன'' என்று கூறியுள்ளார். ஒரு நல்ல வாக்கியத்தை அமைப்பதென்பது ஹெர்க்குலிஸின் முயற்சி போல அத்துணைக் கடினமானதாயினும், அதற்கு எடுத்துக் கொள்ளும் கஷ்டம் பயனுடையதாகும் எனக் கருதிஞர். சுவரின்மேல் வளேயாமல் சாய்ந்து கொண்டு நின்ருலும் நிற்பவன் முகத்தில் எவ்விதத் துன்பக் குறியும் காணப்படா ததுபோல, நீங்கள் வாக்கியத்தை அமைக்க வேண்டும். ஓர் எழுத்தாளனுடைய சொற்கள் அவனுடைய நேரடி அனுபவத்திலிருந்து பிறக்கவில்லேயாஞல் அவன் காலத்தை வீணடிக்கிருன் என்பதே பொருள். சொற்களின் பின்னே உணர்ச்சி இல்லேயாஞல் அச் சொற்கள் பயனற்றவை. நாமாக ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி எழுதுவது வீண். அந்த விஷயம் நம்முடைய மனத்தில் ஒரு கிளர்ச்சியை ஊட்ட வேண்டும். ஒவ்வொரு முயற்சியும் வெற்றி பெற வேண்டுமாயின் அதன் பின்னர் அன்பின் கூட்டு முயற்சி இருத்தல் வேண்டும் என்றும் கூறியுள்ளார். அவருடைய அண்டை வீட்டில் வாழ்ந்த குடியானவராகிய ஜ்யார்ஜ் மினேட் என்பவருடைய, எதஜேயும் விவரித்துப் பேசும் வன்மையைப் பெரிதும் போற்றுவார் தோரோ. "மினேட் பயன்படுத்தும் மிக அழகிய ஆங்கிலச்சொற்கள், என் வாழ்க்கையில் நான் முன்னர்க் கேட்டிராதவை யாயினும், நிச்சயம் ஆங்கில அகராதியில் இடம் பெற்றி ருக்கும்......சாதாரண மனிதன் ஒருவன் வால்டன் குட்டை யைப் பற்றி என்னிடம் பேசிஞல், ஆழமற்றதும், கிளர்ச்சி யூட்டாததும், அழகிய வண்ணங்களே வெளி விடா ததுமான ஒரு குட்டையை நான் மனக் கண்ணில் காண் கிறேன். ஆஞல், அதே குட்டையைப் பற்றி மினேட்

பேசும்பொழுது பச்சை நிறமுடைய நீரில் குன்றுகளின் நிழலைக் கூடக் காண்கிறேன்; ஏனென்றால் அவர் தம் அனுபவத்திலிருந்து அதனைப் பேசுகிறார். அவர் சென்ற காட்டை வருணிக்கும்பொழுது காட்டில் கிடக்கும் சருகு களின் சலசலப்பைக்கூடக் கேட்க முடிகிறது'' எனக் கூறி யுள்ளார். ஒரு வாக்கியம், ஒருவன் ஓட்டுகின்ற ஏர்ச் சால் போல, நேரடியாகச் சென்று முடிய வேண்டும் என்று கூறும்பொழுது மினைட்டைப் போன்றவர்களை நினைவில் கொண்டிருப்பார் போலும். ''ஒரு வாக்கியம் கிளர்ச்சியூட்ட வேண்டுமானால், அது உணர்ச்சியுடன் எழுதப்பட வேண்டும். உடம்பும் பொறிகளும் ஒன்று சேர்ந்து மனத்துடன் உழைக்க வேண்டும். வெளிப்பாடு என்பது முழு மனிதனும் தொழிற்பட வேண்டியதொன்றாகும்'' என்றார் அவர். 'வால்டன்' என்ற நூலை எழுதுவதற்குப் பல்லாண்டுகள் முன்னரே தாம் எத்தகைய நடையை எழுத வேண்டும் எனத் தோரோ முடிவு செய்துவிட்டார்: ''வாக்கியங்கள் சொற்கள் மூலம் அறிவிப்பதைக் காட்டிலும் அதிகமாகக் குறிப்பால் உணர்த்த வேண்டும். அவற்றில் ஒருவிதக் கற்பனை நிறைந்திருக்க வேண்டும். பழைய காட்சிகளைக் காண்பதுபோன்ற நினைவை உண்டாக்காமல், புதிய எண்ணங்களைத்தூண்ட வேண்டும். ரோம் நாட்டில் இருந்த நீர் மதகுகளைப் போல வாக்கியங்கள் நிலைத்தவை யாய், பல்வேறு சிந்தனைகளைகளைத் தோற்றுவிப்பனவாய் இருத்தல் வேண்டும். இத்தகைய வாக்கியங்களை அமைப் பதே எழுத்துக் கலை எனப்படும். வாழ்க்கையின் பெரும் பகுதியையும், பல பக்கங்களையும் செலவிட்டு எழுதப் பெறுகின்ற எழுத்துக்கள், ஒரு பக்கத்தின் குறுக்கேயும், நெடுக்கேயும் பெரிய மரத் துண்டங்கள் போல் இருத்தல் வேண்டும். ஒரு வாக்கியத்தில், மற்றொரு வாக்கியத்தின் விதை அமைந்திருத்தல் வேண்டும். பன்னிப் பன்னி ஒன்றையே அவை கூறக் கூடாது. அதன் எதிராக, அவை புதியதொரு ஆக்கப் பொருளாக அமைதல் வேண்டும். இவ்வாறு எழுத ஒருவன் தன் உடைமைகள் அனைத்தையும் விற்றாலுந் தகும்'' என்றார் அவர். தோரோவைப் பொறுத் தவரை, நடையே மனிதனை உணர்த்தும். ''எவ்வளவு சிறந்த முறையில் எழுதுகிறீர்களோ அவ்வளவு சிறந்தவர் களாக இருப்பீர்கள். ஒவ்வொரு வாக்கியமும் நீண்ட சிந்த

னையைக் குறிப்பதாகும். முதற் பக்கத்திலிருந்து இறுதிப் பக்கம் வரை ஆசிரியனுடைய பண்பாட்டையே நூல் விளக்கி நிற்கிறது.'' என்று கூறியுள்ளார். இதனால் அவர் அச்சுப்படிகளை திருத்துவது கூட இல்லை.

*   *   *   *

காங்க்கார்டின் தலைமை நில ஆய்வாளராகவும், இயற்கை வல்லுநராகவும் இருந்த தோரோ, விவசாயத்திலும் அதிக அனுபவமுடையவர். அண்டை அயலார்கட்கு, அவர்களுடைய நிலங்களைப்பற்றிக்கூடப் பல நுணுக்கங்களை எடுத்துக் கூறினார். பிறருடைய நிலங்களின் உள்ளே நுழைந்து திரியும் சோம்பேறி என அவரைக் கருதியவர்கள் பலரும், இறுதியில் அவரைப் போற்றுபவர்களாகவும் நண்பர்களாகவும் மாறினர். கற்பனை சிறிதும் இல்லாமல், வெறும் உடல் உழைப்பை மட்டும் மேற்கொண்ட ந்யூ இங்கிலாந்து மக்கள் பலரும், தோரோ ஓயாமல் அலைவதில் ஏதோ காரணம் இருக்க வேண்டுமென முடிவு செய்தனர். கழுகுகளையும், வாத்துக்களையும் வேறு இனம் பிரித்து அடையாளம் அறிவதற்காக அவரிடம் கொணர்ந்தனர். புதிய தாவரங்களை அவருக்குக் காட்டி அவைபற்றி அவர்கள் அறிந்திருப்பதை அவரிடங் கூறினர். ''எப்பொழுதும் தோரோ நேர் வழியிலேயே சென்றார்; பிறரிடம் அன்பாகப் பழகுவதில் சமர்த்தர்... ...என்னுடைய வயலை அவர் கடந்து செல்கையில் அவரிடம் சென்று பேச வேண்டும் என விரும்புவேன். நான் எவ்வளவு நேரம் பேசினாலும் அவரும் இருந்து பேசுவார். அவர் பேசுபவை அனைத்தும் புதுமையாக இருக்கும்'' என ஒரு குடியானவர் தோரோவைப்பற்றிக் கூறியுள்ளார். கற்றறிவுடைய தம் நண்பர்கள் பலரைக் காட்டிலும், இந்தக் கிராமத்தார்களைத் தோரோ மிகவும் போற்றி மதித்தார் என்பதையும், அவர்கள் கூறும் சொற்களை எல்லாம் தம்முடைய குறிப்புப் புத்தகத்தில் போற்றிப் பதிந்து கொண்டார் என்பதையும் அவர்களில் சிலரேனும் அறிந்திருப்பின் எவ்வளவு வியப்படைந்திருப்பார்கள் என்பதில் ஐயமே இல்லை!

அதில் நுழைந்து உழைப்பவர்கட்குத் தோரோவின் நாட்குறிப்பு ஒரு சுரங்கம் போல் பயனளித்துள்ளது எனினும், இன்றுங்கூட அதிற் புகுந்து உழைத்தால்

மேலும் ஒன்றிரண்டு நூல்கட்காவது விஷயம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. தோரோவின் நாட்குறிப்பிலிருந்து, அவர் காலத்தில் வாழ்ந்த அண்டை அயலார் பற்றியுள்ள குறிப்புகளைத் தொகுத்து, "காங்க்கார்டின் மக்கள்" என்ற பெயரில், ஃப்ரேன்ஸிஸ் எச். ஆலன் என்பார் வெளியிட்டுள்ள நூலைவிட மகிழ்ச்சி தரக் கூடிய நூல் வேறு இருக்க முடியாது. காங்க்கார்டில் வாழ்ந்த அனைவரிடமும், அவர்கள் அறிவாளிகள், வேட்டையாடுபவர், ஊர் சுற்று பவர், இடம் பெயர்ந்தோர், கலப்புச் சாதியினர், குடியான வர், மரம் வெட்டிகள், சோம்பேறிகள் என்ற தொகுப்பில் எதனைச் சார்ந்தவராயினும், அவர்களிடம் மிகுந்த பரிவும் ஆதரவும் காட்டியுள்ளார் என்பதைக் "காங்க்கார்டின் மக்கள்" என்ற நூல் அறிவிக்கும். ப்ருக்ஸ் க்ளார்க் என்ற அப்பாவி மனிதர், கோடரி ஒன்றை ஏந்திக் கொண்டு, கன வேகமாகச் சொல்வதைக் கண்ட தோரோ "காலணி இல்லாத அவர் கால்களில் பனிக் காற்றுப்படுவதைக் கண்டு அஞ்சித்தான் வேகமாய் போகிருர் போலும்" என்று கூறி யுள்ளார். இத்தகைய அப்பாவி மனிதர்களைக் காண்பதில் மிகவும் விருப்பங் கொண்டார் தோரோ. காலணியைக் கையில் கழற்றிச் சுமந்து செல்லும் ப்ருக்ஸ் க்ளார்க் அவற்றில் ஒன்றில் காட்டு ஆப்பிள்களையும், மற்ருென்றில் இறந்துபோன ராபின் பறவை ஒன்றையும் ஏந்திச் சென்ருர். அவருடைய கிழிந்த கோட்டும் கால்சிராயும் குஞ்சம்போல் தொங்கின. ஒரு சிரிய பையன் காற்றடிக்கும்பொழுது வெளியே சென்று என்ன நிகழ்ந்தது என்று பார்க்கச் செல் வதுபோல் கிளார்க்கும் சென்று வந்ததாகத் தெரிகிறது. மிகவும் இளைத்த உடலோடும், வாழ்க்கையின் அந்திம காலத்தில் உடம்பு இரண்டாக வளைந்துபோன குனிவிலும் மனக் கிளர்ச்சி குன்ருமல் மாலைக் காலத்தைச் செலவிடும் இவரைக் காண்பதில் மகிழ்ச்சி யடைகிறேன்" எனக் கூறி யுள்ளார் தோரோ.

வால்டன் காட்டில் மரம் வெட்டும் தொழிலை மேற் கொண்டு, தனிமையாக வாழ்க்கையைக் கழிக்கும் விநோத மான அலக் தெரியன் இருந்தார். "அவர் முரட்டுத்தன மான பெரிய, ஆனல், சுறுசுறுப்பில்லாத உடல் உடைய வர். வெயிலின் பழுப்பேறிய கழுத்தும், அடர்ந்த கேச மும், மந்தமான நீலநிறக் கண்களும் கொண்டவர். ஆன

லும், அவர் தம்முடைய மரங்களை வெட்டும்பொழுது பூமி மட்டத்திற்கே ஒழுங்காகக் கணக்கிட்டு வெட்டினார். அதிலிருந்து புதிய முளைகள் தோன்றும்பொழுது, வளமாக அவை வெளி வந்தன. வெட்டப்பட்ட அடிமரத் துண்டுகளின் மேல் சக்கரமில்லாத ஸ்லெட்ஜ் வண்டி தடையின்றிப் போகக்கூடிய முறையில் அழகாக வெட்டப்பட்டன அவை. தனிமையாகவும், அமைதியாகவும், சந்தோஷமாகவும் அவர் வாழ்ந்தார். அவருடைய நல்லெண்ணமும், போதுமென்ற மனமும் அவருடைய கண்களில் வெளிப்பட்டன. எளிதில் மகிழ்ச்சி அடைபவர். இயற்கை அவரைப் படைக்கும்பொழுதே வலிய உடம்பையும், அமைதியையும் அவருக்குத் தந்து, அவரைச் சுற்றிலும் மரியாதையையும், நம்பிக்கையையும் தாங்கும் தூண்களாகப் படைத்து விட்டமையின், அவர் எழுபது ஆண்டுகள் வரை குழந்தைபோல வாழ்ந்து விட்டார்......கியாதியுடையவரும் அறிவாளியுமான ஒரு குடியானவர் அவரைப் பார்த்து இந்த உலகம் மாறுதலடைய வேண்டும் என்று அவர் விரும்பவில்லையா என்று கேட்டாராம். வியப்பைக் காட்டும் ஒரு புன்சிரிப்புடன் தம்முடைய கானடா நாட்டு உச்சரிப்புடன், "இவ்வுலகம் இருக்கும் முறையிலேயே இதை நான் விரும்புகிறேன்" என்று கூறினாராம்.

சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்பவராகவும், சிக்கனமுடையவராகவும் இருந்து, வாழ்க்கையில் பெற வேண்டியவற்றுள் சிறந்தவற்றைப் பெற்றிருந்த ரூபன் ரைஸ் " மெள்ள வேலைகளைச் செய்தாலும் அவற்றின் பயனை அனுபவித்து" வாழ்ந்தார். வயல்களைச் சுற்றித் துப்பாக்கியோடும், நாயோடும் ஓயாது அலைந்து கொண்டிருந்த ஜ்யார்ஜ் மால்வின் என்பவரைத் தோரோ அடிக்கடி சந்தித்தார். அவரைப் பற்றி "மால்வினைச் சந்தித்த என் நல்லதிர்ஷ்டத்தைப் போற்றுகிறேன்......ஆனால் தம் தாயாருக்கு மால்வின் ஒரு பிரச்னையாகவே இருந்தார் எனினும் மலைப் பகுதிகளில் முளைத்துள்ள ரஸ்ஸெட் ஆப்பிளைப் போல எனக்குப் பொருத்தமாகவே இருக்கிறார். அவர் நடக்கும்பொழுது ஆடிக் கொண்டும், சட்டையைத் தொள தொளவென்று போட்டுக் கொண்டும், கால்களை ஓயாமல் இழுத்துக் கொண்டும் நடந்தார். அவர் என் காலத்தில் என்னுடன் வாழ்ந்த அயல் வீட்டார். அவர்

வேறு இனத்தையும் நான் வேறு இனத்தையும் சேர்ந்தவர்களாக இருப்பினும் எங்களுக்குள் போராட்டம் எதுவுமில்லை" என்று எழுதியுள்ளார். பில் வீலர் என்ற சோம்பேறி எப்பொழுதும் தொழுவத்திலேயே படுத்து உறங்குவார். அவர் "தனிமையாகவே வாழ்ந்தார்; எந்த வேலையையும் செய்வதில்லை; உறவினர் யாரும் இல்லை...... வாழ்வில் ஆசை எதுவும் கொள்ளவில்லை......பிறர் தம்மைப்பற்றிக் கூறும் புகழுரைகட்கும் கவலைப்படவில்லை......தோட்டக்காரன், எவ்வித விருப்பு வெறுப்பும் இன்றிப் பார்க்கும் தேரையைப் போல, உலகைப் பார்க்க அவருக்கு உரிமை இல்லையா?" என்று கூறியுள்ளார். ஒரு கண்ணின் பார்வையை இழந்துவிட்ட ஜான் குட்வின் எவ்வாறோ மீன்பிடித்தும், வெள்ளத்தில் மிதந்து வரும் மரக்கட்டையைப் பிடித்தும், எப்பொழுதாவது சில நேரங்களில் கூலி வேலை செய்தும், கடினமாக உழைத்தாலும் மகிழ்ச்சியுடனேயே இருந்தும் வாழ்ந்தார். காங்கார்டில் வாழ்ந்த மீனவர்களைப் பெரிதும் மதித்தார் தோரோ. கார்ஃபீல்ட், மைனர், பஃபர், ஹேநெஸ், போன்றோர் பிக்கரல், பர்ச், ஆகிய மீன்களைப் பற்றியும் ஆமைகள் பற்றியும் ஓயாது பேசுவதைக் கேட்டுச் சலிப்படையாமலே இருந்து வந்தார். இவர்கள் அனைவரும் ஒரு வகையான தத்துவ ஞானிகள் என்று அவர் கண்டார். "தம்முடைய காரியங்களில் மட்டும் கவனம் செலுத்துகிற இவர்கள், என் விஷயத்தில் தலையிடாத இவர்கள், எளிய அடக்கமான என் அயலார்களாகலின் இவர்களைப் பெரிதும் விரும்புகிறேன். வீயஸ், ஹோமர், ஏசு, ஷேக்ஸ்பியர் என்பவர்களிடம் மட்டுமல்லாமல் மினுட், ரைஸ், மால்வின், குட்வின், பஃபர் போன்றவர்களிடமும் நன்றி பாராட்டுகிறேன்" என அவர் எழுதியுள்ளார்.

இயற்கையைப்பற்றித் தெளிந்த அறிவுடைய ஒரு குடியானவர், நிறைந்த பரிவும், அறிவும் உடையவராக வாழ்ந்தார். வாழ்க்கை பற்றிய விஷயங்களில் எமர்ஸனும், ஹாதார்னும் கூட அவரிடம் ஆலோசனை கேட்கச் செல்வதுண்டு. சிறந்த கருத்துக்களை விவாதஞ் செய்வதில் விருப்பங் கொண்ட எட்மண்ட் ஹோஸ்மர் தோரோவுக்கு மிகவும் பழக்கப்பட்டவரானார். "வால்டன்" என்ற தம் நூலில் "நல்ல அறிவுடைய இவர் காட்டினிடையே நீண்ட

தூரத்தில் வாழ்ந்தாலும், சமுதாயக் கலப்பில் கலந்துகொள்வதற்காக ஊருக்குள் வருவார். தம்முடைய தொழுவத்திலிருந்து, ஒரு வண்டி எருவை எடுப்பதற்கு எவ்வளவு தயாராக இருப்பாரோ, அதேபோல, கோயிலிலிருந்தும் அரசாங்கத்திலிருந்தும் நீதியை எடுத்துக் கொள்ளத் தயாராக இருப்பார். அந்தப் பழைய காலங்களில், மக்கள் நெருப்பின் பக்கத்தில் அமர்ந்து குளிரைப் போக்கிக் கொண்டு, நல்ல அறிவுதரும் விவாதங்களில் ஈடுபட்ட நாட்களைப் பற்றிப் பேசிக் கொள்ளுவோம்......" என எழுதியுள்ளார்.

———

# அத்தியாயம் 9

> "தாவர இயலின் எந்தக் குறிப்பிட்ட துறையிலும் நான் ஈடுபட்டிருக்கவில்லை. அவ்வாறு ஈடுபட வேண்டின், பொதுவாக இயற்கை வரலாறு பற்றி அதிகமாக என்னால் கூற முடியும்."
>
> தோரோ : மார்ச் 1862இல் எழுதிய ஒரு கடிதத்தில்.

தோரோவும், ஹாதார்னும் கோடை காலத்தைப் பல இடங்களில் சுற்றித் திரிந்தும், பனிக் காலத்தைப் பனிச் சறுக்கலில் சறுக்கியும் இன்பமாகக் கழித்தனர். ஓல்ட் மான்ஸ் என்ற இடத்தில் பலமுறை ஹாதார்ன் தோரோவை உபசரித்தார். ஜான் என்பவரும் தாமும் சேர்ந்து செய்த ஒரு படகை, காங்க்கார்டு, மெர்ரிமாக் ஆறுகளில் எவ்வாறு செலுத்த வேண்டும் என்பதை ஹாதார்னுக்குத் தோரோ கற்பித்தார். தோரோவைப்பற்றி, ஹாதார்னின் நாட்குறிப்பு "கிராமியத் தோற்றமும், அழகற்ற வடிவமும் உடையவராயினும் நல்ல பண்பாடுடையவர்" என்று கூறுகிறது. ஹாதார்னைப்பற்றித் தோரோவின் நாட்குறிப்பு "எளிய குழந்தை மனம் படைத்தவர்" என்று குறிப்பிடுகிறது.

1854 இல், வால்டன் என்ற நூல் வெளிவந்ததிலிருந்து தோரோவுக்குப் பண்பாடுடையவர்களின் நட்புப் பெருகலாயிற்று. ந்யூ பெட்போர்டைச் சேர்ந்த *குவேக்கராகிய டேனியல் ரிக்கெட்ஸன் என்பவர், "வால்டன்" என்ற நூலின் ரசிகரானார். தோரோவைப் பலமுறை உபசரித்ததுடன் காங்க்கார்டுக்கும் அவர் வந்து செல்வதுண்டு. குவேக்கராக இருந்த அவருடைய எளிமை, தோரோவைப் பெரிதும் கவர்ந்தது ; அவர்களிவரும் நெருங்கிய நண்பரா யினர். அவர்களிடையே இடைவிடாமல் கடிதப் போக்குவரத்து நடந்தது ; பிற்காலத் தோரோவைப் பற்றி ரிக்கெட் ஸன் நன்கு அறிந்திருந்தார். ஆங்கில நாட்டைச் சேர்ந்த ஷார்ப்ஷையர் என்ற ஊரவரான தாமஸ்

*குவேக்கர்—நண்பர்கள் சங்கத்தவர்

கோல்மான்டிலே என்பவர், "வால்டன்" என்ற நூல் காரணமாக, தோரோவின் நண்பரானர். அவர் மிகுதியாகப் பிரயாணம் செய்து, ந்யூசீலாந்தைப்பற்றித் தத்துவ ஞான நோக்கில் எழுதியுள்ளார். அவர் தம்முடைய நூல்களிலும், தோரோவைப்போலவே, கீழ் நாட்டுத் தத்துவத்தையும், மேனுட்டு விஞ்ஞானத்தையும் கலந்துள்ளார். எமர்ஸனைச் சந்திப்பதற்காகவே அவர் காங்க்கார்டுக்கு வந்தார் எனினும், தோரோவே அவர் மனத்துக்கு மிகவும் பிடித்தவரானர். மறு ஆண்டு, இங்கிலாந்திலிருந்து, ஹிந்து சமய நூல்கள் நாற்பத்திரண்டைத் தோரோவுக்கு அனுப்பினர். "வால்டன்" என்ற நூல் வெளியான மறு ஆண்டே, ஃப்ரேங்க்லின் பி. ஸான்பார்ன் என்ற இளைய ஆசிரியர் காங்க்கார்டுக்கு வந்து சேர்ந்தார். அவர் எமர்ஸனைச் சந்திக்கவே வந்தாலும், தோரோவின் ரசிகராக மாறிவிட்டார். அடுத்த மூன்ருண்டுகட்குத் தோரோவின் தாயார் அவருக்கு உணவு படைத்தார். இம்முறையில், தோரோவின் குடும்பத்தில் ஒருவராக மூன்று ஆண்டுகள் வாழ்ந்த ஸான்பார்ன், அக் குடும்பத்தின் முற்போக்குக் கருத்துக்களையும், உலகியல் கடந்த இயல்பையும் நெருங்கி இருந்து கண்டு, தோரோவை நன்கு அறியும் வாய்ப்பைப் பெற்ருர். ஆதலால், பிற்காலத்தில், தோரோவின் வரலாற்றை ஒப்பற்ற முறையில் அவர் எழுத முடிந்தது.

உணர்ச்சி மிக்கவரும், உலகியல் கடந்தவருமான எல்லரி சேனிங் என்பவரே தோரோவின் வரலாற்றை, முதன் முதலில் எழுதினர். அவர் மிக நெருங்கிய நண்பராய் இருந்துங்கூட, தோரோவின் வாழ்க்கையில் ஏற்பட்ட சுய சந்தேகங்கள், நம்பிக்கை இழப்புக்கள் ஆகியவற்றைப் பற்றி ஒன்றுங் கூறியதாகத் தெரியவில்லை. அவை தோரோவின் நாட்குறிப்பில் மட்டுமே உள்ளன. "மிகநீண்ட தூரத்திலிருந்து குட்டையின் பக்கத்திலுள்ள குடிசைக்கு வந்தவர் சேனிங்தான். அவர்தான் ஆழ்ந்த பனியையும், கொடிய புயலையுங் கடந்து," தோரோவைச் சந்திக்க வந்தார். இவ்வாறு சேனிங் தம்மிடம் வந்ததைப்பற்றிக் கூறவந்த தோரோ விளையாட்டாக "ஒரு குடியானவர், ஒரு வேட்டைக்காரர், ஒரு வீரர், ஒரு பத்திரிகை நிருபர் என்பவர்களாகவோ அன்றி ஒரு தத்துவஞானியாகவோ இருப்பி

னுங்கூட இவற்றைக் கடந்து வர அஞ்சுவார்கள். ஆனால் இவை ஒன்றும் ஒரு கவிஞனை அச்சுறுத்துவதில்லை. ஏன் எனில் அவன் உண்மையான அன்பால் தூண்டப்பெற்று வருகிறான்'' என்று கூறியுள்ளார். வால்டனில், குளிர் கால மாலைப் பொழுதுகள், ஒரு பாத்திரத்தில் ஊற்றப்பட்ட குழம்புடனும் மிகவும் உரத்த சிரிப்பொலியுடனும் கழிந்தன. பாத்திரத்தில் இருந்த குழம்பு ''சௌஜன்யத்தைத் தந்ததுடன் தத்துவ ஆராய்ச்சிக்கு வேண்டிய அறிவுத் தெளிவையும் தந்த''தாம். தோரோவின் பிற்கால நண்பர்களுள் முக்கியமானவர் மெஸசூஸிட்ஸில் உள்ள வொர்செஸ்டரில் வாழ்ந்த ஹேரிஸன் ப்ளேக் என்பவராவார். இவர் தோரோவிடம் ஹார்வார்டிலேயே ஓரளவு பழகி இருந்தார். ஆனால், பிற்காலத்தில் ''டயல்'' பத்திரிக்கையில் தோரோவைப்பற்றிப் படித்துவிட்டுப் பின்னர் நீண்ட காலம் மிக நீளமான கடிதங்களை அவரிடமிருந்து பெற்று வந்தார். இக் கடிதங்கள், தோரோவின் சிறந்த எழுத்து நடைக்கு உதாரணம் என்று கூற முடியாவிடினும், அவருடைய வரலாற்றை எழுதுபவர்க்குப் பெரிதும் பயன் பட்டன. இவற்றில் அவர் தம் உள்ளுணர்ச்சிகளை நன்கு வெளியிட்டுள்ளார். ப்ளேக்கின் அழைப்பின் மேல்தான், தோரோ ஆண்டுதோறும் வொர்செஸ்டரில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

ந்யூயார்க் ட்ரிப்யூனைச் சேர்ந்த ஹோராஸ் க்ரீலி, இறுதிவரைத் தோரோவின் இலக்கிய ஏஜன்டாக இருந்தார். பல சமயங்களில் தோரோவுக்காகச் செலவு செய்தார். (ஒரு முறை எழுபத்தைந்து டாலர் முன்பணமாகத் தந்தார்.) அடுத்து, ஆல்காட் என்பவர் இருந்தார். அவருடைய பெண்கள் இப்பொழுது வளர்ந்து பருவம் அடைந்திருந்தனர். என்றாலும், ஓயாமல் கற்பனை உலகில் சஞ்சரிக்கும் ஆல்காட்டின் தோள்களில் குடும்ப பாரம் மென்மையாகவே தங்கி இருந்தது. ஆல்காட் கூறிவந்த சமுதாயக் கூட்டு முயற்சிகளில் தோரோவுக்கு நம்பிக்கை இன்றேனும், அவரது அஞ்சா நெஞ்சையும் நேர்மையையும் கண்டு வியந்தார் தோரோ. எமர்ஸனுக்குக் கோடைகால வீடுகட்டுவதில் ஆல்காட் மிகவும் அப்பாவியாக இருந்திருக்கலாம். ஆனாலும், ''எங்களுடைய சந்திப்புக்கு எவ்வித இடையூறும் ஏற்படவில்லை; அவருக்கென்று பிடிவாதமான

கொள்கை ஒன்றுங் கிடையாது ; எந்த நிறுவனத்தையும் சேர்ந்தவரல்லர் அவர். நான் சந்தித்தவர்களுள் மிகவும் தெளிந்த அறிவுடையவர் அவர்தாம்" என்று கூறியுள்ளார்.

வாழ்நாள் முழுவதிலும், தோரோவுக்குப் பெண்களின் நட்புக்குக் குறைவே இருந்ததில்லை. ஆனால் இளமையுடையவர்களையும், அழகுள்ளவர்களையும் அவர் ஒதுக்கியே வந்தார். இது ஒரு புதுமைதான் என்று அவரே கூறியுள்ளார். "ஒரு பெண் நல்ல உறுப்பு நலன் பெற்றிருக்கிருள் என்பதற்காக, அவளிடம் அரை மணி நேரம் பேசிக் கொண்டிருப்பதில் யான் எவ்வித இன்பத்தையும் அடைவதில்லை. இளம் பெண்களுடன் பொழுதைக் கழிப்பதைப் போலப் பயனற்ற செயல் வேறு இல்லை என்றே கருதுகிறேன்" என்று கூறியுள்ளார். வாழ்க்கையில் ஏமாற்றமடைந்த ஒரு பிரமச்சாரியின் மனநிலையை இது ஓரளவு பிரதிபலிக்கிறது. எல்லன் ஸூவெல்லினுடைய நினைவு ஓரளவு இன்னும் தங்கியுள்ளது போலும்! அது எவ்வாறு இருப்பினும், எல்லனுக்குப் பிறகு பெண்களிடம் அவர் கொண்ட நட்பு ப்ளேட்டோனிக் அன்பைப்* போன்றே இருந்தது. லிடியன் எமர்ஸன் போன்றவர்களிடம் (அவரும் நாளாவட்டத்தில் தம்முள் அடங்கித் தனித்தவரானர்) இவ்வாறு நட்புக் கொண்டிருந்தார். லிடியனின் தங்கையாகிய ல்யூஸி ஜேக்ஸன் ப்ரௌனையும் இவ்வகையிலேயே நேசித்தார். தோரோவுக்கு இருபது வயதாக இருக்கையில், ஒரு முறை, ல்யூஸியின் வீட்டு ஜன்னலின் வழியாக, ஒரு கொத்து வயலட் பூக்களையும் ஓர் இசைப் பாடலையும் உள்ளே எறிந்தார். எமர்ஸனின் அத்தையும், அதிக வயதானவரும், மிக்க அறிவுடையவரும் ஆகிய மேரி என்பவர் காங்க்கார்டில் இருந்தார். தோரோவின் சமயக் கொள்கைகள் பற்றி இம் மூதாட்டி அஞ்சினாலும், அவருடைய அறிவுத் திறத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். "என்னுடைய இளமைக் காலத்தில் இவ்வளவு தனித் தன்மையுள்ள கருத்துக்களைக் கொண்டிருப்பதைப் பிறர் ஆதரித்ததில்லை" என அந்த அம்மையார் அவரிடம் கூறினர். என்றாலுங்கூட, எண்பது வயதுடைய இம்

---

* ப்ளேட்டோனிக் அன்பு - உடலுணர்ச்சிக்கு அப்பாற்பட்ட ஆன்மிக அன்பு.

மூதாட்டி தோரோவின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டது போல, காங்க்கார்டில் உள்ள இள வயதுடையவர் எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

எமர்ஸனைப் பற்றி என்ன? வெளிப்பார்வைக்கு அவரும் தோரோவும் காலம் செல்லச் செல்ல மிகவும் நெருக்கமாகிக் கொண்டு வந்தனர். ஹென்றி அடிக்கடி எமர்ஸனுடைய வீட்டிற்குச் செல்வதும், அவரும் எமர்ஸனும் முன்னைவிட அதிகமாகத் தாவர இயல்பு பற்றி ஆய்வதும் நடந்து வந்தன. மாலைக் காலங்களில் மேற்கொள்ளும் சிற்றுலாக்களில், அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அதிகம் விரும்புவதுபோல் தெரிந்தது. ஆனால், உண்மையில் அவர்கள் இருவரும் உள்ளூர மிகவும் விலகிச் சென்றனர். எமர்ஸனுடைய வீட்டில் மாலைக் காலங்களில் நடைபெறும் விவாதங்களில்தான் இப் பிரிவினை விரிவடைந்து வந்தது. உண்மையை நாடிச் செல்லும் இரு கூறுகளாக அவர்கள் இல்லை. அதற்குப் பதிலாக, இந்த இரண்டு தத்துவஞானிகளும், அவரவருடைய முரட்டுத்தனத்தால் அதிகம் பொறுமை இழந்து, விவாதப் போட்டியில் ஈடுபடலாயினர். ஒவ்வொருவரும் தத்தம் நாட்குறிப்பில் அடுத்தவரைக் குறை கூறினர். 1853 மே மாதத்தில் தோரோ கீழ்வருமாறு எழுதியுள்ளார்: "எமர்ஸனுடன் பேசினேன்; பேச முயன்றேன். என்னுடைய காலத்தை இழந்தேன்; இல்லை; என்னையே இழந்தேன். கருத்து வேற்றுமை இல்லாத நிலையிலுங்கூட அவர் பொய்யாக ஒரு வேற்றுமையைக் கற்பித்துக் கொண்டு எனக்கு ஏற்கெனவே தெரிந்தவற்றையே என்னிடம் பேசினார்; இல்லை; காற்றிற்குப் பேசினார். நான் அவரை எதிர்ப்பதன் பொருட்டு, பிறன் ஒருவனாக என்னைக் கற்பனை செய்து கொண்டு என் காலத்தை வீணடித்தேன்." இத்தகைய கருத்து வேறுபாடுகள்பற்றி, எமர்ஸனுடைய நாட்குறிப்பில் அதிகக் குறிப்புக்கள் காணப்பெற்றாலும் பொதுவாக அவற்றில் ஒரு பரிவு காணப்பட்டதுடன், கோபத்தைவிட இரக்கமே அதிகமாக இருந்தது. 1856 இல் கீழ்வருமாறு இருந்தது: "தோரோவை மட்டுமே நான் அறிந்திருப்பின், நல்ல மனிதர்களிடையே கூட்டுறவே முடியாத காரியம் என நினைத்திருப்பேன். உண்மையைப்பற்றிக் கவலைப்படாமல் வெற்றியைப் பெற வேண்டும் என்ற ஒரே கருத்துடன்தான்

நாம் உரையாட வேண்டுமா? உண்மைக்காகவும், திருப்திக் காகவும், இன்பத்திற்காகவும் ஒரு முறையாவது விவாதிக்கக் கூடாதா? எந்த ஒரு விஷயத்திலும் உயிர்நாடியை ஆழ்ந்து சென்று காணும் இயல்பும், பிறரைப் புரிந்து கொள்ளும் இயல்பும், ஏனைய உயர்ந்த அறிவுத் திறங்களும் அவரிடம் நிறைந்துள்ளன - உண்மையின் வடிவத்தை அறியும் இயல்பு - அதற்கேற்ற மனத்திடம் என்பனவையும் உள்ளன. ஆனால், இவை அனைத்தும், அவருடைய நுண்ணறிவும் புதியன புனையும் திறமும் என்னைப் பொறுத்த வரைப் பயனற்றவையே. ஆண்டு முழுவதிலும், அவருடைய அக மனத்துடன் உறவு கொள்ள விரும்பி, எத்துனை முறை முயன்றும் பயன்படவில்லை. எப்பொழுதும், உங்களிடம் போராடுவதற்காக, ஏதேனும் விநோதமான விதண்டாவாதம் பிடித்து விடுவார். உங்கள் காலமும் மனமும் வீணாகி விடும்.'' இணைபிரியா நண்பர்களாக இருந்து, நட்பின் உயர்வை மிக மிகப் பாராட்டிய இவர்கள் இருவருக்கும் பிடிப்பு விட்டுப் போனது வருந்தத் தக்கதே. இருவருமே நட்பை மிக உயர்ந்ததாக வைத்துப் போற்றினர்; இப்பொழுது அவர்களுடைய நோக்கங்கள் நிறைவேற, இருவருமே ஏமாற்றத்தை விலையாகத் தர வேண்டி இருந்தது.

1856 இல், ஹென்றியை, நியூயார்க்கின் அருகில் உள்ள பெர்த் ஆம்பாய் என்ற இடத்திற்கு ஆல்காட் அழைத்துச் சென்றார். அந்த இடத்தில் புதிதாக சமுதாயக் கூட்டு ஒன்றை நிறுவும் முயற்சியைத் தொடங்கக் கருதி, அதற்குரிய அளவீடு செய்வதற்காகவே, ஆல்காட் தோரோவை அழைத்துச் சென்றார். அவர்கள் ஒரு மாத காலம் அங்குத் தங்கி இருந்தனர். அந்தப் புதிய சமுதாய அமைப்பைவிட, அங்குள்ள இயற்கை அமைப்பில் அதிக ஈடுபாடு கொண்டார் தோரோ. ஒரு நாள் நியூயார்க்கில் பிறரால் அதிகம் புகழப் பெற்ற வால்ட் விட்மன் என்ற கவிஞரைத் தேடி இருவரும் சென்றனர். அவருடைய "புல்லின் இலைகள்" என்ற கவிதைத் தொகுதி வெளியானவுடன், பழமையில் விருப்பங் கொண்டவர் பலர், அக்கவிதைகள் வெளிப்படையாகச் சில விஷயங்களை எடுத்துக் கூறியமைக்காக, அதனை எதிர்த்துக் கூச்சலிட்டனர். தோரோவும் பழமை பாராட்டும் பண்பினராகலின், "புல்லின் இலைகள்" என்ற கவிதைகளைப்

பாராட்ட முடியாமலிருந்தார். தனிமையை விரும்பும் தோரோவும் நகர வாழ்க்கையை விரும்பும் விட்மனும் சந்திப்பதில் ஓரளவு புதுமை இருக்கலாம் என ஆல்காட் எதிர்பார்த்தார். ஆனால், அவர்கள் இருவரும் அதிக அடக்கத்துடன் இருந்து விட்டமையின், இரண்டு அறிவுகள் சந்திப்பதால் ஏற்படும் பொறிகள் ஒன்றும் பறக்கவில்லை. "தெருவில் செல்லும் டாம், டிக், ஹேரி ஆகிய அனைவரையும் நேசிக்கும்" தோரோவின் இயல்பை, விட்மன் வெறுத்தார். விட்மன் "ஒரு பஸ் வண்டியில், ஓட்டுபவரின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு ப்ராட்வேயில் முன்னும் பின்னுமாக ஓயாமல் செல்வதிலும், வண்டிகளின் இரைச்சலைக் கவனிப்பதிலும், இந்தக் கூச்சலின் இடையே ஹோமரை உரக்கப் பாடுவதிலும் இன்பம் காண்பதாகக்" கூறியதைக் கேட்டதும் அவரை "விநோதமானவர்" என்று கருதினார் தோரோ. தன்னிலும் முற்றும் மாறுபட்ட ஒருவரை ஹென்றி இது வரைச் சந்தித்ததில்லை. முன் பின் காணாததும், பதப்படுத்தப்படாததுமான ஒரு பெருஞ் சக்தியை விட்மனிடம் கண்டு, முதலில் வெறுப்படைந்தாலும் பின்னர் அதனாலேயே ஒரு கிளர்ச்சியடைந்தார். "புல்லின் இலைகள்" என்ற நூலை மறுபடியும் இரண்டாம் முறையாகப் படித்த தோரோ "பல்லாண்டுகளாக நான் படித்த அனைத்தையுங் காட்டிலும் இது நன்மை புரிந்தது" என்று எழுதினார். அக் கவிதைகள் அடிப்படையான உணர்ச்சிகளை நேர்மையுடன் கூறுவதைக் கண்ட தோரோ விட்மனும், தம்மை போலவே, கலப்பற்ற அடிப்படையான ஆதாரங்களில் இன்பம் காண்பதை உணர்ந்தார்.

1856ஆம் ஆண்டில், இயற்கை ஆராய்ச்சியிலிருந்து, நிகழ் காலப் பிரச்னைகட்கு, நியூயார்க்கும் விட்மனும் தோரோவை இழுத்து வந்தனர். 1850ஆம் ஆண்டு, தப்பி ஓடும் அடிமைகள் பற்றிய சட்டத்தால் ஏற்பட்ட கிளர்ச்சியால், "மெஸசூஸெட்ஸில் அடிமைகள்" என்ற நூலை எழுதி முடித்த பிறகு அந்த உணர்ச்சி ஓய்ந்து விட்டது. தம்மையே பாதிக்கும் நிலைமை ஏற்பட்ட பொழுதெல்லாம் அடிமை எதிர்ப்பை ஆதரித்தார். அத்தகைய சந்தர்ப்பங்களில், பேச்சு மூலம் அடிமை வியாபாரத்தை வலுவாகக் கண்டிப்பதுடன் நிறுத்திக் கொண்டு அதற்காக முறைப்படி கிளர்ச்சி நடத்தும் பொறுப்பை ஃப். பி. ஸேன்பார்ன்

போன்றவர்களிடம் விட்டுவிட்டார். மெஸசூஸிட்ஸில் அடிமைகள் என்ற நூலை எழுதிய மூன்று ஆண்டுகள் கழித்துத் தோரோவிடம் ஒருவர் வந்து சேர்ந்தார். அந்த மனிதரின் எண்ணங்கள், ஆளுமை, விதி ஆகியவற்றால் உந்தப் பெற்ற தோரோ வேறு எந்த ஒரு மனிதருக்கும் செலவிடாத அளவுக்கு அதிக உணர்ச்சியையும், சொற்களையும் அவருக்காகச் செலவிட்டார். கன்ஸாஸ், மாகாணத்திலுள்ள ஓஸ்வத்தாமி என்ற ஊரைச் சேர்ந்த புகழ் பெற்ற ஜான் ப்ரௌன் என்பவரே இவர்; கன்ஸாஸ் மிஸ்ஸோரி என்ற மாகாணங்களின் இடையே நடைபெற்ற எல்லைச் சண்டையில் ஈடுபட்டிருந்தவர். இந்தச் சண்டையில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. இரு பக்கத்தாரும் பெரிதும் நஷ்டமடைந்தனர். இதன் பிறகு, 1857 இல் அடிமை வியாபார எதிர்ப்புப் போராட்டத்திற்குக் கட்சி சேர்ப்பதற்காகவே இவர் மெஸசூஸிட்ஸுக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்த மிதவாதிகள், ஜான் ப்ரௌனை, இரத்த வெறி பிடித்த புரட்சியாளர் என்று கருதி வரவேற்க மறுத்துவிட்டாலும், சான் ப்ரன், அவருடைய நண்பர்கள் ஆகியவர்களால் வரவேற்கப் பெற்றார். சான் ப்ரன்தான், ஜான் ப்ரௌனைக் காங்க்கார்டிற்கு அழைத்து வந்தார். இதன் நோக்கம் என்னவெனில், காங்க்கார்டில் யாரேனும் கிளர்ச்சிக்கு உதவக் கூடியவர்கள் இருப்பின் அவர்கட்கு வாய்ப்புக் கொடுக்கவே யாகும். அடிமைகளை வைத்திருக்கும் மாகாணங்களில் போராட்டம் நடத்துவதற்குக் கிளர்ச்சி செய்யும் நிறுவனங்கள் ஏற்படுத்தும் விஷயத்தில், தோரோவும் எமர்ஸனைப் போலவே அவ்வளவு அதிகக் கவலை எடுத்துக்கொள்ளவில்லை எனினும், ஜான் ப்ரௌனை நேரே கண்டு, அவருடைய ஊக்கத்தையும், ஒருமுகப்பட்ட மனப்பான்மையையும் கண்ட பிறகு, அவற்றால் பெரிதும் கவரப் பெற்றார். ஒருவேளை வட பகுதி முழுவதுமே ஜான் ப்ரௌனைப் போற்றி இருப்பின் தோரோ அதிகக் கவலை எடுத்துக் கொள்ளாமல் இருந்திருப்பார். ஆனால், அடிமை ஒழிப்பு இயக்கத்தினரில் கூடச் சிலர், ப்ரௌனை நன்கு வரவேற்கவில்லை. ஆதலால்தான் ப்ரௌன் ஒரு குறிக்கோள் வீரராகவும், நேர்மையும் நியாயமும் அற்ற ஒரு நிறுவனத்துடன் ஒற்றையாக நின்று போர் புரிபவராகவும் தோரோவுக்குக் காட்சியளித்தார். பாஸ்டனில் சம்பாதித்த பணத்

துடன், தெற்கே உள்ள வெர்ஜீனியாவுக்குச் சென்றார் ப்ரௌன். ஹார்ப்பர்ஸ் பர்ரி என்ற இடத்தில் தாம் ஒற்றையாகவே இருந்து கொண்டு அடிமை ஒழிப்பு இயக்கத்தை, தீப் பரவுவதுபோல் மாகாணங்களில் பரவச் செய்தார். மாகாணங்களில் பரவிய இக்கிளர்ச்சியைக் கண்ட தோரோ நியாயமான சட்ட மறுப்பு இயக்கத்தின் ஓர் அடையாளமாகவே ப்ரௌனைக் கருதினார். ப்ரௌன் பிடிபட்டதும், சிறைபடுத்தப்பட்டதும், "காப்டன் ப்ரௌனுக்காக ஒரு வேண்டுகோள்" என்ற கட்டுரையை எழுதுமாறு தோரோவைத் தூண்டியது. நியாயமற்ற நிறுவனத்துடன், நியாயமுடையவன் போராட வேண்டுமாயின் என்ன முறையில் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பவற்றை உணர்ச்சி மிக்க அந்தக் கட்டுரையில் தெரிவித்தார். ராஜத் துரோகக் குற்றம், கொலைக் குற்றம் என்ற குற்றங்கள் சாட்டப்பட்டு ப்ரௌன் தண்டிக்கப்பட்டார். அடிமை ஒழிப்பு இயக்கத்தின் கோட்டை என்று கூறப்படும் மெஸசூஸிட்ஸில், ப்ரௌனைப் பற்றி, ஒரு பரிவான வார்த்தைகூட எழுதப் பெறவில்லை. இதனெதிராக, எவ்வளவு அவமானமும் ஆபத்தும் வருவதாயினும் அவை பற்றிக் கவலைப்படாமல் தோரோ ப்ரௌனுக்காகப் பேச முடிவு செய்தார்.

அவருடைய நண்பர்கள் எவ்வளவோ தடுத்தும், தோரோ இதுபற்றித் தம் மனத்தில் முடிவு செய்து கொண்டார். ஜான் ப்ரௌன் சிறைப்பிடிக்கப்பட்டவுடன், ஒரு பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்து, அதில் ப்ரௌன் சார்பாகத் தாம் பேசினார். அவருடைய சொல்லாற்றல் "அனைவரையும் மிக்க மரியாதையுடன் கேட்குமாறு செய்ததுடன், பலர், இவ்விஷயத்தில், தாங்களே வியப்படையும் முறையில் பரிவு கொண்டனர்" என அங்கிருந்த எமர்ஸன், தம் நாட்குறிப்பில் எழுதியுள்ளார். இம்முறையில் ப்ரௌனை ஆதரித்து முதன் முதலில் வெளிப்படையாகப் பேசிய முதல் அமெரிக்கர் தோரோதாம். தனிப்பட்ட மனிதர்களின் சுதந்திரத்தை நிலைநாட்டப் பலியானவர் ப்ரௌன் என்றும், கொள்கை காரணமாக, நேர்மையற்ற அரசாங்கத்தால் பலி வாங்கப்பட்டவரென்றும் கூறினார்; "ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தனர்; இன்று காலை காப்டன் ப்ரௌன் தூக்கிலிடப்பட்டார். ஒரு சங்கிலியின் இந்த ஒரு முனைகட்கும் இடையே

கனுக்கள் இல்லாமற் போகவில்லை" என்றும் கூறினர். "அடிமைகள் வைத்திருக்கும் பழக்கத்தை எதிர்த்து விடாப் பிடியாகவும், பெரும்பான்மை வெற்றியுடனும் இம் மனிதர் நிகழ்த்திய போராட்டம்,...... புகழின்றி மாய்ந்து விடும் என்று நினைக்கிறீர்களா?" என்று அவர் கேட்டது மட்டும் தீர்க்கதரிசனமாக அமைந்து விட்டது. புகழின்றி அது மாயவில்லை. எந்தத் தெற்குப் பகுதியை ஜான் ப்ரௌன் தாம் ஒருவராக நின்று எதிர்த்தாரோ, அந்தப் பகுதியின் மேல் படை எடுப்பதற்கு இரண்டு ஆண்டுகள் கழித்து வட பகுதிப் படைகள் தயாராகிக் கீழ்க்கண்ட கருத்துள்ள பாடலைப் பாடத் தொடங்கின:

"ஜான் ப்ரௌனின் சடலம் சவக் குழியில் வாடலாம்
ஆனால் அவருடைய ஆன்மா படைகொண்டு
[செல்கிறது."

ஜானின் ஆன்மாவைப் பற்றியே தோரோ மிகவும் கவலை கொண்டார். அதே சொற்பொழிவை சில நாட் கழித்து பாஸ்டன், வொர்செஸ்டர் என்ற இடங்களிற் பேசிய துடன் ஒரு மாதங் கழித்துக் காங்க்கார்டிலும் பேசினர்.

இந்த உணர்ச்சி வெடிப்பு அடங்கிய பிறகு தோரோ மறுபடியும் இயற்கையினிடமே தம் கவனத்தைச் செலுத்திப் பிற நிகழ்ச்சிகள் தம் போக்கில் நடைபெறுமாறு விட்டு விட்டார். ஹார்ப்பர்ஸ் பர்ரியில், ப்ரௌன் நிகழ்த்திய செயல்களின் அரசியற் பயன்கள் எதுவாக இருப்பினும், அவைபற்றி அவர் கவலைப்படவில்லை.

இரண்டு ஆண்டுகட்டுப் பிறகு, வடபகுதியில் உள்ளவர்கள், ப்ரௌனைப் பெரிய வீரராக்கி, அவர் உயிருடன் இருந்தபொழுது எவற்றையெல்லாம் விரும்பினரோ, அவற்றையெல்லாம் செய்தாலும், தோரோ அவை பற்றிக் கவலைப் படவில்லை. தென்பகுதி முழுவதையும் ஒற்றையாக எதிர்த்து நின்ற ப்ரௌனின் நினைவின் எதிரே, இம் மாகாணங்கள் ஒன்றுடன் ஒன்று போரிட்டது மிகவும் மனச் சோர்வைத் தந்தது.

*   *   *   *

தோரோ என்றுமே வலுவானவரல்லர். ஹார்வார்டில் படித்த காலத்திலேயேகூட, அவர் 'பிராங்கைட்டிஸ்'

நோயால் பீடிக்கப் பெற்று, மூன்று மாதங்கள் பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலேயே தங்கினார். இதன் பயனாக வாழ் நாள் முழுவதும் அடிக்கடித் தொல்லைப் பட்டார். அடிக்கடி சளிப் பிடித்தாலும், உடல் வலுக் குறைவைச் சட்டை செய்யக் கூடாது என அவர் நம்பினார். மோசமான உடல் நிலையோடு, பருவத்தின் தட்ப வெப்பச் சீர்கேட்டைக் கவனியாமல் பிடிவாதமாக வெளியே உலாவி வந்தார். 1855 இல் ஏற்பட்ட அவருடைய நோய், இரண்டு ஆண்டு களில் அவருடைய வன்மையை மிகவும் குறைத்துவிட்டது. இதனை வெளிப்படையாக ஒத்துக் கொள்வதற்கு அவர் எவ்வளவு மறுத்தாலும், உண்மையில் பெரிதும் கவலை அடைந்தார். என்றாலும், மறுபடியும் உடல்நிலை தேறி 1857 முதல் 1860 வரை நடத்தல், ஏறுதல், அளவிடல், எழுது தல், சொற்பொழிவாற்றுதல், என்பவற்றில் முன்போலவே உழைத்து வந்தார். 1860 இல் அவருடைய நாற்பத்து மூன்றாவது ஆண்டு நடைபெறுகையில் பொதுவாகவும், சிறப்பாக அவர் ஜான் ப்ரௌனை ஆதரித்துப் பேசிய பொழுதும், உயர்வின் சிகரத்தைப் பிடித்துவிட்டார் என்றே அவருடைய நண்பர்கள் கருதினர். எழுத்தாளர், பேச் சாளர் என்ற துறைகளில் அவருடைய புகழ் ஓங்கியது. இயற்கையைப்பற்றி அவர் தயாரித்திருந்த குறிப்புக்களை நன்கு அறிந்தவர்கள், இயற்கை வரலாறு பற்றிய ஒரு சிறந்த நூல் அவரிடமிருந்து தோன்றப் போகிறதென்றே எதிர்பார்த்தனர். "ஒரு குறிப்பிட்ட தலைப்பைப்பற்றி எவ் வளவுக் கெவ்வளவு சிந்தித்து எழுதுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக எழுத முடியும். சிந்தனை சிந்தனையை வளர்க்கிறது. அதன் பயனாக அது எழுத்தில் வளர்ச்சி யடைகிறது" என்று 1860 இல் எழுதினார். ஒரு சாதாரண மனிதன் எழுதுகிற உலக வரலாற்றைக் காட்டிலும், மாமேதை தான் எழுதும் ஓர் ஊரினுடைய மாதா கோயிலின் வரலாற்றைக்கூடச் சுவையுடையதாகச் செய்து விடுவான். அத்தகைய மாமேதைத் தன்மை தம் மிடம் இருக்கிறதென்று அவர் நம்பி இருக்கலாம். அந்தப் பிராந்தியத்தின் இயற்கை வரலாறுபற்றிய குறிப்புக்கள் ஒருபுறம் இருக்க, சிவப்பு இந்தியர்கள்பற்றியும் பத்து லட்சம் சொற்கள் கொண்ட குறிப்பை வைத்திருந்தார். இவற்றிற்குங்கூட ஒரு நாள் நூல் வடிவு தர வேண்டும்;

ஆனாலும் அதற்கு அவசரம் ஒன்றுமில்லை. தம்முடைய உடல் வன்மையில், என்றும்போலவே ஒரு திருப்தியுடன் வாழ்ந்து வந்தார். இன்னும் நாற்பது ஆண்டுகட்குக் தம் வாழ்க்கைக்கு எவ்வித முடிவும் இல்லை எனத் தம் நண்பர் ஒருவரிடம் கூறினார்.

1860ஆம் ஆண்டு, அதிகக் குளிரும் ஈரமும் நிறைந்த நவம்பர் மாதத்தில், மார்புச் சளியால் தோரோ தாக்கப் பெற்றார். அது அவருடைய நுரை ஈரலையும் தாக்கிற்று. அந்தக் குளிர்ப் பருவம் முழுவதும், அவர் தம்முடைய கிராமத்தைச் விட்டு வெளியேறவே இல்லை. 1861 ஆம் ஆண்டு இளவேனிற் பருவத்தில், அவர் மிகவும் இளைத்துப் போயிருந்தார். மே மாதத்தில் ஹோராஸ் மான் என்ற தாவர இயல் நண்பருடன் வடமேற்கு நோக்கிப் புறப் பட்டார். அப்பகுதியில் உள்ள மின்னஸோடோவில் காணப் பெறும் வறண்ட சீதோஷ்ணத்தில் உடல் வலிமை பெறவும், ஸியாக்ஸ் என்ற புராதனச் சிவப்பு இந்தியர்களைக் காணவுமே அவர் போனார்; ஆனால், ஒரு நோயாளி மேற் கொள்ளக் கூடாத அவ்வளவு நீண்ட பயணமாகும் அது. ரயிலிலும், வண்டிகளிலும், ஆற்றுப் படகிலும் ஆக எட்டு வாரங்கள் பிரயாணம் செய்தார். அவர் விரும்பிய சிவப்பு இந்தியர்களையும், நையாக்ரா, மேல் மிஸிஸிபி, புதிய தாவ ரங்கள், விநோதமான பறவைகள் ஆகியவற்றை யெல்லாம் கண்டாலும், இளமை அவரை விட்டுப் போய்விட்டது. எவ்வளவு நோயுடன் புறப்பட்டாரோ, அவ்வளவு நோயு டன் மீட்டும் இல்லம் வந்தடைந்தார். அவருடைய தந்தை யார் மூன்றாண்டுகள் முன்னரே இறந்து போனாலும், தாயாரும், ஸோபையாவும் அவருக்குச் செவிலிப் பணி புரிந்தனர். அந்த ஆண்டுக் குளிர்ப் பருவம் வந்தவுடன், தமக்குத் தோன்றியுள்ள ஆபத்தான நோயின் இயல்பை அறிந்து, அதை அமைதியுடன் ஏற்றுக் கொண்டார். தம் எஞ்சிய நாட்களில், வாழ்க்கையிலிருந்து எவ்வளவு மகிழ்ச்சி யைப் பெறக்கூடுமோ அவ்வளவையும் பெற்றுவிட முடிவு செய்து கொண்டார். அவருடைய ஆயுளின் இறுதி ஆறு மாதங்களும் தனிமையிலோ, வீணாகவோ கழிக்கப்பட வில்லை. பலர் அவரைக் காண வந்தனர்; ஸோபையாவின் உதவியுடன், அட்லாண்டிக் மாத இதழ்க்காரர்கள்

கேட்டிருந்த பல கட்டுரைகட்கு வடிவு கொடுக்கும் பணியில் முனைந்தார்.

மேற்கோளாகக் காட்டக்கூடியவற்றைக் கூறியுள்ள மனிதர்களில், தலைமை இடத்தைப் பெறக்கூடிய தோரோ, இறுதிவரை அப்படியே இருந்தார். அவருடைய சுதந்திர மான வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் அவருடைய கூற்றுக் கள் பல இன்று மிகவும் பிரசித்தி பெற்று விட்டன. மரணத் தின் பின் அவருடைய வாழ்வு வளமாக இருக்க வேண்டுமே என்று கவலைப்பட்ட பழைய நண்பர் ஒருவரை நோக்கி, "நண்பரே! ஒரு நேரத்தில் ஓர் உலகைப்பற்றிமட்டுமே கவலைப்பட வேண்டும்" என்றார். ஆண்டவனிடம் அவர் சமாதானம் செய்து கொண்டாரா என்று கவலைப்பட்ட அத்தை மரியாவை நோக்கி, தாம் ஆண்டவனிடம் என்றுமே சண்டையிட்டுக் கொண்டதில்லை என்று விடை இறுத்தார். கிராமச் சிறைச்சாலைக் காவற்காரராகிய ஸேம் ஸ்டேபில்ஸ், ஒரு முறை தோரோவைச் சிறையிட்டு, ஓர் இரவு அவருடைய உறக்கத்தை ஒழித்தமையால், மிகச் சிறந்த கட்டுரைகள் சில பிறப்பதற்குக் காரணமாக இருந் தவர். அவர் தோரோவைச் சந்தித்து விட்டு மீளும் பொழுது "இவ்வளவு மகிழ்ச்சியோடும் அமைதியோடும் இறந்து கொண்டிருக்கின்ற ஒருவரைத்" தாம் இது வரைக் கண்டதில்லை என்று கூறினார்.

குளிர் காலம் முடியும் வரை உயிரைப் பிடித்துக் கொண்டு வாழ்ந்தார்; வசந்த காலத்தின் உச்சியில், 1862 மே மாதம் 6ஆம் தேதி தோரோ உயிர் நீத்தார். இறுதியாக அவர் புலம்பிய சொற்கள் "மூஸ்"(ஒருவகை மான்), "இந்தியன்" என்பவையாகும்.

காங்க்கார்டிலுள்ள புதிய இடுகாட்டில் அவர் புதைக்கப் பட்டார்.

இறுதிச் சடங்கின்போது, இருபத்தைந்து ஆண்டு கட்கு முன்னர் எழுதி, ஸ்ஹூனி ப்ரௌனின் பலகணி வழி யாக எந்தக் கவிதையைத் தோரோ எறிந்தாரோ, அதே கவிதையை ஆல்காட் படித்தார். எமர்ஸன் உணர்ச்சி மிகுந்த ஓர் உரை நிகழ்த்தினார். அவ்வுரையை விரிவு

படுத்திப் பிற்காலத்தில் வெளியிட்டார்கள். இன்றுங்கூடத் தோரோவைப் பற்றிய மிகச் சிறந்த கட்டுரை அதுதான்.

* * * *

இறுதிக் காலத்தில், ஓய்ந்து கொண்டிருந்த தம்முடைய வன்மை முழுதையும், தம் குறிப்புக்களையும் கட்டுரைகளையும் ஒழுங்குபடுத்துவதில் தோரோ செலவிட்டார். அட்லான்டிக் மாத இதழுக்கு 'நடத்தல்', 'இலையுதிர் கால நிறங்கள்', 'காட்டு ஆப்பிள்' என்ற மூன்று கட்டுரைகளைத் தயாரித்தார். இக் கட்டுரைகள் 1862 இன் பிற்பகுதியில் வெளியிடப் பெற்றன. மூன்று ஆண்டுகளுக்குள், 'உல்லாசப் பயணம்', 'மான் காடுகள்', 'கேப் காட்' என்பவற்றுடன், அவருடைய கடிதங்களிலிருந்து எமர்ஸனுல் தொகுக்கப் பெற்ற ஒரு வெளியீடும் ஆக நான்கு நூல்கள் வெளியிடப் பெற்றன. அவருடைய அன்றாடக் காட்சிகள், சிந்தனைகள், எழுத்துக்கள் ஆகிய மலைபோன்ற வேலைகளும், இருபத்தைந்து ஆண்டு அலுவல்களும் முறைப்படுத்தப்பெற்று, சில பகுதிகள் அகர வரிசைப்படுத்தப்பெற்று, கையெழுத்துப் பிரதிகளாக இருந்தன. இவற்றிலிருந்து தரம் பிரித்து, அவர்கள் சிறந்தவை என்று கருதியவற்றை வெளியிடும் பொறுப்பு மற்றவர்களிடம் வந்து சேர்ந்தது. ஹெரிஸன் ப்ளேக் என்ற தோரோவின் பழைய நண்பர், (தோரோவின் பல பொருள்களுள் அவருடைய பிரம்பை மிகுதியும் போற்றி எடுத்துக் கொண்டார்.) தோரோவின் நூல்களை வெளியிடும் நம்பிக்கைக்குரிய ஆசிரியரானார். தோரோவின் நாட்குறிப்பிலிருந்து, இயற்கை வருணனைப் பகுதிகளை மட்டும் தோண்டி எடுத்து, இவற்றைப் பருவங்களாக வகுத்து, மெஸசூஸிட்ஸில் வசந்த காலம், வேனிற் காலம், இலையுதிர் காலம், குளிர் காலம் என்ற நான்கு நூல்களாக, ப்ளேக் வெளியிட்டார்.

தோரோவின் நூல்களின் தொகுப்புக்கள் 1894 இல் முதன் முதலில் வெளியிடப்பெற்றன எனினும், அவருடைய நாட்குறிப்பு முழுவதும், 1906 வரை வெளியிடப் பெறவில்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் தோரோவின் நண்பர்களால், இரண்டு முழு நீள நூல்களாகத் தோரோவின் வரலாறு வெளியிடப் பெற்றது எனினும், அவை

இரண்டுமே ஓரளவுதான் வரலாருக அமைந்தன. அவை முறையே 1882 இல் சான்பர்னுலும், 1873 இல் சானிங் காலும் எழுதப் பெற்றன. பாபியன் சோஷலிஸ்டாகிய ஹென்றி ஸால்ட் முற்றிலும் தோரோவின் கொள்கைகளில் ஊறினவராவார். தோரோவை நேரில் அவர் சந்திக்கவே இல்லை எனினும், தோரோவின் கருத்துக்களை, சேனிங், ஸான்பர்ன் என்ற இருவரைக் காட்டிலும் அதிகமாக உணர்ந்தார். உலகிற்கு ஒரு செய்தியைக் கூறவந்த தோரோவின் வரலாற்றைப் பலர் எழுதி இருப்பினும், ஸால்ட்டினுடையதே மிகவும் சிறந்ததாகும்.

மிகவும் பிரபலமாக அறியப்படாவிடினும், அவருடைய கவிதை, இயற்கை வருணனை, எளிய வாழ்க்கை பற்றிய செய்திகள் என்பவற்றைப் பலரும் அறிந்திருப்பார்கள் என அவருடைய நண்பர்கள் எதிர்பார்த்தார்கள். நாற்பது ஆண்டுகளாக இருளில் மறைந்திருந்த அவருடைய புகழ், இறுதியாக வெளிப்படுமென்பதையும், அதுவும் அமெரிக்காவில் அல்லாமல் இங்கிலாந்தில் வெளிப்படுமென்பதையும், அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை. தோரோவின் செய்தியை ஏற்றுக் கொள்ள, பத்தொன்பதாம் நூற்ருண்டு பக்குவமடையவில்லை. இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில், பிரிட்டனின் நகரங்களில் காணப்பட்ட அழகற்ற, ஒரே மாதிரியான வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்புக் காரணமாக, அங்கேதான் தோரோவின் செய்தியை முதன் முதலில் உணர்ந்தார்கள். விடுதலை பெற்ற வாழ்வில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது; தேங்திக் கிடந்த விக்டோரியா காலத்தைய சாதி, சமய மரபுகளின்மேல் தூய காற்று வீசத் தொடங்கியது. பிரிட்டனில் தொழிற் கட்சி தோன்றிற்று; அறிவு வாதம் தலை தூக்கியது. சைக்கிள் வண்டி நன்கு அமைக்கப்பட்டமையின், பிரிட்டனில் உள்ள நகர வாசிகள், சூரிய வெளிச்சத்தையும், தூய காற்றையும் விரும்பி ஊருக்கு வெளியே புறப்பட்டனர். இப் புதிய இயக்கம் அதற்குரிய இலக்கியத்தைத் தோற்றுவித்தது. ரஸ்கினும், மோரிஸும் இதனைச் சேர்ந்தவர்கள். ஆனல், தோரோ, விட்மன், எட்வர்ட் கார்ப்பென்டர் ஆகியவர்கள் பரந்த முறையில் தம் செல்வாக்கைச் செலுத்தியமையின், அவர்களைப் பின்பற்றி ஒரு கூட்டமே தோன்றிற்று. 'திறந்த சாலை' என்ற பெயருடன் 1899 இல் ஈ. வி. ல்யூகாஸ்

தயாரித்த "கவிதை, உரை நடைத் தொகுப்பு நூலில்" தோரோவின் கவிதை இடம் பெற்றது. அக் கவிதை "அடிக்கின்ற காற்றை மட்டும் அனைவரும் அறிவர் தாமே" என்று முடிந்தது. கிராம வாழ்க்கையையும், மண்ணுடன் நெருங்கி உறவு கொள்ளும் வாழ்க்கையையும் நகர்வாழ் மக்கள் விரும்பி நின்றதற்கு விடையளிப்பது போல் அமைந்தது, தோரோவின் குடிசை வாழ்க்கை பற்றிய வரலாறு. ஒரு துண்டு நிலத்தில் கடன் வாங்கிய கோடரியுடன் வாழத்தொடங்கிய ஒருவர், குடிசை ஒன்றையும் அமைத்துக் கொண்டு, சுதந்திரமாகவும், ஓய்வாகவும் ஒரு கட்டை, மரங்கள், விலங்குகள், பறவைகள் என்பவற்றுடன், நாள் வந்து செல்லும் பார்வையாளர்கள் ஆகியோரின் ஒரு துணை கொண்டே வாழ்ந்தார் என்ற வரலாறே வியப்பானது. இந்த மனிதருடைய திண்மையான பண்பாடு, மனத் தூய்மை, கூர்ந்து நோக்கும் இயல்பு, ஆழ்ந்த அறிவுத் திறன் என்பவற்றை, இவர் நூல்களைக் கற்போர் பாராட்டி இவரைப் போல் நடக்க விழைந்தனர்.

தோரோவைப் பற்றிப் பிறர் அறிந்த இப் பகுதியன்றி, பிறர் காண முடியாததாய், அவருடைய நாட்குறிப்பில் மட்டும் ஓரோவழிக் காணக்கூடியதாய் உள்ள சில பண்பாடுகளும் இருந்தன. இவற்றைப் பொது மக்கள் அறிய முடிந்ததில்லை. இந்தத் தோரோ குழப்பம் நிறைந்தவராய், தம்மையே நன்கு அறியாதவராய், தம்முடைய வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றத்தின் அளவு என்ன? தன்மை என்ன? என்பவற்றைத் தெரியாதவராய் இருந்தார். ஆனால், தம் இயல்பின் இந்தப் பகுதியை அவர் உலகிற்குக் காட்டவே இல்லை; தம் உற்ற நண்பர்களிடமும் காட்டவில்லை. அவருடைய உடல் நிலையின் காரணமாகப் பல சமயங்களில் ஆழ்ந்த துயரம் ஏற்பட்டாலும், அவருடைய புற வாழ்வு பெரிதும் மகிழ்ச்சி யுடையதாகவே கழிந்தது. உலகின் ஒரு பகுதியாகிய தம்முடைய ஊரின் இயற்கை வரலாற்றை எழுதுபவராக அவர் அமைந்தார். இத்துறையில் ஸெல்பர்னைச் சேர்ந்த கில்பர்வைட் என்ற இயற்கை வரலாற்று வல்லுநரைப் போலவே தோரோவும் விளங்கினார். கில்பர்வைட்டைப் போலவே இவரும் சமுதாய, நீதிப் பிரச்னைகளிலும், தத்துவம், இலக்கியம் என்பவற்றிலும் சுற்றுப்புற மக்களிலும் கருத்தைச் செலுத்தினார். ஆனாலும்,

இவருடைய நிலையான விருப்பம் இயற்கை வாதத்திலேயே அமைந்திருந்தது.

இயற்கையைப் பரப்புகின்றவர்கள் கில்பர்வைட்டைப் போலவே தோரோவுக்கும் மிகவும் கடமைப்பட்டுள்ளனர். 1900 வாக்கில், பிரிட்டனில் டபிள்யூ. எச். ஹட்ஸன் இந்த மரபை ஒட்டியே இயற்கையைப்பற்றி எழுதத் தொடங்கினுலும், உள்ளதை உள்ளவாறும், அழகாகவும் எழுதினுரே தவிர, அந்த எழுத்தில் உணர்ச்சி எதுவும் இல்லை. அமெரிக்காவில் இருந்த இயற்கை எழுத்தாள ராகிய ஜான் பர்ரொஸ், தம் வாழ்நாளின் கடைசிக் காலத் தில், நம் அனைவருடைய எண்ணத்தையும் வெளியிடுபவர் போலக் கீழ்க்கண்டவாறு எழுதினுர் . "ஒரே ஒரு தோரோ தான் இருக்க முடியும். அவர் போன்ற ஓர் ஒப்பற்ற பரி சிலை நமக்கு வழங்கியதற்காக நியூ இங்கிலாந்தின் தெய்வங் கட்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். தோரோவின் இயல்பில் ஒரு சிறு அளவாவது எனக்கு இருக்கக் கூடாதா என்று விரும்புகிறேன். மிக உயர்ந்த அறநிலையும், உயர்ந்த மனநிலையும் அவருடைய பண்புகளாகும். மாபெரும் இலக்கியத் தரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிற அவருடைய தரத்தை எட்டிப் பிடிக்கும் சக்தி என்பால் இல்லை."

பல்வேறு காரணங்கட்காகப் பல்வேறு ரசிகர்களும் தோரோவைப் போற்றுகிருர்கள் எனினும், இயற்கையோடு நெருங்கிய தொடர்புகொண்டு வாழவேண்டும் என்று எடுத்துக் கூறியவர் அவர் என்பதற்காகவே பலரும் அவரைக் கொண்டாடுவர். இக்கருத்தை, வால்டனில் வாழும்பொழுது அவர் கூறியதைவிடச் சிறப்பாகப் பிறர் கூறவியலாது. "நம் கிராமங்களைச் சுற்றி, இன்னும் நன்கு ஆராயப்படாத, காடுகளும் புல்வெளிகளும் இருப்பதால் தான் கிராம வாழ்க்கையில் தேக்கம் காணுமல் இருக்கிறது. காடுகளாகிய வலுவேற்றும் மருந்துகள் நமக்கு மிகவும் தேவை. சதுப்பு நிலப் பறவையாகிய பிட்டர்னும், நீர்க் கோழியும் நிறைந்து நிற்கும் இடங்களுக்குச் செல்ல வேண்டும். நீண்ட அலகுகளையுடைய உள்ளான் பறவை யின் கனமான குரலைக் கேட்கவும், பழக்கப்படாததும், தனியே வாழ்வதுமான கோழி இனப் பறவை கூடு கட்டி

யுள்ள செட்ஜ் புல்லை முகர்ந்து பார்க்கவும், வயிறு தரையில் தொடும்படி ஊர்ந்து செல்லும் மினுக்கையும் காண முடியும். எல்லாப் பொருள்களையும் கண்டு பிடித்து அவற்றின் தன்மைகளை அறிய விரும்புகிறோம். அவ்வாறு செய்ய வேண்டுமாயின் எல்லாப் பொருள்களும் மறைவுடையனவாய், காண முடியாதவையாய், நிலமும் கடலும் அளக்கலாகப் பரிமாணமும், ஆழமும் உடையனவாய் இருத்தல்வேண்டும். இயற்கையை, நாம், முற்றிலும் அறியவே முடியாது.''

எனவே இயற்கையின் மடியிலேயே, வசந்த காலத்தில், அவருக்கு மிகவும் விருப்பமான குட்டையின் பக்கத்தில் அவரை விட்டு விடுவோம்: ''ஆ! வசந்த காலத்தில் பல நாட்கள், விடியற் காலத்திலேயே, நான் இந்தப் புல்வெளிக்கு, வந்துள்ளேன். ஒரு சிறு பாறையிலிருந்து மற்றொரு சிறு பாறைக்கும், ஒரு மரத்தின் வேரிலிருந்து பிறிதொரு வேருக்குமாகத் தாண்டித் தாண்டிச் சென்றுள்ளேன். அந்த நேரங்களில் ஆற்றின் பள்ளத்தாக்கும், காடும், தூய்மையான, இறந்தவர்களையும் எழுப்பக்கூடிய, பேரொளியில் மூழ்கியிருக்கும். சிலர் நினைப்பதுபோல், கல்லறைகளில் மக்கள் உறங்குவதானால், அவர்கள் இந்த ஒளியில் விழித்தெழுவர். மரணமிலாப் பெரு வாழ்விற்கு வேறு வலுவான சான்று வேண்டா. எல்லாப் பொருள்களும் இத்தகைய ஒளியில்தான் வாழ வேண்டும்.''

---